

7665
R689 (சித்)

6-3 I

நாற்பத்தெண் சித்தர்கள்
திருவாய் மலர்ந்தருளிய

பெரிய ஞானக் கோவை

மஹேமஹேஸ்வர் ஆண்டவர்
A. No. 7865
R689 (சித்)
நூலகம், கோவிலூர்

பதிப்பாசிரியர்

எஸ். பி. ராமச்சந்திரன்

தாமரை நூலகம்
7, N.G.O. காலனி,
வடபழனி, சென்னை - 600 026.
தொலைபேசி எண் : 420 249

தாமரை வெளியீடு : 144
உரிமை பெற்றது : (C)
முதல் பதிப்பு : மே. 1995.

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	நாற்பத்தெண் சித்தர் பெரிய ஞானக் கோவை
பதிப்பாசிரியர்	:	எஸ்.பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாம்ரை நூலகம் 7, N.G.O. காலனி வடபழனி, சென்னை - 600 026
பதிப்பு ஆண்டு	:	மே. 1995
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	21 செ.மீ x 14 செ.மீ.
தாளின் தன்மை	:	16.2 Kg. மேப் லித்தோ
அட்டை	:	ஸ்ட்ரா போர்டு
அச்சு எழுத்து அளவு	:	12 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	:	384 + 16
பிரதிகள்	:	1,000
பைண்டிங்	:	ரெக்ஸின் பைண்டிங்
விலை	:	சாதா பைண்டிங் ரூ. 125.00 ரெக்ஸின் பைண்டிங் ரூ.150.00
அச்சிட்டோர்	:	அலங்கார் பிரஸ் 321, ஆற்காடு சாலை கோடம்பாக்கம் சென்னை.600024.

6-3

பதிப்புரை

தேன் சொட்டும் இத் தமிழ்ப் பாடல்களை வேத முனிவர்களான வியாசரும், அத்திரியும், காசிபரும், கௌசிகரும், இயற்றினார்களா ? என்று நான் வியப்படைந்தேன். பராசரரும் பரத்துவாசரும், பதஞ்சலியும், வியாக்கிரமபாதரும், தமிழில் பாடினார்களா என்று திகைப்பும், மயக்கமும் அடைந்தேன்.

இருக்காது ! யாரோ தமிழ்ப் புலவர்கள் இம் முனிவர்கள் பெயரால் பாடல்களை இயற்றி வைத்து விட்டர்கள் என்று நினைத்ததும் உண்டு. ஆனால் பாடல்களை ஆழமாகக் கற்று உணரத் தொடங்கிய போது, இல்லை தவமுடையவர்களாலேயே தவத்தைப் பற்றிப் பாட முடியும் மெய்ஞ்ஞானம் உணர்ந்தவர்களாலேயே அதை எடுத்துரைக்க முடியும் இப்பாடல்கள் உண்மையிலேயே ரிஷிகளால் தான் பாடப் பட்டிருக்க வேண்டும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உண்டாயிற்று.

ஞான மார்க்கத்தில் செல்பவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் எல்லா மொழிகளையும் அறிய்வும் அவற்றில் பெரும் புலமை பெறவும், நூல்கள் இயற்றவும் முடியக் கூடிய தகுதி பெறுகிறார்கள் என்று கூறப் படுகின்றது.

ஆனால் ஞான மார்க்கத்தில் சென்று இப்பாடல்களை இந்த முனிவர்கள்தான் இயற்றினார்களா என்று அறிவதற்கான தகுதி இன்று யாருக்கும் இல்லை அகஸ்திய மாமுனிவர் தமது பனிரெண்டாயிரம் முதற் காண்டத்தில் இந்த ரிஷிகள் குன்று போல் சாத்திரங்கள் குவித்து வைத்தார்கள் என்றும் அவை கடலால் கொள்ளப் பட்டன என்றும் பிரளய கால வெள்ளம் வடிந்த பின் ஆங்காங்கு ஒதுங்கிக் கிடந்த ஓலைகளை தாங்கள் சேகரித்ததாகவும் அவற்றில் இன்ன ரிஷி பாடிய இத்தனைப் பாடல்கள் இருக்கின்றன அவற்றைக் கற்றுணர்வாயாக என்றும் தம் சீடருக்கு கூறுகின்றார்.

IV

இங்கு ஒரு வார்த்தை,

சித்தர்களின் நெறி பற்றியோ, தகைமை பற்றியோ, அவர்களின் ஆயுட்காலம் பற்றியோ, புரிந்து கொள்வதற்கான தகுதி எந்த மனிதனுக்கும் கிடையாது. பண்டிதர்களுக்கும், தமிழ் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கும், முனைவர்களுக்கும், பேராசிரியர் களுக்கும் கூட அத்தகுதி இல்லை என்று துணிந்து கூறலாம். கொஞ்சமாவது சித்தர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு அவர்களுடைய நெறி இன்னதென்று அணுப் பிரமாணமாவது உணர்ந்து கொண்டவர்கள் மட்டுமே : மின்மினியைப் பார்த்து சூரிய ஒளியை அளவிட முயற்சிப்பது போல் சித்தர்களின் தகைமை பற்றி ஓரளவு அறிய முடியும்.

சித்தர்களின் காலத்தை நானூறு வருடங்களுக்கு முன்பிருந்தார்கள், ஐநூறு வருடங்களுக்கு முன்பு இருந்தார்கள் என்று வாய் கூசாமல் வரலாறு கூறும் பண்டிதர்கள் சிந்திக்க வேண்டும். சித்தர்கள் தங்களுடைய நூல்களில் தங்களைப் பற்றிக் கூறியிருப்ப தெல்லாம் வெறும் கற்பனை அல்ல !

செடி கொடிகள், முதலான தாவரங்கள் முதலாக, உலோகங்கள் வரையிலும் எல்லாப் பொருள்களின் வேதியியல் பண்புகளையும் சித்தர்கள் பாடி இருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக காவட்டம் புல் ரசத்தைக் கட்டும் என்று போகர் கூறுகின்றார் இம்மாதிரியான வேதியல் உண்மைகள் எண்ணிலடங்கா ! இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கத் தமிழன் முயற்சி செய்யவில்லை.

இதையெல்லாம் எதற்காகக் கூறுகிறோம் என்றால் இந்த நூலில் அடங்கியுள்ள பாடல்களை நடுநிலையில் நின்று ஆய்வு செய்து பாருங்கள் மொழி பெயர்ப்பு நூலாக இருந்தால் தமிழ் கொஞ்சி விளையாடும் படியாக அழகான பாடல்களில் அற்புதமான கருத்துக்களைச் சொல்லி இருக்க முடியுமா ? எத்தனை விதமான பாடல்கள் ! எவ்வளவு இனிமையான சந்தங்கள் ! எவ்வளவு உயர்ந்த கருத்துக்கள் !

இந்தப் பாடல்கள் இத்தனை காலம் புறக்கணிக்கப் பட்டிருந்த நிலைமையை நினைத்துப் பார்க்கும் போது நெஞ்சம் விம்முகின்றது. பண்டிதர்களாலும், பட்டம் பெற்றவர்களாலும் கூட இப் பாடல்களை அறிந்திருக்க முடியாத போது மற்றவர்களைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கின்றது ?

தமிழன் தன் பெருமையை முழுவதும் உணர்ந்து கொள்ள வேண்டு மென்றால் இப்பாடல்கள் பாடப் புத்தகங்களில் இடம்பெற வேண்டும். புலவர் பட்டத்திற்கான பாடத் திட்டத்தில் கட்டாயப் பாடமாக இடம் பெற வேண்டும். சித்தர்களைப் பற்றிய ஒரு ஆரம்ப அறிவாவது எல்லாத் தமிழர்களும் அடையச் செய்ய வேண்டும்.

வணக்கம்

எஸ்.பி. ராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்.

பெரிய ஞானக் கோவை

இந்நூலில் இடம் பெற்றுள்ள சித்தர்கள் :

ஊர்வசி: விஷ்ணு பகவான் தவத்தைக் கலைக்க தேவேந்திரன் பல அப்ஸரசுகளை ஏவினான். பகவான் தமது தொடையிலிருந்து ஒரு மோகினியை தோற்றுவித்து அனுப்பி வைத்தார். அவள் அழகைக் கண்டு நாணிய அப்ஸரஸ்கள் ஓடிவிட்டார்கள்.

தொடை = ஊரு. ஊருவிலிருந்து தோன்றியதால் ஊர்வசி எனப் பெயர் பெற்ற அம்மோகினி தேவ சபையில் முக்கியமான நடனமாது ஆனாள்.

அவள் தன் பூலோகக் காதலன் பூருவை தேவேந்திரன் சபைக்கு ரகசியமாக அழைத்து வந்தாள். அதைக் கண்டு பிடித்து விட்ட தேவேந்திரன் அவளை பூலோகத்தில் தள்ளி விட்டான். கோதாவரி நதிக்கரையில் வந்து விழுந்த ஊர்வசியை அங்கிருந்த சித்தர்கள் ஆதரித்தனர். அவளுக்கு சித்தர் நெறியையும் கற்பித்தனர்

ஊர்வசி தான் இயற்றிய பஞ்ச ரத்தினம்எனும் நூலில் தன் வரலாற்றைத் தானே கூறுகிறாள். ஊர்வசியின் பாடல்கள் அற்புதமானவை. கோதாவரி நதிக் கரையில் அவளுடைய சமாதி இருக்கிறது.

பதஞ்சலி : சிவபெருமானின் நடனத்தைக் காண விரும்பிய ஆதிசேஷன் அவரைக் குறித்து தவம் செய்ய சிவபெருமான் அனுசூயையின் மகனாகப் பிறந்து சிவதாண்டவம் காணும் பாக்கியம் பெற அனுகிரகித்தார். அவ்வாறே பூலோகத்தில் பிறந்து வியாக்கிரம பாதரோடு சேர்ந்து சிதம்பரத்தில் சிவநடனம் கண்டு பேரின்பம் அடைந்தார்.

வியாக்கிரம பாதர் : சிவனருளால் புலியின் கைகால்களும் நகங்களில் கண்களும் பெற்று சிறந்த சிவ பக்தராக விளங்கியவர். பதஞ்சலியுடன் சிதம்பரத்தில் சிவதாண்டவம் கண்டு மகிழ்ந்தவர். பதஞ்சலியும் வியாக்கிரமபாதரும் ராமேஸ்வரத்தில் சமாதி கொண்டுள்ளனர்.

பரத்துவாசர் : ஒரு ரிஷி. வசிஷ்டரின் மகன் என்பர். கங்கைக் கரையில் அழகிய ஆஸ்ரமம் அமைத்து வாழ்ந்தவர். ஸ்ரீ ராம பிரான் வனவாசம் செல்லும் போதும் இராவணனைக் கொன்று திரும்பும் போதும் இவருடைய ஆசிரமத்தில் தங்கி இளைப்பாறிச் சென்றார்.

பராசரர் : சரங்களை (அம்பு) எதிரிகளின் பாணங்கள், மன்மதனின் பாணம் முதலியவற்றை வென்றவராகையால் பராசரர் எனப் பெயர் பெற்றார். வேத வியாசரின் தந்தை வசிஷ்டரின் குமாரரான சத்தி முனிவரின் மகன். இவர் கங்கையாற்றைப் படகு வழியாக கடக்கையில் படகோட்டியான மச்சகந்தி என்ற மங்கைக்கு அவளிடமிருந்து வீசிய முடை நாற்றத்தைப் போக்கி அழகிய பெண்ணாக்கி அவளுடன் சேர்ந்து வியாசரைப் பெற்றார் என்று புராணக் கதை கூறுகிறது. சோதிட சாஸ்திரத்தின் தந்தை. இவர் வடமொழியில் இயற்றிய நூல்கள் பல. தமிழிலும் இயற்றியுள்ளார் என்பது இந்தப் பாடல்கள் மூலம் வெளிப்படுகிறது.

வசிஷ்டர் : பிரம்மாவின் புத்திரர் சூரிய வம்சத்து அரசர்களின் குல குரு. இராம பிரானுக்கு ஞானம் போதித்தவர் இவரைப் பற்றிய புராணக் கதைகள் ஏராளம்.

துர்வாசர் : அனுசூயை மும்மூர்த்திகளையும் குழந்தைகளாக்கிய போது ருத்ரனின் அம்சமாகத் தோன்றியவர். மகா கோபக்காரர். சாபம் கொடுத்தே சரித்திரம் படைத்தவர். இவர் எழுதிய பாடல்களாக இந்நூலில் இடம் பெற்றுள்ளவை அற்புதமானவை.

சங்கரர் : ஆதி சங்கரரைக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம். இந்நூலில் இடம் பெற்றுள்ள நவக்கிரக கக்கிஷம் ஈடு இணையற்றது கைமேல் பலன் தரக் கூடியது. கற்றோர் இதயம் களிப்படையச் செய்வது.

சங்கரரின் பிறப்பு பற்றியும் வாழ்ந்த காலம் பற்றியும் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் இமயம் முதல் குமரி வரை கால் நடையாக தேச யாத்திரை செய்து வாதப் போரில் பல பேரை வென்று ஐந்து இடங்களில் சங்கர மடங்களை நிறுவியவர்.

இந்து மதத்தை புனருத்தாரணம் செய்தவர். இவர் வடமொழியிலும் தமிழிலும் இயற்றிய நூல்கள் புகழ் பெற்றவை.

வேத முனி : ஒரு ரிஷி. நந்தி தேவரால் உபதேசிக்கப் பட்டவர்.

வரரிஷி : இவரைப் பற்றி அகஸ்தியர் பல இடங்களில் பெருமையாகக் கூறுகிறார். இவரைப் பற்றி வேறெதுவும் தெரியவில்லை.

சுக பிரம்மம் : வேத வியாசரின் குமாரர் பிறவியிலேயே யாவும் கடந்த பரப்பிரம்ம சொருபமாக விளங்கியவர்.

ஜெய முனிவர் : பல ஜோதிட நூல்களை இயற்றியவர். ஜெயமுனி சூத்திரங்கள் புகழ் பெற்றவை.

கௌசிகர் : காசி மன்னனாகப் பிறந்து, வசிஷ்டருடன் போர் புரிந்து அரச வாழ்க்கையை விட தவ வாழ்க்கையே சிறந்ததெனத் துணிந்து கடுமையான தவம் புரிந்து வசிஷ்டரால் பிரம்மரிஷி எனப் புகழப் பெற்றவர். இவரைப் பற்றிய புராணக் கதைகள் பல.

மிருகண்டு : கௌசிகர் குமாரர். மார்க்கண்டேயனின் தந்தை. இவரைப் பற்றியும் பல புராணக் கதைகள் உள்ளன.

அத்திரி : சப்தரிஷி மண்டலத்தில் ஏழு நட்சத்திரங்களாகப் பிரகாசிக்கும் ரிஷிகளுள் முதலாமவர். பிரம்மாவின் கண்ணிலிருந்து தோன்றியவர். அனுசூயையின் கணவர். அருந்ததியின் தந்தை. மும்மூர்த்திகளையும் தன் பிள்ளைகளாகப் பிறக்க வரம் பெற்றவர். பிரம்மாவே சந்திரனாகவும், விஷ்ணு தத்தாத்ரேயராகவும், சிவன் துர்வாசராகவும் பிறந்தனர் என்பர்.

புசுண்டர் : காகத்தின் உருவிலே கல்லால மரத்தில் வீற்றிருந்து பல யுகங்களைப் பார்த்தவர். எத்தனையோ பிரம்மாக்கள், எத்தனையோ விஷ்ணுகள், எத்தனையோ ருத்திரர்கள் தோன்றி அழிந்ததைக்கண்ட மகான். வசிஷ்டருக்கு உபதேசம் செய்தவர்.

பொருளடக்கம்

XII

தமிழா நீ வாழ்க !

கடல் கடந்து வாழ்ந்தாலும் கன்னித் தமிழ் நெஞ்சம் மறவாமல் திடம் கொண்ட தமிழிலே இருந்து, மறைந்து கொண்டிருக்கும் தமிழ்ச் செல்வங்கள் அழிந்து விடாமல் காக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு இந்த நூல்களை வெளியிட்டுத்தர வேண்டு மென்று கேட்டுக் கொண்டதோடு பொருளுதவியும் செய்ய முன்வந்த மலேசியா அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் தலைவர் தவத்திரு தர்மலிங்க சுவாமிகளுக்கு எங்கள் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாமரை நூலகம்
சென்னை - 26.

சித்தர்கள் நாற்பத்தெண்மர் !

தமிழ் மொழியையும் கிரந்த (ஸம்ஸ்கிருத) மொழியையும் உபதேசித்தவர் முருகப் பெருமான் ஒருவரே. இது உயர்வு இது தாழ்வு என்ற வேறுபாடு முன்நாளில் இருந்ததில்லை என்பதை உணர்ந்து கொண்டால் இன்று தமிழகத்தைப் பிடித்திருக்கும் ஆழமான கருத்துவேறுபாடு அகன்றுவிடும். மக்களை வேறுபடுத்தும் குறுகிய கொள்கைகள் அழிந்துவிடும்..

தேவமோகினியாகிய ஊர்வசி இந்திரன் சபையில் ஆடும் நடனமாது, அவளுடைய தாய் மொழி தேவமொழியாகத்தான் இருக்கும் என்பதில் யாருக்கும் ஐயம் இராது. ஆனால் அவ்வம்மையார் சித்தர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படுபவர் என்பதும் தமிழில் புகழ்பெற்ற பல சித்தர் நூல்களை இயற்றியவர் என்பதும் பலருக்குத் தெரியாது. ஆனால் சித்தர் இலக்கியங்களோடு தொடர்புள்ளவர்களுக்குத் தெரியும். ஏனென்றால் ஊர்வசி இரசவாத சிட்கா, வைத்திய சிட்கா, பஞ்சரத்தினம் முதலானவை மிகவும் புகழ் பெற்ற நூல்கள்.

அவ்வம்மையார் தமது வைத்திய சிட்காவைப் பாடத் தொடங்குகையில் சித்தர்கள் அனைவருக்கும் வணக்கம் கூறும் முறையாய்க் கூறுகிறார்.

கார்த்திட்ட காலாங்கி கலச நாதர்
கமலமுனி யூகிமுனி கருணானந்தர்
பார்த்திட்ட போகமுனி சட்டைநாதர்
பதுஞ்சலியார் கோரக்கர் பவணந்தீசர்
சீர்த்திட்ட புலிப்பாணி அழுகண் சித்தர்
ஜெகம் புகழும் பாம்பாட்டி இடைக்காட்டீசர்

பேர்த்திட்ட வசிஷ்டரோடு கவுசிகர்நேர்
பிரம்மமுனியாக இன்னும் பெரியோர்தானே

தானான வேதகுரு வியாசரோடு
தன்வந்திரி சட்டைமுனி புண்ணாக்கீசர்
கோனான நந்தீசர் அகப்பேய்ச் சித்தர்
கொங்கணவர் குருபாத நாதர்
தேனான பரத்துவாசர் கூனக்கண்ணர்
தெளிவருளும் கடுவெளியாம் சித்தர் முத்தர்
பானான ரோமரிஷி புசுண்டரோடு
பராசர மாரிஷி இவரைப் பணிந்தேனையா.

ஐயமற்ற தேரையர் புலத்தியீசர்
சந்தமுள சுந்தரானந்த சித்தர்
செய்யமுறைத் திருமூலர் கருவூர் நாதர்
சிவவாக்கிய ரோடு தொழுகண் சித்தர்
துய்யமன நவநாதர் வசுக்களோடு
துர்வாசரான சத்தரிஷிகள் மாரை
பையெனவே யான்பணிந்த இதங்கண்டவரே
பகரறிய வெகு நூலைப் பாலித்தாரே.

ஊர்வசி கூறும் சித்தர் வரிசை வியக்கத் தக்கது

1. காலாங்கி (போகரின்குரு)
2. கலசநாதர்
3. கமலமுனி
4. யூகிமுனி
5. கருணானந்தர்
6. போகமுனி
7. சட்டைநாதர்

நாற்பத்தெண் சித்தர்

8. பதஞ்சலியார் (யோக சூத்திரம் - உலகப் புகழ் பெற்ற சமஸ்கிருத நூல்)
9. கோரக்கர்
10. பவணந்தி
11. புலிப்பாணி
12. அழுகண் சித்தர்
13. பாம்பாட்டிச் சித்தர்
14. இடைக்காட்டுச் சித்தர்
15. வசிஷ்டர் (ஸ்ரீ இராம பிரானின் குரு)
16. கவுசிகர் - (விசுவாமித்திரர்)
17. பிரம்மமுனி
18. வேதகுருவான வியாசர். பதினெண் புராணங்களையும் தொகுத்தவர், மஹாபாரதத்தை இயற்றியவர்.
19. தன்வந்திரி
20. சட்டைமுனி
21. புண்ணாக்கீசர்
22. நந்தீசர்
23. அகப்பேய்ச்சித்தர்
24. கொங்கணவர்
25. மச்சமுனி
26. குருபாதநாதர்
27. பரத்துவாசர் (ஸ்ரீ இராம பிரான் கானக வாசத்தின் ஆரம்பத்திலும் இராவணனை வென்ற பின் அயோத்திக்குத் திரும்பும் போதும் சீதா தேவியுடன் வந்து தங்கியிருந்தது பரத்துவாசர் ஆசிரமம்)
28. கூன்கண்ணர்
29. கடுவெளிச் சித்தர்
30. ரோமரிஷி

31. புசுண்டர் (காகபுசுண்டர் வசிஷ்டருக்கு உபதேசித்தவர்)
32. பராசரர் (ஜோதிட சாஸ்திரத்தை அருளியவர்)
33. தேரையர்
34. புலத்தியர்
35. சுந்தரானந்தர்
36. திருமூலர்
37. கருவூரார்
38. சிவ வாக்கியர்
39. தொழுகண் சித்தர்
40. நவநாதர்

இவர்களோடு அஷ்ட வசுக்களும்
துர்வாசரும்
சப்தரிஷிகள்

நமக்குத் தெரிந்த சித்தர்களைத் தவிர ஆரியர்கள் என்றும் வட நாட்டவர்கள் என்றும் நாம் நினைத்துக் கொண்டுள்ளவர்களும் புராணங்களில் இடம் பெற்றவர்களு மான பல ரிஷிகளையும் ஊர்வசி இங்கே குறிப்பிடுகிறார்.

வேத வியாசர், வசிஷ்டர், துர்வாசர் இவர்களுக் கெல்லாம் தமிழ் தெரியுமா? யார் சொன்னது? என்னகதை இது? என்று சிலர் கோபத்தோடு ஆவேசமாகவும் கேட்கலாம். தேவமுனிவர்களான இவர்கள் சூத்திர பாஷையான தமிழில் பாடல்களைப் புனைவதாவது? என்ன அக்கிரமம்? என்று வெகுள்பவர்களும் இருக்கலாம்.

ஊர்வசி தமிழில் பாடல்களை இயற்றினார் என்பதையே இவர்கள் மறுக்கவும் கூடும்--விட்டுவிடுவோம். ஊர்வசி வேண்டாம்.

நம்முடன் தொடர்புடையவரான அகத்தியர், தமிழின் தந்தை முருகன் அகத்தியருக்கல்லவா முதன் முதலாகத் தமிழை உபதேசித்தார்? அகத்தியம் என்பதல்லவா முதன்முதலாகத் தோன்றிய தமிழ் இலக்கணம்? அவர் சொன்னதை யாரும் மறுக்க முடியாது.

அகஸ்தியர் பனிரெண்டாயிரம் எனப்படும் தமது பெருநூல் காவியத்தில் எல்லாச் சித்தர்களைப் பற்றியும் கூறியிருக்கிறார். அவர் யார்யாரைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பார்க்கலாமா?

பாரான நந்தி முன்னூறு நிகண்டும்பாரு
பாங்கான போகரது நிகண்டும் பாரு
காரான திருமூல ராயிரம் பார்
கருவான கருக்கிடை யறுநூறும் பார்
தூரான பெருநூலாம் பாலகாண்டம்
துறையான பாலவாகடம் முன்நூறு
தாரான லக்க சௌமியந்தான் பாரு
தகமையுள்ள ஜெகஜால மாயிரந்தானே,

முதல் காண்டம் பாடல் 285

வரிசையாகச் சித்தர்களின் முக்கியமான நூல் களைப் பற்றிக் கூறிக்கொண்டு வருகிறார் அகஸ்தியர்,

வட்டமுடன் வான்மீகர் பத்தும் பார்
வாகான சிவயோகம் பதினாறும் பார்

பாடல் 297

சித்தான வாதமது வாறும் பாரு
சிறப்பான பதஞ்சலியார் இருபதும் பார்

பாடல் 300

பன்றான வாசமுனி சூத்திரந்தான்
பாங்குபெற எழுபதுந்தான் பார்த்திடாயே

பாடல் 303

தேறவே ஊர்வசி பதினாறும் பார்
தெளிவான வாசமுனி எட்டும் பாரு

பாடல் 309

தானான சூதமுனி அன்பத்தொன்று
தாக்கான பிரம்மமுனி இருபத்தொன்று

பாடல் 307

தன்றான கோரக்கர் எண்பதும் பார்
தகைமையுள்ள வால்மீகர் முப்பத்திரண்டு
அன்றான வரரிடி எண்பதும் பார்
அழகான என்நூல் ஐநூறும் பாரே

பாடல் 308.

அஞ்சான வேதமுனி சொன்ன நூலாம்
அழகான காவிய மாயிரந் தானாகும்
துஞ்சாத சுருக்கமப்பா இருபதாகும்
துறையான சூத்திரந்தான் முன்னூறாகும்
கஞ்சமுனி தானுரைத்த பெருநூலப்பா
காசினியி லாயிரமாங் காவியந்தான்

பாடல் 315

ஒன்றுடனே வியாசமுனி சொன்ன நூலாம்
உத்தமனே ஆயிரத்துச் சொச்ச நூலாம்
தென்றிசையில் தட்சணாமூர்த்தி நாயன்
தேசத்தில் மாந்தர்கள் பிழைக்க வென்று
முன் உரைத்த பெருநூலாங் காவியந்தான்
உத்தமனே ஆயிரத்துச் சொச்சம் பாரே

பாடல் 316

நாற்பத்தெண் சித்தர்

சுத்தமுடன் சுப்பிரமணியர் சொன்ன நீதி
சூட்சமடா ஆதாரக் கருவி பத்து
நித்தமுடன் பார்த்துமல்லோ வழியறிந்து
நியமத்தில் நிற்பவனே முத்தனாமே

பாடல் *320*

புனிதனாம் சுப்பிரமணியர் தீட்சையப்பா
புகழான மார்க்கமது பதினாறும் பார்
வனிதமுடன் கவுதம ரிடியார் தாமும்
வாக்குரைத்த காயகற்ப மெட்டும் பார்

பாடல் *339*

திட்டமுடன் சகாதேவன் காவியந்தான்
திறமான அழகான சுருக்கமப்பா

பாடல் *347*

தாமான போக ரேழாயிரந்தான்
தாரணியில் பெருநூலாம் மற்றொன்றில்லை
பூமான மானதொரு காலாங்கி நாதர்
புண்ணியனார் வரம் பெற்ற போகநாதர்
நேமமுடன் தானுரைத்த சத்த காண்டம்
நேர்மையுடன் வையகத்தில் பெருநூலப்பா
ஆமெனவே கண்டவர்கள் யோகவானாம்
அவனியிலே அவனுமொரு சித்தானாமே

பாடல் *362*

சித்தனாமவர் நூல் போல் மறுநூல் இல்லை
செகதலத்தில் பதினெண்பேர் சொன்னதில்லை
சத்தமுடன் காண்டமது ஏழாயிரத்தில்
சாற்றினார் லோக அதிசயங்களெல்லாம்
புத்தியுடன் போகரிஷி யநேக நூல்கள்
புகழாகப் பாடி வைத்தார் சீடருக்கு

முத்தியுடன் பெருநூலே மூாயிரந்தான்
முதன்மையான நூலென்று சொல்லலாமே

பாடல் 363

இப்படி

1. வான்மீகர் 2. பதஞ்சலியார் 3. துர்வாசமுனி
4. ஊர்வசி 5. சூதமுனி 6. வரரிஷி
7. வேதமுனி 8. கஞ்சமுனி 9. வியாசமுனி
10. கவுதமரிஷி (விசுவாமித்திரர்)

என்று பல ரிஷிகளைப் பற்றியும் ஊர்வசியைப் பற்றியும் தமது குரு பிரானான சுப்பிரமணியரைப் பற்றியும் கூறி வந்த அகஸ்தியர் - வேத வியாசர் எண்ணாயிரம் பாடல்களை அருளியிருக்கிறார் என்றும் கூறுகிறார்.

சொல்லவே வேதமுனி வியாசர் தாமும்
தொல்லுலகில் பாசமற்று வினையகற்றி
எல்லோரும் தீவினையை அகற்றியல்லோ
ஏகாந்தக் காவியத்தைக் கேட்டுமேதான்
நல்லவழி நற்பொருளை உணர்ந்தாராய்ந்து
நலமான மெய்ப்பொருளைக் காணவென்று
புல்லவே யெண்ணாயிரம் காவியந்தான்
புகழாகப் பாடி வைத்தார் உண்மையாமே

பாடல் 432

இப்படியாக ரிஷிகளும் சித்தர்களும் குன்று போல் பாடி வைத்த காவியங்கள் என்னவாயின?

தைத்த தொரு நூல் எல்லாம் பிரளயத்தில்
தாரணியில் மிதந்து விடக் கண்டோர் தாமும்
நைத்ததொரு பெருநூல்கள் கருவியெல்லாம்
நலமாக மிதந்து விடக் கண்டிட்டோமே

பாடல் 272

துண்டிதமாய்ச் சில நூல்கள் சாகரத்தில்
சுருதி பொருளானதுவும் மறைந்து போச்சு
அண்டிய கடலோரம் மிதந்த நூல்கள்
அகப்பட்ட மட்டுமல்லோ அறிந்தோம் பாரே.

பாடல் 273

எத்தனையோ நூல்களைக் கடல் கொண்டு போய் விட்டது என்பதை அகஸ்தியர் இங்கே வலியுறுத்துகிறார். எஞ்சிய நூல்களிலும் பொது மக்களுக்குக் கிடைத்தவை மிகமிகச்சிலவே; இன்றும் எத்தனையோ நூல்கள் இங்கும் அங்குமாக மறைந்து கிடக்கின்றன.

இனி காலங்கி நாதர்...
போகரின் குரு/-திருமூலரின் சீடர்

சித்தர்கள் வாசம் செய்யும் சதுரகிரி மலையிலே யார் யாரைக் காணலாம் என்பதைக் கூறுகிறார். அதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

காப்பான சதுரகிரி மகத்துவத்தைக்
கழறுகிறேனோர் நினைவாய்க் கண்டுதேறு
மூப்பான நந்தி திருமூலருக்கு
மொழிந்திடவே அதையெனக்கு முறையாகத்
தாப்பான குகையுமதன் வழியுங்கண்டு
தான் போதல் வெகு அருமை தவத்தோர்க்கெய்தும்
தோப்பான இடங்கள் பல விருட்சமுண்டு
துறவு நீரோடை பல தோன்றுந்தானே!

சதுரகிரியின் மகத்துவத்தை நந்தி திருமூலருக்குச் சொன்னார். திருமூலர் தனக்குச் சொன்னார் என்று காலாங்கி கூறுகிறார். குகைகளுக்கிடையே வழிகண்டு போவது மிகவும்

கஷ்டம். அது தவம் உடையவர்களுக்கு மட்டுமே முடியும். மற்றவர்களால் முடியாது என்கிறார்.

தானான வேதங்கள் நான்கு மொன்றாய்ச்
சார்ந்திங்கு ஓர்உருவாய்ச் சமைந்ததாலே
வேனான பெயர் சதுரகிரியி தென்றே
விண்ணவரும் மண்ணவரும் எண்ணிலாரும்
தேனான மகாலிங்க ரடியைப் போற்றி
செய்து சதா சேவித்து யோகநிஷ்டை
ஊனான உடலெடுத்தார் புரிவதாலே
உயர் முனிவர் சித்தரெனப் பேர் பெற்றாரே.

நான்கு வேதங்களும் சேர்ந்து ஓர் உருவாய்ச் சேர்ந்ததால் இம்மலைக்கு சதுரகிரி என்ற பெயர் உண்டாயிற்று. இங்கே விண்ணுலகத் தேவர்களும் மண்ணுலக மாந்தர்களும் மற்றும் எண்ணற்ற பேர்கள் என்று கூறியதில் அந்தர சஞ்சாரிகளாகிய கந்தர்வர்கள் போன்றவர்களையும் பாதாள லோக வாசிகளாகிய ராட்சசர், நாகர்கள் போன்றவர்களையும் குறிப்பிடுகிறார். இவர்கள் எல்லோரும் ஊனான உடலெடுத்த பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக மகாலிங்க ரடியைப் போற்றிச் சதா காலமும் சேவித்து யோக நிஷ்டைகள் புரிந்து வருகிறார்கள் என்கிறார்.

பேருற்ற சதுரகிரி நாலுபக்கம்
பிரிவுண்டவ் வழியு மெத்தக் கடினமப்பா
சேருற்ற மூன்று பக்கம் பாதைதானும்
சிவசிவா அடவிவழி சிரமம் மெத்த
நேருற்ற தெற்கு வழிப்பாதை சற்றே
நிகழ்த்துவேன் மலையினடி வாரந்தன்னில்
நீருற்ற வோடையுள தோணிப் பாரை
நிலை கண்டு ஆற்றோரம் சென்று பாரே!

மிக அழகான கவிதைகள்! மலைக் காட்சிகளைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன. மலைமேல் காட்டுப் பாதைகளில் நடந்து செல்வது மிகக் கடினமான அனுபவம் தான். ஆனால் அதனால் கிடைக்கும் இன்பமோ அளப்பில் அரிதாம்.

தெற்குப்பக்கம் மலை அடிவாரத்தைச் சுற்றிக் கொண்டு சென்றால் நீரோடை அதனருகே தோணிப்பாறை. அதை ஒட்டி ஆற்றோரமாகச் செல்லும் வழியில் சென்று பார் என்கிறார்.

சென்றிந்த ஆற்று வழி திறமதாகச்
    சேர்ந்திருக்கும் சிறுமலைகள் அநேகமுண்டு
குன்றந்தச் சாய்வோரம் செல்லும் பாதை
    கூடினால் நவசித்தர் குகையொன்றுண்டு
நின்றந்தச் சித்தர்களை மனத்து ளெண்ணி
    நிதானமா யவ்வழியே போக வேணும்
ஒன்றந்த வழி வடக்கே கொஞ்சந்தூரம்
    உயர்ந்திருக்கும் மலையருகே குகையைப்பாரே.

ஆற்று வழியாகச் செல்லும் போது அநேகம் சிறுமலைகளைக் காண்லாம். மலைச் சரிவோடு செல்லும் பாதை ஒரு இடுக்கில் செல்லும் போது நவ சித்தர்களின் குகையைக் காண்பாய். ஏதோ குகை என்று எண்ணிப் பேசாமல் போய் விடாதே. அங்கே நின்று சித்தர்களை மனதால் நினைத்துத் துதித்த வண்ணம் நிதானமாகப் போக வேண்டும்.

அப்படிச் செல்லும் போது வடக்கே கொஞ்ச தூரத்தில் உயர்ந்த மலை ஒன்றும் அதில் குகையும் காணப்படும்.

பாரப்பா அக் குகையினுள்ளே செல்லப்
பாம்பாட்டிச் சித்தருமங்கிருப்பார் கண்டு
தேரப்பா நீவணங்கி அதன் மேற்காகத்
திரும்பவே அத்திரியின் குகை தானுண்டு
நேரப்பா ஆற்றூடே சத்தி ஊற்றாம்
நிலை காணா ரங்கேற்றம் நெடுங்காடப்பா
ஆரப்பா அறிவார்கள் அதைக் கடக்க
அதிகமாய் கற்காட்டின் பாதை தானே!

அந்தக் குகைக்குள் சென்றால் பாம்பாட்டிச் சித்தரைக் காண்பாய். அவரைக் கண்டு வணங்கு. அங்கிருந்து மேற்கே திரும்பினால் அத்திரி மகரிஷியின் குகை இருக்கிறது. அவரையும் தரிசித்து மேலே சென்றால் மலை செங்குத்தாக ஏற்றமாக இருக்கும். நெடிய கானகம் அது. அதைக் கடக்க யாரால் முடியும்? ஒரே கல் காடு.

ஆரப்பா அறிவார்கள் அதைக் கடக்க
அதிகமாய் கற்காட்டின் பாதை தானே.....

என்று அப்பாதையின் சிரமத்தை ஒரு விதமாக திகைப்போடு கூறுகிறார் காலாங்கி.

பாதை வழி நேராய் நாதாந்த சித்தர்
பதியான குகை தெரியும் பார்த்துக்கொண்டு
வேதை நீ யடையாமலுள்ளே சென்றால்
வேதாந்தச் சித்தருடன் குதம்பைச் சித்தர்
போதையுள்ள ஞான சித்த ரடிவணங்கிப்
போற்றி விடை பெற்றுவர மிருகண்டேயர்
வாதையில்லா வழியில் மகா தவமே செய்து
மகப்பேறு பெறுவதற்கு மகஞ் செய்தாரே.

அந்தப் பாதை வழியே நேராகப் பார்த்தால் நாதாந்த சித்தரின் குகை தெரியும். அதைப் பார்த்துக் கொண்டே கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு நடந்து குகைக்குள் சென்றால் குதம்பைச் சித்தரையும் ஞான சித்தரையும் காணலாம். அவர்களைக் கண்டவுடன் நீ பட்ட துன்பம் எல்லாம் பறந்து விடும். மகான்களின் தரிசனம் அல்லவா? மனதை மெய் மறக்கச் செய்து விடும்.

அவர்களை வணங்கி விடைபெற்றுக் கொண்டு மேலே சென்றால் மிருகண்டு முனிவர் மகப் பேறவடைவதற்கு யாகம் செய்த இடத்தைக் காண்பாய். (மகம் - யாகம்)

மகஞ்செய்த இடத்தை விட்டு வழியே கூடில்
வரரிஷியின் குகையாகும் ரிஷிகட் கெல்லாம்
அகஞ்செய்த குகையித்ப்பா அதனுள் சென்றால்
சுத்தமிடு காதவழி வெளியாய்த் தோன்றும்
பகஞ்செய்த தவசித்தர் யோகசித்தர்
பதஞ்சலியார் வியாக்கிரமர் அகப்பைச் சித்தர்
ஜெகஞ்செய்த நாதரிஷி வியாசர் தாமும்
சிறப்பாக அதிலிருந்து தெளிந்தார்பாரே!

மிருகண்டு முனிவர் யாகஞ் செய்த இடத்தை விட்டு மேலே சென்றால் வர ரிஷியின் குகையைக் காண்பாய். இது ரிஷிகள் எல்லோருக்குமே சுகமளித்த குகையாகும். அதற்குள் சென்றால் இருகாத தூரத்திற்கு வெட்ட வெளியாய்க் காணும். நாலா பக்கமும் வெட்ட வெளியாகவே காணும். ‘சுத்த மிரு காத வழி வெளியாகத் தோன்றும்’, என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

அவ்விடம், பகம் செய்த - ஈசுவரத் தன்மை அடைந்த, கீர்த்தி பெற்ற, தவ சித்தர்கள், யோக சித்தர்கள்,

பதஞ்சலியார், வியாக்கிரமபாதர், அகப்பைச் சித்தர் போன்றவர்களும், உலகம் மெச்சும் ராஜரிஷியாகிய வியாசரும் தெளிவடைந்த இடமாகும் என்று கூறுகிறார்.

வியாசர், அத்திரி, மிருகண்டு முனிவர் போன்றவர்களுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டுவதற்காகவே இங்கு இப்பாடல்களை எடுத்துக் காட்டினோம்.

புராணத்தில் வரும் ரிஷிகள் எல்லாம் நமக்கு அன்னியர்கள் என்பது போல் தமிழ் மக்கள் நினைப்பது தவறு என்பதை உணர வேண்டும். அவர்கள் எல்லோரும் தமிழ் அறிந்தவர்கள். தமிழை வளர்த்தவர்கள். இந்த உண்மை தமிழர் கண்களிலிருந்து எதற்காக யாரால் மறைக்கப்பட்டது என்பதை ஆராய வேண்டும்.

வசிஷ்டர், வால்மீகி, அத்திரி, வியாசர் முதலானோர் தமிழில் பாடிய பாடல்கள் இனிமை மிக்கவை. பொருட் செறிவும் நயமும் உடையவை. இவற்றையெல்லாம் ரிஷிகள் பாடியிருக்க மாட்டார்கள். யாரோ தமிழ்ப் புலமை உடைய ஒருவர் அல்லது பலர் செய்த வேலை இது என்று சிலர் வாதாட முயற்சிக்கலாம்.... அப்படிச் செய்வது மகான்களான அந்த ரிஷிகளின் பெருமைக்கே இழுக்குத்தேடுவதாகும் என்று ஓங்கி அடித்துக் கூறலாம். ஏனென்றால் அப்பாடல்கள் அவ்வளவு இனிமையானவை அவ்வளவு இனிமையானவை அவ்வளவு பொருள் செறிவு மிக்கவை. அவற்றை இந்த நூலில் படிக்கும் பொழுது நீங்களே உணரலாம்.

இப்படி எண்ணற்ற நூல்களை வியாசரும், வால்மீகியும் பராசரரும், பரத்து வாசரும், சுகப் பிரம்மமும், துர்வாசரும், ஊர்வசியும் பாடியுள்ளனர் என்று மட்டும் கூறி

விட்டால் போதுமா? அந்த நூல்களில் கிடைத்துள்ளவற்றை இங்கே வெளியிடுகிறோம். இவர்களெல்லாம் உண்மையிலேயே தமிழ் உணர்ந்தவர்கள் தானா? அழகிய தமிழால் இவ்ர்களால் பாடமுடியுமா என்று யாருக்கேனும் ஐயம் ஏற்பட்டால் இந்தப் பாடல்களைப் படித்துப் பார்த்தால் ஒரு தெளிவு ஏற்பட்டு விடும்.

ஒரு புலவர் பலமொழிகளில் புலமை பெற்றிருப்பது விந்தை அன்று போகர் தமிழில் எழுதியதை விடச் சீன மொழியில் அதிகம் எழுதியுள்ளார். அகஸ்தியரே, வட மொழியிலும் தமிழிலும் ஏராளமான நூல்களைச் செய்திருக்கிறார். சமீப காலத்தில் இருந்த ஸ்ரீ நிகமாந்த தேசிகன் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் ஏராளமாகப் பாடியிருக்கிறார்.

ஆயினும், வடமொழி போல் துவேஷத்தை வளர்க்கும் தமிழாகளும், தமிழ் துவேஷம் கொண்ட வட மொழியர்களும் இதை ஒப்புக் கொள்வார்களா என்பது சந்தேகமே: சமஸ்கிருதம் செத்த பாஷை என்பார்கள் இவர்கள். சமஸ்கிருதம் என்றுமே பேசப்பட்ட மொழியல்ல. அது இரகசியங்களைப் பூட்டி வைத்த தேவ பாஷை என்பதை அறியாததால்.....?

தமிழைச் சூத்திர பாஷை என்பார்கள் அவர்கள். வட மொழியில் பூட்டி வைக்கப்பட்டிருக்கும் ரகசியங்களைத் தமிழ் மொழியைக் கொண்டே திறக்க முடியும் என்பதை அறியாததால்....?

சித்தர்கள் தமிழும் கிரந்தமும் இருகண்கள் என்றே கருதினார்கள். இரு மொழிகளிலும் வல்லமைப் பெற்றுத் திகழ்ந்தார்கள். வடமொழியைப் பார்த்து அதில் உள்ள

ரகசியத்தைத் திறந்து வடமொழியில் சொல்ல முடியாதாகையால் தமிழில் சொன்னேன் என்றே அவர்கள் அனைவரும் பாடியுள்ளார்கள்.

இந்த இரகசியத்தை எல்லோரும் அறிந்து கொள்வது கடினம் தான் : ஒப்புக் கொள்வதும் அதை விடக் கடினமாகவே தான் இருக்கும் :

ஆயினும் யாராவது ஒருவர் உண்மையை உரைத்தே ஆக வேண்டும் அல்லவா?

சீவனைச் சிவனாக்கும் சீரிய முயற்சி கொண்ட சித்தர் நெறி மற்ற நெறிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். யாக நெறி, யோக நெறி, தவ நெறி, பக்தி நெறி இவைகள் எல்லாவற்றையும் விட முற்றிலும் மாறுபட்டது சித்தர் நெறி. சித்தர்களின் வாழ்க்கைத் தத்துவம் என்ன? அவர்கள் கூறிய அறவழி என்ன என்பதைத் தெளிவாகப்புரிந்து கொள்ள இயலாதவர்களாகத்தான் இன்னும் நாம் இருக்கிறோம்.

அதனால் முதலில் சித்தர்களின் நூல்களைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட வேண்டியது நமது முதற் கடமையாகும். இங்கே வட நாட்டவர் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் சித்தர்கள் தமிழை எப்படிக் கொஞ்சி மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதைக் காண்போம்.

ஊர்வசி திருவாய் மலர்ந்தருளிய இரத்தினச் சுருக்கம் 19

ஏக மாகி யிருந்த பராபரம்
தேக சீவசை தன்யசித் தாரணை
யோக மாக நினைத்திடு மூர்வசி
தோகை யாள்சொலும் ரத்னச் சுருக்கமே. (1)

சீல மான பதஞ்சலி யும்புலிக்
கால னுங்குரு வாமென் கருத்தினில்
மூல மான தியானமெய்ஞ் ஞானமும்
கோல மான தமிழ்க்கவி கூறவே. (2)

ஆசை யன்றி யிருந்தமெய்ஞ் ஞானியை
ஈச னென்றே யியம்பிடும் வேதமும்
வாசல் கண்டு நுழைந்தறி வாகினாற்
பூச லன்றிப் புலன்கெடும் யோகியே. (3)

பரிச மான புராணவி யாபகம்
சரியை யாமெனச் சாற்றுமெய்ஞ் ஞானநூல்
ஹறிகி ஓமென் றெழுத்தறி விற்பனக்
கிரியை பூசையி னிற்பலன் கிட்டுமே. (4)

வேறு

படிகமதிற் றன்னுருவந் தோன்றுகின்ற
படியேதான் சீவப்ர மாணமாகும்
கடினமனக் களங்கத்தாற் சீவனாகும்
களங்கமற்றாற் பிரமமெனக் கருதலாகும்.

குடிலமெனும் விபரீத பாவனையேஜெகமாய்க்
கோலியதிற் சீவன்மனங் கொள்கிநின்றால்

மடிவதுவும் பிறப்பதுவுஞ் சமுத்திரத்தின்
மன்னுமலை யிரண்டாகும் வகையதாமே. (5)

கலித்துறை

ஆசிக்கு நாலுபத் தொன்பா னெழுத்தைந் தகாரமிட்டு
நேசிக்கும் நாதத்தின் மேலேவு காரத்தை நீட்டிவைத்து
வாசிக்கு மவ்வைச் சுழித்துச்சி காரத்தின் மவ்வையிட்டால்
காசிக்கு நீநடப் பானேன் மிகுபலன் கைவருமே. (6)

நாதிக்கும் ஐயுங் கிலியுடன் சவ்வையும் நாட்டிவைத்துச்
சோதிக்கும் அவ்வினிற் பின்பாக மவ்வினிற் சூலமிட்டுச்
சாதிக்கு முன்னஷ்ட கர்மத்தின் வாலையைத் தான்பெறலாம்
வாதிக் குதலொன்று மாகாது யோக வழக்கமிதே. (7)

வேறு

நாக்காலே நாட்டுவது பக்கமாசி
நவமியடா யேழான ராசிமிச்சம்
வாக்கார மனதார வாகுமாகும்
வலுத்தநாள் சோதியடா கிழமைவெள்ளி
நாக்காலே கன்னியிடங் கொடுத்துவாங்கி
நாட்டினாற் கண்டவரை முகியும் பாரு
மூக்கான நாசியிடை கலையைப்பாரு
முழுமதியின் சோதிமூச் சில்லைத்தானே. (8)

வெண்பா

பூரகத்தை யெண்ணான்கு போக்கிவிடு ரேசகத்தைக்
கூருமதிற் பாதிவிடக் கோணாதே -- பேர்பெரிய
அம்பரத்தைக் கண்டங் கசபையறு பத்தொருநால்
கும்பகத்தைச் செய்யக் குணம். (9)

நாற்பத்தெண் சித்தர்

குணமாகும் மூலத்திற் குண்டலிசட் பீஜத்
துணையதனாற் சாதனஞ்செய் தோன்றா--வுணர்வுதரும்
பிராணாய மாதிமுதற் பேசா மவுனவரை
நிராணாய சாதனையில் நில். (10)

மூலச் சுழியிட் டிருமாந்து மூக்கி லிரண்டு வகுப்பாகி
மோசப் படுத்தும் வகைதானே மூன்றத் தொருபங் குயிர்மூச்சு
நாலைச் செலவிட்டதினாலே நாளைக் குறைக்கும் படியாகி
நாசப் படுவிண் மதிபோல நமனுக் குயிரின் றிரையாச்சு
பாலைச் சிறுக வனற்காய்ச்சிப் பாசிப் பயறிட் டுறவான
பாகத் தமிர்த முண்பார்க்குப் பாவச் சனனப் பழிபோகும்
மேலைச் சுழியிட் டமருடே வேதக் கலையின் மணிநாவை
மேவிக்கூடு முயிர்தானும் மேலைப் பிடரி வழிசேரும். (11)

கலித்துறை

ஈராறு பன்னிரண் டீரெட்டு மாகி யியங்குமனம்
பூராய மீரெட்டுப் பன்னிரண் டாகிப் பொதுச்சுழியில்
ஆரா தனையுமிட் டண்ணாக்க முத்தி யமுதருந்தச்
சாராது மட்டிகட் காகாது யோக சமாதியுமே. (12)

வேறு

ஆதியுப்பு விண்ணினில் அனாதியுப்பு வேலையில்
ஆழிநீரை யுண்டுகெற்ப மாயிருந்த கொண்டலும்
சோதியற்ற நாளில் மேனி சூலுளைந்து மாரியாய்த்
தூறும்வேலை தன்னில்மின்னல் மீறுமம்ப ரத்தினில்

மோதியக்கி னிக்கடாவி வீழுமங்கி யுடன்சுடர்
மூலவிந்து பூமியூடு தானிறங்கு மேலுவாச்
சாதியத்த லத்தினிற்ச மாதிகொண்ட தையனே
சத்தியுள் ளடக்கமாகித் தானிருக்கு மீசனே. (13)

வேறு

ஈசனென்றுமுடி வன்னியாதிசுழி யேகமானபரி பூரணம்
இந்துகூடுமொரு மீனமேஷமதி லேயிருக்குமவை போதுமோ
வாசமுண்டுபுவி யாளர்தானுமறி யாதிருந்தச மாதியாய்
வாடிடாதுபின் மலர்ந்திடாதுநிற மாவதென்னவயி டூரியம்
தேசமென்றவுவ ரானபிங்க லைசி வந்தமேனியடி சூரியன்
தேவிமூலவெளி யேமலர்ந்துநிறை திங்கள்சித்திரையின் மாதமாம்
ஊசிநீலமதி னின்று ஆழியிலு றைந்தெழுந்திடுகல் லுப்பெனும்
ஓதுமங்கைநடு வானதென்றுமிடை யுண்மையான பனிக் காலமே. (14)

வேறு

காலமறிந்தவை தோணாரேதலை கீழேநுழைந்தது காணாரே
கரியவே லையினூ டாரேசிலை யாகவளர்ந்தது பாராரே
மேலையெழுந்திடும் பூநீரேஉர மாகமுடிந்திடும் நீராலே
மேகஜலப்பசை கூராலேமதி பீஜமதென்பர்கள் பெரியோர்கள்
மூலசுயம்பிவை மூன்றாலேவளர் மூவுலகும் பொருள் தானாகி
மோனமிகுந்திடு மொன்றாலேசுவர் கோடிவிளைந்தது மண்மேலே

நாற்பத்தெண் சித்தர்

ஆலமருந்து மரன் பூவையறி யாமலலைந்து சுடுந்தோஷி
ஆசைமிகுந்து சடந்தோறுமுய ராவிபுலம்பி
மெலிந்தாரே. *(15)*

வேறு

மெலிவிலாத வாயுவங்கி யப்புமூன்று முப்பதாம்
வெளியில்ரெண்டு குழியிலொன்று மீனமேஷ
மல்லவோ
செலவிலாத நாதநீரில் மேவியாடுந் தீட்சையாம்
தேவதேவ நீயலாது செம்பொனென்ன அற்பமாம்
மலைவிலாத யோகமுமெய்ஞ் ஞானமுங்கை மேல்வரும்
மாசிலாத சூதராஜன் வானிலோடி யேவரும்
அலையின்மீதி லண்டபிண்டம் நாதமேக நீரடா
அங்கிகண்ட வழலையுப்பு ஆதியான குருவிதே. *(16)*

கலித்துறை

குருக்காணு மமன்நந்தி முந்நூற்றிற் சொல்லிய கோசரத்தைப்
பெருக்காற்றி னிற்சென்று தானே மிதக்கின்ற பேதையுப்பை
உருக்காக வுங்கட்டி நீரான வூசரத் தோடுணரில்
கருக்காணும் வேதைக்கு மால்சவுக் காரத்தைக் ண்டிலரே
(17)

வேறு

பாருலகத் தினிலிரும்பு பசும்பொன்ன தாகும்பின்
பாகா தாலே
வேருலகத் தினிலுடலைப் பொய்யெனவென்
றறிந்துமேல் மேவான் ஞானி
மாருதத்திற் சலமசையு மசைவதுபோ லாகாய
மசையா தென்றே

பேருரைக்கொ ணாதறிவிற் கவ்வறிவே சேருமல்லாற்
பேதி யாதே (18)

வேறு

ஆதியின் விலாசமிவை யானஜெகம் யாவும்
பேதகம தாயறிஞர் பேசுவது முண்டோ
சாதிபல வானவுயிர் சாகரம தென்றே
நீதிமொழி யானபதி னெட்டுமிவை முற்றே. (19)

ஊர்வசி இரத்தினச் சுருக்கம் 19
முற்றிற்று

....

பதஞ்சலியார் ஞானம் 54

திருப்புகழ் காப்பு
நேரிசை வெண்பா

சீலத் தரும்பொருளைத் தேசோன் மயப்பொழிவை
மூலத் தசைவை முதற்குருவை--ஞாலமுணர்ந்
துய்ய பதஞ்சலிமுன் போதுந் திருப்புகழ்க்கைங்
கையனிரு பூஞ்சரணே காப்பு.

ஆறாதா ரப்பொருளா யைம்புலனாய் வன்கரணக்
கூறாய்க்கான் மூவசைவின் கொள்கையாய்ப்-பேறான
வாழிடமூன் றெய்தும் மனோமணியன் பான்மகிமை
சூழும் பதஞ்சலிநூல் சொல்.

தனதனதந்தன தானாதானன
தனதனதந்தன தானாதானன
தனதனதந்தன தானாதானன-தனதான.

நாற்பத்தெண் சித்தர்

பரமமெ னும்பொரு ளேதோகாரணம்
விவரம றிந்தது தானேசூசனை
பழுதுற வெஞ்சலு மாயாபேதமை யுறவாகிப்.

பழகிநி றைந்தபின் வேறேயோர்பொருள்
கருவிலெ ழுந்தது போலேவாய்வது
பரிசநு ழைந்திடு பூதாகாயமு மதுதானே.

கருவிய னந்தமு மீளாவாணவ
மலமிக கந்தைகண் மேலாய் நால்வகை
கபடவ லங்கிர்த யோனிபேதமு மெழுகூறாய்க்.

கரையிலை யென்பது சீவான்மாவுகள்
பசுசல னஞ்சமை யாதீயாகம
கலகமெ னுந்திரை யூடேழுழ்கினர் கதிமாறி.

இரவிகள் சந்திரர் வானாகாயமும்
யுகமுடி வுஞ்சன னாதீமாயையி
லிதுசக சந்தனி லேனோபூருவ மிதுகாணும்.

இகபரம் ரண்டென வேதானோதிய
விருவகை யுந்தள லாமேஞானமு
மிதுவது வுஞ்சரி தானேமோனமு மினிதாகும்.

சருகுகி ழங்குகள் பானீர்காய்கனி
மிகவும ருந்துவர் வீண்வாய்பேசியெ
தடியின்மு ரண்டினர் தாமோர்வேணியின்
முடிவேதோ.

சருவம வன்செய றானேயாகிய
குருவையுணர்ந்த வர் தாமேயோகிக
டனையும றிந்தவர் பேசார்ஞானிக டவியாரே. (1)

உருகிர தஞ்சனி யாதேநாமொரு
கவனமி டும்படி தானேசாரணை
யுபரச முஞ்செய நீரேயாகவு மறிவோமென்.

றுலகின் மடங்களி லோபாகாமிய
ரிவரைவ ணங்குவ ரியார்காண்மூடர்க
ளுறுதிசி வன்சொ லுமி யோகாதீதமு முரையாரே.

புருவமெ னுஞ்சுழி யூடேசார்வையும்
வலமிட முஞ்செய வேதான்வாயுவை
புரையுள தெங்கணுண் மேலே தேடிய
பதியோராய்.

புசியமு துஞ்சிர சூடே நாடியி
லொழுகிவ ரும்படி யாமேதாரணை
புரியுமி தம்பெற வேதான்ரேசக புணர்வாகும்

இருதய முஞ்சில நாளாயூகையு
ளுருகிம கிழ்ந்திட வேதோவாதனை
யிடர்கட விர்ந்திட லாமேஞானமு மிதுதானே.

இமையவர் கஞ்சன்மு ராரீயீசனு
மறலியும் விண்குடி போனாராசையி
லெவர்களி ருந்தவர் கூறாய் காதைகள் வழுவாமல்.

சொருபம றிந்தவ ரியாரோ பார்மிசை
சருவப ரம்பரை யோகீநீயறி
சுகருமி னந்தெரி யாதேபோயினர் தொலைதூரம்.

சுடுசுடு நெஞ்சையு னாலேதீமையை
விடுவிடு வைம்புல னாலாமாயையை
துறைதுறை சங்கைசெ யாதேநீடிய வியலீதே. (2)

கோவிலூர் ஆண்டவ
A. No. 7865
R689(க்)
நூலகம், கோவிலூர்

தனதன தத்தன தான தந்தன
தனதன தத்தன தான தந்தன
தனதன தத்தன தான தானன-தனதான.

இடைகலை யிற்றிகழ் சோடசந்தனை
ரவிகலை யிற்புக லாகவுஞ்செய
விருகலை யைத்திசை மாறிமாறியெ யிதுபோல.

இசையுமி தட்சணை பூரகந்தனி
லிருதொகை தப்பிவி டாமனின்றிடு
வெழில்புரு வச்சுழி மூலநாடியி லிருநீயே.

இனியச துர்திவி ரோசனஞ்செய
நவமிநி லைப்படு பாதிகங்குலி
லிருவிழி யுச்சியை மேவிப்பாரினி யிருசாமம்.

இடமுலி தற்பைவி தாயகந்தனி
லுழைசரு மத்துயின் மீதிலங்கிரு
யமனுமெ திர்த்துவ ராதஞாயமு மிதுவாமே.

அடரும னத்தைவி டாதையைம்பொறி
விடையமு னைப்பழி போடவந்திடு
மதிகப சிக்கொரு நேரமேநுக ரரைகாலாய்.

அறுசுவை யிச்சைகொ ளாதகன்றிடு
புகையிலை நித்திரை கோபமுந்தளு
யபினிக ளைக்குடி யாதைலாகிரி விடவேணும்.

அருளும்வி திப்படி வாசியுஞ்செல
தசமிதி னத்துப வாசமும்புரி
யமவசி யிற்செய சூதமேகொளு செயநீரில்.

அறியும்வ கைப்படி தானேமுன்பிறை
பிறகுமி தைச்சரி பாருபின்பிறை
யமுதமு னக்கது தாரகாதியு மடையோகம்.

பிடரிவ ழிச்சிவ யோகமுஞ்செல
வுரகப டத்தடி மீதினுந்துயில்
பிசகிலை யப்பிர மாதியேந்திர முயிர்மூலம்.

பிரணவ வுட்சுழி வாசல்வந்திடு
வொருதுளை யற்புத மாமுவந்திடு
பிடரிந டுக்கணி னாலெகூடுவ ததுமோனம்.

பிரமமு னிக்குப தேசமுஞ்சொன
வதிகம கத்துவ மானவிந்தையை
பிரபல முக்கிய மானநூல்களி னுரைகூறும்.

பிறவிவி னைத்துய ரானமன்பதை
யிதையறி யச்செய லேதுசங்க்ரமம்
பெரியகு ருத்தொட ராவைநாடொரு நிழல்போல.

சடையைவ ளர்த்ததி னாலுமங்கென
தலையைவ ழித்ததி னாலுமங்கென
சருகுபு சித்ததி லேதுசாதகம் விருதாவே.

சமயம தப்பரி யாசமிண்டர்க
ளுடலழியச்சில வாதியம்புவர்
தனமது கைக்கொள்வ தாகவோதுவர் சிலபேர்கள்.

தவமது பெற்றவர் போலவம்பல
குகைமலை யுச்சியில் வாசமுஞ்செய்வர்
தனியெயி ருப்பதி லேதுகாரிய மிதுமாயை.

நாற்பத்தெண் சித்தர்

தனையுணர் தற்பரம மானவன்பர்க
ளிகபர மெய்ப்பொரு ளானநண்பர்கள்
சலனம னத்துயர் மேவிடாரவர் தவியாரே. (3)

தானத் தானன தானன தானன
தானத் தானன தானன தானன
தானத் தானன தானன தானன தனதான.

மூலத்தானம தாகியநாலிதழ்
மேலிட்டேயொரு நாகசிகாமணி
மூவெட்டாறுவி நாடியிலேகதிர் முனையாகி.

மோதிப்பார் விதி யாலருகேயொர்சு
வாதிட்டானவி சேடனுமாகவெ
மோகப்போகவி ராகசையோகமு முனையாகும்.

மூடிப்பேசுவ தேதுநிராமணி
பூரத்தாமரை மாதவனாய்வட
மூலிப்பாயலி லேதுயில்காரண முகிலாகும்.

மூவர்க்கேமுத லானவநாகத
கோணத்தீயுட லாகியதேவணை
மோசக்கோபம னோமயனாகவே முழுநாளும்.

மேலைக்கோபுர வாயின்மகேசுர
பூதத்தோடறு கோணமுளாகிய
வீசிக்காலையு லாவியுலாவியெ விளையாடும்.

வேதத்தேமுடி வானசதாசிவ
பீடத்தேகுடி யாகவுமாயையில்
வீருக்கேயுரு வாகியவேபல விதமாகும்.

மேருக்கீழடி மேலுமுலாவிய
ஞானச்சேர்வையை மோனமதாயறி
மேவிப்பார்மத யானைவிநாயகன் வெளியாவான்.

வேடத்தாள்வட மாகியபேர்சிலர்
கூடிக்கூடிவி சாரணையேசெய்து
வீணுக்காகம நூல்சகமாயையில் வீழாமல்.

காலத்தேசரி சாலையிலேயரி
தானச்சூரண மோடுறவேசெய்து
காறிக்காறியு ணாவினிலேயிடு கபமாறுங்.

காலுற்றேவரு மூவிதபிராணயம்
மேவிப்பாணியி லூடுறவேசெய
காலக்கூர்மல மாறிடுமேவெகு களையாறும்.

காடிப்பானையி லூறும்வல்லாரையை
நீளத்தேசல தாரையிலேவிடு
காமச்சூடொடு தாபதின்சூடது காணாதே.

காரிட்டேவரு மாலையிலேயறு
கேழுக்கோர்மிள கோர்பலமாயது
காயச்சால்குடி நீரினிலேகொளு கனல்போகும்.

தூலப்பூஷண மாகவுமேசெய
சூதச்சாரணை மூலிகையேயுனு
சூதத்தேசெய நீரினிலேகொளு சுழிபாரு.

சோமப்பால்ரச மேல்பெ ரிதானது
தோணிக்கோ குகையானதிலேயிரு
தூளித்தாலய மூசியுமேகொளு சொருகாதே.

நாற்பத்தெண் சித்தர்

தூரத்தேயலை யாதையுமாயிர
மேலிட்டோடிய வேம்பினிலேகரு
சோதித்தேயம வாசியிலேகொளு துயர்போகும்.

தோகைக்கேயர னாருரையேசெய்த
தியானத்தேயிரு ஞானவினோதசு
வாமிக்கேயுற வாகுகையேகுரு துணையாமே. 4

தனதனதத்தத் தனத்ததானன
தனதனதத்தத் தனத்ததானன
தனதனதத்தத் தனத்ததானன-தனதான

அகரவெழுத்துச் சரிக்கவேமதி
யமுதரசத்தைப் புகட்டுமேசிவ
வருளிலுருப்பெற் றிருக்கலாமுத லசையாமல்.

அறிவைவெளிக்குட் செலுத்தவேபர
வணுவொளியுற்றுச் சொலிக்குமாமொலி
யதுகுறியொத்துத் தனித்ததேகதி யருண்ஞானம்.

வகரமிறுக்கிப் பிடர்க்குளேயொரு
மனதையுறத்துச் சுருக்கமாய்நெடு
மதியை வலத்திற் றிருப்பியேவிடு மறவாமல்

மணிரவியுச்சிக் குழிக்குளேநடு
சுழியினில்வைத்துத் துலக்கமாய்நிச
மவுனபதத்தெச் சரிக்கையாயிரு மலைபோல.

சிகரமுரைக்கச் சினைக்குமாணவ
கெறுவமதத்தைக் கெடுக்குமேயது
திருவுளமொப்புற் றிருக்குமேவெகு செயல்கூடும்.

செகமகரச்சக் கரத்தனார்மயன்
முழுவதும்வெட்டிப் புதைத்துபேவிடு
தினமொருகுத்துப் பிடர்க்குளேவரு மொருபோதும்.

உரகவிருத்திக் கிணக்கமாகிய
நகரபிறப்புக் கவத்தைபோய்விடு
முறுதிபலப்பட்டி ருக்கவேவரு முயிர்மூலம்.

உகரபடத்துத் தலத்திலேவளர்
பிரணவம்வைக்கக் கதிக்குமேயன
லுயிரையெழுப்பிச் சிவத்திலேயிரு முலகோரே. (5)

தானதந்தன தானனதானன
தானதந்தன தானனதானன
தானதந்தன தானனதானன-தனதான.

ஆசைகொண்டவ ரோசிலர்பேரச
வாதமுஞ்செய லாமெனவேயெணி
ஆதியந்தமி தாமெனவேவகை யறியாமல்.

ஆடன் மங்கையர் யோனியிலேவரு
தாரமென்பதி லேயுருசேரையி
லாகுமென்றிடு வார்சலமாகவே ரவிகூடன்.

ஊசரங்கதிர் நாளையிலேயெடு
மூவையுஞ்சிறு நீரினிலேதுவை
யூமையின்கரு நீரதிலேகடை யொருமாதம்.

ஊதவுங்கரி யாய்விடவேயது
பாகமுந்தவ றாமெனவேசொலி
யூதியெங்கணு மேதிரிவார்விதி யுலகாசை.

நாற்பத்தெண் சித்தர்

கேசரந்தனி லேயிடுரேசக
பூரகும்பக மேயுணர்யோகிகள்
கேவலம்பெரி தாமெனவேசொலு மறைநூலில்.

கீதமங்கொலி பூமியிலேகலை
மாறிநின்றத லோசுயமானது
கேசனும்பர மேசனுமாமென சொலவேணும்.

தாசிவங்கண மானதிலேபிர
யோகசனங்கடு காகிலுமேயிலை
தாழ்வுவந்திடு மேயதுநீரென வறியீரோ.

தாரகஞ்சில நாளையிலேவிடு
தாரகஞ்சில நாளையிலேகொளு
தாரகம்பர மோனமதாயது தவமாமே. (6)

தானதந்தன தந்தனதந்தன
தானதந்தன தந்தனதந்தன
தானதந்தன தானனதானன-தானான.

ஆதிவங்கமி ரும்புடன் வெண்கல
மானசெம்புக ளிம்பறவேமன
தாசைகொண்டல வோசிலமூலிகை யாராய்வார்.

ஆவிடங்கண முஞ்சிலை செந்திரு
வீரமும்புர முங்குருவாகிட
வாமியம்புவொ நீரறவேயென லாண்மோசம்.

நாதவிந்தொடெ லும்பதின் மண்டைகள்
சாரிடும்பல விந்தைகள்பேசுவர்
நாகலிங்கநி தானமதாய்கிலர் நாய்வாயார்.

நாலிரண்டுபு டங்கள் செயும்பல
காரியங்கடெ ரிந்திடுவீரென
ஞானமுஞ்சில நூல்களுமோதுவர் நாவாரச்.

சூதுறைந்தம னம்புலகந்தையர்
சூதமொன்றி லிரண்டரைநாழியில்
தோயும்விஞ்சைசெய் வோமெனவோதுவர் வாய்வீணர்.

சோலிரம்பவி யம்பிலையஞ்சனம்
வாசிதம்பனம் விந்துவிடாதென
சோரரிந்தவு பாயமுமேகொடு சூழ்வார்கள்.

ஊதிநெஞ்சுவ றண்டிருகண்களும்
ஏயவிந்துபு லம்பிடுவார்சில
ரூமைகண்டக னாவெனவேயவ ரோய்வாரே.

ஊசரம்புவி யங்கியறிந்தவர்
கேசரந்தனி னின்றதறிந்தவ
ரூழுடம்பறி யாதவர்போலவு மோதாரே. (7)

தானதந்தன தந்தனதானன
தானதந்தன தந்தனதானன
தானதந்தன தந்தனதானன-தானான.

காதலைம்புல னும்பொடியாய்விட
தீதுவெங்கர ணந்தொழின்மாறிட
காயவுண்டிய ருந்துவதாமரை காலாகிக்.

காரியந்தனி லுந்தனவாவழி
யோரிடந்தனி லுங்கரவாவணங்
காரணங்குரு வன்றுரைசேர்நெறி காலாகிச்.

நாற்பத்தெண் சித்தர்

சாதுசங்ககிர மங்களுமாயிரு
தானமுந்தவ முஞ்செய்வதாயிரு
தாழ்வகன்றியன் மிஞ்சினுமாமது சார்வாகிச்.

சாதகங்கலை யும்புலியாசன
மோடுபங்கய முந்தரைமீதினுந்
தானிருந்தசை வென்பதிலாமலே தாராளம்.

நாதகுண்டலி கொண்டலுமேவிடி
லூதுசந்திர னங்கசைவாய்வரி
னாடுபிங்கலை வொன்றுபிராணனை நாடோறும்.

நாதசங்கமெழுந் தொலியேமெசய
ஞானகும்ப சிதம்பரமாநட
நாவலஞ்சுழி வந்திடவேவிர னாலூணும்.

ஓதுதுண்ட நெடும்பிறைமேன்முனை
யூடெழும்பிட வும்பிரபைநேரிடும்
ஓமெனும்பரம் வந்தருண்மோனமு மோர்வாயே.

ஊழியிந்திர னுங்கணோர்பர
மேயனந்தண னுஞ்சனகாதியு
மோடிவந்துற வுஞ்செய்வர்காணுமு னூழ்போமே (8)

தானதானன தானனதானன
தானதானன தானனதானன
தானதானன தானனதானன-தானான.

பாலனாமறி யாமையுமேவிடு
கோலமேனிப யோதருமேதரு
பானுநாண்முதல் சோமனலோகுறி பாரீரோ.

பாவைமார்மய லாசையிலேமன
மோடினாலும் விடாமலுமேமறி
பாதைநூல்வழி யாகவுமேவிடு பால்போலச்.

சாலவேபதி னாறள வாயடை
யோகமானது வாகுமுனாலுசெய்
சாமிகாரிய மியாவுநினால்வழி தானாகுஞ்.

சாகுநாளையிலேசிவ னேயென
வோதினால்விடு மோதலைமேல்விதி
சாடவேவரு மேமபடாளர்க டாழ்வாரே

மூலவாசிய பானபிராணனை
மோனகேசர மாயுறவாகவும்
மூலிகாதிக ளாலிடரேதுடன் மூசாதே.

மூடரேவய தேடிதளாடிய
நாளிலேயென ரேசகபூரக
மோசமேவரு நோய்பிணியாலுடன் மீளாதே.

காலதாமச மாயரைநாழியும்
வீணிலேதிரி யாமனன்னேரொடு
காணுதேசிக னாரிருசேவடி காணீயே.

காடுவாவென வேகரநீடவும்
வீடுபோவென வேசொலியூடவுங்
காலசூனிய மாமிது வேவிதி காணீரோ. (9)

அகஸ்தியர் நூலின்றொகை
கழிநெடிலாசிரிய விருத்தம்.

கும்ப மாமுனிவர் தாமு ரைத்ததமி
ழோநிகண்டுபதி னாயிரங்
கூறு காவியம தாயிரம்பெரிய
வாதமாயிர மிரண்டுநாற்
றைம்பதோடமைவ தொன்றுமிக்கபதி
னாறுமெண்பதுட னன்றியே
அஞ்சுநூறுபரி பாடைமூவெழுச
கஸ்திரமாறுசத பூரணம்
இன்பமானவிரு நூறுமுப்பதொரு
வேழுநூறுவறு நூறுடன்
இனிய சாகரமே மூாயிரங்கவிதை
யேமதத்துவமெ ணூறதாம்
உம்பர்தாமறிவர் நாலுநூறுவிடை
யோ துகாவல்வ ரியாயிரம்
உப்புநூறுமதி பாடல்நூறுசிவ
யோகம்நூறுமிது வுண்மையே. (10)

சித்தர் நூலின்றொகை

இசையும்ஞானதிரு மூலமந்திரமெண்
ணாயிரங்கவிதை யின்பமாய்
இனியபோகருமே ழாயிரத்தையு
மெடுத்துரைத்தன ரிணக்கியே
விசுவரூபவவ தாரகொங்கணனு
மேயுரைத் தனனை யாயிரம்
மீறுமச்சமுனி யெட்டுநூறுகவி
வேதமென்றறைவர் நூல்வலோர்
அசைவிலாதசிறு பிள்ளைசுந்தரனு
மாயிரத்தினிலடக்கினான்

ஐயர்சட்டமுனி யாயிரத்தினிரு
நூறுமாயிரமு மற்புதம்
வசனசுத்திகபி லாதிமாமுனிவர்
வாசமானசன காதியும்
வாமரோமமுனி நந்திதேவர்வட
பாஷையோதினர்கள் வண்மையே. (11)

சித்தர்வர்க்கமிடம்

மேருலாவிவட வீதிதோறுமுயர்
வேதஞானசன காதியர்
மேலைவீதிதிரு மூலவர்க்கமிக
வேயிருந்துவிளை யாடினார்
பாருகீழ்த்திசையி லையர்சட்டமுனி
பானுமாமலையி லாகினார்
பன்னுதென்றிசையி லேயிருந்துதமிழ்ப்
பாஷையோதின னகத்தியன்
தாரிலேயிவர்கள் சீடவர்க்கமது
கோடிகோடியிவர் தம்மிலே
சாதுசுந்தரனு மச்சகூர்மமுனி
தாரகாதிபதி கொங்கணன்
சீருலாவிபர வேமடங்களது
செய்து சித்ததிக மாடினார்
தேசதேசசில பாஷையாலுமிவர்
செப்புநூன்முறை தெரிந்திடே. (12)

யோகிகளுக் கழிவில்லையென்பது
மட்டு விருத்தம்.

தாதுகொண்ட வண்டமீது தானெழுந்த வங்கியார்
சூதமுண்ட பேரில்யம தூதரண்டு வார்களோ

ஓதுகின்ற பூதமஞ்சு முள்ளடங்கி நிற்கவே
நாதமுண்ட யோகர்யாரும் ஞானகண்ட ராவரே. (13)

ஆழிதூள்க ளாகிமேரு வண்டம்வேறு கூறதாய்
ஊழிகால மானபோதும் யோகிசாவ துள்ளதோ
பாழிலேயெ ழுந்தவன்னி பாரில்வந்து ணர்ந்ததால்
வாழிவாழி சூதமுண்ட மானுபாவர் வாழியே. (14)

சரியை கட்டளைக்கலிப்பா

ஆதித்தன்மதி வாரமிருந்திடு
    ஆடிப்பார்நதி யாடிடுகும்பிடு
வேதத்தோர்தம தேவல்புரிந்திடு
    மேவிப்பாருயிர் மீதிலிரங்கிடு
நீதத்தேமனை யாளைமணந்திடு
    நேமத்தாலயல் மாதையகன்றிடு
சாதித்தேதர்ம தானங்களுஞ்செயுஞ்
    சார்புக்கேநிலை யாகுஞ்சரியையே. (15)

கிரியை

ஊணிப்பாரே அகாரவெழுத்திடை
    உவ்வைச்சேர்க்கி லுருப்படுஞ்சக்கரம்
பேணிப்பாரு மகாரமவுனத்தைப்
    பெற்றியாமது பேரிட்டழைக்கவும்
தோணிப்பார்கர்நி யாசவிதிப்படிக்
    தொட்டுப்பார்சர்வ காலமுமிப்படிக்
காணிக்கானது கோடிக்குமாகுமாங்
    காட்டுங்காட்டுங் கிரியையைக்காட்டுமே. (16)

காயகற்பச்செந்தூரம் சந்தவிருத்தம்

காந்தச்சத்தை யெடுத்தொ ரயத்திடை கட்டிடு வில்லோசை
சாந்தப்பொற்றக டேறரசத்திடை தக்க பரைநாதஞ்
சேர்ந்தந்தப்படி யப்பிர கத்தொடு செய்திடு செந்தூரம்
ஈந்தப் போததை நக்குவர் மெய்த்திற லக்கமுரைத்திலமே. (17)

சூரிப்பச்சிலை யுப்பையெடுத்தொரு சுத்தசலத்தினில்வை
வாரிக்குச்சுள காலையெடுத்தொரு மத்தகசத்தினிலிட்
டேரிக்கற்பசை யூனையெடுத்துட னிட்டிடுபூநீரிற்
சாரிக்கச்செய நீருகடைந்திடச் சாகாக்கங்கையுமே. (18)

யோகத்துக் கருகராகார் மட்டுவிருத்தம்

பூவுலகி லேயதிக பொய்க்கொலை யவர்க்கும்
பாவியென வேவுடல் படைத்தவர் தமக்கும்
ஆவல்பெரி தாகிவறி யாமையுள வர்க்கும்
தேவிமுத லானசிவ தீட்சையுரை யாரே. (19)

மையல்பெரி தாகிய மனத்தினர் தமக்கும்
ஐயமுறு கோபியர்க ளானவரி டத்தும்
பொய்யுரையி னிற்பொழுது போக்குவரி டத்தும்
செய்யபிட ரிக்குள்வழி சேர்க்கவறியாரே. (20)

ஆசைதன தானியம தாகறுவ மீறிப்
பாசவலை யிற்பதறு பாதகர்த மக்கும்
வாசிசிவ யோகபர மாமவுன மூலம்
பேசவறி யார்கள்பெரி யோர்கள்குண மாமே. (21)

நாற்பத்தெண் சித்தர்

ஆனபொரு ளாவியுட லாகவொரு தாரைத்
தானமளி யாதவப சாதகர்த மக்கும்
ஞானபர தூஷணர்க ணல்லறிவி லார்க்கும்
வானவன லாம்வழலை வாசமுரை யாரே. (22)

மாயமனை யாளுடைமை வாழ்வு சத மென்றே
பேயரென வேமொழிபி தற்றுவர்த மக்கும்
ஏயவய லாருடமை யேகவர்ப வர்க்கும்
காயமுற வான சவுக் காரமுரை யாரே. (23)

பத்தியம்
முடுகு விருத்தம்

பருகிய கனிகா யிலைபனி பயறொடு
படர்கொடி விரைமூலம்
பருமினி கடுகொடு புளிபுகை யிலைதுவர்
பலபல மாமிசமும்
உருகிய கிருதமோர் தயிர் வகை யெணெயொடு
முயர்மது குளிர்சலமும்

உறவுசெய் திடுசில மதுரமு மிவைதளி
யுணவது நீகேளாய்
குருவைநெ லரிசிசெம் மிளகொடுகோதிவை
குணமுள பொடியடையாய்
குருமிள கதுசெய லவணமு மறிதடு
குறைதவிர் புளியாரை
அருமையி லொருபசு வமுதினை யுடனெடு
வனலது பிடியாமல்
அரைவயி றொருபொழு துணுமவர் மவுனமு
மவர்களு மறிவாரே. (24)

மதிவெண்பா

கதிருஞ் சசியுங் கலந்து பிரிதல்
விதிபுருவ மாய்க்குருநூல் விள்ளும்–மதியான்
மொழியு முறைதெரியா மூடரே நாளும்
வழலையறி வாரோ வழங்கு. (25)

வண்ணான் பிறப்பறிய மாட்டாத வாதிகட்குச்
சுண்ணாம் பிருக்குமிடந் தோன்றாதே–தண்ணீரி
லூருங் கருங்காக மூசரத்தைக் கொன்று தென்றாற்
பேருமதி வெண்பாவைப் பேசு. (26)

காந்த மலருங் கடலுப் புறவானால்
ஏந்து தனமிரண்டிங் கெய்தாதோ–காந்தமலர்
காட்டிலே பூபூக்குங் கானலிலே காய்காய்க்கும்
நாட்டிலே கண்டிருப்போம் நாம். (27)

உப்புந் திரைகடன்மே லூசரமு மண்மேலே
அப்புங் கனலிரண்டு மாகாய--மிப்புவியில்
வாதிகாள் சூத மடக்கறியீர் வீண்கரிசுட்
டூதினா லுண்டோ வுணர். (28)

காரஞ் சுருக்கறியீர் கம்பியுப்பைக் கட்டறியீர்
பூரப் புகையடங்கப் பூசறியீர்--வீரத்தை
யூனிட் டுருக்கறியீ ரூசரத்தைக் கொல்லறியீர்
ஏனிப் படித்தவிக்கி றீர். (29)

ஆழி கடைந்தமுத மாக்கறியா ரச்சலத்தா
லூழிபர னுப்பையெடுத் தூட்டறியா--ரேழுசட்டை
வாங்கிரசங் கட்டறியார் வாதிகடம் வையகத்திற்
தூங்கிவிழு வாரெனவே சொல். (30)

நாற்பத்தெண் சித்தர்

பார்த்தால் விசுத்தி பரத்தினடி யாசனத்தி
லேத்தாமல் விட்டா லிதமில்லை–காற்றாடி
பின்கலையி லூதிற் பிடரிவழி புக்குமே
முன் கலையி லோடு முனை. (31)

சாயை மறையாதோ தன்னுடம்பு தான் வெளிக்கு
ளோயா லகத்தினடு வோடாதோ–காய
முயரப் பறவாதோ உன்மனையைத் தாண்டாதோ
செயமுக் குளிகைசெயுஞ் சீர். (32)

சாற்றுங் குளிகை தமர்வாச லிற்செலுத்தி
யேற்றினா லேழுசபை யேறாதோ - தோற்று
மனங்கடந்து பூரணத்தில் வாழாதோ காய
மினந்தெரிந்து கொள்ளு மியல். (33)

வண்ணவிருத்தம்

வாசிவாசி மூலவாசி வாயுமூல தாரையின்
மாறிமாறி யூதபான வாதையேது போய்விடும்
வீசிவீசி யோடினாலும் வீடகார வீதியின்
மேவியூது பிராணவாயு மேலைவாசல் தேடிடு
நாசிநாசி கூர்மையான நாதவாரி கேசரம்
நாடியூது ஞானசாடி ராஜயோக மாகுமாம்
காசிகாசி யேயுணேசி வீணிலோடி மாய்கிறீர்
காலன் மூல வாசியாகக் காணலாவ தாகுமே. (34)

கட்டளைக்கலிப்பா

மார்க்க மாம்பர வானத்தின் விந்துவாற்
றீர்க்க மாய்வெகு வுப்புச் செனித்திடும்
பார்க்கும் யோகம டாபரை வாதிகட்
சேர்க்கு மாமுப்பு வேழென் றறிந்திடே. (35)

உண்ணு மங்கையர் கர்ப்பக்கு ழிக்குளே
பெண்ணு மாணும் பிறந்தது போலவே
விண்ணி லாடும் விளங்கு மழைத்துளி
கண்ணி லேதரு காரமும் சாரமே. (36)

சார மேசில காரம தாயிடும்
கார மேயதி சாரம தாயிடும்
பூர மேயுற வாகவும் புக்கினால்
வீர மேவி விளைந்திடும் வேதையே. (37)

அஞ்சு பூதம தாகிய வுப்பது
மிஞ்சு தீக்கு வெறுங்குகை யாய்விடும்
தஞ்ச மாஞ்சிவ சத்தியின் றீட்சையாற்
றுஞ்சி டாதது தோஷமு மில்லையே. (38)

ஓது பூரணச் சந்திர னுப்பினால்
வாது சூரிய னுப்பு வசப்படும்
போது வானத் திழிந்திடும் பூவினாற்
சூத மாமணி யாடித்து லங்குமே. (39)

சூத மாமணி யோடுசு கெந்தியும்
சாது நாகமுந் தாளக வங்கமும்
நாத வேமமும் மேருவும் நண்ணினாற்
றீதி லாதசெந் தூரமும் சித்தியே. (40)

தாக்கும் பூமியைத் தானறிந் தாலல்லோ
வாய்க்கு மீசன் மகிமையுப் பாமது
காய்க்குங் காலத்திற் கண்டிடா வாதியை
யேய்க்கு மேய்க்கு மிறக்குமு டலுமே. (41)

நாற்பத்தெண் சித்தர்

அலையி லேவழிந் தாடிய சைந்தது
சிலைய தாய்மதி யாகத்தி ரண்டது
மலையி லேவரு கங்கைம கத்துவந்
தலையி லேசிவ சத்தியின் றீக்கையே. (42)

அண்ட வன்னியி னால்ரச மாகிடக்
கண்ட போதினிற் கற்பம தாயிடும்
உண்ட போதினிற் காயமு றுதியாம்
பண்டு மீசன் பகர்ந்தமு றையிதே. (43)

வன்னி யுண்டு ரசஞ்செய மாகினாற்
பின்னை யோர்பொருள் பேசவும் வேண்டுமோ
தன்னை யேயுணர்ந் தார்தமக் கல்லவோ
சொன்ன யோகமுஞ் சூதமுஞ் சித்தியே. (44)

உப்பி லேகளிம் பூறுந்து ருசுதான்
அப்பி லேதுவைத் தாலல வோவறும்
செப்பி னார்கடுஞ் சீனச்சுண் ணாம்பினாற்
றப்பி டாதரி தாரஞ்ச லவையே. (45)

அகார மென்றறி யார்முடி யக்கினி
உகார மென்றறி யார்புவி யூசரம்
சிகார மென்றது கைக்குளே சிக்கினால்
வகார நின்றிட வாயுவி ளங்குமே. (46)

அண்ட மாவது கோழியி னண்டமோ
பிண்ட மாவது தான்றலைப் பிள்ளையோ
வண்ட ரேயிதி ரண்டையு மார்க்கமாய்க்
கண்ட போதலோ காண்பது சொர்ணமே. (47)

காக்கை யார்க்கெனுங் கம்பிதி றப்படும்
காக்கை யாயுவர்ச் சாரமும் கட்டலாம்
காக்கை யார்ச்சவர்க் காரமுங் கைக்குளாம்
காக்கை காக்கை நடுக்கடங் காக்கையே. (48)

ஆடி யாவணி யாழிதி ரண்டதை
தேடி னால்வரு மோவந்து சிக்கினாற்
பாடி னார்பல நூல்களிற் பாஷையா
லோடி யோடி யுழன்று தவிக்கவே. (49)

தையுமாசி யென் றேசிலர் சாற்றினா
ரைய னேபனிக் காலம தல்லவோ
செய்ய கங்கையின் றீக்கை யறிந்தபேர்
கையு மெய்யுமெய் யாகவுங் காண்பரே. (50)

மீன மேடமி ரண்டையு மேவுவார்க்
கான காலமென் றேசிலர் காட்டுவார்
போன காலமும் புக்கின வேளையும்
ஞான தேசிக னார்சொலும் நல்குமே. (51)

மட்டு விருத்தம்

காரஞ்சில சாரஞ்செய நீரானது கட்டும்
வீரஞ்சில பூரங்களும் மெழுகும்பல விதமாய்ச்
சேருஞ்சில குருவும்பல செந்தூரமு முறவாய்
ஊருஞ்சில தயிலங்களும் உப்பாமென வுரையே. (52)

ஆகும்பெரு வெளிமேலுட லாடும்படி ககனம்
போகும்படி திடமாகிய பொருளேரச மணியுந்
தேகஞ்சில நாணின்றிட வேசெய்திடு திரமும்
யோகம்பெறு மௌனங்களும் உப்பாமென வுரையே. (53)

முடுகு விருத்தம்

நூறிலேறு போதிலாறு கேணியாகும் விந்தடா
நூறுநூறு சேருமாகின் மாரிபெய்யு மாறடா
வேறுமீச னேதுஞான வீதியேறு போதிலே
வேதனாளு மாயனாளு மீசனாளும் வீசமாய்க்
கூறுநாவ தேதடாசொன் மூலநாடி யூதவே
கோணமாமு வாசலேறப் பாழின்மீதி லேறடா
சாறுபோற் கணேசர்பாத கேசராதி வீதியிற்
சாருசேரு தாரகாச தாசிவாய பிரமமே. *(54)*

பதஞ்சலியார் ஞானம் *54*
முற்றிற்று

....

பதஞ்சலியார் சூஸ்திரம் 20

பூமலியின் கண்ணாடன் பாதம்போற்றிப்
புதுலுவேன் வாதத்தின் திறவுகோலை
நாமுரைப்போம் ஐநான்கு பாடற்குள்ளே
நலமான வாதவித்தை ஞானமார்க்கம்
சோமனுற்ற வேணியனாரு பதேசத்தால்
துறையறியும் பதஞ்சலிதன் சூஸ்திரத்துள்
ஏமவித்தைக் காதியென்ற வஸ்துவுப்பை
யிதையறிய மாட்டாம லேங்கினாரே. *(1)*

ஏங்கினார் வஸ்துவுப்பைக் கண்டாற்போலே
யிதினாலே யிருக்குதென்பார் எதுதானென்றாற்
பாங்கியர்கள் தீட்டமென்பார் விந்தாமென்பார்
பனிரெண்டும் பதினாறும் பருவமென்பார்
தாங்கிவளர்த் திட்டதலைப் பிள்ளையென்பார்
சமாதியிலே வைத்திருக்குந் தலையோடென்பார்

தூங்கையிலே சொற்பனத்தி லாயிவந்து
சொன்னதென்பார் பூடென்பார் சுகியென்பாரே. (2)

சுகியென்பார் கோழிமுட்டைக் கிழிஞ்சிரெண்டும்
சுத்தசல மானாக்கால் தொழிலாமென் றுந்
தகையென்ன புளிதானே பலமாமென் றும்
சாரமென் றும் மூத்திரமே உப்பாமென் றும்
குகையென்ன செவிநஞ்சுங் கண்ணீரென் றுங்
கோசமென் றும் பீசமென் றும் குருவண்டென் றுந்
திகையாதே சடத்தினிலைங் காயமென் றுஞ்
சிகையென்றும் பூநாகத் தெளிவென்பாரே. (3)

தெளிந்தவர்போற் சித்தர்சொன்ன சூத்திரத்திற்
சிக்கறுத்துப் பாராமற் செகத்துள்ளோர்கள்
அளுந்தியதி லுத்திபண்ணிப் பாராமற்றான்
அவரவர்கள் நினைத்தபடி சுட்டுப்பார்த்துப்
இளந்தைசொல்லா மென் றுசொல்லி நூல்வெறுத்து
இல்லறமே நல்லறமென் றிருந்தார்கோடி
களிந்தபிணம் போல்மெலிந்து சிலதுபேர்கள்
கானகத்து மலையிடத்துங் கருதினாரே. (4)

கருதினார் சிலதுபேர் குருத்தான்வந்து
காட்டுவா ரென் றுசொல்லி சூஸ்திரத்தை
உருவியே கிழித்தெரிந்து வீண்வாய்பேசி
உழன் றுதவிப் பார்களதி லனந்தம்பேர்கள்
மருகினார் சிலதுபேர் வாதவித்தை
வந்தவற்போற் சொல்லியவர் பிழைப்போமென் று
உருகினார் யோகதண்டுங் காயாசங்கள்
யோகநிஷ்டை பெற்றவர்போ லுருக்கொள்வாரே. (5)

கொள்ளுவார் செபமாலை கையிலேந்திக்
குறடுமிட்டு நடைநடப்பார் குகையிற்காப்பார்
விள்ளுவார் வாதமொடு யோகஞானம்
வேதாந்த அதீதம்விசா ரித்தோர்போலத்
துள்ளுவா ருபதேசம் செய்வோமென்பார்
சூதமணி கட்டுகிறேன் தொழிற்பாரென்பார்
தள்ளுவார் பொருளாசை நமக்கேயென்பார்
சவுக்காரக் குருமுடிக்கத் தனமென்பாரே. (6)

தனமென்ன வாலைமனோ மணிதானென்பார்
சாராயம் பூசிக்கத் தண்ணீரென்பார்
கனமென்ன காந்தசத்துக் கிண்ணம்பண்ணிக்
கற்பமுண்டு பெண்ணாசை கண்டோமென்பார்
மனமென்ன வாய்ப்பிரட்டுங் கைப்பிரட்டால்
வாதவித்தை போற்காட்டி மயக்கஞ்செய்வார்
தினமிந்தப் படிதானே யுலகத்துள்ளே
சீவனங்கள் செய்வார்கள் சிலதுபேரே. (7)

சிலதுபேர் பிரமவித்தை பொய்யென்பார்கள்
சித்தசுத்தி யானவரைத் தெரியப்போமோ
தொலையாத பூமியிலே யறிவுகொண்டு
சோதித்தாற் கோடியிலே ஒருவனுண்டு
கலகமிடா நற்சீட னறிந்துகொண்டாற்
காந்தமய மிழுப்பதுபோற் கலந்துகொள்வார்
மலையென்ன உலகமென்ன வனந்தானென்ன
மவுனவித்தை யறிந்திருக்கும் வகையாளர்க்கே. (8)

வகையறிந்த பெரியோர்கள் மலையிலுண்டு
வனத்திலுண்டு செகத்திலுண்டு வாழ்ந்தாலுந்தான்
பகையணுகா ருறவுகொள்ளா ருலகாசாரப்
பந்தம்விடார் கர்மானு பவத்துட்சிக்கார்

செகம்விளையாட் டதிலிருக்கார் சினந்துபேசார்
சிவசமய விகற்பமுரார் திறந்துசொல்லார்
அசுமுறையார் ஜீவபர மாத்மாவெல்லாம்
அவராகி நிறைந்திருப்பார் ஆசான்றானே. (9)

ஆசானைக் கண்டபேர்க்கு ஞானப்போக்கும்
அப்போதே யோகத்துக் கருளுண்டாகும்
போசாத மௌனமென்ற பிரமவித்தை
பிடரிவழி கண்திறந்து பிரகாசிக்கும்
பூசார வஸ்துஉப்பு வன்னிபீஜம்
புதைத்தவிடம் தனைக்காட்டிப் பொருளுஞ்சேருங்
கேசாதி பாதமுதல் நடுவுந்தோன்றுங்
கெவுனமென்ற குளிகையது கிடைக்கும்பாரே. (10)

கிடைக்குமே யின்னூற்கு முதனூலையா
கெட்டியாய்ப் புதைத்துவைத்தேன் சூஸ்திரத்துள்
முடிகனலும் அடிப்புனலும் நடுக்கால்மூன்றும்
மோசமில்லை பாடிவிட்டே னிருநூற்சங்கங்
கொடைக்கொருவ னென்பதுபோ லிந்தநூலிற்
கூறுவேன் வஸ்துஉப்பின் குறியொன்றைத்தான்
உடைக்கவென்றா லக்கினியின் பூவுக்குள்ளே
உற்றவிடம் வஸ்துஉப்பென் றுரைக்கலாமே. (11)

உரையார்க ளாதியென்ற வஸ்துஉப்பை
உதாரணமாய்ச் சொல்லிவைத்தார் சித்தரெல்லாம்
துறையறியா வண்ணமதாய்ச் சூட்சமாகச்
சொன்னாரே யந்தவிதந் தன்னைநோக்கி
மறையாமற் றிறந்தாரே நந்திதேவர்
வாய்ப்பூச்சிக் கடக்கிவிட்டார் மற்றோரெல்லாம்
கரைகாணா விருட்சிகமாம் வன்னிபீசங்
காண்பதற்கு யெவ்வனமுங் கண்டுபாரே. (12)

நாற்பத்தெண் சித்தர்

பாரையா காலத்தை முன்பின்னாகப்
பாடினா ரதைத்தெளிந்து பார்க்கவேணும்
நேரையா வஸ்துவுப்பைக் காணவென்றால்
நிலமறிய வேணுமதின் நிஜமும்வேணும்
தூரையா சந்திரனுக் கைந்துதீட்சை
சுயமான சூரியனுக் கைந்துதீட்சை
பேரையா அக்கினிக்கோர் தீட்சையென்றால்
பின்றசமாம் தீட்சையொன்றும் பேசினாரே. (13)

பேசினதி லொன்றுமில்லை யேகதீட்சை
பெரியோர்க ளுட்கருவை புதைத்தாரந்த
சூஷணைதா னறியவென்றா லகாரமிட்டும்
சுழித்திருக்கும் உகாரமல்லோ யேகதீட்சை
பூசைவிதி மறந்தாக்கால் முப்புசத்திப்
பூரணமு மாகாது பொய்யாய்ப்போகுங்
காசினியோ ரிதைவிட்டு ஆசைபூண்டு
கரிசுட்டுக் காணாமற் கலங்கினாரே. (14)

கலங்காமல் வன்னிக்கு நாலுகாலு
கதிரவனுக் கொருநான்கு காலுமாகுந்
துலங்கினார் சோமனிலே விரண்டுகாலு
துகைபார்க்கப் பத்துக்கால் தோன்றலாச்சு
மயங்கினா ரிடைதப்பி குருவைச்செய்தால்
வாய்க்குமோ பூதமைந்து காணவாழ்க்கை
துலங்கினோம் முன்நூலிற் கண்டுபாரு
துருசுகுரு ஆவதற்குத் துறைசொன்னோமே. (15)

சொன்னதென்ன பிரிதிவுக்குத் தீக்காலொன்று
சுகமான வப்பினுக்குத் தீக்கால்ரெண்டு
பின்னமில்லாத் தேயுவுக்குத் தீக்கால்மூன்று
பேரான வாய்வினுக்குத் தீக்கால்நாலு

நன்னயமா யாகாச மைந்துதீக்கால்
ஞாதுறுநா லுக்குமிந்த ஞாயஞ்சேர்க்க
வின்னமில்லா தீட்சைக்குப் பலந்தானாச்சு
மேலான வாதவித்தை வெளியாய்ப்போச்சே. (16)

போச்சிந்தப் பூதத்தைப் பிரித்துப்பார்க்கப்
போகர்சொன்னார் பூவழலைப் புலன்சொல்லாமல்
ஏச்சிந்த வகையாலே பார்த்துப்பார்த்து
எடுபட்டுப் போனார்க ளுலகவாதி
ஆச்சிந்தப் படிதானே செயநீர்வைப்பார்
ஆதியென்ற சுத்தகெங்கை யாற்றைக்காணார்
மூச்சிந்தப் படிதானே யோகத்துக்கு
மூலமடி யிதைவிட்டால் மூடனாமே. (17)

மூடாம லொன்பதுவா சலையும்விட்டு
மூத்திரப் பாதைவழி மூச்சைவிட்டு
சூடான மேகத்தால் வியாதிபூண்டு
தூங்கியல்லோ மாண்டார்கள் தொழும்பரெல்லாம்
ஆடாமற் கேசரமா மாயைபத்தி
அறிவுக்குள் ளாயிருந்து அசவையெல்லாம்
ஓடாமற் சுழிமுனையைப் புரையிலூட்டி
உயிரடக்கும் பெரியோர்க ளுண்மைதானே. (18)

உண்மையென்ற குண்டலியே பிராணவாய்வு
ஓங்கார பிண்டத்தி லுதித்தவான்மா
மென்மையென்ற வாகாசத் திருந்தவாறு
மேலெழுத்துங் கீழெழுத்து மானவாறு
தன்மையென்ற வித்துவிலே நின்றவாறும்
சாஸ்திரவிதஞ் சாகரத்திற் சார்ந்தவாறுங்
கன்மையென்ற சிங்குவங்கில் நிறைந்தவாறும்
கண்மூக்கு மத்தியிலே கண்டுபாரே. (19)

நாற்பத்தெண் சித்தர்

கண்டுபார் பிராணாய மாகுமார்க்கம்
காட்சிபெற்றா லாகுங்கற் பூரதேகம்
ரெண்டல்ல மூன்றல்ல ஒன்றுமல்ல
நின்றவிட மெல்லாம்நீ நிறைந்துகொள்வாய்
கண்டமடித் துண்ணாக்கிற் கும்பகத்திற்
கால்நிறுத்தி யுன்சடத்தைக் காக்கவேணும்
மண்டலத்தின் வஸ்துவுப்பைக் காணவென்றால்
மனம்பார்த்து மனம்பார்த்து வாழுவீரே. (20)

வாழவே நடுவெழுத்தை அகாரந்தன்னில்
வைத்திட்டார் தலையெழுத்துப் பிரகாசிக்கும்
மீளவே கண்டெழுத்து ஓடாதையா
விட்டெழுத்துந் தொட்டெழுத்தும் மேல்கீழாச்சு
தாழவே வேண்டாங்கா ணைம்பத்தொன்றுந்
தலையெழுத்துக் குள்ளாகிச் சிறந்துபோச்சு
கோளுமே வாராது மறலியாவாய்
கூறியவா தத்திறவு கோல்தான்முற்றே. (21)

பதஞ்சலியார் சூஸ்திரம் 20
முற்றிற்று

வியாக்கிரமபாதர் ஞானம்

எத்தை யாகிலும் கருத்துளே வைத்தெளி தென்றும்
தத்தை யோகங்க ளிதுபலன் தருமென நினைவாய்
முத்தி வாசக மிதனிட மில்லென மொழியாய்
சித்தர் யோகிகள் தள்ளின திதுவெனத் தேறே. (1)

தேறும் வாசகம் நந்தியே திருநந்தியே சொன்னார்
யேறும் அங்கென்ச் சிங்கென அங்கனே யிணைத்தாய்

தூறும் போகின்ற மும்மலைப் பாளையுந் துலைத்து
ஆறும் பாயவே அருவியுங் காட்டின னையன். (2)

ஐயன் வந்தெனை யாட்கொண்ட வதிசெயங் கேளாய்
கையும் வாயுமாய்க் காட்டினன் கண்டத்திற் கண்டாய்
பொய்மை போக்கினேன் ஓடினேன் ஒன்றினிற் புகுந்தேன்
மெய்ய னாகினேன் உயிர்க்கெம னிலையென
விதித்தான். (3)

வேறு

பூண்ட விடத்தில் மதிபோச்சு பொன்போற் காணு
மதுபோச்சு
ஆண்ட விடமும் நானறியேன் அகண்ட மல்லால்
வெளிகாணேன்
மாண்டார் பிறந்தா ராராரோ மருவிஞான வாளொன்றில்
தூண்டா விளக்கிற் புகையத்தாற் சொரூப மவுனாம்
நிசமெண்ணே. (4)

நிசமே யென்று நீநினைந்தால் நினைந்த வண்ண
மவன்நிற்பன்
அசைவாய் நீயும் மறந்துவிட்டால் அங்கே அவனும்
வெளிக்கெய்தான்
குசையே கொண்டுப் பரிகட்டிற் கூற்றன் தன்னை
யேயுதைப்பாய்
வசையே யில்லை பிறவிநோய் வாயா தொன்றும்
வாராதே. (5)

வாரா தொன்றுந் தானில்லை வருந்தி மூலம்
பார்ப்போர்க்குச்
சேரா தொன்றும் சேராது தீயே தினமுஞ் சேர்ந்திருந்தால்
ஊரே வளைய வலம்வரினும் உறத்து நீயு மிடத்தேவா
ஆரே காணா மெய்ஞ்ஞான மறிவே மணமாய்
நிசமெண்ணே. (6)

நாற்பத்தெண் சித்தர்

இறவா நெஞ்சும் நீயென்பார் இரவி மதியும் நீயென்பார்
மறவா நெஞ்சும் நீயென்பார் மனமும் நினைவும் நீயென்பார்
திறவா மனமுந் திறப்பிப்பாய் தேவ தேவம் நீயென்பார்
சறவாப் பாலில் நெய்வருமோ கசடர்க் குரையாய்
மெய்ஞ்ஞானம். (7)

ஞானம் கேட்கில் வாதமென்பான் நல்ல தொழிலைச்
சொல்லென்பான்
தானே மோக வகைகேட்பான் ஜகஜா லத்துப்
பொருளென்பான்
தேனே உரைத் தானென்பான் திருடர் மனது வெவ்வாறே
ஆனால் சோதி பன்னிரண்டும் ஆடும் மறைக்கும்
அவர்மனமே. (8)

மனமே தென்கில் நேரென்பான் வாக்கிற் காணு
மாண்டாகும்
குணமே தென்கில் நேரென்பான் குற்றம் பார்க்கி
லிடங்கொடான்
தினமே சுத்திக் கவடென்னத் திரிவார் வண்டச் சீஷருடன்
அனமே சத்தும் பேசாதே அறிந்த நூலும் காட்டாதே. (9)

காட்டி மெல்லத் தலைசொல்லிக் கண்ட விடத்திற்
கும்பிட்டுப்
பாட்டிற் பயனே பொருளென்பார் பசாச ரிடத்தி லுறவாகா
தீட்டிக் கழித்துத் தீயிட்டுத் தினமும் கவரவல்லீரேல்
மூட்டித் திறக்கும் பகிரண்டம் மூலமுனக்கு வெளியாமே.
(10)

வெளியாகும் ஞானம் வெளியாகும் மேவு மவுனம்
வெளியாகும்
அழியாக் காய மழியாது அநேக காலந் தவஞ்செய்யும்

பொழியா வமிர்தம் பொழிந்துவிடும் பூரித் தெங்குந்
தானாகும்
வழியே வந்த சீஷருடன் வர்ன முனக்கு உரைப்பேனே. (11)

உரையே அய்யா மகாநந்தி யுற்ற சீஷர் வேறுண்டோ
கரையே நட்பார் மனமஞ்சிக் கண்ணிற் காணப்
பயப்படுவார்
திரையே யில்லை யவ்விடத்திற் சித்த மில்லை தேகத்திற்
புரையே அற்ற விடமற்றுப் போலே நிற்பார்
தண்டவர்க்கம். (12)

வர்க்க மவர்க்கே மனம வர்க்கே மறந்து பேரன்
விடமவர்க்கே
தர்க்க மவர்க்கே தரனில்லை தனித்து வினைதா
னும்பார்ப்பார்
ஒக்க விருப்பார் பேசார்கள் உண்மை ஞானம்
வகைசொல்லார்
திக்கு விஜயம் வருவார்கள் தீயே நினைவாய்த்
திரிவாரே. (13)

வியாக்கிரமபாதர் ஞானம்
முற்றிற்று

......

வியாக்கிரமபாதர் சூஸ்திரம்

பிள்ளையில்லா மாதருக்குத் திருட்டிதோஷம்
புகலக்கேள் கெருடனொடு சேடன்பட்சி
வள்ளலே காகமொடு யிவர்கள் நால்வர்
வரப்போகக் கண்டதினாற் றோஷந்தோஷம்
மெல்லவே யிவர்கள்செய்யுங் கொடுமைகேளாய்
விணையாக நாலுவகைக் கெற்பப்பூச்சி

உள்ளபடி யிதுசெய்யுங் குணத்தைநன்றாய்
உரைக்கிறே னுலகத்தோர் பிழைக்கவென்றே. (1)

பிழைக்கவே கெருடனுட பூச்சியாலே
பிசகாத மாதவிடை தங்கித்தங்கி
அழைக்கவே திரண்டுருண்டு கீழ்வயிற்றில்
அரிதான சுரோணிதந்தா னிருகிவீழும்
இழைக்கவே பண்ணுமது தேகம்வத்தி
யிருகியே மரம்போலே யிருக்கச்செய்யும்
குழைக்கவே யிக்கொடுமை தீரவென்றாற்
கூறுகிறோ மின்னமொன்று கூறுவோமே. (2)

கூறவே செம்பினாற் றகட்டித்துக்
குணமாக அச்சரத்தை யதன்மேலூன்றித்
தேறவே கணபதிக்குப் பொங்கல்செய்து
சிறப்பான கன்னிதனை முன்புவைத்து
வாறவே படைப்புத்தெட் சணைகளீய்ந்து
வகையான அத்தியித்தி யரசுஇன்டாற்
றேறவே இதனாற்றா னெக்யஞ்செய்து
சேயிழையாள் பவமறுக்கச் செய்வாய்நீயே. (3)

நீயாகத் தியானித்து ஓம்செய்து
நேரிழையைக் குளிப்பித்துத் தூபங்காட்டி
வாயாகக் கெருடசக் கரத்தைக்கட்டில்
மனதுகந்து நல்லகுண வசியனைப்போற்
சேயாக வந்துதிக்கும் பாலரப்பா
தேவிபரை கிருபைதங்கித் திரமிதாகும்
நாயாக அலையாதே யிதுபோற்செய்வாய்
நன்றாகப் பாலர்வரும் நளினமாமே. (4)

நளினமுள்ள சேடன்வரக் கண்டதோஷம்
நன்றாகச் சொல்லுகிறோம் நயந்துகேளு
பழியாதே பெண்களுக்கு மாதவிடைவருநாள்
பறபறன நீர்கசிவு பசிகளாகும்
துளிதுளியாய் மழைமாரி போலேவீழுந்
துடையுளையுந் தேகமது துவளும்நல்ல
விழியாள்தான் பெற்றபிள்ளை யிறந்துபோகும்
மெல்லியருக் கீதுண்மை விளம்புவோமே. (5)

விளங்கவே வெள்ளீயத் தகடடித்து
விடதரத்தி னட்சரத்தை யதன்மேலூன்றி
உளம்பெறவே கணபதிக்குப் பூசைபொங்கல்
உற்றயிசங் கிலுப்பைபல சிப்பிதன்னால்
களங்கமற வேப்பெண்ணெய் தன்னாலெக்யம்
கட்டாகச் செய்வதற்குக் கன்னிமார்கள்
உளம்புகழக் களித்தபின்பு உம்மென்றோதி
உட்கழுத்திற் சக்கரத்தைக் கட்டிடாயே. (6)

கட்டினா லித்தோஷங் கழன்றுபோகும்
கன்னியற்கு வேதையில்லை கலகமில்லை
பட்சியுட தோஷத்தை நன்றாய்ச் சொல்வேன்
பதிவிரத கன்னியர்கள் மாதவிடைவருநாள்
தட்டிவிடுங் குருக்கிடுப்பி லுளைவாந்தேகம்
தலையிடியுங் கண்ணோவாற் சளமேசெய்யும்
அட்டிபண்ணுங் கணவனுக்கு நேராகாது
அதுதவிர வேணுமென்றா லறைகிறோமே. (7)

அறையாத காரீயத் தகட்டிலேதான்
அட்சரத்தை நீயெழுது ஆதியான

நாற்பத்தெண் சித்தர்

மறையாத கணபதிக்குப் பூசைபொங்கல்
வளமாகச் செய்வித்து வரிசையாகக்
குறைவாகா வேம்புநத்தைச் சூரிகொண்டு
குணமாக நல்லெண்ணெய் யதனாலோமம்
திறமாகச் செய்வித்து அருமைமாது
திருக்கழுத்திற் கட்டிவிடச் செயமாம்பாரே. (8)

பாரப்பா காகமென்றோன் கண்டதோஷம்
பரிகார மின்னதென்று பகரக்கேளு
வாரப்பா மாதவிடை வருநேரந்தான்
வயறுளையும் உடல்மெலியும் காங்கைகொள்ளும்
சீரப்பா அந்நிறமும் கரிப்போலோடும்
சேயிழையாள் வருத்தமது தீரச்சொல்வோம்
ஆரப்பா வெனைப்போலே சொல்லப்போறார்
ஆச்சரியம் மிந்தவித்தை அதீதங்காணே. (9)

காணப்பா அதுதீர வகையைக்கேளு
கருதுவில்வம் எருக்குநா யுருவிகொண்டு
தோணப்பா யேரண்டத் தெண்ணெய்யாலே
சுகமாகக் கணபதிமுன் னெக்யஞ்செய்து
வீணப்பா பேசாதே மவுனமாக
விரைந்துருவை நீயோது வினைகளெல்லாம்
காணவென்றா லண்டாம லோடும்பாரு
கண்மணியே யிந்தவித்தை வெளிவிடாதே. (10)

வெளியிலே தோற்றாம லடக்கிச்செய்து
மெல்லியரைக் குளிப்பித்துத் தூபங்காட்டி
அழியாத சிதம்பரத்தை யவள்முன்னோத
அப்பனே கலிகளெல்லா மகன்றுபோகும்
தெளிவாக மங்கையர்கள் கழுத்திலேநீ
சிதம்பரத்தைக் கட்டிவிடத் தெளிவிதாகும்

குளியாத மங்கையருங் குளியாநின்று
குணமான மைந்தர்வந்து பிறப்பார்நன்றே. (11)

நன்றாகச் செய்வித்தால் பாலருண்டாம்
நகையாதே பொய்யென்று நகைத்திடாதே
ஒன்றாக மனதுவரச் செய்வாயப்பா
உன்மனது நெகிழ்ந்துவிட்டால் வாக்கோயில்லை
குன்றாமல் மனதோடுஞ் செய்வாயப்பா
குருவருளா லின்னமொன்று கூறக்கேளு
பொன்றாம லரைப்படியே ரண்டத்தெண்ணெய்
புகழாகப் பேருசொல்லா மூலிகேளே. (12)

மூலியது ரண்டுபலம் வெள்ளை யுள்ளி
முறையாகப் பலமொன்று முனிந்துவாங்கிப்
பாலினிய கத்தபத்தின் நீரைவாங்கிப்
படியரையி லரைத்துருட்டிப் பருவமாக
மேலினியே முன்சொன்ன யெண்ணெய்தன்னில்
வெருளாமற் காய்ச்சியதைப் பதத்தில்வாங்கி
வேலுடையோன் முன்பாகப் படைத்துவாழ்த்தி
வெகுபதன மாகநீ வைத்துக்கொள்ளே. (13)

வைத்துமங்கை மாதவிடை வருநாள்தன்னில்
வயணமாய் நாளொன்று கரண்டியொன்று
வெத்திமையா யுட்கொள்ளச் சொல்லுபின்னால்
வெண்ணீர்தான் இரண்டுதரம் விரும்பச்சொல்லு
புத்தியுட னிப்படியே மூன்றுநாளும்
புகழாக அருந்திவர மாதமூன்றிற்
சத்தியமாய்க் கெற்பமது தரிக்கும்பாரு
தையநல்லாள் மனங்குளிரத் தயவுண்டாமே. (14)

தயவில்லா மாதவிடை மூன்றினுக்குத்
தவறாமல் மூன்றுநாட் கொண்டாயானால்
பயமில்லாப் புத்திரனா யருமையான
பாக்கியவா னாயுருவம் பதுமையாகச்
சுயசனங்கள் மெய்க்கவரு சுசீலனாகச்
சுகமாகத் தருமர்தம்பி தமக்கொப்பாக
நயனமுள்ள கண்மணிபோல் மைந்தர்பெற்று
நாடறியக் கொஞ்சிவிளை யாடல்தாமே. (15)

தாமாக யிம்முறைகள் செய்யாளாகிற்
றருகாது யிந்திரியஞ் சலனமாகா
நாமாக மனக்கரித்து வுலகத்தோர்க்கு
நவின்றோங்கா ணவர்மனது நமக்கீதென்னச்
சீமானா யிருந்தவரை வாழச்சொன்னோம்
சீலமுண்டு சுகமுண்டு துணையுமுண்டு
பூமாது தனக்காகக் கெற்பசூஸ்திரம்
புகன்றதுயி ரெண்கலையின் புதுமைமுற்றே. (16)

வியாக்கிரம பாதர் சூஸ்திரம்
முற்றிற்று

......

வியாக்கிரமபாதர் சமாதி

முயங்கிய கண்டம் மூவா றிதழுயிர்
தயங்கிய வாசன் தானது கறுப்பாம்
தியங்கிய உந்தி தெளிவது காரம்
பயங்கிய வாய்வு பதியது தானே. (1)

பதியதில் நின்று பாங்குட னேறிச்
சதிபெரும் ரவிமதி சார்ந்தது ரெண்டாம்

விதிமூக் கடியுள் ளிட்டு வெளிப்படும்
மதியெனக் கண்டு மறிப்பவர் சித்தரே. (2)

மறிப்பவ ருயிரை வங்கென் றழுத்திக்
குறிப்பவர் சீயைக் குப்பென்று யேத்தி
தெறிப்பவர் கண்டஞ் செய்திட மறியார்
வெறிப்பென்ன யோகி விடமது தானே. (3)

விடமது கண்டம் வெத்திப் புருவம்
தடமது வழியாய்த் தாக்கிடும் வாய்வு
குடமது வென்று குவிந்தது அதுவாம்
மடமது வாய்வு மனமொன் றாச்சே. (4)

மனமது வேறென மயங்குவர் கயவர்
தனமது வாகுந் தாண்டவம் புரிந்திடம்
எனமது வென்று யேத்தறி வார்க்குக்
கனமது தேகங் கால்குரு வாமே. (5)

கால்தனைப் பாரு கண்டத்தோ ரெழுத்து
மால்தனைக் குடியாய் மதிப்பவள் பாரு
ஏல்தனை ருத்திரன் என்றது வெளுப்பாம்
ஆல்தனைக் கண்டா லானவ னாமே. (6)

அரனென்ற பேரா யகண்டமு மொன்றாய்க்
கரனென்ற வாய்வு கலந்துடன் சேர்ந்தால்
உரனென்ற வில்லு ஓங்கியே யெய்யலாம்
பரனென்ற காயம் பளிச்சென்ன மின்னுமே. (7)

பளிச்சென்ன மின்னும் பரியமு துண்ணலாம்
வெளிச்சென்னக் காணும் வெட்ட வெளியதாம்

நாற்பத்தெண் சித்தர்

களிச்சென்னப் போகாக் காயமு மதுதான்
ஒளிச்சென்ன தேக மொருகோடி யுகமே. (8)

வியாக்கிரமடாதர் சமாதி

முற்றிற்று

....

திரிகோணச் சித்தர் திருவாய் மலர்ந்தருளிய சிவஞான சூஸ்திரம் 52

ஆதி யனாதி யண்டாண்ட பிண்ட
மீதில்மெய்ஞ் ஞான வீடான மெய்ப்பொருட்
சோதி மயமாய்த் துலங்குஞ் சுழிமுனை
நீதிய தாய்வளர் நிராமயங் காப்பே. (1)

மூத்திர மாவது மூவ ரிருப்பிடம்
மூத்திர மாவது மூலத் தெழுந்ததீ
மூத்திர மாவது முன்னோ ரறிந்திலார்
மூத்திரந் தன்னை முரிக்கச் சயிலமே. (2)

சயில கரணியிற் சவ்வீரம் பிறந்தது
வெயில்நிற மாக விளங்கும் புவியெலாம்
அயிலங் கொடுக்க அறிந்ததுண் டானால்
சயிலத்தி னுள்ளே சவ்வீரம் பிறக்குமே. (3)

பிறந்தசவ் வீரத்தைப் பேதித்துப் பார்க்கையில்
இறந்திடு முப்பூ யெழுந்திடும் வேதை
அறிந்துகொ டுத்து அதுவுமொன் றானால்
பிறந்த பிறப்பெலாம் பிறங்குபொன் பிறப்பே. (4)

பொன்னிற் பிறந்தது பொன்னீரு முப்புநீர்
தன்னிற் பிறந்தது சாதக வேதையாம்

மன்னிப் பிறந்தது வழலைகுரு பஷ்பம்
தன்னிற் பிறந்தது சாரஞ்சவ் வீரமே. (5)

சவ்வீர மெடுத்துச் சாரணைச் சாற்றில்
கவ்விக் கொடுக்கக் கலங்கிக் கருப்பாம்
விவரம தாக வேறேநீர் விட்டுச்
செவியிற் பிழியச் சிவக்கு மிரும்பே. (6)

இரும்பிற் றிராவகம் யெண்ணெய் யில்வாங்கி
நிரம்ப வமுரியை நேரொக்கக் கூட்டி
விரும்பிக் கலசத்தை மேலேமண் செய்து
தரும்பிட் டெரிக்கச் சயிலம் பிறக்குமே. (7)

சயிலத்திற் றாம்பூரந் தண்ணீர்குளிப்பாட்டி
நெகிலக் குருபற்பம் நிறையாகக் கூட்டி
கயிலைச் சிவனைக் கருத்தில் நினைந்து
குகையிற் கொடுக்கக் குறித்தது காணுமே. (8)

காணக் கண்டது கர்த்த னறியவே
பேணி யேசொன்னேன் பெரியோர் பிழைக்கவே
ஆணி யுமித்துளே அண்ணலு மித்துளே
வாணி யரிய மனையிது தானே. (9)

மனையிது வானது மண்டல வேதையாம்.
சுனையிது பொன்னிது தொழிலுக்குப் பண்டது
அனைவருங் காண ஆய்ந்திந்நூல் தன்னை
வினையமாய்ச் சோதித்து வேர்க்கடைக் கூறிதே. (10)

கூறிது காணுஞ் சயிலக் குறிப்பிது
சோறிது சத்தியஞ் சொர்னத் தொழிலிது

நாற்பத்தெண் சித்தர்

வாறிது பொன்னுக் கருளிது கோலிது
தேறிதற் கெல்லாந் தெளிவிது தானே. (11)

தெளிவிது வேதாந்தந் தேர்ந்த குறிப்பிது
ஒளிவிது பற்ப முரைக்கின்ற நீரிது
மொழியிது கண்ட முதச்சயி லத்தின்
அழிவிது தானென் றறிந்துகொள் வீரே. (12)

விரைகி லெரியும் வேதாவைக் காட்டும்
நிரைக்குந் துருசில் நேரொக்கப் பாயும்
உரைக்கு மிரும்பினி லூட்டமெழு காகும்
இருக்குஞ் சயில மெடுக்கின்ற வாறே. (13)

எடுத்தசயி லத்தி லிரதத்தைக் கூட்டிக்
கடுத்துத் துருசியின் கண்ணிலே யூட்டி
மடித்துக் கிளிஞ்சியில் வைத்தே யெரிக்கிற்
கொடுத்திடு பற்பங் குருபற்ப மாமே. (14)

ஆமே சயிலமாம் ரெண்டாங் காய்ச்சலில்
போமே சயிலம் பொன்னிலுஞ் செம்பிலும்
கோமே தகனைக் குறிப்பறி வாளர்க்குச்
சாமே சயிலஞ் சார்ந்தபா சாணமே. (15)

பாசாணஞ் சேர்த்திடும் பாரத்துச் சித்தியாம்
காசாயந் தீர்த்த கருவறி வாரில்லை
காசாயந் தீர்த்த கருவறி வாளர்க்குக்
காசாயந் தீர்த்த கருவிது வாமே. (16)

கருவது கல்லுப்பு கண்டது வெண்மை
குருவது வாசி கூடு மிரும்பினில்
அருளு மதுவே ஆனந்த வாதத்திற்
பொருளு மதுவே பொறியள வாகுமே. (17)

பொறியிற் பிடிக்கப் பொருள்வேணு மென்றால்
கருகச் சயிலத்தைக் காய்ச்சி யிருக்க
மடியக் கவுரியை மாத்தறிந் தீய்ந்திடக்
கடியத் தமர்ந்த கல்லு முருகுமே. (18)

கல்லு முருகிக் கருக்குஞ் சிவந்திடும்
அல்லும் பகலு மறிவுமொன் றாக
நெல்லும் கரியும் நிரம்பக் குகையிடக்
கல்லுங் கொடுக்கக் கரைகண்ட பொன்னிரே. (19)

கரைகண்ட ஞானிகள் காணுந் தொழிலிது
கரைகண்ட ஞானிகள் காணும் பொருளிது
கரைகண்ட ஞானிகள் காணுமெய்ஞ் ஞானத்தைக்
கரைகண்ட ஞானிகள் கருத்தறி வீரே. (20)

கருத்தை யிருக்கித் துருத்தியி லூதிப்
பெருத்த அடைப்பைப் பேதித்துக் கூட்டி
முருக்கி முழித்து உருக்கவல் லார்க்கு
உருக்கப் பிடித்தது உற்பன மாமே. (21)

உற்பன மானது உயர்சாதி லிங்கத்தால்
மற்படி கார மணித்தக் காளியிற்
கற்பரக் கட்டிக் கருத்தறத் தூக்கினால்
மெற்புடன் பாயும் விளங்கிய செம்பிலே. (22)

செம்பிற் பழுக்குந் திராவில் வெளுத்திடும்
வம்பிக் கெவுரிக்கு மாதளஞ் சாத்தினால்
கம்பிச் சயிலத்தைக் கையினில் வாங்கியே
செம்பிற் கொடுக்கச் சிவபதங் காணுமே. (23)

காணிறை மாத்துக் கண்டது பத்துமாத்
தாணியாஞ் சொன்னோம் அந்தசயி லத்தை

நாற்பத்தெண் சித்தர்

நாணித் துருசியில் நாலிலொன் றீயப்
பேணிச் சிவக்கும் பெரியோர்க ளாணையே. (24)

பெரியோர்கள் கல்வியும் பிண்டத்தி னுள்ளே
எரியவனல் மூட்டி யெண்ணெய் யிருத்துக்
கரிமுகில் வண்ணன் கனல்ரசம் வாங்கிச்
சரியோக்கக் கூட்டிற் சயிலம் பிறக்குமே. (25)

சயிலத்தில் நாகத்தைச் சரியொக்கக் கூட்டித்
தயிலத்தை வாங்கித் தாம்புரத் திட்டுக்
குகையிற் கவுரியைக் கூட்டிக் கொடுக்க
வகைபெற்ற கல்லு மணலுங் கரையுமே. (26)

கரையு மனோசிலை கட்டு மமுரியிற்
றிரையுளித் தாரஞ் சேர்த்துச் சிவப்பிடும்
பரியபா ஷாணம் பவழநிற மாகும்
எரியதோர் செம்பினி லென்னாணை யேறுமே. (27)

சிறக்குமே கெந்தகஞ் சேர்சாதி லிங்கத்தால்
நிறக்குமே பாதை யிரதத்தில் நீறுமே
துறக்குமே யுள்ள தொழிலுங் குறிப்பெலாம்
பிறக்குமே லோகத்திற் பேதிக்கும் வாறிதே. (28)

பேதிக்கும் வாறிது பிரம கிரிரசம்
ஆதிக்கங் கொள்ள அருட்பொரு ளுண்டாம்
சேதிப் படுத்த செயலறி வாளர்க்கு
ஆதிக்கந் தானே அருட்பொரு ளாகுமே. (29)

பொருள்மணித் தக்காளி போதப் பிழிந்து
மருவி யரைப்படி மணலிற் கலந்து
குருவது தன்னுடன் கூட்டிக் கலக்க
இரவும் பகலு மிதனிலொன் றாகுமே (30)

ஒண்ணாகத் தானும் உருகு முருக்கெலாம்
நண்ணாகக் கெந்தகம் நனையக் கொடுத்து
ஒண்ணாகக் கூட்டி யுருக்கவல் லார்க்குக்
கண்ணாரக் காணுங் கருவளை மண்ணே. (31)

கருவளை மண்ணைக் கரைத்தே யிருத்து
உரிய வமுரியை உண்ணக் கொடுத்துப்
பருவ முடனே பாஷாணங் கூட்டியே
பருவமாய்க் காய்ச்சப் பாயு மிரும்பிலே. (32)

இரும்பை யமுரியி லெட்டுநாட் போட்டுத்
திரும்ப வெடுத்துத் திராவக மாக்கிக்
கரும்பினிற் சாறு காற்படி கூட்டி
வருந்திக் கொடுக்க மலையுஞ் சிறக்குமே. (33)

சிறக்குஞ்சவ் வீரத்திற் செந்தூரங் கூட்டி
நிறக்கு மனோசிலை நிற்கு மிரும்பினிற்
கறக்குந் திராவினிற் காரீயம் வேதிக்கும்
பிறக்கு மிதுவே பிராணன் பிறப்பே. (34)

பிறப்பு மனோசிலை பின்பரி தாரம்
கறக்கின்ற கெந்தகங் காரியங்கூட்டி
இறக்குஞ்சவ் வீரத்தி லேகமுங் கண்டுபோம்
பிறக்கும் நிருபதின் பேரொன்று தானே. (35)

பேரொன்று சித்திக்கும் பொன்னரி தாரத்திற்
சேரொன்று கூட்டிச் சிறுநீரைப் பூட்டு
காரொன்று கண்டு கருதுஞ்சயி லத்தில்
நேரொன்று கூட்டி நிலைகண்ட வாறே. (36)

நிலைகண்டு சொன்ன நிண்ணயந் தன்னிலே
நிலைகண்ட காந்தி யமுரிமண் கூட்டிப்

நாற்பத்தெண் சித்தர்

பலைகொண்ட வெண்ணீரிற் பச்சிலை கோவைதான்
நிலைகண்டு சொன்னது நிண்ணயந் தானே. (37)

நிண்ணயஞ் சொன்னோம் நிலைகளுஞ் சொன்னோம்
கண்ணையும் மூக்கையும் காதையுங் காட்டி
நண்ணிய மூலத்தில் நாதம் அமுரியிற்
பண்ணியே கண்டாற் பரப்பிர்மந் தானே. (38)

பரப்பிர்மங் கண்டதைப் பாணித்துப் பார்த்து
உரைக்கின்ற பொன்னையும் உட்கண்ட சோதியும்
கரைகண்டு சொன்னார் கமலத்திரு மூலர்
குறைவுவா ராமற் கூறினேன் சாரே (39)

சாராமூ மத்துச் சாத்திலொன் றாகக்
காரிய மொன்று கரையப் பொடியாக்கி
கோரா யரைக்கக் கொடுத்துக் குளிகையாய்
தூரா மிர்தமுந் தொந்தம்ப னந்தான். (40)

தம்பனநான் மூன்று தந்தையோ முந்நூறாம்
ஐம்பது கோடி யருட்காதங் காட்டும்
இன்பம தாயிரட் சிக்கவல் லார்க்குத்
தம்பனந் தானே சாயுட்சிய மாமே. (41)

சாயுட்சிய மாவது சாதக மோகினி
வாயுட்ச மாக மனோசிலை கூட்டி
ஆயுச்சச் செம்பை யரபொடி யாக்கியே
காயத்தில் நீரைக் கட்டவு மாமே. (42)

ஆமே பொடிதிரி யமைமூன் றிரதமும்
கோமே தகமாங் கொடுகற்பச் சாத்தினில்

தாமாக முந்நூறு தட்டு விராட்டியிற்
கோமான் புடமிடக் குளிகையு மாகுமே (43)

ஆகுமே மாரண மரிதார யியத்தில்
சாகவே யெட்டிப் பழத்தினி லெட்டுநாள்
நோகவே வைத்து நொந்துபின் னொன்றாய்
ஏகமாய்ச் சேர்க்க யெங்கும் பிரகாசமே (44)

பிரகாசங் காணலாம் பேதன வித்தை
விறகா வரையினில் விளங்கு மனோசிலை
சரியாகக் கூட்டிச் சட்டியி லொன்றாய்த்
திரமாய்ச் சுருக்கீயச் செத்துப் பிறக்குமே. (45)

பிறக்கு மதிசயம் பேராக்கிருஷணம்
சறக்கு மமுரியிற் றாளிச்சா ரிட்டுச்
சிறக்கக் குளிகை செயக் சுருக்கீய
நிறக்குங் குளிகை நிதியிது தாமே. (46)

நீதியிது வாகும் நிலவரஞ் சொன்னோம்
சோதி யிதுவே துலங்கும் பிரகாசமாம்
ஆதியாம் பாதமே லாணையிட் டிப்படி
சோதியான் கண்ட சுத்த வெளியிதே (47)

வெளியிது யீசனார் மெய்ப்பதத் தானை
தெளிவிது தானே தேகமுஞ் சித்தியாம்
ஒளிவதில் லாமல் யான்காணும் வாறுபோல்
தெளிவிது சொன்னேன் தேர்ந்து கொள்வீரே (48)

தேர்ந்து கொள் வீரிந்தத் தேகப்பிர காசத்தைச்
சார்ந்துகொள் வீரிந்தச் சக்கரைக் கூட்டத்தில்

நாற்பத்தெண் சித்தர்

ஆய்ந்து கொள் வீரிந்த ஆதித்த வித்தையைச்
சாய்ந்துகொள் வார்க்கிது சாயமாந் தானே. (49)

சார்ந்துகொள் வார்க்கிது சாயமாம் பொன்னாம்
நேர்ந்துகொள் வார்க்கிது நிச்சய முத்தியாம்
தேர்ந்துகொள் வார்க்கிந்தத் தேகமுஞ் சித்தியாம்
ஆர்ந்துகொள் வார்க்கிந்த அம்பலக் கூத்தே. (50)

அம்பலக் கூத்திது ஆதிக்க வீடிது
தம்பலப் பூச்சித் தயிலங் குருவாகும்
செம்பது மாக்கல் சேரவல் லார்க்கு
அம்பது அவ்வழி அம்பலக் கல்லிலே (51)

கல்லிலே சுண்ணாம்பு காணத் துணிந்தால்
சொல்லிலே பத்திச் சூட்சத்தை யாராய்ந்து
கல்லு மிதப்பாய்க் கரையேற வல்லார்க்குக்
கல்லிலே சோதி கரைகண்ட முத்தே. (52)

திரிகோணச்சித்தர் சிவஞான சூஸ்திரம் 52
முற்றிற்று

......

திரிகோணச் சித்தர்பாடல்

கலிவெண்பா

சிவனே பரமகுரு தேசிகனே பாத
மவனே அனுதினமு மாகும் நவநீத (1)

பொன்பூத்த நீலப் புயல்வண்ண னும்பொறிவாய்
மின்பூத்த நான்முகனும் வேதாவும் தென்பூத்த (2)

செக்கச் சடையானுந் தேசுபெற வேயுருவாய்
ஒக்கத் தனிவந் துதித்தபிரான் தர்க்கமிடும் (3)

வேதமுஞ் சாஸ்திரமும் வேண்டும் பலசமயம்
பேதமுங் காணாப் பெருஞ்சமயம் நாதத்தில் (4)

ஓசை யடங்க வொளியம் பரமனையில்
ஆசை யடங்க அனுபவிப்போன் பூசைபுரி (5)

தொண்ட ரிதயச் சுனைமடலில் வேரூன்றி
விண்ட நறைக்கமல மெல்லடியான் எண்டிக்கும் (6)

சாதியான் றோன்றும் சமரச மாயிருந்து
பேதியான் வஞ்சமிலாப பேதமையான் ஆதி (7)

முதலாய் நடுவாய் முடிவாய் முடிந்து
சிதலாய் வெளியொளியாஞ் சென்மம் சதகோடி (8)

சத்தியும் மந்திரமுந் தானாகப் பாவித்து
முத்தி கொடுக்கும் முழுமுதல்வன் சுத்திய (9)

செஞ்சடையான் யோகநிலை தேர்ந்து தனைக்குறியார்
நெஞ்சடையான் பிஞ்சு நிலாச்சடையான் நஞ்சார்ந்த (10)

கண்டத்தான் தேடரிய காட்சியான் பல்கோடி
அண்டத்தான் சோதி யருவுருவான் முண்டகச் செம் (11)

நாற்பத்தெண் சித்தர்

போதங்கடலும் பொருப்பும் விருப்பாகிச்
சூதுபுரி மூன்று தொழிலுடையோன் ஓதும் (12)

சரியை கிரியை தவயோக ஞானம்
தெரிய வமைத்த சிவசித்தன் துரியத்தில் (13)

தோத்தி யணுவாய்த் துகழாய்ச் சுடரொளியாய்த்
தேத்தியுரு வாகவந்து சென்மிப்போன் சாத்தரிய (14)

முக்குணமும் ஐம்பொறியும் மும்மலமு முண்டாகி
எக்குணமுந் தானா யிருந்தருள்வோன் அக்கரமாம் (15)

அஞ்செழுத்தா யெட்டெழுத்தா யைம்பத்தோ ரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தா யெங்கும் பிரணவமாய்க் கொஞ்சப் (16)

பொருளாய் மருளாய்ப் புரையா யுரையாய்
அருளாய்த் தனியிருந்த ஆனந்தன் இருளாத (17)

காட்சியான் கண்டவர்க்குக் காணாத பேர்க்குருவும்
சூட்சியாய் நின்ற தொழிலாளி ஆட்சி (18)

இடைபிங் கலைசுழினைக் கெட்டாமல் மூலக்
கடையில் நடக்குங் கடலுடையோன் விடையேறும் (19)

பாகன் குடிலை பராசத்தி வீட்டிலுறை
யேகன் பிறப்பிறப்பொன் றில்லாதான் யோகன் (20)

சிறியன் பெரியன் சிவப்பன் கறுப்பன்
குறியன் நெடியனெனக் கூறாதான் பொறிகலந்த (21)

பாசத்தான் பாசக் கட்டை யறுத்தவர்க்கு
மாசத்தான் சோதிமணி மண்டத்தான் நேசத்தான் (22)

பொய்யர்க்குப் பொய்யன் பொருந்தி யுளந்தேறும்
மெய்யர்க்கு மெய்யாய் வெளிநின்றோன் ஐயன் (23)

உருவு மருவும் ஒளியும் வெளியும்
கருவுங் கடந்தகன மாயன் குருவாகித் (24)

தோத்திப் பழவடியார் சூழ்வினையை நீக்கியுரு
மாத்தித் தனதுவச மாக்கியே சாத்தரிய (25)

மானிடச் சட்டை வடிவெடுத்த மாயோகி
யானிடப முந்துமரு ளானந்தன் தேனடர்ந்த (26)

செங்கமலத் தோற்கரிய தேவ னடியவர்க
ளங்கமலத் தேயுறையு மானந்தன் எங்கள்குரு (27)

நேசிக்கு மன்பர் துயர் நீக்கி நிலைபெறவே
யாசிக்கு மெங்கள்குரு வானந்தன் பூசிக்கும் (28)

பொன்மலைக்கும் வெள்ளிப் பொருப்புக்கும் பொற்புடைய
கன்மலைக்குந் தானே கடவுளாய் பன்மலைக்கும் (29)

எட்டாய்ச் சிகர மெழுத்துக் கொழுந்தோட
மட்டான ஓங்கார வன்மலையான் கட்டாகத் (30)

தேடு மடியார்கள் சின்னந் துகளறவே
யாடுஞ் சிவகருணை யாற்றினான் நாடுதவம் (31)

நாற்பத்தெண் சித்தர்

பண்ணு மடியார் பழவினைபோய்ப் பாதமலர்ப்
நண்ணுமெழிற் பேரின்ப நாட்டினான் எண்ணும்நிறை (32)

கற்புடையா னென்னக் கலங்காத நெஞ்சுகொண்ட
பொற்புடைய காயா புரிநகரான் அற்பவிசை (33)

வண்டு தொடாமல் மதுவொழுகி வாய்ந்தகறை
கொண்டு மணத்த குணமலையான் துண்டத் (34)

துரமே கரமா யொருநாளு மோயாச்
சரமே முழங்குந் தவத்தோன் கரமெடுக்கும் (35)

தொண்டர் பலபகையைச் சூறைகொள வேணுமெனக்
கொண்டதவ வேடக் கொடியினான் சண்டமிகும் (36)

இல்வாழ்க்கை யென்னும் யிருப்பானை மட்டித்துப்
பல்வாய்ப் பிறப்பைவெறும் பாழாக்கி மெல்வாய் (37)

சமையப் பகைதுடைத்துச் சாதிமுறை யெல்லாங்
குமைய மிதித்துக் குளப்பி யமையாத (38)

ஆணவத்தை வேரோடறுத்து விழுத்தாட்டி
நாணமுற்ற பாகம் நறுக்கியே காணத் (39)

துடர்ந்த கிளை நிகழச் சூரைபட வீசி
யடர்ந்தமக வாகைக் கடங்காப் படர்ந்ததெரு (40)

வீதியும் அம்பலமும் மிக்கதொரு சாதிகட்குப்
பூதிப் பொடியணிந்து பொய்மிதித்துக் காதிச் (41)

சினக்குறும்பை வாரிச் சிதறித் திரட்டி
மனக்குறும்பைப் பற்றி வளைத்து உனக்கெனக்கென்(42)

றோது குறும்பை யுழக்கி யெமராஜன்
தூதனைப் பாய்ந்து துரத்தியே தாதுசெறி (43)

அஞ்ஞான மோக மறுக்கு மனுபோக
மெய்ஞ்ஞான மோனமத வேளத்தான் பைநாகம் (44)

நெட்டுடலை மாறி நெருக்கிப் பரிபடுத்திக்
கட்டு மிணுக்குங் கடுவாளந் தொட்டுத் (45)

திசைவாயு வென்னுஞ் சின்னா லகப்பட்டுக்
குசையா லிறுக்கிக் குணப்படுத்தி யசையா (46)

மனமென்னுங் கல்லணையை வைத்திருக்கி வாய்ந்த
சினமென்னும் அங்கவடி சேர்த்துக் கனமான (47)

நாகபந்தஞ் சாரி நடைதுலுக்குத் தூவான
மாகமுற விட்டுள் ளடக்கியே சோகப் (48)

புரியட்ட காயப் பொருப்பைத் தகர்த்துச்
சரியிட்ட வைம்பொறியைத் தாண்டித் துரியத்தில் (49)

ஓடிவிந்து நாதமெனு முட்கோட்டை யுங்கடந்து
வாடியிடும் நாடி வரம்பழித்து ஆடியிடும் (50)

தொண்டுபுரி யன்பர் தொடுநரகில் வீழாமல்
மண்டுசினங் கொண்டெழுந்த வாசியான் கண்டுதொழும்
(51)

நாற்பத்தெண் சித்தர்

தன்னாணை தானே தனக்காணை யாவதன்றிப்
பின்னாணை யில்லாத பெற்றியான் என்னாளும் (52)

மாறாத கீர்த்திமது மாலையான் வாய்திறந்து
சீறாத மோனச் சிவயோகி நேராக (53)

ஆண்டகுரு சித்தம் பலவ னடியருளும்
வேண்டி வளர்த்த விருபதத்தான் பூண்டசிவ (54)

வேடத்தானோங்கி விளங்குஞ் செழுங்கமல
பீடத்தான் ஞானப் பிரகாசன் ஆடிற் (55)

பரியா னுரியான் பசியான் பொசியான்
பெரியா னரியான்பே ரில்லான் துரியா (56)

தீதங் கடந்து திகழம் பரங்கடந்து
போதங் கடந்துநின்ற பொற்பதத்தான் சீதம் (57)

கருணையா னந்தமுனி கண்டுதொழ வந்த
வருணவா னந்த மழைமேகம் அருணப் (58)

பிரகாசங் கொண்டுநின்ற பேரொளிபோல் மாயைப்
பிரகாசம் மாற்றும் பெருமையான் இறவாத (59)

மெய்ப்பொருளைக் காட்டி விரும்பு மடியாரைக்
கைபொருளாய்க் கொண்ட கருணையான் துய்க்கும் (60)

உடற்பொரு ளாவி யுதகத்தாற் கொண்டு
சடவினையை மாற்றுஞ் சமனன் இடைபிங் (61)

கலைசுழினைக் கெட்டாத காட்சியான் காமங்
கொலைகளவு தீர்த்தகு டோரி அலையாமல் (62)

ஆட்கொண்ட சித்தம் பலவ னடிக்கமலத்
தாட்கொண்ட தொண்டர் தனக்கடியேன் வாட்கொண்ட
(63)

கண்ணாள் திரிகோனக் கன்னியுமை பெற்றெடுத்த
பெண்ணா ளிடத்திற் பிறப்பட்டு எண்ணாமல் (64)

தூர்த்தனிவ னென்னபலர் சொல்லத் துயருழைந்து
பார்த்தவிட மெல்லாம் பகையாகி வேர்த்துக் (65)

கலங்கி விதிவிதித்துக் கண்ணீரொழுக
மலங்கிக் குருநாட்டில் வந்தேன் துலங்குமெனக் (66)

காயா புரிநகரைக் கண்ணுற்றே னவ்வூரிற்
போயா தரித்துப் பொருந்தினேன் மாயாத (67)

மாது சிவானந்த வல்லியெனப் பேரிட்டாள்
ஓதுதிரி கோணவல்லி யூதாரி ஆதரவாய் (68)

கொஞ்சி வளர்த்த குடிலை மகள்தனையே
மிஞ்சுசிலம் பத்தொழிற்கு விட்டாளே ரஞ்சிதமாய் (69)

கால்மாறி யாடக் கலாதி கரணவித
மேல்மாறிச் சுத்தி விளையாட நூல்மாறிக் (70)

கைலாகு பாயக் கலந்து பலசமய
மெய்லாகு தாவியதன் மேல்மிதிக்கப் பையப் (71)

பரதத் தொழிலும் பலகோடி வேத
சுரதத் தொழிலும் தொகுத்து விரதவுரை (72)

நாற்பத்தெண் சித்தர்

தென்னூல் வடநூலைத் தேர்ந்துபலகோடி
முன்னூலுந் தானே மொழிந்திட்டாள் இன்னிலத்தில்
(73)

ஆடப் பதுமைதனை ஆட்டிவிக்க வப்பதுமை
பாடத் தொழிலும் பலகற்றாள் நாடறிந்த (74)

வம்பி திரிகோண வல்லி யுடகிரியை
கெம்பீர மெல்லாங் கிரிகித்தேன் அம்புவியில் (75)

மின்னே வெரிந்தெழுந்த மேகம்போல் மெய்குளிர்ந்து
தன்னையறிந்த தளதளத்தாள் பொன்னனையாள் (76)

பக்குவத்தை நோக்கிமுகம் பார்த்துப் பரிமளிக்க
முக்குணமுங் கற்ற முதுகிழவி தொக்கறுத்து (77)

மின்னே யமுதம் விளைந்த மனக்கமலப்
பொன்னே வுறுதியுள்ள புத்திகேள் பன்னரிய (78)

வேத புராணர் வெறும்பிலுக்கா யுன்கமலப்
பாதம் பணிவர்முகம் பாராதே நாதத் (79)

துரியமணி வாசலிலே தோன்றிமுகம் சத்தே
தெரியநின்று பின்னையுள்ளே சென்று அரிதாகச் (80)

சாற்றுஞ் சரியைச் சருக்க ருனைத்தழுவப்
போற்றுவா ரங்கவர்பின் போகாதே யேற்றும் (81)

அவலக் கிரியை அசடருனை மேவக்
கவலைப் படுவார் கடத்திச் சிவயோக (82)

வாதியர்கள் வந்துன் மலரடியைத் தெண்டனிட்டாற்
பேதியா துள்ளழைத்துப் பேசிக்கொள் ஆதி (83)

தவஞான மோனத் தனக்காரர் வந்தால்
அவமானம் பண்ணா தழைத்துச் சிவபொருளைத் (84)

தேடாத மூடரிடஞ் சிக்காதே சிந்தையிலே
நாடாத வஞ்சரிடம் நத்தாதே கோடாத (85)

சாத்திரத் தூர்த்தர்தமைச் சாராதே தக்கமிடுங்
கோத்திரப் பஞ்சியளைக் கூடாதே சூத்திரப் (86)

பொய்வீண ராசை பொருந்தாதே புத்தகப்பேய்
மெய்வீண ராசை விரும்பாதே கையோகக் (87)

காமத்துக் கான கலாதிவேள் நூல்கற்ற
வாமத்தார் பால்மனது வையாதே நாமமிட்டுப் (88)

பஞ்சரிக்கும் பாசிப் பதப்பிலுக்கர் வந்தக்கால்
நெஞ்செரியத் தள்ளிவிடு நில்லாமல் சஞ்சரிக்கும் (89)

சித்தக் கெருவியிடஞ் செல்லாதே சீலமதக்
கொத்தவன்றன் னாசை குறியாதே பற்றற்ற (90)

மோனக் குறும்பரசர் மோகித்தால் நீயவருக்
கான படியே அழைத்துவிடு ஞானப் (91)

பொருள்தேடும் வல்லாரைப் போற்றிப் பொருந்தி
அருளோடு நீசென்றறி (92)

திரிகோணச் சித்தர் பாடல்
முற்றிற்று

....

பரத்துவாசமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய
யோக சாதனம் 23

மூலமுத லாதார பூதமாகி
முச்சுடரின் தீபவொளி வெளியுமாகித்
தாலமெனும் அண்டரண்ட பிண்டமாகித்
தற்பரனுஞ் சிற்பரையு மிரண்டுமாகி
நீலநிற மாலயனும் வித்துமாகி
நின்மலமாம் ஜீவபர வான்மாவாகிச்
சீலமுள்ள மதிகதிரு மாகிநின்ற
சின்மயத்தின் பாதமதைப் போற்றுவேனே. (1)

போற்றுவது பூரணத்தால் நோக்கவேணும்
புத்தியுடன் மனதடங்கி யிருக்கவேணும்
சாற்றியதோர் வாக்குமன மொன்றதாகத்
தன்மையாய் மனக்கசட்டைத் தள்ளவேணும்
ஏற்றியதோ ராக்கைநிலை தனையறிந்து
இனிமையுள்ள யென்மகனே குருவைக்காரு
ஆற்றலுடன் மதியமுத மன்பாய்க்கொள்ளு
அப்பனே நாக்குநுனி பதித்துப்பாரே. (2)

பாரேநா தாந்தப்பே ரொளியைநீயும்
பத்தியுடன் தான்தெரிந்து விடாமற்காரு
சேரேநீ மயேந்திரமாங் கிரியிலேறிச்
செய்யதொரு பூரணத்திற் கருத்தைவைத்து
நேரேநீ சக்கரத்தில் நின்றுகொண்டால்
நிலைபெறுமந் திரத்தாலே சோதிகாணும்
காரேநீ நந்திகண்டால் வாதங்காணும்
காணாட்டாற் சுடுகாட்டுப் பிணமாவாரே. (3)

வாரேநீ மூலவெளி காணமட்டும்
மைந்தனே சுழிமுனையில் நின்றாயானால்
காரேநீ மனதொடுங்குங் காற்றாடாது
கருத்தறிந்து குருபதத்தில் நினைவாய்க்காரு
பாரேதான் வினையகலும் பயமேயில்லை
பார்க்கையிலே ஆதாரந் தோணுந்தோணும்
நேரேதான் அவ்விடத்திற் சென்றுகொண்டால்
நீணிலத்திற் சித்தியெல்லா மாடுந்தானே. (4)

தானென்ற மனதைவிட்டுக் காத்தாயானால்
தன்மையிலாச் சுழுத்தியுளே அழுத்தும்பாரு
நானென்ற வாசியினாற் குருவைக்காரு
நன்மையிலா திருந்ததினா லொன்றுமில்லை
வானென்ற ஊணறிந்து உண்ணவேணும்
மகத்தான சத்திசிவங் காணவேணும்
கோனென்ற அமுதமது கொள்ளவேணும்
குருவருளால் யோகத்திற் குறித்துநில்லே. (5)

நில்லென்றால் குருஞானந் தெளிந்துமைந்தா
நிலமையாஞ் சுழிமுனையைக் கூர்ந்துபாரு
வல்லதொரு மண்ணாசை தீனியாசை
மகத்தான பெண்ணாசை பொருளினாசை
எல்லாந்தான் வெறுத்துவிட்டு இருக்கவேணும்
இல்லையேல் ஜீவகலை யிவர்காண்பாரோ
நல்லதொரு ஜீவகலை தெரிந்தாயானால்
நன்மையுடன் யோகநிலை தெரிவாய்பாரே. (6)

தெரிவாய்நீ ஜீவகலை தெரிந்தாலப்பா
சிவசிவா வரிசையுட னுண்ணப்பண்ணும்

நாற்பத்தெண் சித்தர்

தெரிவாய்நீ ஜீவகலை தானறிந்து
திசையெட்டும் நாலும்நீ தெரிந்துகொண்டு
தெரிவாய்நீ புறப்பட்டு நாலும் பாழாய்
ஜீவகலை மதிதானுஞ் சீரணித்தால்
தெரிவாய்நீ உண்மைதனை யின்னதென்று
தெரியாமல் மாண்டார்கள் தெளிந்துபாரே. (7)

பாரப்பா சீவகலை யானதந்தப்
பாரினிலே மூலமென்றூ மூனவன்னி
தேரப்பா பரத்தினுட அடிதானென்பார்
தீரமுட னகாரஞ்சோ டசமாய்நிற்கும்
காரப்பா நாதங்கண் டத்திற்காணும்
கருத்தான வாயுவதற் குகந்தவீடு
சீரப்பா பஞ்சகர்த்தா ளிருக்கும்வீடு
சிறப்பான சத்திசிவம் ஒடுங்கும்வீடே. (8)

வீடென்ற தேனமுதஞ் சொலிக்கும்வீடு
விற்பனமாஞ் சீவகலை யிருந்தவீடு
தேடவரி தானதொரு வீடறிந்து
சிறப்புடனே மந்திரத்தை யிருத்தவேணும்
நாடறிந்து வீட்டிலுள்ள பேர்களன்னை
நலமாக அவர்களையும் விரும்பவேணும்
கூடறிந்து நல்லபதங் காணவேணும்
குருவருளாற் சத்திசிவ பூசைசெய்யே. (9

செய்யப்பா பூசையது பண்ணவேணும்
தேடரிய சற்குருவைத் தேடவேணும்
மெய்யப்பா ஜெகஜால மாயையெல்லாம்
விவேகமெனும் புத்தியினாற் றள்ளுதள்ளு

வையகத்தில் யோகநிலை யறியாப்பேர்கள்
மனதாறச் சற்குருவைத் தூஷித்தோர்கள்
பையவே கஞ்சாக்கள் ளருந்தினோர்கள்
பாவியென இவர்களைநீ தள்ளுதள்ளே. (10)

தள்ளாதே வெண்சாரை கற்பந்தன்னைத்
தயவாகச் சொல்லுகிறே னுன்றனுக்கு
விள்ளாதே வொருவருக்கும் வெளிவிடாதே
மேதினியில் வெகுபேர்கள் தெரியாமற்றான்
துள்ளியே செடிமலையின் குகையினுள்ளே
தோன்றாது தானிருந்தார் கடினமப்பா
உள்ளங்கை நெல்லியின்றன் கனியைப்போல
உன்றனுக்குச் சொல்லுகிறேன் கேளுகேளே. (11)

கேளடா மயேந்திரகிரி தன்னிற்சென்று
கிலேசமிலா தேயிருக்கும் போதுமைந்தா
கோளடா வாராமல் நீயிருந்தாற்
குதூகலமாய் வெண்சாரை அதிலேவாழும்
நாளடா போகாமற் சாரைகாண்பாய்
நன்மையா யும்மென்று கும்பித்தேதான்
வேளடா பதினாறு உருவேசெய்தால்
வெண்சாரை கிருபையுடன் வருகும்பாரே. (12)

பாரேநீ கண்டவுடன் நடுமையத்திற்
பண்புடனே நழுவாமற் பிடித்துமைந்தா
நேரேநீ புசிக்கையிலே பொருந்தியோடும்
நீயொருக்கா லதைப்பிடித்துக் கொள்ளுகொள்ளு
கூரேநீ அஞ்சுதரம் பிடித்துக்கொள்ளு
கூரறிந்து தினந்தினமுங் கொண்டாயானால்

தேரேநீ ஆக்கைதனக் கழிவோயில்லை
சிறப்பாக அதுக்கடியிற் கனியொன்றாமே. (13)

ஒன்றாமற் கருநெல்லி யஞ்சாறுண்டு
உத்தமனே அவ்விடத்திற் பிரமதேவன்
குன்றாமற் றவசிருப்பா ரவரைப்போற்றிக்
குருநாதா வைந்தருகற் பகமேயென்று
நின்றாடிப் பொருளறிந்து பணிந்தால்மைந்தா
நின்றனையு மருகழைத்துக் கனியையீய்வார்
அன்றேதான் கொடுத்தகனி கசப்பிருந்தால்
அருந்தாமல் ருசிபார்த்து எறிந்திடாயே. (14)

எறிந்திட்டால் வாராது நெல்லிக்கற்பம்
இம்மையிலே கிடைத்ததிது வென்றுபோற்றிச்
சொறிந்திட்ட கனியதனைச் சாப்பிட்டாக்காற்
றூலமது பெலத்ததடா அழிவோயில்லை
அறிந்திட்ட ரிஷிமூல மிதுதானாகும்
அப்பாவெண் சாரைநந்தி மூலமாகும்
நெறிந்திட்ட ரிஷிமூலம் நதிமூலத்தை
நிதநிதமும் போற்றிசெய்தாற் சித்துமாச்சே. (15)

ஆச்சென்றாற் றுலங்குமடா ஆறாதாரம்
அப்பனே ஆறுதலம் பிரமாவீடு
பேச்சென்றால் நகாரமென்ற பூமிக்குள்ளே
பெலத்துநின்ற வாசியினாற் பிறப்புமாச்சு
மூச்சென்றா லதன்மேலே மாலின்வீடு
முன்பாரு பத்திதழும் பிறையுமாகும்
வாச்சென்றால் ஜெகத்துக்குத் தாயாய்வந்து
வரங்கொடுப்பாள் ஓங்கார மாகத்தானே. (16)

தானென்ற தாயங்கு அமர்ந்தவீடு
தன்மையுடன் போதமிகுந் தாடும்வீடு
தேனென்ற காமியத்தை நிமிர்த்தும்வீடு
சிறப்பான மாயமெல்லாம் நிறைந்தவீடு
கோனென்றே மனமுழன்று பெண்ணைத்தேடிக்
கொண்டுகூத் தாட்டிவிக்கும் பெலத்தவீடு
நானென்று வரமளித்த தாயின்வீடு
நலமாக மேலேகண் டறிந்துபாரே. (17)

கண்டறிந்து பாரப்பா பனிரண்டுக்குள்
காண்பருதி யீராறு முகமாய்நிற்கும்
பண்டறிந்து காணவென்றாற் கண்கொள்ளாது
பார்க்கநடு மனையில்திரி கோணமாகி
விண்டறிந்தாற் சிகாரமென்ற வெழுத்துநிற்கும்
விளங்கவுருத் திரனுமுருத் திரியும்நிற்பார்
கொண்டறிந்து நடுமனையில் நின்றகாட்சி
கூறவென்றாற் கண்கொள்ளாக் காட்சியாமே. (18)

ஆமென்ற அவருடைய கூத்தைக்கேளு
அப்பனே பசியுறக்கஞ் சையோகந்தான்
நாமென்ற விதனத்தாற் காமம்மீறி
நன்மையிலா நரைதிரையும் வளர்ந்துநிற்கும்
தாமென்ற சடமழிந்த பாழாம்வீடு
தவஞான யோகமெல்லாம் பறந்துபோகும்
வாமென்ற அதினுடைய கூத்தைக்கண்டு
வளமான அகாரமதின் தன்மைபாரே. (19)

பாரென்றாற் பதினாறு வாயல்வீடு
பரிவான காமமுதற் குரோதம்லோபம்

தேரென்றால் மோகமொடு மதங்கள்தானும்
 தெளிவாகப் பிறப்பற்று மாளப்பண்ணும்
சீரென்றால் நல்லதொரு பரத்தின்வீடு
 சிறப்பாக அதின்குணத்தைக் கூறக்கேளு
மேரென்றால் மேல்மூலம் அகாரவீடு
 மேலான சிவனுமனோ மணியுங்கூடி. (20)

கூடியே சிவனுமனோ மணியுஞ்சேர்ந்து
 குறிப்பாக விரண்டிதழி லிருப்பாரப்பா
நாடியே நால்வரையும் போற்றிசெய்தால்
 நலமான பிறபையொளி காணும்பாரு
தேடியே சக்கரத்தி லிருந்துகொண்டு
 திகட்டாத வித்தையெலா மகிழ்ந்துபாரு
ஆடியே வருமையுமாய் மனதுமாகி
 அகப்பொருள்வித் தாங்கருவிக் கூத்துமாமே. (21)

ஆமென்ற வுலகத்திற் சுன்மதன்மம்
 அப்பனே சரிதைமுதற் கிரிகையாகி
வேமென்ற யோகமுமாய் ஞானமாகி
 வித்தான நூலாகிக் கருவுமாகி
ஓமென்ற தெளிவாகி நினைவுமாகி
 உருத்தாகத் தோற்றுஞ்சாக் கிரமுமாகி
நாமென்ற பொருளாகி ஞானங்காட்ட
 நன்மையுள்ள குருபதத்தைப் பூசிப்பாயே. (22)

பூசிப்பாய் சித்தர்கள்தம் பாதந்தன்னைப்
 புகழாக வாழ்ந்திருப்பாய் புவியின்மீது
நேசிப்பாய் பூரணத்தில் மனதைவைத்து
 நிலைபெற்று வாழ்ந்திருப்பாய் சடத்தோடேதான்

வாசிவழி தெரிந்துகொண்டால் மகிமைமெத்த
வந்தவழி மறந்துவிட்டு மதியைப்பாரு
தூசித்தா லிந்நூலை யாரானாலும்
சொல்லவொண்ணாப் பாவத்துக் குள்ளாவாரே.(23)

பரத்துவாச மகாரிஷி யோகசாதனம் 23
முற்றிற்று

....

சங்கரர் திருவாய் மலர்ந்தருளிய நவக்கிரக கக்கிஷம் 100

காப்பு வெண்பா

இந்து ரவிதழலா யெட்டாப் பெருவெளியாய்
அந்தரங்க மான அரும்பொருளாய் - வந்தகுகா
திக்கு விஜயஞ் செலுத்தும் நவக்கிரகக்
கக்கிஷத்துக் குன்றாள் கதி.

கதிபெறவே அவளவளுங் கலக்கும்போது
கர்த்தவிய மேபவளம் முத்துப்போலே
பிதிராமல் மலர்புகும்பே ரிளமையின்பம்
பிணிமூப்புச் சாக்காடி தாறுஞ்சித்தி
அதிகசென்மம் நற்குலத்தி லுதித்தோனாக
அழகுளனாய்ப் பிரபலனாய் அறிவோனாக
விதிவழியே பிறந்தவர்க்கு யிந்நூல்தன்னை
விளம்புசடாட் சரப்பொருளே காப்புத்தானே. (1)

காப்பதற்கு நன்மைசெய்தால் மோட்சமெய்தும்
கடும்பாவஞ் செய்வதற்கு நரகமெய்தும்

நாற்பத்தெண் சித்தர்

காப்பதற்குத் தன்னுயிர்போற் பிறரைப்பேணு
　　கபடாகப் பொய்யுரையை மெய்யெண்ணாதே
காப்பதற்குக் குருபூசை கணேசன்பூசை
　　கைலாசச் சிவன்பூசை தேவிபூசை
காப்பதற்குக் குகன்பூசை வடுகன்பூசை
　　கற்றபெரி யோர்பாதம் பூசைசெய்யே. (2)

பூசையிலே அதிகமா னதமாம்பூசை
　　புண்ணியர்செய் வார்களல்லால் மற்றோர்காணார்
பேசையிலே அவர்மனம்பூ ரணத்தேநிற்கும்
　　பிரபஞ்சத் தோடிருப்பா ரறியப்போகாப்
பாசையிலே சாஸ்திரத்தின் பொருளைச்சொல்வார்
　　பத்திமுத்தி வயிராக்ய மாகச்செய்வார்
ஓசைபிறந் திடம்பாரு ஒளியைப்பாரு
　　ஒன்றுமில்லா வெறும்பாழாம் பூசைபண்ணே. (3)

பண்ணுமூ லத்தினில்வல் லபைகணேசன்
　　பதபூசை பூவிலயன் வாணிபூசை
நண்ணுதக மீதிலரி திருவின்பூசை
　　நற்றீயில் ருத்திரன்ருத் திரிதன்பூசை
எண்ணுமெழு காலில்மயேஸ் பரிமயேசன்
　　இவர்பூசை முடிந்தபின்பு மேலுங்கேளு
கண்ணிறைந்த மணிசதா சிவத்தின்பூசை
　　கருத்துறவே பூசிமனக் கண்ணினாலே. (4)

கண்ணாலே மேற்புருவ மையம்பாரு
　　காலடக்கிக் கீழ்த்துண்ட முனையைப்பாரு
உண்ணாக்கை மேலேத்தி யிருந்துபாரு
　　ஓடாதே யுறங்காதே பிதற்றிடாதே

பெண்ணாசை யாற்பிணிகொண் டிறந்திடாதே
பேரின்ப வாமத்தை மறந்திடாதே
பண்ணாதே கொலைகளவு கட்காமத்தை
பரிகரித்தா லட்டகன்மம் பலிக்கும்பாரே. (5)

அஷ்டகன்மத் தகடுவிபரம்

பாருநீ வசியமேதாம் பிரமதாகும்
பகையாத தம்பனங்கா ரீயமாகும்
காருநீ ரசிதமென்றால் மோகமாகும்
கருதரிய மாச்சீயம் பேதஞ்செய்யும்
சேருநீ தராவென்றால் வித்வேசிக்கும்
செகமறிபூ ரசைபத்ர மழைப்புக்காகும்
ஆருநீ அயமென்றா லுச்சாடிக்கும்
ஆகார மாரணம்பச் சோலையாமே. (6)

ஆமென்ற யெந்திரத்தி னகலநீளம்
அங்குட்ட முதற்கனுஷ்ட னளவுநேர்நேர்
காமென்ற தலையறைநெற் கடைதான்விட்டு
சதிக்கமேல் மூன்றுவரை யடுக்கக்கீறி
தாமென்ற துவர்க்கொண்டு அச்சுப்போட்டுத்
தவறாக்கீற் றிரண்டுமொன் பதுதட்டாக்கி
ஓமென்ற குறுக்குமந்தப் படியேகீறி
உறமூன்று விளிம்புதிரி ரேகையூணே. (7)

ஊணியொரு மூலையறை யுட்கீழ்மேலும்
உபயவறை யோடந்த மாதியீறாய்க்
கோணிவிட லாகாது ரேகைரெண்டும்
குறித்தவறை மூலையெல்லாந் திரிகோணாகக்

நாற்பத்தெண் சித்தர்

காணிலெதிர் மூலைதிரி கோணம்ரண்டும்
கருதிப்பார் சிவலிங்கம் போலேகாணும்
வீணிலே புறம்பாய்ந்த மூலைரேகை
மேலேறும் மறுகுறுக்கே ரேகைமூட்டே. (8)

ரேகைரெண்டுந் தலைமறித்து நேரேமுட்டி
நிறுத்திதிரி கோணநாற் றிசையுங்காணும்
ஆகவது துகையென்ன முப்பத்தாறும்
அதனிடைநேர் வருரேகை சூலம்போடு
ஏகதுகை நாற்றிசைநாற் பதுவேசூலம்
இதனிடையி லிருபுறமு மெழுத்தைக்கேளு
வாகாகச் சிறீஓமென் றெங்கும்போடு
மறுமுப்பத் தாறுதிரி கோணகிலிஅவ்வே. (9)

அவ்வென்று சுபகன்ம பீசஞ்சொன்னேன்
அக்கன்மஞ் சூலயிடை அரிகிறோமும்
சிவ்வென்றும் ரங்கென்றும் இரண்டுபீசம்
தீர்க்கமிடு திரிகோண முப்பத்தாறும்
ஒவ்வொன்றுக் குஞ்சறையா மெண்பத்தொன்றுக்
குள்ளதுகை நானூற்றஞ் சறையாம்பாரு
இவ்வென்ற வறைமூன்றிற் றலைமூன்றொன்றில்
எதிர்த்தவறை யொன்பதொரு கண்டமென்னே. (10)

என்னவே யிரவிமுதற் கேதுமட்டும்
எண்பத்தோ ரறையும்நவ கண்டமாக்கிச்
சொன்னதொரு கண்டமொன்ப தறையொன்றைந்தாய்த்
துகையைப்பார் நானூ த்தஞ் சறையாய்நிற்கும்
அன்னதனிற் குருவினுட கண்டந்தன்னில்
அஞ்சாம்வீ டேநடுவென் றறிந்துபாரு

தன்னுடலாய் வளர்ந்தபஞ்ச பூதந்தன்னைத்
தானறிய அதன்வடிவைச் சாற்றுவேனே. (11)

சாற்றுகிறேன் பிருதிநாற் சதுரமாகும்
தண்ணீர்க்குப் பிறைகோணங் கால்சட்கோணம்
போற்றுகிறேன் முகடுவட்டம் தீமுக்கோணம்
பொன்மைவெண்மை செம்மைகரி காளவர்னம்
ஆற்றுகிறே னதிற்றேவர் பீசங்கேளு
அவனிதனில் நகாரமதாம் புனல்மகாரம்
ஏற்றியதீ யிற்சிகாரம் வகாரங்காலில்
எழில்வானில் யகாரமித னியல்பைக்கேளே. (12)

கேளுமே பூமியஞ்சு குணமதாகும்
கெடியான நீர்நான்கு தீயோமூன்று
நாளுமே காலிரண்டு வானமொன்று
நாடோறு மிவர்குணஞ்செய் நடத்தைகேளு
வாழுமே வெளியாவுந் தானாய்நிற்கும்
மண்டாங்கும் நீர்குளிரும் சுடுமேதேய்வு
வீழுமே காலுதறு மிவர்கள்செய்கை
மேவுமிவ ரஞ்செழுத்தை மாறுமாறே. (13)

மாறுவது விண்ணில்யம வநசியென்ன
மசகாத காலில்வந சியமவென்னத்
தேறுவது சியமவந வென்றுதீயிற்
செகமறியப் புனலில்மவ நசியவென்னக்
கூறுவது நசியமவ வென்றுபாரிற்
கூட்டியிடு சுபபஞ்சாக் கரமிதாகும்
ஏறுவது யசிநவம வென்றேவானில்
இடுவதுவே நவமயசி பாரில்வீசே. (14)

வீசுநீ மயசிநவ யென்றேநீரில்
மேவுசிந வமயவென்னத் தீயிற்போடு
பூசுநீ வமயசிந வென் றுவாய்விற்
போடுவது முதலெழுத்து நடுநால்சூழ
ஆசுநீ யவபஞ்சாக் கரமிதாகும்
ஆருக்குஞ் சொல்லா்ச்சூத் திரமிரண்டும்
பேசுநீ அஷ்டகர்மஞ் செய்யுமார்க்கம்
பெருவானை நடுவில்வைக்க வசியமாமே. (15)

வசியமாம் படிநடுவில் வைத்தாற்றம்பம்
மயக்கிடுமோ கனமழைப்பு நீருள்ளானால்
வசியமாந் தீநடுவில் மரணம்பேதம்
மாருதத்தை நடுவிடவே டணையுச்சாடம்
வசியமாம் பூதங்க ளடைக்கும்போது
வந்துதித்த பூதமதை நடுவிலேவை
வசியமா மதின்சூழெட் டறையோர்பூதம்
மறுகவுஞ்சூ ழறைபதினா றதிலொன்றிட்டே. (16)

ஈட்டதன்மேற் சுத்தறைமூ வெட்டோர்பூதம்
இதன்மேற்சுற் றறையதுவெண் ணான்கோர்பூதம்
போட்டதுகை நடுவதொன்றி லஞ்சேவீடு
புறஞ்சூழ்ந்த யெட்டறைநாற் பதுவேவீடு
வாட்டமறப் பதினாறி லெண்பதாகும்
மறுகவுமூ வெட்டறைநூற் றிருபானா
ஒட்டமெண்ணாங் கறையினில்நூற் றறுபதாகும்
ஒக்கவறை நானூற்றஞ் சறையுமொன்றே. (17)

ஒன்றான முதல்வரியிற் றலைமுக்கோடு
வுற்றரண்டாம் வரித்தலையில் மூன்றுகோடு

அன்றாமூன் றாம்வரியிற் றலைமுக்கோடு
ஆகநவ கோடிரவி கண்டமாச்சு
என்றாலே முதல்வரியில் மூன்றுகோட்டில்
ஏறியகோள் நிற்கிறசூத் திரத்தைக்கேளு
குன்றாத முதலறையொன் றிரண்டடிக்கீழ்
குறியான நடுமூன்றாங் கோளையேத்தே. (18)

ஏத்திரவி யடிசசியின் முடிமேலிட்டு
இரவிமுடி சசிநடுவி லிசையப்போடு
தோத்திரவி நடுவைமதி யடியிலேவை
துலக்கமதி யடிகுசன்தன் முடியிற்சூடு
ஆத்துமதி முடியாரல் நடுவேபோடு
அம்புலியின் நடுக்குசன்ற னடியிற்றாக்கு
பாத்தறிநீ வீடிருபத் தேழுமாச்சு
பானுமதி குசன்மூன்று கண்டமுற்றே. (19)

கண்டகுசன் முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
கருதிநடுக் கடைதலைமால் முடிமேலேற்று
துண்டமதி முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
டுலங்கநடுக் கடைதலைமால் நடுவிற்போடு
முண்டிரவி முடிநடுவிட் டடிமூன்றுக்குள்
மூண்டுநடுக் கடைதலைமா லடியிற்சூடு
மண்டுபுத னடிதிரிபொன் முடிமேலேற்று
மால்முடியைக் குருநடுவில் வைத்திடாயே. (20)

வைத்திடுமால் நடுவைகுரு வடியின்கீழ்வை
மகிழ்ந்துகுரு வடிப்புகரின் முடிமேலேற்று
உத்தகுரு முடிப்புகரின் நடுவிலேவை
ஓங்குகுரு நடுப்புகரின் அடியிற்றாக்கு

நாற்பத்தெண் சித்தர்

மெய்த்தகண்ட மாறுக்கைம் பத்திநாலு
வீடுமுற்றுஞ் சனிகண்டம் விளம்பக்கேளு
தைத்தபுகர் முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
டானடுவுங் கடைத்தலையுஞ் சனிமேற்சாடே. (21)

சாடுகுரு முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
டானடுவுங் கடைதலைசுன் னடுவிற்சாற்று
பாடுபுதன் முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
பகர்நடுவுங் கடைதலைசுன் னடியிற்பாவு
கூடுசனி அடியரவின் முடியிற்போடு
கொம்பின்முடி ராகுவின்றன் நடுவிலேவை
தேடுசனி நடுஅரவின் முடியிற்போடு
செம்பாம்பின் மேற்கரும்பாம் படியைச்சேரே. (22)

சேரரவின் முடிகேது நடுவிற்போடு
சினராகு நடுக்கேது அடியில்முற்றும்
சார்வாக நவக்கிரக மெண்பத்தொன்றும்
தட்டேற்று நூல்வழியே தவறிடாமல்
வாரமுடன் பெரியோர்கள் நூலைப்பாரு
மலப்பாண்டப் பசுக்களுடன் வசனியாதே
பார்மீதி லறிந்தபெரி யோரைக்காரு
பகருவா ரிலக்கமிகும் பரிட்சைபாரே. (23)

பாரரவு இரவிபுகர் குசன்பொன்காரி
பகர்புலவன் கேதுமதி கண்டம்நேர்கொள்
ஆரமுட னரவுகண்ட மாதியாக
அதுமுதலாய்ச் சசிகண்டத் தவரில்மட்டும்
வாரமுடன் சொன்னதெல்லா மரவுகண்டம்
வைத்தெழுது அவரவர்வீ டாதியாக

ஓரமுடன் மதிகண்டத் தறிந்துவீடே
ஒழிந்தவிட மெண்பத்தொன் றிலக்கங்கேளே. (24)

கேளுநீ அகாரமுத லைம்பத்தொன்றிற்
கெடிநீக்கு ங ஞ ண ந விந்நான்காகும்
வாழுமிட ஷாஆகா வாறுமாகா
வாங்கியும்பின் னெழுதுகிற வகையுஞ்சொல்வேன்
ஆளுநீ ரவிமுதலாய்க் கேதுமட்டும்
அகரமுதல் உவரைகோட் டெழுத்தஞ்சாகும்
நாளுநீ பிரித்துவிட மதியிற்சேய்பொன்
ஞாயிறுமால் புகர்காரி ராகுகேதே. (25)

கேதிரா யிரவிமுதற் சேரும்பீசம்
கெடியஅறீ யிறீ-சிறீ-ஐயுங் கிலியுஞ்சவ்வும்
மீதுகிறாங் குறோங்-கிறியொன் பதுபின்ராசி
மிக்கதிதி நாள்யோகங் கரணங்கேளு
ஓதகர்பஞ் சானனம்பிர தமையினோடு
உரையார லுத்திரமு முத்திராடம்
சூதறுமா யுஷ்மானுந் துருவஞ்சித்தம்
துலங்குகிரு மியும்ரவிக்குச் சூட்டிடாயே. (26)

சூட்டிடபந் துதிகைப்பூரணைபாரத்தம்
சோணைசவு பாக்யம்வியா காதஞ்சாத்தம்
காட்டில்வளர் புலிமதிக்கு மகரஞ்சட்டி
கனநவமி மான்றலைசித் திரையவிட்டம்
ஈட்டியசோ பனங்களரி ஷணஞ்சுபங்கள்
ஏனமுஞ்செவ் வாய்க்கெனவே யியம்பலாகும்
ஆட்டியாழ் திரிதிகையுந் திரையோதேசி
ஆயிலியங் கேட்டைரே வதியிந்நாளே. (27)

நாற்பத்தெண் சித்தர்

நாட்சூலம் வரியான்வை திருதியானை
நற்புலவர்க் கென்றிதனை நவின்றார்முன்னோர்
பூட்பான கற்கடக மேகாதேசி
புனர்தம்விசா கம்பூரட் டாதிமூன்றும்
தீட்பான சுகர்மமொடு சித்திபிராமீயம்
சேவினுட கரணம்பீ தகனுக்காகும்
பாட்பான மீனதுவா தேதிசத்தமியும்
பரணியுடன் பூரமும்பூ ராடமாமே. (28)

ஆம்பிரீதி விருத்திசிவங் கரணஞ்சீயம்
அங்கவிகோல் கும்பசதுர்த் தேசியோடு
ஓம்பூச மனுஷமுடன் உத்ரட்டாதி
உரைதிருதி விதிபாத மகேந்த்ரநாகம்
கோம்பியென்ற முடச்சனியன் றனக்கென்னாளும்
கூறுகன்னி சதுர்த்தியுமட் டமியினோடு
சோம்பிடா திரைசோதி சதயந்தானும்
சொல்லதிகண் டம்வச்ரஞ் சுப்ரந்தாக்கே. (29)

சுபகன்மப்பலன்

தாக்குமே சகுனியள லரவுக்காகும்
தனித்தேள்பஞ் சமிதசமி தன்னோடேதான்
காக்குமே குதிரைமக மூலங்கம்பம்
கடியகண்டம் பரிகமுங்கத் தபமுங்கேது
நோக்குமே யிந்தமுறை முற்றுஞ்சொன்னோம்
நுவலரிய சட்கோண முனைகடோறும்
வாக்குமே சொன்னகுக னெழுத்தைப்போடு
மயங்காதே சுபமதுசித் திக்கும்வாறே. (30)

அசுபகன்மஞ் செய்தோர் அடையும்பலன்

சித்திக்க வாகாத அவகர்மந்தான்
செய்வதற்குஞ் சொன்னவர்க்குந் தோஷந்தோஷம்
முத்திக்கு யிடமான தன்மம்பண்ணு
முனையான கோபமன்றிப் பணிவுபண்ணு
சத்திக்குஞ் சிவனுக்கும் பூசைபண்ணு
சரரேச பூரககும் பகத்தைப்பண்ணு
எத்திக்குந் திரியலாம் பயமோதோன்றா
திடறுபிணி வறுமையென்ப தில்லைத்தானே. (31)

தானான சுபகன்ம வகையைச்சொன்னேன்
தன்மமில்லா அசுபகன்மஞ் சாற்றக்கேளு
வானான சக்கரத்துக் கிரகபீசம்
மந்திரங்கள் நாள்யோகம் வகுத்தபூதம்
ஊனான அட்சரங்க ளிலக்கமெல்லாம்
உள்ளபடி சொல்விட்டே னொளித்திடாமல்
லேனான ராசிதிதி கரணமூன்றும்
விஷமான தொழில்வகைக்கு விதிக்கிறேனே. (32)

விதிதுலையுஞ் சதுர்த்திதுவா தேசிவிட்டி
வெய்யவர்க்குத் தேளேகா தேசிதானும்
பதிசுணங்கன் பன்றியுமே மதிக்கேயாகும்
பகரலவன் பஞ்சமியும் பகரக்கேளு
துதிசெய்சிங்கக் கரணமிவை குசனுக்கென்னத்
துள்ளுகயல் துதிகைசதுர்த் தேசிகூகை
அதிபுதற்கு மகரம்பிர தமையினோடு
அட்டமியும் புழுக்கரணங் குருவுக்கென்னே. (33)

என்னகன்னி திரிதிகையுந் தசமியானை
எருதுடையோன் றனக்குமதி நவமியோடு
தன்னைநிகர் சத்தமியுஞ் சேவல்வேங்கை
சனிக்காகு மரிகுடமுந் திரையோதேசி
மன்னரிய கத்தபமும் ராகுக்கேசொல்
வளரிடப மிதுனசட்டி நாகங்கேது
முன்னுரைத்த நாள்யோக மிதனோடிட்டு
முகிந்தபின்பு கிரகபலன் மூட்டுவேனே. (34)

மூட்டுவே னிரவிநடு நின்றால்மோகம்
முளைத்தமதி நடுநின்றாற் றம்பமாகும்
ஈட்டுவே னாரல்நடு நின்றாலோட்டு
இனிதான புதனுமே டணையுமாகும்
ஆட்டுவேன் குருநடுவில் வசியஞ்செய்யும்
அழைப்புவித்தை சுக்கிரனா லாகும்பாரு
நாட்டுவேன் காரிநடுப் பேதஞ்செய்யும்
ராகுவொடு கேதுநடு மரணுங்காணே. (35)

காணுநீ யவகன்மக் கோளையேற்றக்
கருதரிய வுபகேதை தனுவோடேற்று
பூணுநீ யிந்த்ரதனு மிதனத்தோடே
புகழ்தூம கேதுவைக்கும் பத்திலேவை
நாணுநீ நுட்பத்தை விடையிலேற்று
நன்மையின்றித் தீமைக்கு நாலுங்கூட்டு
ஊணுநீ சாத்தியன்பேர் பட்சிதானும்
ஊணரசு சுபகர்ம முறுதிதானே. (36)

சுபகன்மமெந்திர மெழுதுங் காலமும் ஐங்காயமும்

உறுதியாம் நடையென்றா லிரண்டாம்பட்சம்
உறக்குமென்றாற் பிணிசாவுக் குயிர்தான்போகும்
அறுதியிந்தப் படியெழுதித் தீர்ந்தபின்பு
ஐங்காய வகையிரண்டு வகையாய்ச் சொல்வேன்
சுருதியாங் கஸ்தூரி புழுகுபூரம்
சுத்தகோ ரோசனைகுங் குமப்பூத்தூரம்
பிருதியாந் தேன்முலைப்பா லாவின்பால்நெய்
பிசைந்தரைத்துப் பூசநன்மை பெருகும்பாரே. (37)

அவகன்ம ஐங்காயம்

பார்மீதி லவகன்மந் தனக்கைங்காயம்
பகருகிறேன் மிருசொண்டி யசுணமிங்கு
பேர்மீறு மவ்வியந்தீ மூலமாறும்
பேயானை நுணுக்கிதில்லை யற்கசீரம்
நேராக விட்டரைத்து தகட்டிற்பூசி
நெருப்பிலே வாட்டுகன்மம் நிமிஷமாடும்
தீராத பாவகர்மஞ் செய்தாயானாற்
சித்தமா யுனக்குவரும் பலனைக்கேளே. (38)

பாவகன்மஞ் செய்யிற் பலன்

பலனென்ன பெண்டுபிள்ளை யன்னைசுத்தம்
பதிமுதலாய் உடலுயிரும் பாழாய்ப்போகும்
குலம்பிரம சஷத்திரிய வசியசூத்ர
குலபுருட னானாலு மீனனாவாய்

புலனென்ன வுனக்குதவி தன்மமேசெய்
புத்ரமித்ர களத்ரசவு பாக்யமுண்டாம்
நலனென்ன கீர்த்தியுண்டாம் மோட்சமுண்டாம்
நன்மைகடைப் பிடியெனவவ் வைசொன்னாளே. (39)

சொன்னதெல்லா மேதென்றே யிகழ்ந்திடாதே
துன்மார்க்கர் சொற்கேட்டு மயங்கிடாதே
அன்னைபிதா குருதெய்வ மெல்லார்க்குந்தான்
அறிந்தவர்க்குத் தன்மனமே தெய்வந்தெய்வம்
முன்னமுள்ள பெரியோர்கள் நூலைப்பாரு
முத்திக்கு வழிபாரு புத்திசொன்னேன்
உன்னைவடுச் சொல்லாம லுலகத்தோடே
ஒத்துவா ழித்தனையும் உண்மைதானே. (40)

அஷ்டகன்மஞ் செய்வதற்கு வாரவிதாயம்

தானான கர்மங்க ளெட்டுஞ்செய்யச்
சாற்றுகிறேன் வாரங்க ளோரைவேளை
கோனாதி வாரத்தில் மோகஞ்செய்வாய்
குளிர்மதியின் வாரமது தம்பமாகும்
ஊனான சேய்வார முட்சாடிக்கும்
உறுதியாம் புதன்வாரம் வித்வேசிக்கும்
தேனான குருவாரம் வசியஞ்செய்யும்
திரியழைக்கும் புகழ்வாரத் திறமிதாமே. (41)

ஓரை வீதாயம்

திறமான சனிவாரம் மரணம்பேதம்
செய்வதுவே முற்றுமினி யோரைகேளு
உரமான ரவியோரை மோகமாகும்
உடுமதியி னோரையது தம்பமாகும்

பரமான குசனோரை யுட்சாடிக்கும்
பலபொருள்வித் .வேசிக்கும் புந்தியோரை
வரமான குருவோரை வசியமாகும்
வருபுகரோ ரையிலழைப்பு வருமின்காணே. (42)

வேளை ஓரைவிதாயம்

காணுசனி யோரையிலே மரணபேதம்
கருதுமுட்சா டனங்களே டனையினோடே
பூணுவது மாரணபே தனமுமப்பா
புகழான தாமதவே ளையிலேசெய்ய
ஊணுதம்ப மோகனஞ்சாத் திபவேளைக்கு
உயர்வசியா கிருஷ்ணமிரா சதவேளைக்குத்
தாணுவருட் கோளதுநட் பாட்சியுச்சம்
தர்மதமாம் பகைநீசம் சாத்யந்தானே. (43)

நவக்கிரகத்தோடு அட்சரஞ்சேரில் பலன்

சாத்துகிறேன் மதியோடு நகாரஞ்சேரிற்
றம்பனமா மிரவியொடு மகாரஞ்சேரிற்
போத்துகிறேன் மோகனமா மிராகுகேதிற்
பூணவே சிகாரம்நின்றால் மரணஞ்செய்யும்
ஏத்துகிறேன் குசனோடு வகாரஞ்சேரில்
எப்பொழுதும் நினைத்ததெல்லா முட்சாடிக்கும்
தேற்றுகிறேன் குருவோடு யகாரஞ்சேரிற்
செகவசியம் பரவசியந் தெளிந்துபாரே. (44)

நவக்கிரகத்தோடு அட்சரநடுமாறில் பலன்

பாருநீ புகரோடு மகாரநடுமாறிற்
பாருலகி லுள்ளதெல்லா மழைக்கலாகும்

நாற்பத்தெண் சித்தர்

சேருநீ மந்தனொடு சிகாரம்நடுமாறிற்
செப்பரிய பேதனமாம் பிசகோயில்லை
காருநீ மாலோடு வகாரநடுமாறிற்
காணரிய யேடணையாங் கண்டுகொள்ளு
சாருநீ குருபாதந் தினமுங்காத்தாற்
சாற்றுவார் கைமுறையைச் சத்யந்தானே. (45)

சத்தியமா யெழுதிவைத்த யேந்த்ரந்தன்னைத்
தவறாமற் பூசிக்க வகையைக்கேளு
சுத்திசெய்த மனைதனிலுச் சிட்டம்நீக்கித்
தூபதீ பங்கொடுத்துப் பிறகுநீயும்
பத்தியுடன் நீராட்டிப் பட்டுஞ்சூடிப்
பரமகுரு வுபதேச நியாசம்பண்ணிச்
சித்திபெற நீறுமிட்டுச் சந்தம்பூசிச்
சிவயநம வென்றெழுத்தைத் தியானம்பண்ணே. (46)

பண்ணுவதங் கன்யாசச் சுடங்கந்தீர்த்துப்
பரைமகன்றன் காயத்திரி தியானஞ்செய்து
நண்ணுமந்த மனையதனிற் புகுந்துநீயும்
நாற்சதுர மாய்மெழுகிச் சாணத்தாலே
எண்ணுமந்த வோமகுண்டந் தன்னைப்போடு
எத்திசைபார்த் திருந்தாலு மிடப்பாகத்தில்
வெண்ணிறமாஞ் சந்தபரி மளத்தினாலே
மெழுகியே நூலினிற்செஞ் சாந்துந்தோயே. (47)

தோய்த்துநீ சட்கோணங் கயத்தால்வீசித்
துலங்கவறு கோணமுமொன் றாகக்கீறி
ஏய்த்துநீ யாறுவரை யிடஞ்சாய்ந்தேறு
இப்படியே யாறுவரை வலஞ்சாய்ந்தோடு

வாய்த்துநீ குறுக்காறு வரைநோநிற்கும்
மறுகவந்த ரேகைதன்னை மடக்கிமூட்டு
பாய்த்துநீ நடுவாறு சுத்திலாறாய்ப்
பகர்நடுவிற் றரிகோணம் பத்திமூன்றே. *(48)*

பீஜாட்சர விதாயம்

மூன்றான மண்டலமா தாரமாறாம்
மூவிரண்டு சந்தியுமாய் முகிந்தபின்பு
தோன்றாமல் நின்றநடுத் திரிகோணத்திற்
சுத்திவிந்திற் குகன்பீசங் குங்காங்கென்னை
ஈன்றவள்ளித் தாய்பீசம் வலம்வகாரம்
என்றாய்தெய் வானைக்கெங் கிடத்தேபோடு
ஊன்றாத அயிலுக்கும் வலத்தேபோடு
உருவிலிபீ சமுமாயா பீசம்போடே. *(49)*

போட்டபின்னுள் மேற்கோணம் சகாரம்போடு
புகலவத னிடக்கோணில் ரகாரம்போடு
ஆட்டமென்ற அதன்கீழ்க்கோண் அகாரம்போடு
அதின்கீழுள் வலக்கோணில் ணகாரம்போடு
நாட்டமுடன் கீழிடக்கோண் பகாரம்போடு
நலமாக வதன்மேற்கோண் வகாரம்போடு
வாட்டமற வுள்ளறுகோ ணடைத்தபின்பு
மந்திரமே லாறும்வகை யாகச்சாத்தே. *(50)*

சாத்துகிறேன் சரஅணப வாவென்றேமேற்
றானிடத்திற் சயிலொளிப வாவென்றேதான்
ஏத்துங்கீழ் திரிபுரப வாவென்றேதான்
இதின்கீழே திகழொளிப வாவென்றேதான்
பார்த்துவலம் பரிபுரப வாவென்றேதான்
பண்பதன்மேற் பவவொளிப வாவென்றேதான்

தோற்றுகிற வுட்சந்தி வெளியாறுக்கும்
சூட்டுசிந்தா மணியிட்சு முரிஓமென்றே.

என்றேமே லறுகோணில் அணசரப வாவென்
றிதனிடத்தி லறுகோணம் பவஅண சரவென்று
குன்றாம லிதன்வலத்தி லாறுகோணிற்
குறியறிந்து சரபவஅ ணவென்றுகீறி
நன்றாக ரவஅசண பவென்றுகீறி
ணரவசஅ பவென்றுவண சரஅபஅவ்வாய்
ஒன்றான இதன்மேலும் உட்சந்தாறின்
உள்ளிடுவாய் கிறாமென்றுங் குறோங்கிறீயே.

இறியோடு சிறிஅரியும் போட்டபின்பு
இதற்குமேல் ஆறாறு கோணத்துக்கும்
குறியான மேலாறு கோணமையம்
கூசாமல் அரனுடைய எழுத்தைப்போடு
மறியாமல் மேல்வளத்துள் ளாறுகோணில்
மாருதமிட் டதனுடைய பீசம்போடு
பிறியாமல் மேலிடம தாறுகோணிற்
பெருந்தீயிட் டதன்பீசம் பிலக்கத்தாக்கே.

எந்திர அட்சர அடைப்புவிதாயம்

தாக்குகீழ் வலமாறு கோணமையம்
சலிலமிடு மதன்பீசந் தன்னைப்போடு
போக்குநீ யதன்வலமே லாறில்மையம்
புகழான அனவிடந்த பீசம்போடு
ஆக்குநீ யதன்மேலறு கோணமையம்
அழகான காலிலந்தப் பீசம்போடு
தேக்குநீ மேலாறு கோணந்தன்னிற்
சிறப்பான வானிலந்த பீசம்போடே.

போடப்பா அதன்கீழறு கோணமையம்
புகழான விந்திட்டுக் கணேசன்பீசம்
நாடப்பா அதன்கீழறு கோணமையம்
நன்னிலத்தை நாட்டியந்தப் பூசம்போடு
சூடப்பா வெளியாறு கோணமையம்
சொன்னதெல்லாஞ் சடாதாரத் தீட்சையாச்சு
ஊடப்பா ஐம்பத்தோரட் சரமும்போடு
உரைக்கிறேன் முன்சொன்ன வெழுத்ததுள்ளே. (55)

உள்ளான விந்துதிரி கோணமையம்
உரைக்கிறேன் வங்சங்கங் கென்றேயூணு
தள்ளாத அகரமுத லொகாரமட்டும்
சட்கோணம் நடுவாறுள் முனையிற்போடு
கள்ளாயில் லோமுதலா யம்மட்டேழும்
காணரிய மேலாறு கோணிற்போடு
விள்ளாத மேல்வலம தாறுகோணில்
மிகஅகர முதச்சாயிம் மட்டும்போடே. (56)

போடுநீ மேலிடம தாறுகோணிற்
போடுரண்டாஞ் சாமுதல்டே காரமட்டும்
நாடுநீ கீழிடம தாறுகோணில்
டகரமுதல் நகரவரை நாடிப்போடு
பாடுநீ கீழ்வலம தாறுகோணிற்
பகரமுத லகாரவரை பரிந்துபோடு
ஆடுநீ கீழுடிய தாறுகோணில்
அதிலகர ளகரவரை யமைத்திடாயே. (57)

அமைத்திடுவா யைம்பத்தோ ரெழுத்துமெள்ள
அறையிலிடு சிறிஓமென் றதனைக்கட்டு

சமைத்தமுனை பதினெட்டுஞ் சூலம்போடு
சந்தியிலங் கிஷாவெனச்சக் கரத்தைச் சூழ
எமைத்தனையாள் பவனுடநாற்பத்துமுக்கோண்
இதன்மேலோர் விருத்தமிட்டெட் டிதழும்போடு
உமைத்தனுட வெழுத்தெட்டுந் திருமாற்கெட்டும்
உரைக்கிறேன் யரலவஸஷ சஷஹாவென்னே. (58)

வேதனெடு மாலுடைய வெழுத்தைக்கேளு
மிகுசிறீ மதேதிருவா ராயாவென்னச்
சாதககமா யிதழுமித னிடையும்போடு
தான்மேலோர் விருத்தமிட்டு யிதழீரெட்டில்
ஓதரிய அகரமுத லகாரமீறாய்
உயிரெழுத்துப் பதினாறு மிதழிலூணு
ஆதரவா யிதழினிடை குறோமும்போடு
அதன்மேலே மூன்றுவரை கோட்டைபோடே. (59)

கோட்டையினால் வாசல்விட்டு வடவாசற்குட
கொடிதான வீரபத்திரன் காளிதுர்க்கை
வாட்டமில்லாக் கீழ்வாசல் வீரவாகு
மயூரமொடு வீரமயேந் திரனுங்காக்க
வேட்டமதாய்த் தென்வாசற் கணங்கள் சாத்தான்
மிகுயமன்மேற் கணபதிகு ரூரசண்டன்
நாட்டமென்ற அட்டகெச மட்டநாகம்
நாலிரண்டு திசைபால ரெழுத்திட்டாட்டே. (60)

எந்திரத்துக்கு ஓமமிருத்திகை விபரம்

ஆட்டியே யர்ச்சித்தெந் திரத்தைவைத்து
அதன்பிறகு ஓமமிர்த்தி யறைகிறேன்கேள்
கோட்டியகொல் லுலைமண்தம் பனத்துக்காகும்
குறிப்பாம்வஸ் தடுப்புமண்மோ கனத்துக்காகும்

மீட்டியசுண் ணாம்புலைமண் வித்வேசிக்கும்
மிகுதுயவன் சுள்ளையின்மண் பேதஞ்செய்யும்
சூட்டியவெள் ளாவியின்மண் ணுச்சாடிக்கும்
சுடுகாட்டு மண்மரணஞ் சுருக்குத்தானே. *(61)*

சுருக்காக அழைப்புகரும் பாலைமண்தான்
சுகமான கூவிளமண் வசியமாகும்
தருக்காமற் குலைத்திடுவர் யோமகுண்டம்
சட்கோண வட்டமிரு கோணமுக்கோண்
மறுக்காக நாற்கோணம் பூதமைந்தின்
வடிவுதனை யறிந்துநன்றாய் வகுத்தபின்பு
முறுக்காகப் புரத்தினிலீ ராறுவாழை
முளைத்ததுபோ லேநாட்டுங் கும்பஞ்சொல்லே. *(62)*

சுபகன்மஞ் செய்ய இராசியில் கிரக அடைப்பு விதாயம்

சொல்லுவேன் மேடரவி யிடபமிந்து
துர்ச்சனனா முபகேதை மிதுனத்தேத்து
வெல்லுவேன் கடகத்திற் குருவையேத்து
மிக்கசிங்கந் தூமமதாங் கணக்கன்பெண்ணாம்
செல்லுவேன் சனிதுலையிற் பாம்புதேளிற்
சிலைதனுவிற் கலையாறல் நுட்பஞ்சாடில்
புல்லுவேன் சயல்புகரீ ராறுதானம்
புகழான சுபகன்மஞ் செய்யும்வாறே. *(63)*

அவகன்மஞ்செய்ய இராசியில் கிரகஅடைப்பு விதாயம்

வாறான அவகன்மம் வகையைக்கேளு
மந்தனைமே டத்தினில்வை துலையிற்பானு

பேறான வெண்மதியைத் தேளிலேவை
　　பெருராகை விடையிலுப கேதுவில்லில்
வீறான சிலையதனை மிதுனத்தேவை
　　மிக்கபொன்னை மகரத்தில் வைசேய்நண்டில்
நூறான நுட்பம்அரி தூமங்கும்பம்
　　நுகர்கணக்கன் கயல்புகர்பெண்
　　　　ணூணிச்சாத்தே. *(64)*

சாத்தியபின் னைங்கரனைக் கன்னிமூலை
　　தனிலிருத்தி யர்ச்சனைசெய் திதனைப்பின்செய்
ஏத்தரிய தூபதீ பங்களோடு
　　இலையடைக்காய் பால்பழந்தேங் காயெள்ளுண்டை
தோத்தரிய பலகாரங் குழல்தேன் நெய்யும்
　　தூயகனி வகைபடைத்துச் சுகந்தஞ்சாத்தி
நாத்திசையும் புரோட்சித்துப் பந்தம்பண்ணி
　　நான்மூன்று பேருடமந் திரத்தையோதே. *(65)*

குருகும்ப விதாயம்

ஓதிடுமுன் பிரதான கும்பமொன்றில்
　　ஒருமூன்று நூல்வளைத்துக் கும்பமீதில்
மோதுதொண்ணூற் றாறுசுத்துப் புனைந்தபின்பு
　　முப்புரிநூல் கழுத்திலிட்டுக் குறுக்கேமூன்று
ஏதென்று போகாமல் நூலைக்கூட்டி
　　இதற்குவஸ்தி ராபரணஞ் சுகந்தஞ்சாத்தி
ஆதுரெம்பச் சலம்பூரி ரத்னம்போடு
　　அதன்மேல்மூ வேமுபுல்லின் கூர்ச்சைவையே. *(66)*

மூலமந்திர விதாயம்

வைத்ததின்மேல் மாங்குழைதேங் காயும்வைத்து
　　மகத்தான கவுத்துவமாங் கூர்ச்சைசூடி

எய்த்துவிடா தோதிடமந் திரத்தைக்கேளு
இயல்பாக அம்-ஆதித் தாய-நமாவென்று
பொய்த்துவிடாச் சம்-சந்தி ராய-நமாவென்று
புகழாக உம்-உபகே தாய-நமாவென்று
நைத்துவிடாக் குங்குருநா தாய - நமாவென்று
நலமாகத் தும்-தூம கேதென்றேற்றே. (67)

ஏற்றுவது பும்-புததே வாய-நமாவென்று
இயல்பாகச் சம்சனி-யீஸ்வ ராய-நமாவென்று
நாற்றிசையும் புகழ்ந்திட-ரம் ராகு-நமாவென்று
நலமாக இம்-இந்த்ர தனுசு-நமாவென்று
போற்றிடவே யாவருங்குங் குசாய-நமாவென்று
புகழாக உம்-உற்ப தாய-நமாவென்று
சாற்றுவாய் சும்-சுக்கி ராய-நமாவென்று
தவறாமற் றொடுத்தோத வெழுத்தைக்கேளே. (68)

கேளுபிர ணவபீச முன்னேவைத்துக்
கெடிவாலை புவனைதிரி புரையின்பீசம்
நாளுமிந்த நாலுடனே கிரகபீசம்
நாட்டிநம சிவயமெனத் தியானம்பண்ணு
வாழுநீ யீசானம் வடுகன்பூசை
வங்குபின்முன் னாலெழுத்தை வைத்தங்கோது
சூழுநீ வடமாலை சுகந்தஞ்சாத்திச்
சுத்திவஸ்து அமுதுடன்நெய் வேத்தியஞ்செய்யே. (69)

அஷ்டகன்மத்திற்கு ஓமதிசை அறியும் விதாயம்

செய்தபின்பு ஓமிக்க முகத்தைக்கேளு
திரமான வசியமென்றாற் கிழக்கேபாரு

வய்தபின்பு மாரணத்துக் கங்கிபாரு
மறலிதிசை பேதனமாம் பிசகோயில்லை
வெய்தபின்பு நிருதியென்றாற் றம்பமாகும்
மேற்றிசைவித் வேடணையாம் வில்லுச்சாடம்
ஐயமில்லாக் குபேரனில்மோ கனமீசானம்
அழைப்புவித்தை யாந்திசையை அறிந்திடாயே. (70)

அஷ்டகன்ம மணிவிதாயம்

அறிந்திடுவாய் ருத்ராட்சம் வசியமாகும்
அழைப்புவித்தை படிகமணி மிளகுமோகம்
செறிந்திடுவாய் துளபமணி யுட்சாடிக்கும்
செகத்திலுள்ள இலந்தைமணி வித்வேஷிக்கும்
பிறிந்திடுவாய் தம்பனந்தா மரைவித்தாகும்
பேரான நாவிமணி மரணமாக்கும்
முறிந்திடுவாய் எட்டிமணி பேதஞ்செய்யும்
முறையிதுதான் மணிவகைக்குப் பதினாறாச்சே. (71)

ஆசனவிதாயம்

ஆச்சிதற்கு முகப்பில்ரச மணிதான்கட்டி
யாயிரத்தெண் ணுருச்செபிக்கச் சித்தியாகும்
வாச்சிருக்கு மாசனந்தான் வசியம்புள்ளி
மான்றோலுச் சாடனந்தான் கலைத்தோலாகும்
பேச்சிருக்குங் கடுவாய்த்தோல் மரணஞ்செய்யும்
பெருங்கரடித் தோல்தம்பம் பிலக்குஞ்சித்தி
ஏச்சிருக்கும் வரிப்புலித்தோல் வித்வேஷிக்கும்
எளிதல்ல ரத்தினகம் பளிதான்மோகம். (72)

மோகனிசம் பலகையது பேதஞ்செய்யும்
முறையோடே அழைப்பு கொசுமெழுகுத் தூசு

ஆகவிரு நான்காச னத்தைச் சொன்னேன்
அவரவர்கள் நூலெல்லாம் ஆய்ந்துபார்த்துத்
தேகசித்தி யாயிருந்து மனமொன்றித்துத்
திரியாசை பொருளாசை ரண்டும்நீக்கி
வாகாக்கும் அரனங்கே யிருப்பதாக
மனதிலே தியானித்து மலரைத்தூவே. (73)

புஷ்ப விதாயம்

மலர்முல்லை வசியஞ்செம் பருத்திமோகம்
மாரணத்துக் கிலுப்பைமல ரழைப்புத்தாழை
மலர்காட்டும் மல்லிகைதா னுச்சாடிக்கும்
வளர்ந்ததிரு வாத்திப்பூ பேதஞ்செய்யும்
மலர்வெள்ளை யரளிப்பூத் தம்பமாகும்
மகத்தாஞ்செவ் வரளிப்பூ வித்வேஷிக்கும்
மலர்கொண்டு அர்ச்சியா சனமீதேறி
மதுரமொழி யேபேசு சினம்பேசாதே. (74)

நற்புத்தி சமித்துவிதாயம்

பேசுதற்கு மணிக்கரத்திற் காப்புப்பூணு
பேர்பெற்ற முப்புரிநூல் மார்பிற்சாத்து
பேசுதற்குச் சாந்திசெய்யச் சமித்தைக்கேளு
பேரான தாம்வசிய வீரசந்தம்
பேசுதற்கு விலாமிச்சு வும்பர்தாரு
பெரிதான கூவிளைப லாவுஞ்சூதம்
பேசுதற்கு நாயுருவி யிவையொன்பானும்
பிசகில்லை மோகனத்துக் கியம்புவேனே. (75)

இயம்புகிறேன் வெள்ளெருக்கு வெள்ளைக்குன்றி
இருவேலி யாலையிக்குச் சித்ரமூலி

நயம்பெறா தழிஞ்சரசு சிறுகிளாவேர்
நல்லத்தி யிவையொன்பான் பேதங்கேளு
செயம்பெறுகத் திரிநெரிஞ்சி கண்டபங்காலி
சிறுகுறிஞ்சா மாவிலங்கு தோணிபாகல்
பயம்பெறும்நாய்ப் பாகலிலை பொன்னாங்காணி
பாரினிலுச் சாடனத்தைப் பகருவேனே. (76)

பகருவேன் முன்னைகாஞ் சூரைவேம்பு
பருமுசுறுக் கூடுகவு தும்பைசீந்தி
நுகருபேய் மருட்டியுடன் சம்புவோடு
நுவலரிய சித்தகத்தி யிவைதானொன்பான்
புகருருதம் பனந்தனக்கு நத்தைச்சூரி
பொன்முசுட்டை பாற்குரண்டி யமுக்கிறாவால்
ககரரிய நீர்முள்ளி பூனைக்காலி
கட்டுக்கொடி பிடாரமூக்கி கருச்சொன்னேனே. (77)

சொன்னபின்பு வேடணைக்குச் சமிதைகேளு
தூயவெலு மிச்சுநா ரத்துமல்லி
முன்னைநின்ற விடந்தீஞ்சான் நச்சுப்பல்லு
முனிகடுகுக் காணம்நீர் மேல்நெருப்பு
வன்னபல் புல்லுருவி யாகவொன்பான்
மாரணத்துக் கெருக்குதழல் மூலிகள்ளி
பின்னைபிணஞ் சுமந்தகலி துளசிமூன்றும்
பிரண்டையுடன் செவ்வரளி வகையொன்பானே. (78)

வகையாக அழைப்புக்குச் சமித்துகேளு
மாதளைதூ தவளைமுச லமுக்கினோடு
தகையாத சூதமெட்டி வாகைநாரி
தாமரையின் தண்டுடனே பூகத்தாது

துகையிந்தச் சமிதைவகை யொன்பதாகச்
சூட்டினே னிவையெல்லா முலர்ந்தால்நன்று
பகையாகு முறையோடே செய்யாவிட்டாற்
பலிக்குமிந்த முறைசெய்தே பரிட்சைபாரே. (79)

பானான வோமத்தா குதியைக்கேளு
பதையாத தம்பனந்தான் வரகுமாகும்
கோனான பேதனங்கொள் கடலையாகும்
குறிப்பான வித்துவேட ணத்துக்கெள்ளு
தானான மோகனமோ முதிரைசாமை
தயவாக அழைப்புநெல் தினையுமாகும்
ஊனான கடுகுகொல்லம் மிளகுரண்டும்
ஓமிக்க மரணமுச்சா டனத்தைக்கேளே. (80)

நற்புத்தி

கேள்நீகார் கோலரிசி குதிரைவாலி
கெடியான வசியமா குதியேசொல்வேன்
வாழ்பாசிப் பயறுடன்கோ தும்பைவீசம்
வகுத்தகன்ம மெட்டுக்கா குதிதான்முற்றும்
தாழ்வான பாவகன்மஞ் செய்யவேண்டாம்
தனக்கொருவர் செய்யிலவர் தனக்கேயெய்தும்
மீள்வாய்நீ நரகத்தில் வீழ்ந்திடாதே
மேலட்ட கன்மத்தின் கிருதுங்கேளே. (81)

அஷ்டகன்ம வோமத்துக்குக் கிருதவிதாயம்

கேளுநீ பசுவின்நெய் வசியமாகும்
கெடியான மேதிநெய்தம் பனமேசெய்யும்

நாற்பத்தெண் சித்தர்

வாழுநீ வெண்டகர்நெய் யுட்சாடிக்கும்
வகையான மோகனமெள் ளெண்ணெய்யுந்தான்
தாழுநீ தேங்காய்நெய் யழைப்புக்காகும்
சகலமும்வித் வேஷிக்கு மிலுப்பைநெய்காண்
நாளுநீ யேரண்ட நெக்குட்பேதம்
நஞ்சான நிம்பநெய்மா ரணமாமென்னே. (82)

என்னையா சமித்தினுட துகையைக்கேளு
ஏதுகன்மஞ் செய்தாலும் வகைக்கொன்பானிற்
பின்னையொன் றுக் கொருநூற்றுப் பன்னிரண்டாய்ப்
பிசகாமல் நவகுச்சா யிரத்தெட்டாகும்
பொன்னையா வொக்கமந்தி ரத்தைக்கேளு
பூர்வபஞ்சாக் கரமூன்றெ முத்துங்கூட்டி
முன்னையா சாத்தியன்பேர் கன்மப்பேரு
முறைவழியே தவறாமற் செபித்துப்பாரே. (83)

பாருநீ யவபஞ்சாக்க ரத்தினோடு
பரைவாலை புவனைதிரி புரைதன்பீசம்
சேருநீ பிரணவமா பீசங்கூட்டிச்
செபியாதே செபித்தாக்காற் சித்தியாகும்
நேருநீ யுருவுமா யிரத்தெட்டானால்
நினைத்ததெல்லாம் சித்திக்கும் பிசகோயில்லை
காருநீ நிருவாணி யென் றுவாழ்த்திக்
கருணையுடன் வாரணமும் பெலிதான்காட்டே. (84)

காட்டுவாய் வடுகாயா பெலிகாவென் று
கைகாட்டி நீரையள்ளிப் புரோட்சித்தேதான்
ஆட்டுவாய் மணிதூப தீபந்தானும்
ஐந்துமுத் திரையுடனா லாத்திகாட்டு

நாட்டிலுள்ளோர் வெவ்வேறு தெய்வமென்பார்
நவக்கிரக மல்லால்பின் தெய்வமேது
சூட்டுவாய் குகன்பாதஞ் சென்னிமீதிற்
றொழுதுவுந்த னருள்தாவென் றேத்திப்போற்றே. (85)

போத்தியே கரங்குவித்துத் தெண்டநிட்டுப்
பூரணமே யென்குருவே சிவமேயென்று
கூத்துநின்ற கன்மவினைப் பிறப்பையெல்லாம்
கொடும்பாவம் நோய்வறுமை வினைகள்யாவும்
தூத்திவிடு காத்திலிட்ட பூளைப்பூப்போல்
துச்சமெல்லாம் நீக்கியுந்த னருள்தாவென்று
காத்திகைப்பெண் ணார்கள்முலை யுண்டவாயா
கரிமுகவன் தனக்கிளைய கந்தாவென்னே. (86)

கந்தனே ஆறுமுகக் கடவுளேசெங்
கதிர்வேலா வுமைபாலா கதிர்காமத்துச்
சந்தவரை பழனிதிருக் கழுக்குன்றத்தும்
சரவணையுந் திருமலையுந் தரித்தாயென்றும்
வந்தனைசெய் நற்கீரன் மனங்களித்த
வாய்மைபொய்யா மொழியருண கிரியுமோதும்
செந்தமிழுக் கிரங்கிவர மளித்தாயும்பர்
சிறைமீட்டிச் சூரைவென்ற தேவதேவே. (87)

தேவனே மூவருக்கு மேலாம்மூர்த்தி
சிற்பரனே தற்பரனே வொப்பில்லாத
தேவனே வள்ளிதெய்வ யானைமேவும்
செவ்வேளே மயிற்பரிசே வகனேவிண்ணோர்
தேவனே குமரகுரு பரனேவேதன்
செப்பரிய அரிக்குரையப் பனுக்குச்சொன்ன

நாற்பத்தெண் சித்தர்

தேவனே ஆதியுமந் தமுமாய்நின்ற
சின்மயமே நாலாறுஞ் சேர்ந்தெட்டோனே. (88)

எட்டாகி ரண்டாகி மூன்றுமாகி
யேகமா யஞ்சாகி யாறுமாகி
வெட்டாத சக்கரமா யெழுத்தில்லாத
வெறும்பாழாய்த் தாபரசங் கந்தனாகி
ஒட்டாத பொருளுமரு வுருவமாகி
உள்ளாகிப் புறம்பாகிச் சமயமாகித்
தட்டாத சராசரமா யாறாதாரம்
சாற்றுமைம் பூதமும்நீ தானேயென்னே. (89)

நானவர் வானவரறியா மூலநாயன்
சச்சிதா னந்தபர சிவத்தைநீயும்
மோனமிடை பிங்கலையுஞ் சுழினையாலே
முட்டிப்பார் சண்முகமும் மயிலும்வேலும்
கானமலைக் குறமின்தெய் வானைத்தாயும்
கண்ணடுமூக் கின்முனையிற் காணுங்காணும்
ஓநமசி வாயமென்ற வெழுத்தோராறும்
உன்னுடனா றெழுத்துமெனக் குறுதிதானே. (90)

உறுதியா யெனக்குனருள் தருவாயெந்தன்
உடல்பொருளா வியுமுனக்கே விலையாய்த்தந்தேன்
மறதியாய்ப் போகாதுன் னெழுத்தோராறு
மனம்வாக்குக் காயம்விட்டே யகலாதென்றும்
பிரிதியாய் நினைத்ததெல்லாந் தருவாய்நாளும்
பேரின்ப மல்லால்சிற்றின்பம் வேண்டாம்
பொருதியா மனத்தோர்க்குக் கன்மஞ்சித்தி
பூரணமே யென்குருவே யென்றுபோத்தே. (91)

போத்தியே யெந்திரத்தைக் கையில்வாங்கிப்
பூரணகும் பக்கிரகக் கரகத்தீர்த்தம்
நேத்தியாய்த் தானஞ்செய் பானம்பண்ணு
நினைத்தகன்மஞ் செயமெனவெண் ணீறுசாத்து
காத்திகே யனைத்துதித்தெந் திரத்தைச்சுத்திக்
கரமருங்குற் களமூன்றிற் கபாடம்பண்ணு
வேத்துமையாங் கன்மங்கள் செய்யவேண்டாம்
வேண்டிவினை செய்யெனுஞ்சொல் மிகத்தப்பாதே. *(92)*

தப்பாது யேந்திரம்வெள் ளாவிசுள்ளை
தன்னில்வை மோகனமாம் பேதங்கேளு
எப்போதுங் கலைத்துவிடுஞ் சுடுகாடானால்
இல்லையென்றால் வாய்வுதிசை சாத்தான்கீழ்வை
ஒப்பாத வேடணைக்குக் காளிதுர்க்கை
உள்ளடியில் வைத்திடுதும் பனத்தைச்சொல்வேன்
அப்பாத பாழ்கிணறாம் வண்ணான்கற்கீழ்
அழைப்புத்தீய்ப் பாஞ்சாளா லயமுமாமே. *(93)*

ஆமென்ற மாரணந்தான் பிரேதம்வேகும்
அனலிலிட வென்செயுமோ அறிந்துபாரு
ஓமென்ற யேந்திரத்தைப் பாலிற்போட்டு
உன்மனைவை வசியமா முலகெல்லாந்தான்
நாமென்ற ஆணுவத்தை விட்டுநீங்கி
நாதாக்கள் தமக்கடியே னென்றுசொல்லு
காமனையன் றெரித்தபிரா னுன்னைக்காப்பான்
கலிகால மிதுவறிந்து கருதிப்பாரே. *(94)*

பாரப்பா ஆதித்தன் தலையில்நின்றால்
பண்பான நடுச்செவ்வாய் மதிக்குராகு

சாரப்பா குசனுக்கு நடுப்பொன்னாகும்
தண்டமென்ற ராகுவுக்கு நடுவேமந்தன்
சேரப்பா குருவுக்கு நடுவேமாலாந்
திகழ்சனிக்கு நடுக்கேது புதற்குச்சுங்கன்
ஆரப்பா கேதுவுக்கு நடுவேபானு
அழகுசுங்கர்க் கிந்துநடுக் கண்டுகொள்ளே. (95)

கண்டுயான் சொன்னவதி காரங்கேளு
கபடனறி வரைசொன்னே னறையுஞ்சொன்னேன்
பண்டுமதற் குள்ளறைசுத் தறையுஞ்சொன்னேன்
பஞ்சபூத மதனுளுயி ரெழுத்துஞ்சொன்னேன்
விண்டுமைம்பத் தோரெழுத்துங் கிரகபீசம்
மேவியிடு லக்கமுங்கோ ளெழுத்துஞ்சொன்னேன்
துண்டுவிழ ராசிதிதி நாள்யோகங்கள்
துலங்குகர ணமுமுரைத்தேன் சுருக்கித்தானே. (96)

சுருக்கியே சூலமுஞ்சுற் றெழுத்துஞ்சொன்னேன்
சுபகன்ம மவகன்மம் பட்சிசொன்னேன்
உருக்கியதிற் பூசுதற்கைங் காயஞ்சொன்னேன்
உம்பர்க்கோ நாற்பான்முக் கோணஞ்சொன்னேன்
சுருக்கியிடு மோமகுண்டப் பிரிதிசொன்னேன்
கற்கங்கள் கும்பகுர்ச்சை வகையுஞ்சொன்னேன்
பெருக்கியெரி சமித்தையுமா குதியுஞ்சொன்னேன்
பிரிவாக நெய்மலரா சனஞ்சொன்னேனே. (97)

சொன்னேனே நவக்கோட்கள் மூலமந்த்ரம்
சுப்பிரமண்யர் பூசையுந்தோத் திரமுஞ்சொன்னேன்
முன்னேமா னதஞ்சடா தாரபூசை
முன்னெழுதும் மந்திரங்கள் யாவுஞ்சொன்னேன்

பின்னேயென் குருவடுகன் பூசைசொன்னேன்
(51) பேர்வாரம் வேளையுமோ ரையுமேசொன்னேன்
பொன்னேகேள் தகடுவைக்குந் தலமுஞ்சொன்னேன்
புண்ணியபா வங்கட்குப்புத் தியுஞ்சொன்னேனே. (98)

புத்திசொன்ன வாறறிந்து பிழைப்பாயப்பா
பொல்லாத பாவிகட்கு நூல்விள்ளாதே
எத்திசையும் பிரபலமா யிந்தநூலை
யெவரேனும் படிப்பவர்கேட் பவர்க்குஞானம்
சித்தியாந் தத்துவசோ திடமுந்தோணும்
(52) செகமெல்லா மட்டகன்மந் திரமாயாடும்
கத்தியிது பலவகையை வெட்டித்தள்ளு
கையில்நெல்லிக் கனியிதுதான் கருத்திலூணே. (99)

ஊணவென்றாற் சுழிமுனையி லூாணவேணும்
ஊறவென்றால் மதியமுத மூறவேணும்
பேணவென்றாற் றன்னையல்லோ பேணவேணும்
பிலக்கவென்றால் மனக்குரங்கு பிலக்கவேணும்
தோணவென்றால் றீபவொளி தோணவேணும்
(53) சொல்லவென்றால் மெய்க்குருவே சொல்லவேணும்
காணவென்றா லொன்றாகக் காணவேணும்
காசினியி லனுபோகங் கண்டுதேறே. (100)

கண்டுபார் வேதியர்க்கும் பரதேசிக்கும்
கற்புளபெண் கற்றறிந்த பெரியோருக்கும்
தொண்டுசெய்யு மடியார்க்கும் புவியாள்வோர்க்கும்
துன்மார்க்கத் தொழில்கள்செய்ய நினைத்திடாதே
பண்டுசொன்ன குருமொழியை மறந்திடாதே
பாமரா ளுடன்வீண்வாய் பறைந்திடாதே
(54)

விண்டுசொன்ன நவக்கோள்கக் கிஷத்தையெல்லாம்
மெய்யென்றால் மெய்வேலு மயிலுமுற்றே. *(101)*

சங்கரர் நவக்கிரக கக்கிஷம் *101*
முற்றிற்று

....

வராரிஷி திருவாய் மலர்ந்தருளிய
கலைக்கியானம் 22

ஆதியந்த மில்லாசின் மயத்தின்பாதம்
அகண்டபுரி பூரணமா மாத்தாள்பாதம்
சோதிநிற மாகநின்ற கணேசன்பாதம்
சொல்லுதற்கு மெட்டாத சூட்சாசூட்சம்
வீதியென்ற பராபரத்தின் நந்திபாதம்
வேதாந்த சாஸ்திரத்தின் வெளியின்மார்க்கம்
சோதியெனும் பராபரத்தில் நடனஞ்செய்த
சுடரொளியின் பாதமது காப்புத்தானே. *(1)*

தானென்ற ஞானிக்குக் குளிகையொன்று
சாத்துகிறே னென்மகனே சார்ந்துகேளு
தேனென்ற விந்துவல்லோ ரசமுமாகும்
சேர்ந்துநின்ற வாசியல்லோ மூலியாகும்
மானென்ற அக்கினியே பீடமாகும்
மக்களே ரசமணியின் மார்க்கத்தாலே
ஊனென்ற ரசமல்லோ ரசத்தைக்கட்டி
உத்தமனே கெவுனத்தி லோடலாமே. *(2)*

ஓடலாம் பராபரத்தி னடியினுள்ளே
ஓகோகோ சொக்கிவிடும் மணியின்மார்க்கம்

காடெலாந் திரிந்தலைந்து ரசத்தைவாங்கிக்
கட்டியொரு மணியாகச் செய்வேனென்று
நாடெலாம் அலைகின்ற வுலுத்தமாந்தர்
நாடாதே அவரிடத்தில் நரகமெய்வாய்
பாடெலாம் பயனலவோ விந்தைக்கட்டப்
பரப்பிரம மணியாகும் பாருபாரே. (3)

பாரப்பா விந்துவைத்தான் மணியாய்ச்செய்யப்
பாடுகிறேன் சிந்தைதெளிந் தையாகேளு
வீரப்பா வுன்னிடத்தில் வாசிதன்னை
விதமாகப் பீசத்துள் அடக்கிக்கொண்டு
காரப்பா வாசிதன்னைப் பதனஞ்செய்து
காட்டுகிறேன் கபாலத்திற் கண்டுகொள்ளு
வேரப்பா நுனிநாக்கண் ணாக்கிலேத்தி
விளங்குகின்ற தமர்தனையு மடைத்துப்பாரே. (4)

அடக்கையிலே கும்மென்று இருட்டுக்காணும்
அலைத்துவிடுந் தேகத்தை மலைக்கவேண்டாம்
உடக்கையிலே அவ்விடத்திற் சத்தங்காணும்
ஒடுங்கிநின்ற சுடரொளியுந் திரும்பவீசும்
படக்கையிலே விழியிரண்டும் அரைக்கண்பாரு
பருமூக்கின் சுழிமீதின் குறிப்புப்பூணும்
கடக்கையிலே காதிரண்டும் அசைவுகாணும்
கண்டத்தேழ் வாசல்கத வடைக்கும்பாரே. (5)

பாரப்பா அடைத்துவிடும் வாசலேழும்
பண்பான வாசியது கீழேநோக்கும்
சேரப்பா வாசியது இரங்கும்போது
சிவாவென்று சுழிவயிற்றை யழுத்திக்கொள்ளும்

நாற்பத்தெண் சித்தர்

தாரப்பா நந்தியுட பீடமாகும்
தமர்விடா வாசியைத்தா னிருத்திக்கொள்ளு
ஆரப்பா லிங்கவட்டம் அபானவாசல்
அடைக்குமடா நந்தியுட வேகந்தானே. (6)

தானென்ற வாசியது பீசஞ்செல்லச்
சரிவரவே சென்றபின்பு சொல்லக்கேளு
மானென்ற கபாலமெல்லாம் விம்மலாகும்
மயங்காமற் கவனத்தா லுள்ளேசெல்லும்
தேனென்ற சுடர்கம்பங் கொதிப்புக்கொள்ளும்
செல்லவென்றால் மனமங்கே மயக்கங்காணும்
ஊனென்ற மனத்தாலே ஐம்பத்தொன்றாம்
ஒதுங்கிநீ பீசத்தில் மனதையூணே. (7)

ஊணவே வாசியது மேலேநோக்கும்
உட்புகுந்து தண்டுவழி யோடும்பாரு
காணவே சுடர்க்கம்பம் நரம்புயென்றும்
காணாது சுத்தகம்பம் போலநிற்கும்
ஏணவே யதுவழியே வாசியோடி
யேகுமடா கமலத்தி னண்டத்துள்ளே
ஆணவே அமுதத்தில் வாசிசிக்கும்
அப்பவல்லோ அக்கினியு மதிகமாமே. (8)

அதிகமென்ற அக்கினியிற் கதிரோகோடி
ஐயையோ கண்ணிமைக்குள் ளடங்குமோசொல்
பதிகமென்ற விந்துவைத்தான் வாசிதானும்
பம்பரம்போற் சுற்றியல்லோ மணிபோற்பண்ணும்
கதிகமென்ற விந்துவைச்சா ரணையேசெய்யக்
காட்டுகிறேன் கண்மணியே கருதிக்கேளு

அதிகமென்ற நுனிநாக்கை அணுப்போல்நீக்கி
அருண்டுவரும் மணியுடனே வாசிபாரே. (9)

பாரப்பா விந்ததுவாம் மணியுங்கூடப்
படீரென்று இரங்கிவிடும் பீசத்துள்ளே
காரப்பா நந்தியுட வழியிற்செல்லுங்
காணாது அதுக்குள்ளே சிக்கிக்கொள்ளும்
ஆரப்பா அவ்விடத்தக் கிளியின்வீடு
அப்பவல்லோ அண்ணாக்கைத் திறந்துமூடு
சேரப்பா நூறுதரம் திறந்துமூடில்
சிவந்துருகி வலுவாஞ்சா ரணையாமெண்ணே. (10)

எண்ணவே நூற்றெண்சா ரணையீதாகும்
ஏகுமடா அண்டத்தில் மணியின்வேகம்
உண்ணவே நுனிநாக்கை யரையாய்வாங்கி
ஒடுங்கிவருங் கபாலத்தின் மனுதானப்பா
கண்ணவே அண்டத்தின் மணியைவைத்துக்
கபாலவரை பெருவாசல் மூடும்போது
நண்ணவே சடலத்தை யுயரத் தூக்கும்
நாலுரெண்டு வரைவரைக்குஞ் சொக்கும்பாரே. (11)

சொக்கவே அண்டமுதற் றிசைகளெட்டும்
சுழன்றுவரும் நிமிஷத்தில் மணியின்வேகம்
தக்கவே முன்போலே கதவைமூடிச்
சணத்திலே கம்பநுனி மேலேசொல்லும்
சிக்கவே கதவுநுனி சற்றேநீக்க
செணத்திலே ஓடிவரும் மணிதானப்பா
கக்கவே ரசமணியின் மார்க்கஞ்சொன்னேன்
கண்டுகொள்ளு மிதனாலே சாட்சியாமே. (12)

நாற்பத்தெண் சித்தர்

ஆமென்ற ரசமணியின் வேகத்தாலே
அண்டர்களும் முனிவர்களும் மயங்கினார்கள்
தேமென்ற இம்முறையைச் சொன்னேன்யானும்
சிவஞான மவுனிக்குச் சொன்னதல்லால்
ஊமென்று பிறந்திறக்கும் மாண்பருக்கும்
உலுத்தருக்கும் இம்முறையைச் சொன்னாயானால்
காமென்ற கழுதையுட ஜென்மமாகிக்
கடைப்பிறப்பாய்ப் பிறந்திடுவாய் கருதிப்பாரே. *(13)*

பார்க்கவே இம்முறையைச் சொன்னாயானாற்
பாழான நரகமெய்தும் பாருபாரு
காக்கவே சீஷனுட மனதைக்கண்டு
கைமுறையைச் சொல்லிவிடு ஞானமார்க்கம்
ஏர்க்கவே ரசமணியின் மார்க்கந்தானும்
என்மக்காள் சொல்லிவிட்டேன் நிசமதாகச்
சேர்க்கவே இம்முறையை யுனக்குச்சொன்னேன்
செழுங்கருணை யாய்க்கண்டு தேறுவாயே. *(14)*

தேறிடவே கற்பமுறை யொன்றுசொல்வேன்
தெளிவுறவே நீநன்றா யறிந்துகொள்ளு
சீருடனே செங்கடுக்காய் கொண்டுவந்து
சிறுநீரி லூறவைத்துச் சுத்திசெய்து
பாருலகிற் பொடித்துப்பாண் டத்திலிட்டுப்
பண்பான வெருகுடியி னளவதாக
நேருடனே வெந்நீரில் மண்டலந்தான்
நீயுண்டு மாநிலத்தி லுய்குவாயே. *(15)*

உய்யவே அதன்பின்பு மிளகுதன்னில்
உற்றதொரு பெரிதாகப் பார்த்தெடுத்து

செய்வாழைக் கன்றமுரி தன்னிலேதான்
சீராக வூறினபின் மிளகைந்தாக
ஐயமிலா துண்டிடுநாட் கைந்துகூட்டி
அவ்விதம்நா ளிருபதுக்கு நானூறாகும்
பையமற்ற தினங்கட்கைந் தாய்க்குறைத்துப்
பக்குவம தாகவுண்டு பதத்தைப்பாரே. (16)

பாரப்பா இந்தவித முண்ணும்போது
பண்பான மிளகுடனே அமுரிசேர்த்துக்
காரப்பா முன்சொன்ன வுப்புச்சுண்ணம்
கனிவாயோர் விராகனிடை கூடப்போட்டு
சீரப்பா தேத்தாவித் ததையுமிட்டுத்
தேய்த்திடவே கற்பமது தெளிந்துபோகும்
சேரப்பா பீங்கானி லெடுத்துக்கொள்ளத்
தெளிவான கற்பமது சித்தியாமே. (17)

சித்தியுள்ள கற்பமதி லொருவீசந்தான்
சிறப்பாகக் காலையிலே உண்டுவாநீ
புத்தியுடன் மாலையிலே சூரணந்தான்
புசித்துப்பின் னின்னமொரு பாகங்கேளு
வெத்தியுள்ள கரிசாலை குப்பைமேனி
விடத்தலையும் பெரியசெருப் படையினோடு
சத்தியுள்ள பொற்கொண்டை சிவகரந்தை
சமூலமடா தூதுவளை வேருந்தானே. (18)

தானென்ற வல்லாரை அழிஞ்சிவித்து
சாதிக்காய் பத்திரியும் லவங்கமோடு
மானென்ற சரக்கெல்லா முலரவைத்து
மைந்தனே மந்தாரை வெள்ளைப்பூவும்

கோனென்ற நிலப்பனையின் கிழங்கினோடு
கொடிமல்லி கைப்பூவும் வகைவகைக்கு
ஏனென்ற பலமொன்றாய்ச் சூரணித்து
இனியகற் கண்டுமெட்டி லொன்றுகூட்டே. (19)

கூட்டிலொன்றாய்ச் சேர்த்துவெரு கடியதாகக்
கொள்முள்ளம் பன்றியின்நெய் தன்னிலேதான்
நாட்டியே மண்டலந்தான் மாலைநேரம்
நலமாக நீயுண்டு வந்தாயானால்
தாட்டிகமாய்ச் சடத்திலுள்ள நீரையெல்லாம்
தங்காம லோட்டிவிடுந் தடையொன்றில்லை
தேட்ட்முள்ள கற்பமதைச் சொன்னேனப்பா
செய்திதனைக் கண்டறிந்தால் விந்தையாமே. (20)

ஆமேதான் வாதமொடு பித்தந்தானும்
அப்பனே யிவைரெண்டு மகன்றுபோகும்
வாமேதான் சிரசிற்கற் பகத்தைச்சாடும்
மைந்தனே கோழையது நீங்கியோடும்
தாமேதா னமுதமது பெருகியூறும்
தானாக நரம்பெல்லா மிறுகும்பாரு
சோமேதான் விந்ததுவும் மணியதாகும்
தொல்லுலகின் மாயையதிற் சொக்கிடாதே. (21)

சொக்கினால் மோசமப் புறத்தேநின்று
சுந்தரமாம் வாசியுட பழக்கம்பண்ணப்
பக்குவமாம் சிவயோக ஞானந்தானும்
பலித்துதப்பா உன்றனக்கு உண்மையாகத்
திக்கிலுள்ளோ ரறியாது கெட்டாரப்பா
திறமாக மனதைமெல்ல லயமேசெய்து

இக்குவல யந்தனிலே சித்தறிந்து
இலங்கிடவே சித்தனென்ற பேருண்டாமே. (22)

வரரிஷி கலைக்கியானம் 22
முற்றிற்று
....

சமதக்கினிமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய வஸ்து தெரிசனம் 31

உலகமெனு முடியதனில் மறையாமின்போ
லுற்றசுடர்க் கொடிபடர்கா வணமதாகி
நிலவுகதி ரிருகலையு மொன்றதாகி
நேராகப் பின்னலென்ற தோற்றமாகி
பலபேத மானவுரு சீவசெந்தைப்
படைத்துக்காத் தழுதளிக்கு மன்னையாகி
இலகிடுமெய்ஞ் ஞானிபணி வஸ்துவாகி
எப்பொருளு மானபரன் பாதங்காப்பே. (1)

அப்பனே முப்பூவை யறியவென்றால்
அன்புடனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
இப்புவியில் யாவருக்குந் தெரியாதப்பா
இயல்பான பிறப்பிறப்பை யகற்றுமூலி
செப்பமுள்ள அடிமுடியும் நடுவுமாகிச்
சித்தாந்த நாதாந்த வேதமாகி
ஒப்புவமை யில்லாத புவனையாகி
ஓகோகோ திரிபுரைக்குக் கண்மூன்றாமே. (2)

திரிபுரையி னருளாலே பூநீரைத்தான்
தெளிவான சுத்தசலத் தனிற்கரைத்து

உரியபடி வைந்துதரங் காச்சியேதான்
உத்தமனே அதையெடுத்து வைத்துக்கொண்டு
தெரியவே வெடியுப்புப் பலந்தான்நாலு
திட்டமுள்ள சீனமது பலமிரண்டு
அரியதொரு சத்தியெட்டு சோடசந்தான்
அப்பனே கல்வமதி லிட்டுக்கொண்டே. (3)

கொண்டவுடன் வெண்கருவி லெருக்கம்பால்வார்
குறிப்பாகப் பழச்சாற்றி லரைத்துக்கொண்டு
கண்டதொரு காசிடையாஞ் சூடன்றானும்
கருவான சரக்கெல்லா மொன்றாய்ச்சேர்த்து
விண்டயிரு சாமம்வரை யிலுமரைத்து
வில்லைசெய்து ரவிதனிலே யுலர்ந்தபின்பு
துண்டாகச் சுண்ணாம்புக் குள்ளேவைத்துத்
தூண்டியே வொருசாம மெரிப்பாய்நீயே. (4)

எரித்தப்பா வாங்கிமெள்ளப் புடத்தைப்போட்டு
இனிமையா யப்புடந்தான் குளிர்ந்தபின்பு
பிரித்துப்பார் வெண்மைநிற மாகநீறும்
பேரான மால்தேவி யருளுண்டாகும்
பெருத்ததொரு வாதிகட்கும் ஞானிகட்கும்
பிரியமுற்ற குருவாகு மிதுதானப்பா
பொருத்துமுள முப்பூவை யாருஞ்சொல்லார்
புகழாகச் சொல்லிவிட்டே னுனக்காய்த்தானே. (5)

தானென்ற மவுனமடா மவுனஞானம்
தானறிவாய் போதமென்ற ஞானந்தன்னை
நானென்ற மனதடங்கி ஞானப்பாலை
நலமான கலையறிந்து வூதிவாங்கித்

தேனென்ற பானமடா மதுரபானம்
திகழ்ஞான பூரணமாய் நின்றுபாயும்
கோனென்ற தலமறிந்து வாயுவாலும்
குறிப்பறிந்து வாசிகொண்டு வாயில்வாங்கே. (6)

வாயில்நீ வாங்கியிரு கலையறிந்து
மவுனமென்ற மாங்கனியை மகிழ்வாயுண்ண
நேயமுடன் வெகுபெலந்தா னதிலுண்டாகும்
நேர்மையுடன் மனக்காலா லூணிப்பாரு
தூயநல்ல தேகமது வலுத்துக்காணும்
துப்பரவாய் வாசியது தங்கம்போல
மாயமுள்ள கனியுண்ட கெதியுண்டாச்சு
மகத்தான சூட்சமென்ற வழியைப்பாரே. (7)

பாரேதான் சூட்சத்தின் காலைப்பாரு
பரிவான ஞானகதி யிருகாலப்பா
நேரேதான் சூட்சாதி தன்னைக்காண
நிர்மலமாய்க் கால்தன்னைப் பாச்சியப்பா
தேரேதான் காட்சியதா யமுதமுண்ணத்
திருவான கண்காட்சி தானேதோன்றும்
கூரேதான் சூட்சமது பின்னொன்றில்லை
குறிப்பறிந்த வனுபோகி யறிவானென்னே. (8)

என்னப்பா யிவளாட்டம் பார்க்கத்தோணா
தினிமையுடன் கண்டுபிடி வாதஞ்சித்தி
சொன்னேனே வுப்பாலு மப்பினாலும்
சுருக்கமாய்க் கண்டறிநீ வாதத்தாயைக்
கன்னலென முப்பூவாற் கண்டவித்தை
கைகண்டாற் பிடிவாதங் கொள்ளையாச்சு

அன்னையென்றாய் மனமதனை யாவர்காண்பார்
அன்புடனே கண்டவர்கள் நூற்றுக்கொன்றே. (9)

நூறிலே ஒருவர்கண்டோ ருண்டுமப்பா
நுண்ணறிவாய்ப் பார்ப்பவர்க்குத் தெரியும்பாரு
தேறுதலாய் நிராமயத்தின் சோதிப்பாலை
திறமாகக் கருவறிந்து கொண்டோன்றானும்
வேறுவிதஞ் செலமாட்டான் கண்டாற்றானும்
வேண்டியே கண்டபடி தொண்டுசெய்வான்
கோரும்வித மவனுக்குச் சித்தியாகும்
குறிப்பறிந்து கொண்டவனே சித்தனாவான். (10)

சித்தறிந்து நிற்பதற்கு விதிதான்வேண்டும்
சித்தான பொருளறிந்தோர் விண்டதுண்டோ
முத்தனென்றே மனம்பூண்டு காலைப்பார்க்க
முயலுமனம் நிலையாது மூலமார்க்கம்
நித்தனென்ற மும்மூல மகன்றுபோகும்
நிராமயத்தின் சக்கரத்தை யறிந்துகொள்வாய்
மெத்தவுமே யோகவழி சூட்சஞ்சூட்சம்
மெய்யாகத் தெரிந்துகொள்ளக் காட்டினேனே. (11)

காட்டியே சொல்லிவிட்டே னறிந்துகொள்ளு
கருவான கருவூரிற் கால்தான்தோணும்
நீட்டியே காலதனை யின்னதென்று
நேர்மையுட னறிந்துகொண்டாற் பூரணந்தான்
கூட்டியதோர் பூரணத்தைத் தெரிந்துகொண்டால்
குறியான சிவயோக முடிவுமாச்சு
நாட்டியதோர் சிவயோக முடிந்துதானால்
நல்லதொரு ஞானமுந்தான் சித்தியாச்சே. (12)

ஆச்சப்பா வுன்தேகஞ் சித்தியாச்சு
அப்பனே பரப்பிர்ம சொரூபமாச்சு
பேச்சப்பா கண்டறிந்து கொள்வாய்நீதான்
பேரறிவாற் பூரணமுங் கூடப்பேசும்
வாச்சுதென்று சோதிதெரி சனமுங்கண்டு
மகத்தான சித்தனென்ற பேரும்பெற்று
ஏச்சின்றி யுகயுகமா யிருந்துவாழ்க
இனிமையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளே. (13)

கேளப்பா ஆதாரச் சொரூபந்தன்னைக்
கிருபையுடன் தெரிசித்துத் தியானஞ்செய்து
நாளப்பா மயேந்திரகிரி பீடந்தன்னில்
நலம்பெறவே பிர்மாவைப் பூசித்தாக்கால்
வாளப்பா ஞானக்கண் திறந்து காட்டும்
மனங்களித்து ஓங்-றீங் அங்கென்றோத
கோளப்பா வாராத தாரபூசை
குறிப்பாகச் செய்தறிந்த வகையொன்றாமே. (14)

ஒன்றான மனம்நிலைக்க வுறுதிகேளு
ஓமென்ற பிரணவமே மூலபீடம்
குன்றாத பீடம்-றீங் காரவாலை
குறையாத அகாரமது சிவமுமாச்சு
அன்றேதா னெழுந்தனை வாசியாக்கி
அறிந்துநின்ற இருவாசி யம்மாவாசி
சென்றேதான் அகாரமமா வாசிதன்னைத்
தீரமுடன் தானறிந்து பூசைசெய்யே. (15)

செய்யப்பா அந்திசந்தி பூசைபண்ணித்
தேசிகன்போற் காயாதி கற்பங்கொண்டு

உய்யப்பா பூரணத்தைத் தினமும்போற்ற
உன்தேழ மழியாமல் நிலைத்துப்போகும்
மெய்யப்பா பாசத்தை விலக்கிப்போட்டு
மெதுவாக அகாரமென்றாற் சத்தியாச்சு
பையவப்பா சத்திசிவ மூலந்தானும்
பார்க்கவே தனக்குள்ளாய்த் தோணும்பாரே. (16)

பாரப்பா மயேந்திரமாங் கிரியடுத்துப்
பட்சமுள்ள கணநாதர் பூசைசெய்தால்
தேரப்பா அம்மலையில் வாழுஞ்சாரை
தெவிட்டாத வெண்சாரை நிலத்திற்பாயும்
சீரப்பா பூமியிலே பாய்ந்தபின்பு
தீரமுடன் மத்தியினிற் பிடித்துக்கொள்ளு
காரப்பா பிடித்தபிடி கையிற்பாரு
கருத்துடனே ரெண்டுதுண்டு மொன்றாய்ப்போமே. (17)

போமேதான் பூமிக்குள் ளோடிப்போகும்
பூரணமாய்ப் பிடித்ததைநீ யுள்ளேகொள்ளு
நாமேதா னந்திசந்தி வருஷமொன்று
நலமாகக் கொண்டுவருஞ் சமயந்தன்னில்
வாமேதான் வாசியது பாயாதப்பா
மைந்தனே காயமது சித்தியாச்சு
நேமமுள்ள கடுகொடுநல் லெண்ணெய்தானும்
நிதானமுட னிச்சாபத் தியமுந்தள்ளே. (18)

பத்தியமா யிருந்துகொண்டு சிவத்தைப்பூசி
பாலகனே சத்தியுட கற்பங்கேளு
நித்தியந்தான் மூலகிரி தன்னில்நீயும்
நிர்மலமாய் நின்றுதவஞ் செய்தாயானால்

சத்தியுட வருளாலே யாகாசத்திற்
றானிருந்து வூசியைப்போ லந்தரத்தில்
வெத்தியுடன் கருஞ்சாரை பாயுமுன்னே
வேகமுடன் உம்மெனுமந் திரமுமோதே. (19)

மந்திரந்தா னோதியே சாரைதன்னை
மனமொன்றாய் நடுமத்தி பிடித்துக்கொண்டு
தந்திரமா யாண்டடொன்று அந்திசந்தி
தானுள்ளே கொண்டுவரக் குணத்தைக்கேளு
விந்தையுடன் மூலத்தில் அனலுங்கண்டு
மீறியே பித்தமது சாஸ்தியாகி
சந்ததமுந் தேகமது யிளைத்துக்கண்டால்
சமர்த்தாக மூதண்டக் கசாயங்கொள்ளே. (20)

கொள்ளப்பா உகாரமதைப் பூசைசெய்தால்
குறிப்பான வியாதிநரை திரையும்போகும்
விள்ளப்பா சுழிமுனையில் நாட்டம்வேணும்
விளங்குகின்ற நடுமனையிற் றீபந்தோன்றும்
மெள்ளப்பா பூரணத்தின் தீபங்கண்டால்
மெலிவான தேகமது வலுத்துப்போகும்
தள்ளாத சிவசத்தி பூசைசெய்தால்
தப்பாது ஞானசித்தி யின்னங்கேளே. (21)

கேளப்பா இரண்டுகற்பங் கொண்டபின்பு
கிருபையுடன் காலையிலே சிவத்தைப்பூசி
வாளப்பா மாலையிலே உகாரங்கொள்ளு
மகத்தான கற்பத்தா லநேகஞ்சித்தி
ஆளப்பா ஆண்டுமொரு மூன்றுசென்றால்
அப்பனே சட்டையது மூன்றுநீங்கும்

பாளப்பா போகாது யோகஞ்சித்தி
பரிவான நித்திரைதான் நீங்கிப்போமே. (22)

நீங்கிப்போம் வள்ளலார் நடனந்தன்னை
நீயறியத் தெரியுமப்பா விதற்குள்ளாக
வாங்கியதோ ரிரவிமதி யொன்றாய்க்காணும்
வளமையுள்ள வாசியென்ற குதிரையேறி
தாங்கியதோர் போதகிரி யுச்சிதன்னில்
தன்மையுடன் கற்பூர தீபம்போலே
பாங்குடனே சதாசிவமுந் தெரியுமப்பா
பதிவாகச் சித்தருமங் கிருப்பார்பாரே. (23)

பாரேதான் போதகிரி தன்னிலேறிப்
பட்சமுடன் வந்துகண்டா லின்பமாக
நேரேதான் அச்சமதை யகற்றியப்பா
நிலையான பதவியுன்ற னுக்களிப்பார்
சீரேதான் போதகிரி யாருங்காணார்
சிறப்புடைய சித்தரல்லோ காணவேணும்
கூரேதான் போதமென்றால் சிவபோதந்தான்
குறிப்பான போதங்கொண் டவன்காண்பானே. (24)

கொண்டதொரு உச்சமென்ற போதங்கண்டு
கூறவொண்ணா மேலான பதவிபெற்றால்
விண்டதொரு சதாநந்தி மணிதான்தோன்றும்
விருப்பமுடன் கண்டறிந்தால் மேன்மையாகும்
கண்டதொரு ரகசியத்தை வெளிவிடாதே
கருத்துடனே யெந்நூல்தான் முக்காண்டத்திற்
பண்டுசொன்னே னதைப்பார்த்தால் வெளியாய்த்தோணும்
பண்புடனே மனதுகந்து பாருபாரே. (25)

பாருநீ சிவராஜ யோகமப்பா
பாருலகிற் செய்தறிந்த பின்புதானும்
தேருநீ முச்சுடரு மொன்றாய்க் காண்பாய்
தெளிவான பிறப்பிறப்பும் நீங்கிப்போகும்
நேருநீ ஞானவழி கண்டுமைந்தா
நேர்மையுடன் முக்கோணத் தறுகோணத்துள்
சேருநீ நாற்கோணம் ஐங்கோணத்துள்
சீரான வெளிகண்டா லொளிகண்டோரே. (26)

ஒளிகண்டால் நாதவொலி காதிற்கேட்கும்
உண்மைதனை யறிந்தவர்க்குக் கீதங்கேட்கும்
சுழிதெரியா மடையருக்குத் தோணாதப்பா
தொல்லுலகி லவனிருந்தும் பயன்றானில்லை
வழிதெரிந்தோர்க் குண்டுசிவ யோகந்தானும்
மாநிலத்தில் வீணருக்குச் சொல்லொணாதே
அழியாத பரம்பொருளைக் கண்டுகொள்ள
ஆதிமுத லந்தம் வரை யறிவாற்காணே. (27)

அறிந்துகொள் காலைதனிற் சிவனைப்பூசி
அன்பாக மாலைசத்தி தன்னைப்பூசி
தெரிந்துநீ நடுச்சாலை நடந்துபாரு
சித்தமாய்ப் பூரணத்தின் சார்புதோணும்
பரிந்துபார் பூசையென்றால் வாமபூசை
பண்பாக யெட்டிரண்டும் மகிழ்ந்துகண்டால்
சொரிந்தமுத மூலவழிப் பாதைகாணும்
சுருக்கமாய்க் கண்டுமெள்ள விழித்துப்பாரே. (28)

பாரேதான் மேல்மூலப் பொறிதான்வீசும்
பலத்தமுச் சந்திநடு வீதிதோன்றும்

நாற்பத்தெண் சித்தர்

நேரேதா னொருமனதாய் நின்றாயானால்
நீதியென்ற நாதவொலி காதிற்கேட்கும்
பேரேதா னிழுத்துதென்று கூடப்போனால்
பேசவொண்ணாப் பிறப்பிறப்பு மெய்தும்பாரு
சேரேதான் பூரித்துப் பார்த்தாயானால்
சிவசிவா சிவசத்தி யாட்டமாமே. *(29)*

சத்தியுட ஆட்டத்தை யறிந்துகொண்டு
சதாசிவத்தி னாட்டத்தில் நாட்டங்கொள்ளு
பத்தியுடன் திரிந்ததினா லொன்றுமில்லை
பரிவான சதாசிவத்தைக் காணவேணும்
சித்தியென்றால் வாசிதான் சித்தேசித்து
சிறப்பான சுடர்கண்டு தேறுதேறு
முத்தியென்றாற் சதாசிவத்தின் முத்திமுத்தி
முடிவான தறியநாட் செல்லும்பாரே. *(30)*

செல்லுமப்பா யிதுவரைநான் மறைத்ததெல்லாம்
சிறப்புடனே தேன்மாரி பெய்தாற்போல
அல்லுபக லுந்தனுக்கு வெளியதாக
அப்பனே சொல்லிவிட்டே னருமையாக
வல்லதொரு சித்தர்கட்கு முனக்குமேதான்
மகிழ்வாகச் சொன்னதல்லால் மற்றோருக்குச்
சொல்லவில்லை யிந்நூலைச் கற்றறிந்து
சுகமாகச் சதாகாலம் வாழ்குவாயே. *(31)*

சமதக்கினி மகாரிஷி வஸ்துதெரிசனம் 31
முற்றிற்று

......

சச்சிதானந்தர் திருவாய்மலர்ந்தருளிய சுழிமுனை சூஸ்திரம் 31

குண்டலிக்குள் ளிருந்துமுளைத் தெழுந்தசோதி
குருக்கிடையும் கருக்கிடையுங் கிடந்துவீணாய்த்
தண்டதனிற் சுழிமுனையாய் வந்துநின்ற
சச்சிதா னந்தமென்ற தாய்தான்பெய்த
அண்டபிண்ட நிலையதனை வகுத்துப்பாட
அரிபிரம ரிஷிகள்சித்தர் கொண்டேயாட
எண்டிசையுந் தமிழ்விளங்க யெனக்குநீயும்
இயல்புரிவா யைங்கரனே யெம்பிரானே. *(1)*

சடலமது எண்சாணாய் நின்றபின்பு
சதிரமதாய் நாற்சாணு மகலமாகி
உடலெனவு மதுக்குள்ளே உயிரதாகி
உற்பனமாய் நின்றாடு முண்மைகேளாய்
குடமதிலே பருத்தபூச னிக்காய்போல
குண்டலியைப் பத்திதிரி முதுகெலும்பு
அடவுடனே ஆயிரத்தெட் டிதழ்பூப்பூத்து
அருவுருவாய்ப் புருவமையத் தமர்ந்தவாறே. *(2)*

வாறான வாழைப்பூப் போலேகூம்பி
வளைந்தமுனைத் தமர்வாச லிதுதானென்பர்
தேறான அக்கினியாங் கதவால்மூடித்
திறமான புருவமையம் பிரமத்தீயாய்க்
கூறான இடையும்பிங் கலையில்முட்டிக்
கொடுங்கனலுக் காற்றாமற் றலைகீழ்வீழ்ந்து
நாறான சீவகலை ராசிபாய்ந்து
நாலுமிறந் துயிர்புக்கு மிருநான்காமே. *(3)*

இருநான்காய் வருவதோர் முடிச்சாய்நின்று
இடையும்பிங் கலைமாறிக் கீழ்மேலாகப்
பெருவிரலாம் நாடிவழி யோடிமீண்டு
பின்புவரு மதுவெளியாய் நாசிபாய்ந்து
அருபமா யிருபத்தோ ராயிரத்து
அறுநூறு மப்படியே யியங்கியாடி
வருகிறதும் போகிறதும் பார்த்தறிந்த
மகத்தான குருபதத்தை வணங்கிப்போற்றே. (4)

போத்தியே குருபதத்தை வணங்கிக்கேட்டால்
புத்திசொல்லி அவரவர்தன் குணத்தைப்பார்த்துச்
சாத்துவார் சாஸ்திரத்தை யெடுத்துக்கையிற்
றான்கொடுத்துப் பாரென்று தயவாய்ப்பேணி
ஆத்துமம்நின் றாடும்வகை நிலையாதாரம்
அன்புடனே தூலவுடற் சூட்சஞ்சொல்வார்
நேத்தியாய்க் குறிப்பறிந்து பார்த்தாயானால்
நெடுங்கால மசையாது தேகம்பாரே. (5)

பாரப்பா ஆதாரத் தடுக்கைக்கேளு
பண்பாக வந்தவகை பரிவாய்ச்சொல்வேன்
பேரப்பா குருவாகிப் பரமுமாகிப்
பிலத்ததொரு சிவமாகிச் சத்தியாகி
நேரப்பா விந்துசதா சிவமுமாகி
நிலைத்தமயே சுரனாகி ருத்ரனாகிச்
சீரப்பா மாலாகி அயனுமாகிச்
சித்திரமாய்ப் பரம்படைத்த திறத்தைக்காணே. (6)

காணப்பா அதிற்பிறந்த அட்சரத்தைக்
கருத்துறவே பிரித்துயான் சொல்லக்கேளு

ஆணப்பா ஆஈயும் உவ்வும்ஏயும்
அதீதமாய் ஒவ்வுமது அஞ்சுமாகி
பேணப்பா அதிலிருந்து அகாரந்தோன்றிப்
பிலத்தஉகா ரந்தனிலே மகாரந்தோன்றி
நீணப்பா பஞ்சாக்ர நாதவிந்தாய்
நிறைசிவபஞ் சாட்சரத்தின் நிலமைகேளே. (7)

கேளப்பா அகாரத்திற் சிகாரந்தோன்றி
கெடியான உகாரத்தில் வகாரந்தோன்றி
வாளப்பா மகாரத்தில் யகாரந்தோன்றி
வளமான விந்துவிலே நகாரந்தோன்றி
வேளப்பா நாதத்தில் மகாரந்தோன்றி
விளைந்தஞ்சுஞ் சிவயநமா வென்றுசொல்லி
நாளப்பா அதிலிருந்து அஞ்சுமாறி
நாடினதோ ரிதுநமசி வாயமாச்சே (8)

அஞ்செழுத்தும் பூதமஞ்சாய்ப் பொறிகளஞ்சாய்
ஆனபுல னஞ்சாயிந் திரியம்பத்தாய்த்
தஞ்சமெனுங் கரணம்நான் கறிவுமொன்றாய்த்
தயவான நாடிபத்தாய் வாய்வுபத்தாய்ச்
சஞ்சரிக்குஞ் சயங்களுமே யைந்துகோசம்
தானஞ்சு ஆதார மாறுமாகி
மிஞ்சின மண்டலமூன்று மலமூன்றாகி
மேலான தோஷமுமே மூன்றதாமே. (9)

ஆமப்பா குணமூன்றே டணையுமூன்று
அப்பனே வினையிரண்டு ராகமெட்டு
நேமப்பா அவத்தைஅஞ்சு தொகையாய்க்கூடில்
நிலைத்ததொரு கருவியது தொண்ணூற்றாறாய்ச்

சேமப்பா அதுகள்செய்யுந் தொழிலேபார்த்தால்
செடமெடுத்த படியனைத்துந் தெளியொட்டாது
நாமப்பா அறிந்தமட்டுஞ் சொன்னோங்கேளு
நன்மைபெறக் குருபதத்தை நாடிப்பாரே. (10)

நாடியவர் பதம்பணிந்து வணங்கிக்கேட்டால்
நலந்தீங்கு மிரண்டினுட வகையுஞ்சொல்வார்
கூடியிடை பிங்கலையில் வகுத்துப்பாயுங்
குண்டலியின் குணங்குறியுங் கூர்ந்துசொல்வார்
தேடியெங்கே பார்த்தாலும் உம்மைப்போலே
தேசிகர்தா னடியேற்குச் செகத்திற்காணேன்
சூடினே னுன்பதமென் றலைமேற்கொண்டேன்
தூலமுடன் சூக்குமகா ரணமுஞ்சொல்லே. (11)

சொல்லென்று கேட்டமா ணாக்காகேளு
தூலமொடு சூட்சகா ரணத்தைச்சொன்னால்
வல்லபமா யறிவாயோ உனக்குக்கேளு
மகத்தான கோயில்குளந் தீர்த்தமென்றால்
செல்லுமது மனதுக்கே தேனும்பால்போல்
தெவிட்டாம லிருக்குமனந் திடந்தான்கண்டாய்
அல்லலெல்லாந் தவிர்த்தாண்ட குருவேநீதான்
அடியேற்கு அறிவிப்பா யெனப்பணிந்தான். (12)

பணிந்தமா ணாக்கனுட முகத்தைபார்த்துப்
பரமகுரு வானநல்ல தேசிகன்றான்
துணிந்தேநாம் சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
தூலவுடல் ஓம்நமசி வாயமதுசரியை
அணிந்தநெஞ்சில் வாசியது கிரியையாகும்
அதின்மேலே கண்டத்தில் யோகமாகும்

தணிந்ததொரு புருவமையம் மவுனமாகும்
சாதகமாய்த் தூலவுடல் நாலுந்தானே. (13)

தானென்ற தூலத்தைச் சொன்னீரையா
சாதகமாய்ச் சூட்சமதே கத்தைச்சொல்லும்
நானென்ற மனம்புத்தி சித்தமந்தக்கரணம்
நல்லஆங் காரமா ணவமாயைகாம்யம்
ஊனென்ற தட்டுமது சூட்சவுடலாச்சு
உற்பனமாய்ச் சொல்லுகிறே னுண்மைகேளு
தேனென்ற சித்தமது காரணமாய்நின்ற
தெளிவையொளி வெளியாகத் தெரிசிப்பாயே. (14)

தெரிசிக்க அடிதொடுத்துச் செப்பவேணும்
தெளிவான யென்குருசின் மயமாமூர்த்தி
பரிசிக்கக் கருநெல்லிக் கனிபோற்கையிற்
பார்த்துமகிழ்ந் திடவெனக்குப் பரிசுகாட்டி
வரிசைக்கு வைப்பதுன்மேற் கடன்றான்கண்டாய்
வாழ்த்திடுவே னுன்மலர்த்தாள் போற்றிசெய்வேன்
உருசிக்க நீரெனக்கு வேணுமையா
உடல்பொருளா வியுந்தாரை வார்த்தேன்யானே. (15)

தாரைவார்த் தேனுனக்கு முழுதுமென்ற
தன்மைசொன்ன பிள்ளாய்நாம் சொல்லக்கேளு
ஓரையுடன் முந்திமுந்தி மூலம்பாரு
உண்மையதாய்ப் பிரமனுட வீட்டைப்பாரு
நேரேதான் மாலுடைய வீட்டைப்பாரு
நின்றருத்தி ரன்விசுத்தி மயேசன்பாரு
ஊரையுமுன் மனையறியச் சதாசிவத்தை
உற்றுப்பார் சுழிமுனையுந் திறக்குங்காணே. (16)

காணப்பா சுழிமுனையுந் திறந்தபோது
கனிந்தமுத மொழுகுமுண் ணாக்கின்சார்பு
ஏணப்பா யிருகடைவாய் வழியேபாயும்
யிதையமுத மென்றவகை யிதுதானையா
தோணப்பா யிதுக்குமேல் நாதங்கேளு
தொனியுடனே முழங்குகிற வகையைக்கேளு
ஆணப்பா முந்திமுந்தி மணியினோசை
அதன்மேலே கடலோசை யடுத்துபாரே. (17)

அடுத்துப்பா ரதன்மேலே யானைநாதம்
அதன்மேலே பனையென்ற சங்குநாதம்
தொடுத்துப்பா ரதன்மேற்சீங் குழலின்நாதம்
தொகுத்ததன்மேல் துடியுடைய இடியின்நாதம்
கொடுத்துப்பார் செவியதனைப் பாம்புநாதம்
குமரனே மணிவயிரத் தும்பிநாதம்
எடுத்துப்பார் யாழுடன்பே ரிகையின்நாதம்
இத்துடனே துகையதுதான் பத்துமாச்சே. (18)

ஆச்சப்பா யிதுவரைக்கும் யார்தான்பார்ப்பார்
அரிபிரம னுருத்திரனு மயேசனோடு
மூச்சத்த யிடத்தில்சதா சிவனோடைவர்
முப்பத்து முக்கோடி தேவர்பார்த்துக்
காச்சத்த பொன்போலே கோடிகாலம்
கனிவாக வாழ்ந்திருந்தார் கனிவாய்த்தானே
பேச்சத்த யிடமறிந்த பெரியோர்பேரைப்
பிரபலமாய்ச் சொல்லுகிறேன் பிரித்துத்தானே. (19)

தானென்ற திருமூலர் புண்ணாக்கீசர்
சட்டைமுனி மச்சமுனி புசுண்டரோடு

கோனென்ற கலைக்கோட்டு முனிவசிஷ்டர்
கும்பமுனி கமலமுனி யிடைக்காட்டாரும்
வானென்ற கொங்கணரும் விசுவாமித்ரர்
வளமட்ட கோணமுனி சனகரோடு
தேனென்ற சனக்குமரர் முதலாயுள்ள
சிறந்தகோ ரக்கர்கரு வூரார்தானே. *(20)*

கருவூரா ரெனைப்பெற்ற போகநாதர்
காட்சியாம் பதினெட்டுச் சித்தர்கண்டாய்
ஒருகோடி சித்தருண்டு அவர்கள்பேரை
ஓகோகோ எழுதிடவே அடங்காதையா
தருவான சிவயோகந் தன்னைப்பார்த்துத்
தவத்திலே மிகுத்துமகத் துடையோராகித்
திருவான பூரணத்தைத் தெரிசித்தேதான்
சித்திமுத்தி பெற்றிறவா திருக்கின்றாரே. *(21)*

முத்திபெற்ற தெதினாலே அடியேனுக்கு
மொழிந்தருள்வா யென்குருவே ஞானமூர்த்தி
பத்தியுடன் பார்த்தாக்காற் றெரியுங்கண்டாய்
பாராத பேர்களுக்குத் தெரியாதப்பா
புத்திவரச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
புகழாக மூதண்டக் குளிகைசேர்த்து
நித்தியங்கை விட்டசூத் திரத்தைப்பாரு
நேசமாய்ச் சாம்பவிகே சரியும்பாரே. *(22)*

கேசரியைக் கடந்தபின்பு வெளியைப்பாரு
கிருபையுட னப்பாலே ஒளியைப்பாரு
ஈசுவரி யென்றுமந்த வானைப்பாரு
ஏறியதுக் கப்பால்நிர்க் குணத்தைப்பாரு

தாசரியாம் நிரஞ்சனத்தைப் பார்த்தப்பாலே
        தனித்ததொரு நிராதாரந் தன்னைப்பாரு
வாசரிதான் கேளாதே நிர்மலத்தை
        வகைசொல்லப் போகாது வஸ்துதானே. (23)

வகைசொல்லப் போகாது யென்றுசொன்ன
        மாநிதியே யென்குருவே ஞானதேசி
துகைதுகையாய்ச் சொன்னாக்கால் வகைதோணாது
        தூண்டியிது வென்றுநில வரந்தான்சொல்லும்
நகைபுரிந்து மூலமுதற் சுவாதிஷ்டானம்
        ரண்டுமே அக்கினிமண் டலந்தான்பாரு
திகையாதே மணிபூ ரகத்தினோடு
        சிறந்தவனா கதமிரண்டுஞ் சூரியமண்டலமே. (24)

சூரியமண் டலங்கடந்து விசுத்தியாக்கினையும்
        சொற்பெரிய சந்திரமண் டலந்தான் கண்டாய்
நேரியமாய்ச் சுழிமுனையுந் திறந்துஅப்பால்
        நின்றவஸ்து தெரிசனங்கை விட்டசூத்ரம்
காரியமாய்ச் சொல்லுகிறேன் நாதமதுதானே
        கலங்காதே சாம்பவிமுத் திரைதானப்பா
ஊரியதோர் விந்துவுட னாதமுமக்கினியும்
        ஒன்றாகக் கூடினது கேசரிதானாமே. (25)

ஆமப்பா யிதுமூன்றும் முப்பாழாகும்
        அதுக்கப்பாற் சொல்லுகிறே னப்பாழ்மூன்றும்
தாமப்பா வெளிபாழா மதுதானொன்று
        தற்பரமா மொளிபாழா மதுதானொன்று
வேமப்பா வெளியொளிபாழ் மூன்றுந்தாண்டில்
        வெட்டவெளி யொன்றுமிலை விரைந்துபாரு

நேமப்பா நிர்க்குணம்நிட் களந்தான்ரெண்டும்
நிரஞ்சனமும் நிராதார மிரண்டுந்தானே. (26)

தானென்ற பதினாறு தலமுந்தாண்டி
தற்பரசிற் பரனார்தா னிருக்கும்வீடு
நானென்ற ஆணவத்தை மலமாய்நீக்கி
நற்குருவின் பதந்தொண்டு பண்ணிக்கேட்டால்
தேனென்ற மொழியுடைய சீஷர்க்கேதான்
செப்புவா ருற்பனங்கள் தெரியநன்றாய்
வேனென்ற பெரியோர்கள் தன்னைத்தேடி
வியனாதப் பணிந்துதெண்டம் பண்ணிக்கேளே. (27)

தெண்டனிட்டுக் கேளென்ற குருவேஐயா
தேடியெங்கே யான்பார்ப்பேன் தேசமெங்கும்
கண்டகுறி போலவுந்தன் கையில்வெண்ணையிருக்கக்
காசினியில் நெய்தேடுங் கதையதுபோலுன்னை
அண்டினே னுனக்கடிமை யாகிப்பின்னும்
ஆண்டுகொள்ளு மென்றுமொரு நாயன்தேடி
விண்டுரைக்க மாட்டேனா வென்றுசொல்லி
வீழ்ந்தடியில் வணங்கிமனம் விரும்பிநின்றான். (28)

நின்றதொரு மாணாக்கன் நிலையைப்பார்த்து
நிறைந்ததொரு நிர்மலத்தைக் கரைகாண்பாரோ
ஒன்றான ஆண்டவனைச் சொல்லச்சொன்னால்
ஓகோகோ மனம்வாக்குக் கெட்டாமூர்த்தி
என்றபொரு ளினைச்சொல்ல வாய்கூசுதையா
யிப்போது என்செய்வோ மென்றுமனமுருகி
நன்றுநன்று இரும்பிள்ளா யென்றுஅடியேற்கு
நாட்டினார் வஸ்துநிலை நாட்டினாரே. (29)

நிலையறிந்து தெரிசித்தேன் மனம்பூரித்தேன்
நிர்மலமாங் கயிலாச தேகமானேன்
மலைவெல்லாந் தான்தீர்ந்தேன் மோட்சம்பெற்றேன்
வணங்கினேன் குருபதத்தைத் தலைமேற்கொண்டேன்
உலையாதே அகந்தேற்றிக் கொண்டபிள்ளாய்
உனக்கீடிங் கொருவருண்டோ வென்றுசொல்லி
அலையாதே எந்தனக்கு மைந்தாநீதான்
அப்பனெனை யருகழைத்து வைத்தார்காணே. *(30)*

காணப்பா யெனைப்போலே மோட்சம்பெற்றோர்
காசினியிற் காணேன்கேட் டதுதானில்லை
வீணப்பா வுலகத்தோர் திரிந்துகெட்டார்
வியனான சுழிமுனைசூஸ் திரத்தைப்பார்த்தால்
தோணப்பா கருக்கிடையுங் குருக்கிடையுந்தெரியும்
சூட்சாதி சூட்சமெலாந் தொகுத்துக்காணும்
பூணப்பா மறைத்தபூட் டெலாந்திறந்து
பொருள்சொன்னார் குருவின்முறை பார்த்துத்தானே.

சச்சிதானந்தர் சுழிமுனை சூஸ்திரம் *31*
முற்றிற்று

....

வேதமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய ஞான சூஸ்திரம் 24

ஆதியடி நடுவாகி முடிவுமாகி
அருளொளியாய்ப் பரவெளியா யெங்குமாகி
நீதியெனும் பொருளாய்நிட் களமதாகி
நித்தியா னந்தசுகா தீதமாகி
வீதியெனும் மேருமுடி மீதுமாகி
வீரான கதிர்மதியு மிரண்டுமாகி
சோதியெனு மம்பலத்தில் நடனஞ்செய்யும்
சுத்தபரம் பொருள்பாதங் காப்பதாமே. (1)

சார்ந்துநின்று குருபதத்தில் மனக்கண்ணாட்டி
சச்சிதா னந்தபர வெளியினூடே
நேர்ந்துமுப்பா ழப்பாலும் மவுனங்கொண்டே
நிறைந்துநின்ற சின்மயத்திற் றூங்கியானும்
சேர்ந்துசென்று அங்குசத்திற் சிங்கென்றேறி
சிறப்பாக ரேசித்து வங்கென் றூணிப்
பார்த்துநின்றே அண்டபகி ரண்டமான
பரப்பிர்ம நவகண்டங் கடந்தேன்பாரே. (2)

பாரப்பா அடிமுடியுங் கொடியாய்நின் று
பரந்தேறி நடுவணைமுக் கோணவீட்டில்
நேரப்பா மயிர்ப்பாலஞ் சுழுத்திபீடம்
நிலையான சுழினைரெண்டு மீணைப்பற்றி
வேரப்பா ஓங்காரக் கம்பங்கண்டு
விழிசொருகி விண்ணிரவி மதியைவேண்டி
கோரப்பா கொண்டெழுந்த வோங்காரத்தில்
குறித்திருந்த வனுபூதி கூறுங்காலே. (3)

காலென்ற சுழிமுனையிற் பற்றிநின்று
கனபிரா னாயவொரு பனிரெண்டுக்குள்
நாலென்றும் பூரணமாய்ப் பாழாய்நின்ற
நலமான பரப்பிர்ம வெளியாய்நின்றார்
சேலென்றுஞ் சுத்தவெளி நித்தமாகி
சின்மயமே யொட்டியுமொட் டாமல்நின்றார்
வாலேதோ காலேதோ அறியவேண்டி
மனோமணித்தா யருள்மொழிந்து வளங்கண்டேனே. (4)

கண்டதொரு வகையென்ன சொல்லக்கேளு
கனநாத விந்துசிவ சத்தியாளை
உண்டதொரு சோடசத்தி லிரவியப்பா
உற்றுநின்ற சிவமாகும் பிங்கலைக்குள்
கண்டமென்னப் பனிரெண்டு மதியின்கூறு
கனமான வென்றாயார் சத்தியாகும்
மண்டலங்கள் உறைந்ததனாற் கலையைக்கட்டி
மைந்தனே கெவுனமதி லாமென்றேனே. (5)

ஆமப்பா மேலவர்க்கு குளிகையொன்று
அறைகிறேன் ரசமதுவும் விந்துவாகும்
நேமப்பா வாசிபச் சிலையுமாகும்
நின்றதொரு வன்னியல்லோ பீடமாகும்
தாமப்பா ரசமணியின் வித்தைதானும்
தன்னுள்ளே ரசமதனை மணிபோற்செய்ய
வாமப்பா வுலகமெங்குங் கெவுனமார்க்கம்
மகிழ்வாகச் சென்றறிவா யிதனைவிட்டே. (6)

விட்டல்லோ கானமெங்குஞ் சுற்றிச்சுற்றி
விருதாவாய் ரசமதனை வாங்கித்தானும்

திட்டமுள்ள மணியாகச் செய்வதென்று
தேடியலைந் திறந்தல்லோ போனார்கோடி
துட்டர்களைச் சேராதே மைந்தாநீயும்
தூய்மையென்ற வழிசேர்ந்து விந்தைக்கட்டு
நிட்டையுள்ள ஞானமணியாகும் பாரு
நிந்தையின்றி விந்ததனை மணியாய்ச்செய்யே. (7)

செய்யப்பா தன்னிடத்தில் வாசிதன்னைத்
திரமாகத் தம்பித்துள் ளடக்கியேத்து
வையப்பா தம்பனமே செய்யுமார்க்கம்
வழுத்துகிறேன் கபால்மதிற் பார்த்துக்கொள்ளு
துய்யநுனி நாக்கையண் ணாக்கில்மோதி
சூழ்ந்ததமர் தன்னையுமே அடைத்துப்பாரு
பையப்பா வோசையுட னிருளேதோன்றும்
பதட்டமுட னாட்டிவிடு மயங்கிடாதே. (8)

மயங்காதே தகர்க்கும்போ தோசைகேட்கும்
மறைந்துநின்ற சொரூபத்தி னொளியுங்காணும்
தியங்காதே கண்ணிரண்டு மரைக்கண்பாரு
தீபசுழி மூக்கின்மேற் குறியாய்ப்பாரு
உயங்காதே கடக்கசெவி யசைவுங்காணும்
உற்றகண்ட வாசல்கத வடைக்கும்பாரு
இயங்குநின்ற வாசலே மூடைத்துப்போகும்
இசைவான வாசிகீழ் நோக்கும்பாரே. (9)

நோக்கியே வாசியது யிறங்கும்போது
நுண்ணறிவாய்ச் சுழிமுனையைச் சிவ்வென்றேதான்
தாக்கியே அழுத்திக்கொள் நந்திபீடம்
தன்மையுடன் வாசியைத்தான் சுழித்துக்கொள்ளு

ஊக்கமாய் லிங்கவட்டம் அபானவாயல்
ஓங்கியே யடைக்குமடா நந்திவேகம்
போக்காக வாசியது பீசஞ்செல்லும்
பூரணமாய்ச் சென்றபின் புரைக்கக்கேளே. (10)

கேளப்பா கபாலமெங்கும் விம்மலாகும்
கெடியான கவனத்தா லுள்ளேசெல்லும்
வாளப்பா சுடர்க்கம்பம் சூடுண்டாகும்
மனமங்கே மயங்குமப்பா மயங்கிடாதே
நாளப்பா ஓமென்ற மனங்கும்பித்தே
நன்றொதுங்கிப் பீசத்தே மனத்தையூணு
நீளப்பா வாசியது மேலேநோக்கி
நின்னயமாய்த் தண்டுவழி யோடுந்தானே. (11)

தானான சுடர்க்கம்பம் நரம்பதொன்று
தனித்தஞ்சு மரத்தின்கண் போலநிற்கும்
வானான வாசியுமவ் வழியிலோடி
மகத்தான கமலவண்ட வமுதந்தன்னிற்
கோனான வாசிநிற்க வன்னிமீறிக்
கோடிகதிர் கண்ணிமைக்கு ளடங்குமோசொல்
பானான விந்துதனை வாசிதானும்
பம்பரம்போற் சுழற்றிமணி செய்யும்பாரே. (12)

செய்யவிந்து மணியாஞ்சா ரணையைத்தானும்
செலமென்ற நுனிநாக்கை யணுப்போல்நீக்கிப்
பையவே யுருண்டுவரும் மணியினோடு
பண்பான வாசிதனைப் பாருபாரு
கையாமல் விந்துமணி வாசிகூடம்
நாடியே படீரென்னப் பீசத்துள்ளே

வைபவமாய் நந்தியுட வழியிற்செல்லும்
மகத்தானசுழற் சிக்கிக் கொள்ளுந்தானே. (13)

கொள்ளப்பா அவ்விடத்தில் வன்னிவீடு
குறியப்போ தண்ணாக்கிற் றிறந்துமூடும்
கள்ளப்பா னுருத்திறந்து வுட்சிவந்து
கண்டுருகி வலுவாஞ்சா ரணையாமெண்ணு
விள்ளநூற் றெட்டுச்சா ரணையைப்பாரு
வீராக யேகுமணி யண்டந்தன்னில்
சள்ளையிலா நுனிநாக்கைப் பாதிவாங்கு
தானோடி வருமணியுங் கபாலமெண்ணே. (14)

எண்ணவே அண்டத்திற் பிணையைவைத்து
எட்டியே கபாலவரை பெரியவாசல்
நண்ணியே மூடும்போ துடலைத்தானும்
நாலிரண்டு வரைவரையுந் தூக்கும்பாரு
அண்டமுதற் றிசைகளெட் டுஞ்சுழன்று
அரைநொடியி லேவருகு மணியின்வேகம்
நுண்ணறிவாய் முன்போலக் கதவைமூட
நோக்கியே கம்பநுனி மேலேபோமே. (15)

போமப்பா கதவினுனி சற்றேநீக்கிப்
பொருதிவரு மரைநொடியில் மணிதானப்பா
நேமப்பா ரசமணியின் மார்க்கந்தன்னை
நுவன்றேனே இம்மணியின் வேகத்தாலே
ஆமப்பா அண்டர்முதல் முனிவர்தானும்
அயர்ந்திருந்தா ரவர்களுக்கிம் முறையைச்சொன்னேன்
நாமப்பா மாந்தருக்காய்ச் சொல்லவில்லை
நாடிப்பார் மவுனியடா விட்டிடாதே. (16)

சூடாமணி மாத்திரை

விட்டுப்போம் சகலநோ யானதெல்லாம்
விடாமழைபோற் றொடுத்தகன லானதெல்லாம்
மட்டிலாச்சூ டாமணியின் மாத்திரைதன்னை
மகிழ்வாகப் புகலுகிறேன் கபடம்விட்டுத்
தொட்டவியா திகளெல்லா மோடுதற்குச்
சூட்டுகிறேன் படித்தோர்கள் மெச்சவேதான்
கட்டுவித முந்திரிகை யுப்பின்பூவும்
கருத்தறியத் திப்பிலிபே ரீச்சுதானே. (17)

பேரீச்சுக் கோஷ்டமொடு முத்தக்காசு
பெருமையுள்ள வெட்டிவேர் பன்னீர்ப்பூவும்
சாரிச்சுத் தாமரைப்பூ நன்னாரிவேர்
சரியான சந்தனத்தூள் வகைவகைக்குத்
தாரிச்சு பலமொன்றா யிடித்து நன்றாய்த்
தவறாமற் கல்வத்திற் போட்டபின்பு
நேரித்து லிங்கமொரு காசுபோடு
நிலையான பூரமொரு காசுபோடே. (18)

போடப்பா அரிதாரங் காசுபோடு
புனிதமுற நாபிவரைக் காசுபோடு
ஆடப்பா தண்ணீர்விட் டான்கிழங்கின்
அச்சாற்றா லீர்நாள்தா னரைத்துக்கூட்டு
நீடப்பா கறிப்பான்சார் விட்டுநன்றாய்
நீங்காமல் மூன்றுநா ளரைத்துத்தீரு
தேடப்பா உழுந்திடைதா னுண்டைசெய்து
தீர்க்கமுடன் நிழலுலர்த்தி நயஞ்செய்வீரே. (19)

வீரத்தைப் பழச்சாரோர் தினமேயூர
விட்டெடுத்து மேநாபி தனைவெள்ளாட்டின்

நீரத்தில் மூன்றுநா ளூரப்போட்டு
நீயெடுத்து யிலுமிச்சை மிளகுசாற்றில்
தீரத்தை விடாமுன்போற் செய்பூரத்தைத்
தேனதிலே சுருக்கிட்டு யெடுப்பாய்விஷ்ணு
தாரத்தைச் சுண்ணாம்புக் கற்பன்னைந்து
தரம்நீத்திக் கழுவிநன்றாய்ப் பதனஞ்சேரே. (20)

வேறு

பதனமுடன் சுகிர்த மாகப் பண்புடன் சொல்லக்கேளு
விதனமுந் தீரவேண்டி விளங்குமாத் திரையிலொன்று
நிதமுறக் கொடுத்து மேலாய் நேர்படப் பார்ப்பீ ராகில்
அதனம தான கர்ம விழலது அகலுந் தானே. (21)

அகன்றிடுங் குளிர்சு ரங்கள் அசாத்திய விரண மூறல்
நகன்றிடுங் கன்னி தோஷம் நாடாது சன்னி யாவும்
புதன்றிடுங் கண்சு ழற்றல் பொல்லாத கிறுகி றுப்பு
இகன்றிடுங் குத்தல் பித்தம் யேங்கியே அலறிப் போமே. (22)

அலறிய சன்னி வேர்வை அழலது நீங்கிப் போகும்
நலவனும் பானம் பார்த்து நாடியே கொடுப்பீ ரப்பா
பலவித நோய்க ளெல்லாம் பறந்திடும் பறவை போலே
தலமதி லறிவுள் ளோர்க்குத் தான்றெரிந் துரைத்த தாமே.
(23)

அறிவினாற் பத்தி யத்தை அடவுடன் புகல வேணும்
பிரியமாந் தெரிந்த வீதம் பேர்பெறச் சொல்ல வேணும்
குறியவே ஸ்நானஞ் செய்யக் குணமுடன் நுவல வேணும்
குறிகுண விதத்தைக் கண்டு கூறுவீர் தினமுந்தானே. (24)

வேதமுனி ஞான சூஸ்திரம் 24
முற்றிற்று

....

துர்வாசமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய
ஞான சூஸ்திரம் 77

வெண்பா

ஏமப் பிறப்புக் கினிய வழலையெனும்
காமப் பிறப்பின் கரைபோலாம் - வாமத்தில்
ஆயிபதம் பூசி யருளும் பராபரத்தின்
தேயுங் கணேசனடி தேர்.

வேறு

மூலமது நாதவிந்து யெழுத்தினாலே
முன்நகர மெழுத்தாறு மகாரம்பத்தாய்
மேலமது சிகாரமுமே பனிரண்டாகும்
மெய்யான வகாரந்தான் பதினாறென்றும்
ஆலமது அமுதான யகாரமேழாய்
அப்பாலும் நின்றபொரு ளறிவேயொன்றாய்ப்
பாலமது மயிர்ப்பாலம் நெருப்பாறான
பஞ்சவெழுத் தடிமுடியே முதலாங்காப்பே. (1)

பதினெட்டும் பதினாலே மூன்றேயாகிப்
பவமகற்றும் நவமான வகாரமாறாய்ப்
பதினெட்டி லேழாகி மூன்றேயாகிப்
பதினெட்டும் இம்மூன்றும் பொருளுண்டான
பதினெட்டு விபூதியடா திருநீறாகிற்
பாமகள்மா மகள்மலையின் மகளுமாகப்
பதினெட்டுந் தியானமுட் கொண்டுநீயும்
பதித்திடுவாய் புருவமையம் பதிவாய்த்தானே. (2)

பதிவான தாருக்கும் பதியாம்வீடு
பத்தியுடன் அரிஓமென் றஞ்சுஞ்சேர்த்துப்

பதிவான அ-இ-உ-ஏ-ஓவென்றும்
பரதேவ தாசத்தி வாகங்காளி
பதிவாக ஊணப்பா யோதிக்கொள்வாய்
பகரைந்து ஐந்துமொரு பத்துமோடு
பதிவான மனோமணித்தாய் தானேதானாய்ப்
பத்துடைய சித்தனெனப் பகருவாளே. (3)

பகராரிது பகர்ந்தபின்பு தன்னைத்தானே
பாரென்னைப் பாருன்னைப் பாரேதன்னை
பகராரிது அவர்சொல்லுந் தன்னைத்தானே
பதிந்துபார் விபூதியது உறுதியாச்சு
பகராரிது உறுதியல்லோ உலகமானாள்
பத்துவய தானதிவள் சித்தியானாள்
பகராரிது இப்படியே பகர்ந்தசொல்லைப்
பத்திப்பார் பிறவிபிணி யத்துப்போச்சே. (4)

பிணியான நோய்பிணிக ளோடிப்போச்சு
பிரணவத்தோ டாறுதலம் பதிமேலாச்சு
பணியான சரப்பணியு மணியலாச்சு
பார்மகளோ டஞ்சுமொரு சத்திதீட்சை
அணியாத ஆபரண மணிந்தேகொண்டால்
அரகரா யேகதச தீட்சைநீறு
தணியாமற் றனித்தணியும் விபூதியாலே
சகலசா பமுநிவர்த்தி முத்தியாச்சே. (5)

முத்தியென்ற நந்திசத்துச் சித்தானந்தி
மூலமனோ விர்த்தியதாய் நின்றமூர்த்தி
அத்திமுகன் மும்மதத்தோன் கந்தன் முன்னோன்
ஐந்துகரன் தொந்திவயி றுடையோனப்பா

நாற்பத்தெண் சித்தர்

சித்திபெறத் துதிக்கையாற் றிருநீறள்ளித்
தீர்க்கமுட னுனக்களித்த களிப்பினாலே
முத்திபெற வந்ததிந்த தூலதேகம்
மூலபஞ் சாட்சரத்தை யாதிபாரே. (6)

குறுவிருத்தம்

ஆதியு மந்தமு மனுபொன் வாயுவில்
மாதொரு பெண்பிளை மகாசத்தி யாகினள்
நீதி பராபரை நேமியின் தங்கையாம்
சோதியில் வாதச் சுடரொளி நாதமே. (7)

நாதனிருக்கும் நடுமண்டலத்திலே
போதமுறைந்தே புகழ்ந்திடும்வாசிதான்
ஓதிபமானது ஓமென்றகுண்டலி
ஆதியின்றியி லளவற்றவாயுவே. (8)

வாயு வடக்க மாயோகமாரிஷி
வாயு வடக்க மனமேதிளைத்திடும்
வாயு வடக்க மாமுப்பாழ்கண்டிடும்
வாயு வடக்க மயேசுரமூலமே. (9)

மூலக்கிழங்கு முளைத்தேகிடக்குது
காலத்தையூணிக் கடுகவறிந்திலார்
காலத்தையூணிக் கடுகவறிந்தபின்
ஓலத்தறிந்தே ஒளிவிட்டதெட்டுமே. (10)

எட்டுக்குமுந்து மெழுத்தையறிந்தவர்
அட்டமாசித்தி யடங்கியமாமுனி
கெட்டுமுகாரங் கெடியாங்கணேசனுக்
கொட்டியமூலங் கோலமதாமே. (11)

ஆமேயறிந்தபின் னாருமக்கொப்பினி
தாமேநல்லீசனைத் தாமென்றறிந்திடு
வாமேவகார மயேசுரமூலமாம்
பூமேல்வளர்ந்திடும் பொன்னாம்வழலையே. (12)

வழலைகருவை வாகாய்ச் சொல்லக்கேள்
தழலதுபோலச் சதாசிவன்வெந்திட
அழலாம்பராபர மகண்டவெளியாய்
உளமேமகிழ்ந்து வுரைப்பதுகேளே. (13)

கேளாய் அமுரி கெடிபதினாறு
நாளாய்கற்சுண் ணம்படிரெண்டு
ஆளாய்பூவை யளக்கும்படியெட்
டுளாய்ப்பாறை யுப்பதுமொன்றிடே. (14)

ஒன்றாய்க்கலக்கி யொருநாட்டெளியவை
நன்றாயிருத்து நலம்பெறக்காச்சிடு
மன்றாகவத்தி வருமெழுகாம்பதம்
சென்றிருமூன்று கழஞ்சிடுவெள்ளையே. (15)

வெள்ளையைப்போலே வீரனைக்கூட்டிடு
ஒள்ளியவில்லை யுணர்வாய்ப்பிடித்திடு
உள்ளியவெயிலி லுறமாயுலர்த்திடு
தெள்ளியகாரச் சேனீரைக்குத்திடே. (16)

குத்திடுகாரங் கொடுங்காரமாக
வைத்திடநன்றாய் வகைசொல்லக்கேளு
பத்துடனாறு பகர்ந்திடுமண்டமும்
முத்தியில்வெண்கரு மூர்க்கமதாமே. (17)

நாற்பத்தெண் சித்தர்

மூர்க்கமாம்வெண்கரு முறிந்துசலமாக
மார்க்கமதாகும் வகையெருக்கின்பால்
ஆர்க்கரைவீர மதனொடுபூரம்
நேர்க்கநல்லண்டம் நீரதுகூட்டே. (18)

கூட்டிடுபூவைக் கொழுத்தஞ்சுசுண்ணம்
ஆட்டவகைக்கு அரைக்காசுயிட்டிடு
காட்டிக்கவையாற் கடைந்திடுவெண்ணெயாம்
ஆட்டியபோது அதைப்பனிவைத்திடே. (19)

பனியிலிருக்கப் பளிச்சென்றுநீராங்
கனியஞ்சுசுண்ணங் கடுங்குகையாக்கிப்
பனிவாய்ப்பதித்துப் பகர்வாய்ப்புடமிட
மனவாகிநீரும் வழலையிதாமே. (20)

ஆமேயன்னீரை அழகாய்வழலைக்குத்
தாமேதினமூணு தான்குத்திவைத்திடு
ஏமேயிருமூன் றிரவியிற்காய்ந்தபின்
நாமேவழலையை நாடறியாதே. (21)

நாடகமாடும் ரவிமதிப்பெண்பிளை
கூடிக்குழைந்து குலாவுங்குலப்பெண்
தேடியுண்பார்போற் செகவோசையாகினள்
ஆடியபெண்பிளை யாதியிதாமே. (22)

ஆதிவழலை யருஞ்சுண்ணமானபின்
சாதிச்சரக்கு அறுபத்துநாலும்
ஓதியுபரச மொருநூற்றிருபது
வாதிகளாற்றினம் வகையானதொன்பதே. (23)

ஒன்பதுலோக முடன்காணநீறும்
வன்பகையஞ்சு சுண்ணக்குகையிலே
தன்சுடுங்காரச் சேனீரதாலே
என்படுங்கண்டா லிடுதீயிற்கம்பே. (24)

கம்பதுபோலே சடுஞ்சாம்பலாகும்
கம்பலவெய்யிலில் நலமாகச்சுண்ணமாங்
கொம்பதுகாமம் படக்கடுஞ்சுண்ணம்
வம்பரேயிந்த மகத்துவம்வழலையே. (25)

வழலைசவுக்கார மென்பார்கள்வாதிகள்
உழலைப்படுவா ருள்ளெண்ணெய்வாங்கிடத்
தழலிலெரிப்பார் தாளிப்பார்கண்டிலார்
பழவினையென்று பகுத்தறிவாரே. (26)

அறிவாம்வழலை அடங்காத்துறையது
உறவாமுதற்றர மூதியெடுசுண்ணம்
மறவாதவாத வழலைக்கிராவணந்
திரிகூடபீடஞ் சேர்ந்தவழலையே. (27)

வழலையிதுவன்றி வைப்பேன்ரண்டாந்தரம்
அழலேபூநீரு ஆனதுயெண்பலந்
தழலாயிருந்த தனிச்சுண்ணமீர்பலம்
பழமானபாறை யுப்பதுபாரே. (28)

பாரிதுவோர்பலம் பண்பாகத்தூக்கிச்
சீர்வெடியுப்பிற் சிறந்தபுளிக்கூட்டி
நீரதுவிட்டுநே ரிட்டொருசாமம்
வீரனாற்காசு வெள்ளையோர்காசிடே. (29)

நாற்பத்தெண் சித்தர்

காசிடைசூடன் கடுகப்பொடித்திடு
நேசமுடனே நிலைத்தாட்டிவில்லைசெய்
வாசினையாக வழலையிதுவாகும்
கூசிடாவெயிலிற் குலாவியுலர்த்திடே. (30)

உலர்த்துந்துவாதச மொருமூன்றுமிட்டிடு
அலத்துகார்நீரை யப்பிப்பின்குத்து
பிலத்தேதினமூன்றிற் பிரண்டுபொடியாகும்
மலத்தாங்குகைக்கு ளிட்டுநீதியிடே. (31)

தீயிடுகற்சுண்ணங் கீழ்மேலுமிட்டு
வாயிடுசட்டிக்குள் வைத்திடுவாலுகை
தீயிடுசாமஞ் சிறப்பானசுண்ணமாம்
பாயும்நற்சாரஞ் சரிசேர்பனிவையே. (32)

வைத்திடநீராம் மகத்தாஞ்சவுக்காரம்
கைத்திடப்பட்ட சரக்கெலாங்கட்டுணும்
மெய்த்தமெழுகாகும் வீரத்தினீராலே
வைத்தாரென்நந்தி வழலைரெண்டாந்தரம். (33)

தரமானமூன்றாந் தரத்தின்வகைகேளு
திரமானபூவை யாதியாங்கடல்நுரை
பரமானகுக்குடத் தண்டம்பொடித்திடு
நுரையுஞ்சரியாய் நுகரவரைத்திடே. (34)

அரைப்பாயெருக்கலம் பாலுடன்வெண்கரு
நிரைப்பாறியாட்டி நிலைத்தூதுசுண்ணமாந்
தரைப்பானபூவுக்குத் தானீருமெட்டொன்று
இரைப்பானகல்லுப்பு யீரெட்டுக்கொன்றிடே. (35)

ஒன்றாயரைத்திடு உப்புடநீராலே
நன்றாகச்சாம மரைத்தபின்சூடனும்
வென்றாகவீரனும் வெள்ளையுங்கூட்டி
ஒன்றாய்ப்பொடித்து உறவாகத்தூவிடே. *(36)*

உறவாய்வகைக்கு ஒருகாசுதூக்கி
நிறமானவில்லைசெய் நீட்டிரவியிலே
அறமாயுலத்தி யதிற்கடுங்காரம்
தரமாகக்குத்தித் தரைமீதுலர்த்திடே. *(37)*

உலத்தியேயஞ்சு சுண்ணக்குகையில்வை
பிலத்தியேகற்சுண்ணத் துள்ளாகவைத்திடு
நிலத்தியவாலுகை யேத்தியெரிசாமம்
மூலத்தானவழலை மூன்றாந்தரமிதே. *(38)*

இதுதானேசுண்ணம் இளக்கமேறிடும்
பதியானசத்துப் பறிக்குருவாகும்
துதியானசூதமுஞ் சொல்லுமுன்கட்டுணும்
கெதியானநாலாந் தரவழிகேட்டிடே. *(39)*

கேட்டிடுசிப்பியைக் கெடியாயமுரியில்
மாட்டிடுமுறவாம் மண்ணுங்கரைத்திடு
நாட்டியெரித்திடு நால்சாமமட்டும்நீ
நீட்டியமறுநாள் நிமிர்ந்தகிளிஞ்சியே. *(40)*

கிளிஞ்சிமண்தன்னைக் கிண்டியேதள்ளித்
தெளிஞ்சவெயிலிற் றினமேழுகாய்ந்தபின்
நளிஞ்சேயிடித்திடு மப்பாவதுதூளாம்
ஒளிஞ்சேவடிகொண்டு றுதிதூள்வாங்கே. *(41)*

நாற்பத்தெண் சித்தர்

வாங்குபொடிதான் வளமாயெண்பலம்
பாங்கானபாறை யுப்பதுவோர்பலம்
சாங்கம்வெடியுப்புத் தானேயொருபலம்
தாங்கியரைப்பலந் தான்சீனங்கூட்டிடே. (42)

கூட்டிடுவெள்ளைப் பாஷாணங்காற்பலம்
மீட்டியவீரன் கழஞ்சியதொன்று
தாட்டிகச்சூடன் தானதுகாற்பலம்
ஊட்டியரைத்திடு உப்புநீர்வாரதே. (43)

வார்த்தாட்டிவில்லை வளமாய்ரவியுறக்
கோர்த்தெழுநாளிற் குமிரியுலர்ந்தபின்
நீர்த்தேகடுங்கார நீர்தனைக்குத்தி
ஏத்தேநாள்மூன்று யிஞ்சிடக்குத்தே. (44)

குத்தியுலர்ந்தபின் குகையதுதன்னிலே
வைத்தேயெரித்திடு கற்சுண்ணத்துள்ளாய்க்
கைத்திடுகாமத்திற் கடுஞ்சுண்ணமாகும்
மெய்த்திடுசிப்பியின் வித்தையுங்கோடியே. (45)

கோடிக்கேயோடுங் கொடிதானவஸ்துவிற்
கூடிக்குளைந்து குலாலமலைபொன்னாம்
ஆடித்திரிய அறியார்கள்கைமுறை
நாடிக்கிளிஞ்சியிற் கைமுறைநாதமே. (46)

நாதமேவிந்துவும் நாடுந்திருவடி
வாதமீதெல்லாம் பலிக்கும்வழலையால்
ஆதிமுப்பூவை யறியார்களாரும்
சோதியினாண்மையைச் சொல்லவொண்ணாதே. (47)

ஒண்ணானபூநீ ருயர்ந்திடுஞ்சத்தியாம்
பண்ணாஞ்சிவத்தைப் பாரிலறிந்திலார்
சுண்ணாம்புங்கூட்டித் துரையைமுடித்திலர்
வண்ணான்காணாட்டால் வாதம்பலியாதே. (48)

பலியாதோவென்று பாவியெண்ணாதே
கலியாதேகற்சுண்ணந் தானேயொருபலம்
நிலப்பாறையுப்பு நீரதுயெண்பலம்
வலிவீரன்வெள்ளை வகைக்கொருகாசிடே. (49)

இட்டிடுகூடன் காசிடைகூட்டி
விட்டிடுவிந்து நீராலரைத்திடு
கொட்டிடுநாதங் குமுறியரைத்திடு
பட்டிடுவில்லை பாரதினாண்மையே. (50)

ஆண்மையிதின்முறை யாருமுரைத்திலார்
வீணிலேசுட்டு. வேதையைப்பார்த்தாற்
காணுமோசெம்பு கனகமதாமோ
ஊணியவுப்பை வுரைக்கவித்தாதியே. (51)

ஆதிக்குருவிது அப்பாவழலைதான்
சோதியைப்போலே சுடரொளிவிட்டிடு
மாதுநல்லாளும் வகையாயுரைத்திட்டாள்
மேதினியோர்க்கு விளம்பினம்நாமே. (52)

நாமேரவியிற் காச்சிடுபக்கந்தான்
நாமேகடுங்காரம் நாட்டினோமூன்றுநாள்
நாமேமறுபடி யேழ்தினங்காய்ந்தபின்
நாமஞ்சுண்ணக் குகையில்நளுங்கிடே. (53)

நளுங்கிடுங்கற்சுண்ணச் சீலையுஞ்செய்திடு
நளுங்கிடுங்கற்சுண்ணத் துள்ளாகவைத்திடு
நளுங்கிடுகாரம் நலமாயெரித்தபின்
நளுங்கிடுமுப்பூ நாதாந்தச்சத்தியே. (54)

சத்தியீதப்பா சாரமீதாச்சுது
சத்தியீதப்பா காரமீதாச்சுது
சத்தியீதப்பா தணிப்பூவழலைகாண்
சத்தியமென்று சாற்றினார்நந்தியே. (55)

நந்தியுரைத்தார் நலமானபூநீரை
நந்தியுரைத்தார் நலமாஞ்சவுக்காரம்
நந்தியுரைத்தார் நாலுவழலைக்கும்
நந்திகுருவை நாட்டென்றார்கண்டிடே. (56)

கண்டேனேசுண்ணங் காரமதில்ரெண்டு
கண்டேனேயுப்புக் காரமதிலொன்று
கண்டேனேமூன்று முப்பூவாய்க்கண்டிது
கண்டேனேபூவைச் சுண்ணக்கரையிதே. (57)

கரைகாணாமுப்பூக் கண்டால்மகாவாதி
வரையாம்வழலை நாலுவகைவைப்புத்
தெரிவாகச்சொன்னேன் செயமாம்வழலை
யுரைபாகமந்த யிடைபாகஞ்செய்திடே. (58)

செய்யும்வகைதான் திரமாகச்சொல்லக்கேள்
வையும்வழலை சவுக்காரஞ்செய்திடப்
பொய்யும்புலையும் பூரிப்பார்கண்டிடு
வையேமுப்பூ வழலையதெட்டே. (59)

எட்டுப்படியி லமுரியும்ரெட்டிக்
கொட்டிக்கரைத்துக் குறுகவேவைத்திடத்
திட்டங்கற்சுண்ணந் திரமாய்ப்படிரெண்டு
இட்டுக்கரைத்து யிடுவாய்நீயப்பிலே. (60)

அப்பில்விளைந்திட்ட தாசமுடநாதம்
உப்பெனப்பாறைமே லுயர்ந்துவளர்ந்திட்ட
உப்பதுவொன்று வொன்றாய்க்கரைந்திடச்
செப்பும்வழலை திரமாகக்காச்சிடே. (61)

காச்சிக்குறுகிக் கனகிவருகையில்
வாச்சநல்லெண்ணெய் வளமாயரைப்படி
பாச்சிக்குறுக்கிப் பதங்கண்டுண்டைசெய்
மூச்சியாச்சரியந் தான்சவுக்காரமே. (62)

சவுக்காரமிப்படிச் செய்தவன்வாதிகாண்
சவுக்காரத்தாட்டுச் சகலசித்தாதியும்
சவுக்காரமென்பார் பரங்கிதன்வைப்பதைச்
சவுக்காரமுப்பூவைச் சாத்தினதாமே. (63)

சாத்தும்வழலைச் சவுக்காரமேயென்றும்
தோற்றுவதேது மில்லைதெளிந்திடு
கூற்றுவனாயுனைக் கோட்டிகள்கொள்வது
மாத்திரமன்றி மாத்தறியாதோ. (64)

அறியாரறியா ரறிவார்கள்சித்தர்கள்
முறியாதமுப்பூ வழலையினாலே
தறுகாமற்சொன்ன சவுக்காரமேசெய
மறினால்தரமுமே வாதத்துக்காகுமே. (65)

வாதத்துக்காகும் மயேசுரமூலங்காண்
போதமிகுந்த பொறியாற்கேதங்கும்
சோதியின்தூபந் துறந்துகிடக்குதோ
வாதிகளெல்லாம் மயங்கினவாறே. (66)

வாரேதங்காடியில் வழலையைவாங்குவார்
நீரேதோசெய்ய நிலையாமலூதுவார்
கூரேதுங்காணார் குலாமர்கள்வாதிகள்
பேரேதுசும்மா பேரின்பஞானிக்கே. (67)

பேரின்பஞ்சென்று பெருத்தவழலையைச்
சார்வாயுரைத்தார் தானொன்றுங்கண்டிலார்
மேருப்பழுக்க விதமுமறிந்திலார்
ஆரடாசித்த னறிவான்வழலையே. (68)

வழலைக்குளெண்ணெய் வளமாகத்தள்ளி
வழலைக்குக்காரங் கடுங்காரமேற்றி
வழலையைத்தொட்டு மாட்டச்சரக்குச்சாம்
வழலையினாலே மலைதான் பொன்னாமே. (69)

பொன்னாஞ்சகஸ்திரத் தெண்மாற்றுமட்டும்
பொன்னாமோமற்ற வழலைக்கொருமாத்துப்
பொன்னாகிலுமே பூட்டவறியாட்டால்
பொன்னாவதேது புகழ்பூவழலையே. (70)

பூவைத்தெளிந்தாற் புகழுஞ்சவுக்காரம்
பூவையறியாட்டாற் பொருளுமுதற்கெடும்
பூவென்றமுப்பூவைப் பூட்டவறியார்கள்
பூவென்றதாதி பூவேகுருவாமே. (71)

குருவொடுகெந்தியைக் கூட்டிக்கலந்திடு
குருவோடயத்தையுங் கூட்டியரைத்திடு

குருவோடுசூதத்தைக் கூட்டியரைத்திடு
குருவிடுரவியிற் குறையாதெண்மாத்தே. (72)

மாத்தாம்வழலையால் மலைகளுஞ்சுண்ணமாம்
சாத்தவேசுண்ணந் தடவப்பசும்பொன்னாம்
நீத்தவேசுண்ணத்தில் நீறுஞ்சரக்கெலாம்
வேத்தவுபரசம் வெண்ணீறதாமே. (73)

ஆமேவழலை யடைவாகச் சொன்னேன்
பாமேவுடனே பதினெட்டுச்சித்தர்கள்
போமேயிந்த முப்பூவழலையில்
தாமேசவுக்காரஞ் சரத்தார்பெரியோரே. (74)

பெரியோர்களெல்லாம் பிற்கருபேசி
அரிதிதுவென்று அளவற்றநூற்பாடித்
தெரியாமலங்கே செப்பினார்பூவைப்
பரியாசக்கூற்றாய்ப் பாடினார்கண்டேன். (75)

பாடினேன்காவியமெண் ணூறொருகோர்வை
கூடியெழுபத்தேழ் குறிக்கினேனானதில்
நாடியென் னூலை நயமாயறிந்தோர்கள்
ஆடுவார்வாச முனிக்கொப்பாரெனவே. (76)

ஒப்பாருமில்லை யொளியாங்குருநந்தி
செப்பியவாதந் திறந்தாரெனவே
அப்பனேமுதற்சிற் றருளென்றுவாதம்
முப்பூவழலை சவுக்காரமுற்றே. (77)

தூர்வாசர் ஞான சூஸ்திரம் 77

முற்றிற்று

......

வசிஷ்டர் ஸ்ரீராமனுக்குபதேசித்த ஞானோதயம் 16

அண்டமுடி மீதிலங்குந் தீபமாகி
யானந்த முற்றபர மோனமாகி
முண்டகமாங் கமலமல ரமுதமாகி
முத்தியென்ற தலமதனில் வளர்வோனாகிக்
கொண்டல்நிற மேனியரி யயனுமாகிக்
குணபதியு மணபதியு மிரண்டுமாகித்
தொண்டர்களுக் கருளளிக்கும் வடிவமாகித்
துலங்குபிர்ம பதமதனைச் சித்தம்வைப்பாம். (1)

சித்தம்வளர் பூரணத்தைக் காண்பாருண்டோ
சிவயோகி யுரைத்துவரத் தெரியவேணும்
பத்தியுடன் வாசிதனைத் தெரியப்போமோ
பரமசற் குருவருளா லறியவேணும்
முத்திதந் தாண்டகுண் டலியைக்கண்டால்
முடிவற்ற பதியதனிற் கூடலாகும்
வெத்திபெறக் கண்டமதில் அங்கென்றோதி
விரித்துரைக்கக் குறியதனைக் கருதிப்பாரே. (2)

கருதிப்பார் தோன்றிமறை யாதமின்போற்
காணுமடா விழிக்கடங்கா வொளியாந்தீபம்
உறுதியுடன் பார்க்கக்கண் கூச்சமுண்டாம்
உள்ளமயங் காமலுமக் குறியிலேறு
சுருதியுரைத் திடும்வழியே செய்துவந்தால்
சுந்தரம்போல் நந்தியொளி தானேதோற்றும்
பருதிமதி அகாரமொடு உகாரம்ரெண்டும்
பண்பாகச் செபித்தவன்மெய்ஞ் ஞானிதானே. (3)

தானென்ற ஞானிகட்கு அகாரதீட்சை
தானறிந்தோர் மனமாகச் செபியாண்டொன்று
நானென்று தவறாமற் றினங்கடோறும்
நன்மைபெறப் பழக்கமது செய்துவந்தால்
தேனென்ற மூலதல மதுவுங்காணும்
சித்தமதைப் பற்றிவிடா திருந்தாயானால்
கோனென்ற மூலவன்னி யகன்றுபோகும்
குறிப்பறிந்து செய்துவந்தாற் கூறுவேனே. (4)

கூறுவேன் அசதியொடு கசடதென்ற
குற்றமுள்ள வறுசுவையு மகன்றுபோகும்
தேறுதற்கு உகாரத்தை மருவியேறு
சித்திபெற ஆண்டொன்று தினந்தோறுந்தான்
பேறுபெற நடந்துவரும் பழக்கத்தாலே
பின்புனக்கு நீர்க்கடுத்து வெட்டைமீறும்
வேறுமித மாய்நினைத்து விட்டிடாதே
மேலாகு முனதுடம்பி லினஞ்சொல்வேனே. (5)

சொல்லுகிறேன் ஆக்கைதனில் வாய்வுநின்று
சுகமில்லா ததுபோலப் பித்தமீறும்
வல்லதொரு வூண்சுவையை மனம்வெறுக்கும்
மயங்கிநீ யிந்தவித மிருக்குதென்ன
செல்லவிட்ட வுன்மனதைத் திருப்பிடாமல்
சீராக உகாரமதை யேற்றுயேற்று
நல்லதன்றி வியாதியது பெலத்துதானால்
நான்சொன்ன கற்பமதைச் சடலத்தூற்றே. (6)

ஊற்றினால் வியாதிமுற்றும் விலகிப்போகும்
உன்றேகஞ் சுந்தரம்போ லாகும்பாரு
நாற்றிசையோ ரறியார்கள் சுழினைமேலே
நலம்பெறவே வாசிதனை யேற்றுயேற்று

நாற்பத்தெண் சித்தர்

தேற்றியே அத்தலத்தில் முனைமேல்நின்று
தேறியே சற்குருவைத் துதித்துப்போற்று
மாற்றியே செய்தாக்கால் மனம்வேறாகும்
வையகத்தோர் தனக்கிதனை வழுத்திடாதே. (7)

இதமாயிவ் வுலகதனிற் சாஸ்திரங்கள்
இயல்பாகக் கற்றறிந்தோ மெனவேயெண்ணி
சதமான மெய்க்குருவைப் போற்றிடார்கள்
சடலத்து ளிலகுகின்ற தலங்காணார்கள்
பதமான உண்மைநிலை யுணர்ந்திடார்கள்
பாவியடா பரா்பரத்தின் நிலையுங்காணார்
நிதமவரைப் பாராதே கருச்சொல்லாதே
நின்மலத்தில் மனதைநீ நிறுத்துவாயே. (8)

நிறுத்தியே சடாட்சரத்தின் மகிமைபாரு
நேர்மையுட னறுகோண மிட்டுநன்றாய்
வருத்தமிலா ஓம்நமசி வயமென்றேதான்
மனதினா லறிந்துநீ கோணத்திட்டு
திருத்தமுடன் சரஹண பவவென்றேதான்
செய்யதொரு கோணமதைச் சுற்றில்நாட்டிப்
பொருத்தமாய் வட்டமுடன் சூலமிட்டுப்
பொருளறிந்து தானெழுதி யோகம்பாரே. (9)

யோகமதில் ரேசகபூ ரகமும்பண்ணி
யுண்மையுடன் கும்பகத்தில் நின்றுகொண்டு
ஏகமென்ற மனதுறமாய்ச் செபித்தாயானால்
என்மகனே வடிவேலன் பிரகாசிப்பான்
தாகமா யவர்பதமே பணிந்துபோற்றித்
தன்மையுள சிவாயகுரு சிவமேயென்று

வேகமுடன் பூட்டுமுனை திறக்கவென்று
வேண்டினாற் றிறவுகோல் தருவார்தானே. (10)

தானென்ற கணபதியின் றிரத்தைக்கேளு
தன்மையுடன் முக்கோண மிட்டுக்கொண்டு
நானென்ற ஓங்காரம் நடுவேபோட்டு
நன்மையே காட்சரத்தை மத்தியிட்டு
வானென்ற சதாசிவத்தைக் கருத்திலூணி
மகத்தான கணபதியே நமாவென்றேதான்
தேனென்ற குருபதத்தில் நின்றுகொண்டு
திரமாகப் பூசைசெய்தால் வருவார்காணே. (11)

காணப்பா கணபதிதான் பிரகாசித்தாற்
கருத்துடனே அவர்பதத்தைப் போற்றிசெய்து
வானப்பா நின்றநிலை யதனைக்கண்டு
வருந்தியே கேட்டதெல்லா மீவாரப்பா
தோணப்பா குண்டலிதான் பிரகாசித்தாற்
றொகுப்பாக அட்டசித்துங் கைக்குள்ளாடும்
வீணப்பா போகாது அறிவாய்ப்பாரு
வேணுமே யிவர்திரந்தான் வேணுங்கேளே. (12)

கேளப்பா மானதமாம் பூசைசொல்வேன்
கிருபையுடன் முகங்கரங்கால் சுத்திசெய்து
நாளப்பா விபூதியுத் தளமாய்ப்பூசி
நல்லதொரு மனதாக அறிவிற்சேர்த்து
வாளப்பா நின்றநிலை தவறாமற்றான்
மைந்தனே ரேசகமாய்ப் பூரணத்தை

ஆளப்பா வைத்துநீ கும்பகத்தில்
அப்பனே நின்றாக்கால் பூசையாமே. (13)

பூசையிந்த மார்க்கமது கோடாகோடி
புண்ணியமா மானதத்தின் பூசைநேர்மை
ஆசைதனி லகப்பட்டாற் காண்பதேது
அப்பனே மனதிருத்தி நாடவேணும்
பாசைபதி னெட்டறிந்த சித்தரோடு
பண்புடனே தபோதனரை வணங்கவேண்டும்
ஓசையுள்ள மூலாதா ரத்தைக்கண்டு
உற்பனமாய்ப் பூசைசெய்தால் வரமீவாரே. *(14)*

வரமதுநீ பெற்றபின்பு மனத்தையூணி
மனதாகப் பூரணத்தை வணங்கிநில்லு
திரமுடனே பூரணத்தில் நின்றாயானால்
தீரமுட னட்டசித்துங் கைக்குள்ளாடும்
பரமென்ற குண்டலியின் நன்மையாலே
பராபரமே மனதிற்குப் பரிவாய்க்காணும்
சரமென்ற வாசியெல்லா மிதற்குள்ளாச்சு
சச்சிதா னந்தமயந் தானுண்டாச்சே. *(15)*

ஆச்சென்ற பொருளெல்லாங் காண்பாய்மைந்தா
அப்பனே யென்னூலி னிருநூற்றாறில்
பேச்சொன்றுஞ் சொல்லாமல் வைத்தியத்தைப்
பிரியமுடன் பார்த்தாக்கால் வெளியாய்த்தோணும்
சூச்சமதாய்த் தெரிந்து கொண்டு வெளிவிடாதே
சுந்தரம்போ லிருப்பாய்நீ சுகமதாக
வாச்சுதென்று யென்னூலைப் பார்த்துத்தேறு
மகிழ்ச்சியுடன் பூவுலகில் வாழலாமே. *(16)*

வசிஷ்டர் ஸ்ரீராமனுக்குபதேசித்த ஞானோதயம் *16*
முற்றிற்று

......

வசிஷ்டர் ஸ்ரீ ராமனுக்குபதேசித்த வைத்திய சூஸ்திரம் 206

காப்பு

பூரணமாய் நின்றபரை பாதம்போற்றி
புகழான சூத்திரத்தி னிருநூற்றாறு
நாரணனா ருபதேசஞ் செய்தமார்க்கம்
நவிலுகிறேன் ரெகுராமா நன்றாய்ப்பாரு
ஆரணனுந் திருமாலும் ஆதியந்தம்
அறியாம லழலுருவாய் நின்றசோதி
காரணமாய் மகவாக வந்தகந்தன்
கணபதியுஞ் சரஸ்பதியுங் காப்புத்தானே. (1)

தானென்ற சதாசிவத்தைப் பூசைசெய்து
தாயான யீஸ்பரிக்குப் பிள்ளையாகி
நானென்ற வாணவமும் மலமும்நீக்கி
நாசிநுனி புருவமையம் நாட்டம்பார்த்துக்
கோனென்ற சிதம்பரத்தின் கூத்துக்கண்டு
கோவிந்த ரிடஞ்சென்று கூடிப்பின்னும்
ஊனென்ற வுடம்புக்குட் பிணிகள்தீர
உபதேசஞ் செய்தமுறை வுரைக்கும்நூலே. (2)

நூல்பார்த்தாற் போதாது வயித்தியர்க்கு
நொடிக்குமுன்னே பலவிதமாய் நோய்களுண்டாம்
கால்பார்த்துத் தலைபார்த்துக் கையும்பார்த்துக்
கண்பார்த்து முகம்பார்த்துக் கருத்துட்டேர்ந்து
பால்பார்த்து தயிர்பார்த்து வெண்ணெய்பார்த்துப்
பக்குவமாய் 'நெய்யெடுக்கும் பருவம்போலே
சேல்பார்த்துத் திறம்பார்த்து மருந்துசேர்த்துச்
சிவன்மேலே நேசம்வைத்தாற் றீரும்நோயே. (3)

நாற்பத்தெண் சித்தர்

நோயில்லை பேயில்லை பாவமில்லை
நூல்வழியே நடந்தவர்க்குத் தோஷமில்லை
தாயில்லை தகப்பனில்லை பெரியோரில்லை
தனக்குவமை யொருவரில்லை யென்றுபேசி
நாய்போலே தன்வயிறு வளர்த்தபேர்க்கு
நாலாயி ரச்சில்வான் வியாதிதன்னைப்
பேய்கொண்டு பேசுகிற பித்தரோகம்
பிடிக்கும்பா ரதுதீர்க்கப் பெருமைகேளே. (4)

பயித்தியத்திக்கு

கேளப்பா கொம்மட்டிப் பழத்தைவாங்கிக்
கீறியே குடலெடுத்துப் பிசைந்துநன்றாய்ப்
பாளப்பா விரைதோடு தள்ளிப்போட்டுப்
பழச்சோறு தனியாக வெடுத்துக் கொண்டு
நாளப்பா வொன்றுக்கே யிரண்டுபோது
நலமாகச் சரீரமெல்லாம் நன்றாய்த்தேய்த்தே
ஏளப்பா நாளைக்குங் காலைப்போதில்
இருகழஞ்சு வுள்ளுக்கு வியல்பாய்க்கொள்ளே. (5)

இயல்பாக விப்படிநீ கொள்ளும்போது
இருளான பித்தமது தீர்ந்துபோச்சு
பயமில்லை கிருக்குமில்லை கிரிகையில்லை
பாழான புலப்பமில்லை பயித்யமில்லை
தயவாக விந்தமுறை செய்யும்போது
சாயங்கா லந்தனிலே தண்ணீர்விட்டால்
நயமாக விந்தமுறை பயித்தியந்தான்
நாரணனா ருரைத்தபடி நவின்றிட்டோமே. (6)

மருந்து

நவிலுகிறே னின்னமொரு முறைதானப்பா
நலமான இலுமிச்சம் பழந்தான் நூறு
செவியிலே சொல்லாமற் கொண்டுவந்து
தினம்பத்துப் பழம்பத்துச் செவிப்பாயாகில்
புவியிலே வாராது கிரிகைதானும்
புகழான இலுப்பையுட புண்ணாக்குத்தான்
பவியமாய்ப் பொடிசெய்து தலையிற்கீறிப்
பண்பாக நாள்பத்துப் பரிந்துதேயே. (7)

பரிவாக விந்தமுறை செய்யும்போது
பறக்குமப்பா பயித்யமென்ற கிரிகைதானும்
உரிதாக விம்முறையை வுலகத்தோர்க்கு
உரைத்திட்டோந் தப்பாது வுண்மையாகும்
அரிதான சத்தியங்கள் தன்னைச்செய்து
அரசர்பொரு ளாலயத்தின் பொருள்கடன்னை
மரியாதை யில்லாம லெடுத்தபேர்க்கு
வங்கிஷங்க ளுள்ளமட்டும் மாறாப்பேயே. (8)

பித்தகர்ம வரலாறு

மாறாத பேய்ப்புலப்பம் வந்துதானால்
மாமுனிவர் நூல்பார்த்தே வுலகினுள்ளே
வீறான மருந்துகளைச் செய்யும்போது
மென்மேலு மதிகமதாய் விளங்குமப்பா
ஆறான வாதாரந் தன்னிலுள்ள
அட்சரத்தைத் தகட்டிலேதா னெழுதிக்கொண்டு
பேறாக லெட்சமுரு ஜெபித்துக்கட்டப்
பேய்ப்புலப்பந் தீருமல்லாற் பிணிதீராதே. (9)

சாந்தி

பிணிதீர வேணுமென்றா லரசன்பொன்னும்
பெருமையுள்ள வாலயத்தின் பொன்னையுந்தான்
பணியான கற்கோயிற் குளமுங்கட்டிப்
பரதேசி யரதேசி பசியாலுண்ணல்
துணிவாக லிங்கப்ர திஷ்டைசெய்து
சுமைதாங்கி நந்தவன முண்டுபண்ணத்
தணிவாகும் பயித்தியங்கள் தீர்ந்துபோகும்
சண்டாளக் கருமஞ்சா ராதுபாரே. *(10)*

மருந்து

பாரப்பா கர்மத்தை நிவர்த்திசெய்து
பாரிலுள்ள யிஞ்சிச்சார் கரண்டிரண்டு
நேரப்பா கேசரிப்பால் கரண்டிநாலு
நிசமான கரும்புவெல்லங் களஞ்சிரண்டு
சீரப்பா யிதுமூன்று மொன்றாய்ச்சேர்த்துத்
தினம்பத்துக் கிருபோது தின்பீராகிற்
றேரப்பா யேறிவரும் வெய்யோன்கண்ட
சிறுபனிபோல் நீங்கிவருந் திறத்தைப்பாரே. *(11)*

திறமாக விந்தமுறை செய்யாவிட்டால்
தீராத பயித்தியந்தா னுலகத்தோர்க்கு
அறமான தருமத்தைச் செய்வதாலே
அசத்தியத்தால் வந்தபிணி யகன்றுபோகும்
கிரமமா யிதையறிந்து செய்தபேர்கள்
கெட்டிவயித் தியனென்று பேர்கேட்பார்கள்
மறவாம லிப்படியே செய்யச்சொல்லி
மால்சொன்ன வயித்தியத்தை மகிழ்ந்துபாரே. *(12)*

பாரிலுள்ள வயித்தியர்க ளிந்தநூலைப்
பாராமற் பலநூலும் பார்த்துப்பார்த்து

ஊரிலுள்ள மருந்தையெல்லாம் கொடுத்துப்போட்டு
ஒவ்வொன்றாய்க் கொடுத்துவிட்டு ஓடுவார்கள்
தூரிலே பலமிருந்தால் மரஞ்சாகாது
துறையறிந்து பண்டிதந்தான் சுழுவாய்ச்செய்யில்
வேரிலே பிலங்கெட்டு மாறுமாப்போல்
வேரோடு பித்தமென்ற கிரிகையெல்லாம். *(13)*

துவாலை

பித்தமென்ற கிரிகையது தீரவென்றால்
பிலமாக இன்னமொரு முறைதானப்பா
முத்திருக்கன் செடியுடனே ஆதளைதான்
முக்கியமாய்த் தானெடுத்து மோரிலாட்டி
உத்தமனே ஒண்ணரைநாள் மூன்றுபோது
உறப்பாகக் கண்டமுதற் சரீரமெல்லாம்
நித்தளமாய்ப் பூசியபின் மூன்றுபோது
நெடுநாளைக் காடியிலே நிசமாய்ச்செய்யே. *(14)*

நிசமாகு மிந்நூலின் படிதப்பாமல்
நிண்ணயமாய்ச் செய்தாக்காற் பலிதமாகும்
கசமாகும் பலநூலும் பார்க்கவேண்டாம்
கைகண்ட வித்தையிதைக் கருதிப்பாரு
நிசமான பதினெட்டுச் சித்தருக்கும்
ரிஷிகளுக்கும் பெரியவர்தா னாதிநாதன்
வசமான ஆயிரத்தி யிருநூறுக்குள்
வயித்தியத்தில் முன்னூ று மிதுவும்நேரே. *(15)*

கிராணி அதிசாரத்துக்கு கபாடசூரணம்

நேரான வுடம்புக்குட் சூடுதட்டி
நெஞ்சுடம்பு புண்ணாகிக் கடுப்புக்கண்டால்

நாற்பத்தெண் சித்தர்

கோரான கோரக்கர் மூலிதன்னைக்
கொண்டுவந்து பசுப்பாலில் அவித்தெடுத்து
சீராக வுலர்த்தியதி லொருகழஞ்சு
சிறப்பாக வெடுத்தபின்பு சொல்லக்கேளு
பேரான அதிவிடயங் கழஞ்சுவொன்று
பிரியமுட னொருகழஞ்சு கிராம்புகூட்டே. (16)

கூட்டப்பா சாதிக்காய் சாதிபத்ரி
குணமான வோமமது கழஞ்சுவொன்று
வாட்டப்பா யிவ்வளவும் யிளவறுப்பாய்
வறுத்தபின்பு படுபாதி யாகவேதான்
ஆட்டப்பா வொருபாதி மருந்துதன்னை
அடைவாகச் சூரணித்துப் பதனஞ் செய்து
காட்டப்பா படுபாதி மருந்தினோடு
கஷாயத்து முறைமையது கருதுவாயே. (17)

கியாழம்

கருத்தான மாதளத்தின் பிஞ்சினோடு
கனமான பலாக்காயின் பிஞ்சுதானும்
வருத்தமுள்ள பருத்தியின்றன் பிஞ்சுசேர்த்து
வண்மையுள்ள வேப்பீக்கில் கருவேப்பீக்கில்
பொருத்தமுள்ள வத்திக்காய் முத்தக்காக
புகழான வில்வவே ரிவைகளெல்லாம்
நிறுத்தெடுத்து ஐங்கழஞ்சு வெவ்வேறாக
நீர்வத்த வறுத்தபின்னெற் பொரியுஞ்சேரே. (18)

சேரப்பா யிவ்வளவு மொன்றாய்க்கூட்டிச்
சிறப்பாக விருநாழி தண்ணீர்விட்டு
நேரப்பா யெட்டொன்றாய் வத்தக்காச்சி
நேரியதோர் சீலையிலே வடித்தெடுத்து

பாரப்பா முன்வைத்த சூரணத்திற்
பணவிடைதான் பின்போட்டுப் பத்துநாளும்
சீரப்பா தப்பாம லிரண்டு நேரம்
செலுத்தினால் வயிற்றளச்சல் தீருந்தானே. (19)

தானென்ற கிராணியெட்டுஞ் சன்னிபதிமூன் றுந்
தளர்ச்சியொடு கடுப்புமரோ சிப்புரத்தம்
ஊனென்ற வுடம்புக்கு ளுஷ்டிணங்கள்
ஓக்காளம் அதிசாரம் சீதக்கட்டு
நானென்ற ஆண்மைசொல்லி வந்தநோய்கள்
நாடாம லோடிவிடும் நலமுண்டாகும்
ஏனென்று யெண்ணாதே யின்னமொன் று
இயல்பாகச் சொல்லுகிறேன் முத்தக்காசே. (20)

முத்தக்கா சைக்கழஞ்சு பாகஞ்செய்து
முக்கியமாய் வறுத்தரைத்து நாழிநீரில்
சுத்தமுள்ள வுளுவைதனி லைங்கழஞ்சு
சுழுவாக வறுக்கையில்முன் சலத்தைவிட்டு
உத்ததொரு கியாழமுழக் கானபோது
உண்மையுட னிறக்கியதை வடித்தெடுத்து
சித்தான கோரக்கர் மூலிதன்னைத்
திறமாகப் பணவிடைதான் சிறந்துகாணே. (21)

மருந்து

காணப்பா சாதிக்காய் சாதிபத்ரி
கழஞ்சுவொன் று குன்றினிடை யபினுஞ்சேர்த்து
தோணப்பா நாற்சரக்குஞ் சூரணித்துச்
சுழுவாக யிட்டாறு பொழுதுகொள்ள
வீணப்பா கிராணியெட்டு கடுப்பிரத்தம்
விஷமான சன்னிபிர மூலவாய்வு

ஆணப்பா அரோசிப்பு அதிசாரந்தான்
அதிபேதி களிச்சலுஷ்ண மனைத்துந்தீரும். (22)

கலியாணிகிருதம்

தீராத நோய்களில்லை யுலகந்தன்னிற்
செய்பாகங் கைபாகந் திறமாய்ச்செய்தால்
பாராம லோடிப்போம் பித்தப்பாண்டு
பண்டிதற்குப் பணங்காசு பறிக்கலாகும்
நேராக மங்கையர்க்குக் கெற்பமப்பா
நில்லாமற் போச்சுதென்றால் மருந்தைக்கேளு
ஓராமற் கல்யாணிக் கிருதந்தன்னை
யுண்மையாய்ச் செய்துவிடு வுலகத்தோர்க்கே. (23)

உலகத்தில் பெண்கள்செய்த பாவத்தாலே
உதரத்திற் கிருமியது மிகுந்ததாலே
சிலைதொட்ட மதனெய்யும் பாணந்தொட்டு
ஸ்திரிகளுடன் புருடனவன் கூடும்போது
பிலங்கெட்டு விந்துவந்து நழுவிப்போனால்
பிள்ளையில்லா மலடனென்று பேசுவார்கள்
கலையொத்துப் பாய்ந்தாலும் கிருமிதின்று
கருவழித்துப் போடுமப்பா கருதிப்பாரே. (24)

கருதிப்பார் முத்தக்கன் கிழங்கினோடு
கனமான கும்பளங்காய் நெல்லிக்காயும்
சுருதியுள்ள சதாவேலிக் கிழங்குதானும்
சுத்தமாய்த் தனித்தனியே சாருநாழி
குருதிக்கு ளிளகிவரு மாவின்பாலுங்
குணமாக ஒருபடிதான் கூடச்சேர்த்துப்
பருதிபட வொட்டாமல் நிழலில்வைத்துப்
பசுவின்நெய் யொருபடியும் பண்பார்ய்ச்சேரே. (25)

சேரப்பா பொரிகாரம் பெருங்காயந்தான்
செயமான காந்தம்வகை கழஞ்சுவொன்று
நேரப்பா வாளமது சுழஞ்சுநாலு
நெய்யுள்ள தேங்காயுங் சழஞ்சிநாலு
பாரப்பா யிவ்வளவும் பொடித்துப்போட்டுப்
பதமாக மூன்றுதினம் வெதுப்பிக்காய்ச்சி
சீரப்பா நாலாநா ளானபோது
சீனிபல மொன்றரையுந் திறமாய்ப்போடே. *(26)*

போட்டவுடன் மெழுகுபத மாகக்காய்ச்சிப்
புகழ்சீனி பலமொன்றோ டரையும்போட்டு
நாட்டமுடன் வடித்தபின்பு மத்தாலாட்டி
நலமாகக் கடைந்தெடுத்துப் பதனம்பண்ணு
காட்டரிது கலியாணக் கிருதந்தன்னைக்
கர்மத்தை நிவர்த்திசெய்து கரண்டிதானும்
வாட்டமத்து இருபதுநாட் கொள்ளும்போது
மகத்தான பத்தியந்தான் மகிழ்ந்துகாணே. *(27)*

காணப்பா உப்பாகா புளியுமாகா
கருப்பிட்டிப் புகையிலையு மோருமாகா
ஆணப்பா பெண்ணுடனே கூடலாகா
அப்புதொட லாகாது மறுபத்யந்தான்
பூணப்பா பத்துநாள் புளியுப்பன்றிப்
புத்தியுடன் நடந்தவற்குப் பிள்ளையுண்டாம்
வீணப்பா பேசுகின்ற வீணருக்கே
விள்ளாதே யிந்தமுறை விட்டிடாதே. *(28)*

விட்டவற்குத் தொட்டகுறை கிருதந்தானும்.
விமலனரு ளுண்டாகிக் கிடைத்துதப்பா

தட்டாகு மிந்தமுறை சுழுவதாகும்
தாழையது காத்தடிக்கப் பூத்தாப்போலே
கட்டான கலியாணிக் கிருதந்தானும்
காசிடைதான் கொண்டாக்கால் கருவாசற்குள்
திட்டமா யிருக்கின்ற மணிப்புழுத்தான்
தின்னாது கருவளர்ந்து திறமதாமே. (29)

திறமாக மருந்துகொண்ட முழுக்கிலப்பா
சிவனாணை ஸ்ரீயுடனே புருடன்கூடிற்
பிரமாண மாகிப்பின் கலையிற்பாய்ந்தாற்
பிள்ளையது முந்நூறு நாளிற்காணும்
நிறமான வாசியிடை கலையேயானால்
நிச்சயமாய்ப் பெண்பிறக்கும் நிலைதப்பாது
அறமான தர்மமது செய்தபேர்க்கு
அண்ணலா ரருள்கிடைக்கு மடவிதாமே. (30)

பிள்ளையில்லாதவர்க்கு

ஆமப்பா பிள்ளையுமொன் றிரண்டுபெற்று
அப்புறந்தான் பிள்ளையில்லா திருப்பவற்குக்
காமப்பா கலவியினாற் பிள்ளையுண்டாய்
கருவழிந்துப் போவதற்குக் கயிலைநாதர்
தாமப்பா செய்தமுறை திருமால்சொன்னார்
தவறாமற் கைமுறையாய்த் தனித்துப்பாரு
நாமப்பா சொன்னதென்று நினைக்கவேண்டாம்
நாரணனார் சொன்னமுறை நாடிப்பாரே. (31)

நாடிப்பார் பொரிகாரம் பெருங்காயந்தான்
நலமான காந்தமொடு கழஞ்சு மொன்று
கூடிப்பார் தேங்காய்நேர் வாளந்தானும்
குறிப்பாயிரம் மருந்துவகை நாற்கழஞ்சு

வாடிப்போ காதிலுமிச் சம்பழச்சார்
வாங்கியே மெழுசுதுபோ லதையரைத்துத்
தேடித்தான் திரியாம லாறுபோது
சேவிக்கக் கெற்பமது சேருந்தானே. (32)

சேரப்பா பூவையுடன் புருடன்றானும்
சேர்ந்திடவே திங்களொன்றுக் குள்ளதாகப்
பாரப்பா கெற்பமது பிலத்துக்கொள்ளும்
பதினாறு பெற்றிடுவாள் பாருபாரு
சீரப்பா தப்பாத முறைப்படிக்குச்
செய்தவனே திறமான வயித்தியன்பார்
பேரப்பா லோகமெல்லாந் தொனிக்கும்நன்றாய்ப்
பிரபலமா யின்னமொன்று புகலுவேனே. (33)

தாம்பூரசுத்தி

புகழான தாம்புரத்தைச் சுத்திசெய்யப்
பூதலத்திற் பலதுறையுந் தேடிப்பார்த்து
இகழான மருந்துகளைச் செய்வாரப்பா
இந்நூலுங் கும்பமுனி நூலும்பார்த்து
நிகழாதே புவனையுட கக்கிஷந்தான்
நிசமாகு மிந்தமுறை வடுகனேறி
துகழான சுவானனுட காட்டந்தன்னைச்
சுட்டிடத்தா னெடுத்துநவச் சாரந்தூவே. (43)

தூவியே ரவியில்வைக்கச் செயநீராகும்
சுருக்காக அதையெடுத்து வைத்துக்கொண்டு
சீவியே பொடியான தாம்பூரத்தைச்
செயமான பழச்சாறுந் துருசுங்கூட்டி
மேவியே யரைத்துருட்டி வில்லைசெய்து
விளங்கவே குகையிலிட்டு வுருகும்போது

நாற்பத்தெண் சித்தர்

ஓவியே ஜெயநீரைச் சாய்த்தாயானால்
ஓகோகோ ஊறலது வோடுந்தானே. (44)

ஓடுமே யிந்தமுறைப் படிதப்பாமல்
உற்பனமாய்ப் பத்துமுறை வுருக்கிச்சாய்த்தால்
பாடுவர மாட்டாது பத்துமாத்துப்
பசுமையுள்ள பொன்னிலுமே அதிகமாகும்
ஏடுகளி லிந்தமுறை யெழுதிக்காட்டார்
இதுபோலே வொருவருமே சொன்னதில்லை
நாடுதனிற் பாவியென்று திரியவேண்டாம்
நலமாகும் யிந்நூலை நாடிப்பாரே. (36)

நாடியே திரிவார்கள் சித்தரெல்லாம்
நலமான கைமுறையைக் கவர்ச்சிசெய்யக்
கூடியே திரிந்தாலும் முறைகாட்டாதே
குருவான நந்தியொளி காட்டினாலும்
ஆடிநிற்கும் சிதம்பரத்தை யடவதாக
ஐம்பத்தோ ரெழுத்துடனே அறிவித்தாலும்
வேடிக்கைக்க காரரைப்போல் வேறேயொன்று
மித்திரமாய்ச் செய்துவிடு மிதுகாட்டாதே. (37)

இதுபோலே யின்னமொரு சுழுவதாக
இயல்புடனே சொல்வேன்தாம் பூரசுத்தி
மெதுவாக நினைத்தவற்கு வாயாதப்பா
விட்டகுறைக் காரருக்கிம் முறைதான்கிட்டும்
சதிரான தக்காளி யவரிச்சாத்தில்
சவ்வீரம் பொரிகாரம் மடல்துத்தந்தான்
பிதிராமல் மெழுகதுபோ லரைத்துக்கொண்டு
பின்னொருவற் குரையாமற் செம்பிற்பூசே. (38)

பூசியே யோட்டில்வைத்துப் புடந்தான்போடு
பொன்னாகுஞ் செம்பூறல்பறந்துபோச்சு
வாசியே செம்புபத்து வெள்ளியொன்று
வகையாகத் தகடடித்துச் சொல்லக்கேளு
பேசியே காரமொடு வீரந்துத்தம்
பெருமைநா யுருவியுப்புக் கழஞ்சுகூட்டு
பூசியே குக்குடத்தில் வைத்தெடுத்தாற்
போச்சுதப்பா செம்பூறல் வேதைக்காமே. (39)

வேதையிது கைகண்ட வித்தையப்பா
விபரீதம் பண்ணிடுவார் சித்தர்கூடிப்
பாதையிலே கிணறிருப்ப தறிந்துகொண்டு
பாராமற் போய்ச்சாடும் பயித்தியகர்ரர்
ஊதையிலே புகைந்துதான் போச்சுதென்பார்
ஓம்நமசி வாயவென்று சாபந்தீரார்
பேதைமனக் காரர்களே சிவநாமங்கள்
பிதற்றாது செய்யார்கள் சித்தர்தானே. (40)

சித்தாகு மிந்தமுறை செய்தபேர்க்குச்
சிவனுடைய தெரிசனமும் லபிக்கும்நன்றாய்ப்
பத்தாகும் மாத்ததனிற் காணுங்காணும்
பசுமையுள்ள தங்கமிது வேதைக்காகும்
சத்தாகும் ஆதிசிவ னுடமையப்பா
தான்புசித்துத் தானதர்மஞ் செய்தாற்றக்கும்
உத்தார்க்கும் பெத்தார்க்குங் கொடுக்கச்செய்தால்
உமையவள்தான் சபித்திடுவாள் பாபந்தானே. (41)

பாபபுண் ணியமிரண்டின் பரிசுகேளு
பத்திவை ராக்கியமும் புண்யமாச்சு

கோபமென்ற பாபமது வந்துதானாற்
கொடிதாகும் பரைகோபங் கொன்றுபோடும்
சாபமது சேராமற் றவத்தைச்செய்து
சங்கரற்கும் பார்வதிக்கும் பூசைபண்ணித்
தீபவொளி தெரிசித்து வேதைதன்னைத்
திறமாகச் செய்துகொண்டு செலவுசெய்யே. (42)

சிலவுக்கு முட்டாது வேதைகண்டால்
சித்தரெல்லா மிதனாலே பிழைக்கிறார்கள்
உலகத்தில் வேதைவித்தை கிடைப்பதற்கு
உறுதியென்ற பொறுமையுளோ ருண்மையாகும்
மலமுத்த மானிடர்கள் செய்யும்வேதை
வயித்தியந்தான் வெகுசுளுவாய் வாய்க்குமப்பா
குலவித்தை படியாமல் வருகிறாப்போல்
குணமென்ற வுபாதிவருங் கூறக்கேளே. (43)

குன்மவரலாறு

குன்மமென்ற யெரிகுன்ம வாயுக்காதி
குருபூசை யரிபூசை யரனார்பூசை
கன்மமது செய்வோரை நிந்தைபேசிக்
கற்புடைய மங்கையரைக் கருதினோர்க்கும்
தன்மமது பண்ணாம லிருக்கின்றோர்க்கும்
தாய்தகப்பன் பசித்திருக்க வுண்டபேர்க்கும்
வன்மமது மனதில்வைத்துப் பிறர்தனத்தை
வயிறெரியப் பறித்தவற்கும் வகுத்ததாமே. (44)

சாந்தி

வகுத்திட்ட சத்திகுன்மம் வந்துதானால்
வயித்தியர்கள் கன்மத்தை நிவர்த்திசெய்ய

மகத்துவஞ்சே ரரசடியில் வீற்றிருக்கும்
மகத்தான விநாயகர்க்குப் பூசையாகும்
பகுத்தறிவாய் நூறுகுடஞ் சலத்தைக்கோரி
பாங்காபி ஷேகபிர தட்சணந்தான்
மிகுத்ததொரு மண்டலந்தான் செய்தாயானால்
விநாயகனாற் றீருமிந்த வுபாதிகாணே. (45)

குன்மமெட்டுக்கும் அயக்காந்த செந்தூரம்

காணப்பா களஞ்சுஅஞ்சு காந்தந்தானும்
கனமான அறபொடிதான் களஞ்சுஅஞ்சு
பூணப்பா வெவ்வேறே பொடித்துக்கொண்டு
புதுமையுள்ள பழச்சாத்தி லூறப்போட்டுத்
தோணப்பா மூன்றுநாட் கழித்தபின்பு
சுருக்கான காடிவிட்டுக் கழுவிவாங்கி
ஊணப்பா யிரண்டுமொன்றாய்ச் சேர்த்துவைத்து
ஒருபலநெல் லிக்காய்கெந் தகத்தைப்போடே. (46)

போடப்பா சவ்வீரங் கழஞ்சிரண்டு
புகழான சாதிலிங்கங் கழஞ்சிமூணு
நாடப்பா நவசாரங் கழஞ்சுபத்து
நலமாக விவ்வளவு மொன்றாய்ச்சேர்த்து
ஆடப்பா பழச்சாத்தி லாட்டிநன்றாய்
அம்மியிலே யனற்கொள்ளி நீட்டியாட்டி
ஊடப்பா பார்க்கையிலே வொளிவுகாணும்
உற்பனமாய் வழித்தெடுத்து வில்லைசெய்யே. (47)

வில்லையது செய்தபின்பு ஓட்டில்வைத்து
வெயிலிலே காய்ந்தபின்பு கொட்டிப்பாரு

நாற்பத்தெண் சித்தர்

நல்லதொரு வெங்கலம்போ லோசைகேட்கும்
நாகரிக அயக்காந்தம் புடத்திலிட்டால்
தொல்லையில்லை செந்தூரஞ் சுழுவதாகும்
சூட்சமா யதையெடுத்துச் செப்பில்வைத்துத்
தில்லையிலே நடம்புரியும் சிவனைப்போற்றி
சேவித்தால் குன்மமெட்டுந் தீருந்தானே. (48)

ஆனந்த வாயுவுக்கு

தானென்ற சதாசிவத்தின் கிருபையாலே
சங்குசக்ர பாணிசொன்னா ரின்னமொன்று
ஊனென்ற உடம்புக்குள் நரம்புசிக்கி
யுதரத்தில் வாசியது வோடும்போது
நானென்ற ஆண்மைகெட்டு விந்துகெட்டு
நாட்செல்ல வுரல்போல ஊதும்வாய்வு
வானென்ற ஆகாசந் தன்னைநோக்கி
வாங்காட்டா லானந்த வாயுவாமே. (49)

மருந்து

ஆமப்பா வன்னியுட தோலைவாங்கி
அடைவாகச் சூரணித்து ஆவின்நெய்யில்
தாமப்பா போதுபத்து கொள்ளும்போது
சாத்தியமாம் பீசமது முன்போலாகும்
நாமப்பா கைகண்ட வித்தைசொன்னோம்
நலமாகு மிம்முறையை நாடிப்பாரு
போமப்பா புவியைவிட்டு ஆண்டவாதம்
புகையிலையும் புளியுப்பும் விலக்கிச்செய்யே. (50)

கெற்பமுண்டாக எண்ணெய்

செய்யப்பா ஸ்திகளுட கெற்பந்தன்னை
திருமணியைப் புழுத்தின்று மலடியானால்

கையப்பா பாராதே வயித்தியோர்கள்
காசினியிற் பலவிதமாய் மருந்துசெய்வார்
தையப்பா மாசிரண்டும் அறியமாட்டார்
தாய்தகப்பன் குருதெய்வந் தனையேகாணார்
பையப்பா தனையெடுத்து வயித்யனென்று
பார்முழுதுந் திரிவார்கள் கழுதைகாணே. *(51)*

கழுதையுட பாலுரிதான் கொண்டுவந்து
கனமான விலுமிச்சம் பழச்சார்நாழி
பழுத்தபா டாவரையீ சங்குசின்னி
பண்பான பிரமயிலை வகைச்சார்நாழி
வழுத்தவிளக் கெண்ணய்படி யதனிற்சேர்த்து
வைத்திடுவாய் நாளாறு பதனமாகக்
கொழுகொழுத்து யிருக்குமதை யேழாம்நாளில்
கொதும்பைவிற காலெடுத்து அடுப்பிலேத்தே. *(52)*

ஏத்தவே பொரிகாரம் ரசகற்பூரம்
இயல்பான சாதிலிங்கம் நவச்சாரந்தான்
தோத்தவே துத்தமொடு துருசுஆறும்
தூக்கியே வகைமூன்று கழஞ்சுமாகப்
போத்தவே பூனைக்கண் குந்திருக்கம்
புகழான விந்துப்பு பவளப்புத்தும்
சாத்தவே சீனமிவை நாற்சரக்கும்
சரியாக வகையிரண்டு கழஞ்சுவாங்கே. *(53)*

வாங்கவே கெந்தகந்தான் கழஞ்சுநாலு
வளமான திரிகடுகு திரிபலாதி
பாங்காஞ்சா திக்காய்பத் திரிகிராம்பு
பட்டையா மிலவங்கம் வாய்விலங்கம்

ஆங்காகு மரிதார மரத்தையக்றா
அதிமதுரம் சிறுதேக்கு தாளிசபத்ரி
நீங்காமல் நேர்வாளஞ் சிறுநாகப்பூ
நிசமான சீரகமுங் காயங்கூட்டே. (54)

கூட்டுகருஞ் சீரகத்தோ டவ்வளவ்வும்
குறையாமற் கழஞ்சொன்று நிறுத்துவாங்கி
ஆட்டுவாய் மருந்தெல்லாம் பழச்சாற்றாலே
அரைத்துருட்டி முன்மருந்திற் கலக்கிநன்றாய்
மீட்டுவாய் அடுப்பேற்றி வத்தக்காய்ச்சி
மெழுகுபத மானபின்பு வடித்தெடுத்து
ஊட்டுவாய் கதிர்வேலன் குருவைப்போற்றி
உண்டவற்குக் கெற்பமதுண் டாகும்பாரே. (55)

பாரப்பா புளியாகாப் பத்தியந்தான்
பரிவ்ாகக் கல்யாணி யெண்ணெய்தன்னை
ஆரப்பா கேட்டாலும் முறைகாட்டாதே
அடைவாகச் செய்துவைத்து மருந்தைக்காட்டு
சீரப்பா துட்டுக்கா சிடைதான்மூன்று
தினமுண்ணத் தெரிவையற்குக் கெற்பமுண்டாம்
பேரப்பா பிரபலமாய் வயித்தியத்திற்
பிசகாம லின்னமொன்று தொடர்ந்துகாணே. (56)

வேறு
அறுசீர் குறுவிருத்தம்

தோடகை யமுர்த வல்லி தூதளை பிரமி வேம்பு
தேடிய சிவதை சுக்கு திறுகுறுஞ் சாவி னோடு
நாடிய யெட்டு மொன்றாய் நறுநெயிற் காய்ச்சி நக்கப்
பேடியும் பிள்ளை யுண்டாம் பிராயமும் பிறக்கு மாதே.
(57)

வேறு

ஆனந்தவாயுவுக்கு

மாதர்களில் மலடில்லை யென்றுவேத
வாக்கியங்கள் விளம்புவதா லிந்நூல்பார்த்து
ஆதரவாய்ச் செய்தவர்க்குப் பலிதமாகும்
ஆதிசிவ னருளாலே பிள்ளையுண்டாம்
நாதனுட வருள்பெற்ற நந்திசொல்ல
நாரணனா ருபதேச மெனக்குச்சொல்லப்
போதரவாய் நாமுனக்குச் சொல்லிவிட்டோம்
புகழாக இன்னமொன்று புகலுவேனே. (58)

பாரிசவாய்வுக்கு

புகலுகிறேன் பாரிசவா யுவுக்குமப்பா
பூவுலகிற் புறாவினுட தொலியைவாங்கி
இகலாம லாவின்பால் விட்டரைத்து
இலுமிச்சங் காயளவு யெடுத்துக்கொண்டு
அகலாம லாவின்பால் தனிற்கரைத்து
அப்பனே நாளொன்றுக் கிருபோதுண்ண
இகலாம லிப்படியே செய்யும்போது
இன்னமொன்று சொல்லுகிறே னியல்பாய்ச்செய்யே. (59)

செய்யப்பா யிலுப்பையுட புண்ணாக்கைத்தான்
தீயெரிக்கு முமிக்காந்தற் றனிற்புதைத்து
நொய்யவே கருகினதை யெடுத்துக்கொண்டு
நுணுக்கமாய் வெண்ணீரி லரைத்துக்காய்ச்சி
பையவே பாரிசத்தில் நன்றாய்ப்பூசி
பரிவாகத் தீக்கொள்ளி யனலைக்காட்டி
உய்யவே வுலகுமிசை நாலுபோது
உற்பனமாய்ச் செய்துவிடிற் சுருங்கிப்போமே. (60)

லிங்க செந்தூரம்

சுருக்கமா யின்னமொன்று சொல்லக்கேளு
சுயம்பான சாதிலிங்கங் கழஞ்சுநாலு
பெருக்கமுள சுறாமீனின் பாளைசுத்தி
பெருகவே யெருவொன்றிற் புடமாய்வைத்து
உருக்கியே புகையாமற் பாளைவெந்த
வுடனெடுத்து வோட்டில்வைத்து ஒளிதீயாக
இருக்கும்போ திரண்டுபல மிஞ்சிச்சாற்றை
யியல்பாகச் சுருக்கிட்டு எடுத்துக்கொள்ளே. *(61)*

பீசத்தில் குத்துவீக்கத்துக்கு

கொள்ளப்பா சாராயத் தோர்கரண்டி
கோழியிலே சேவல்ரத்தத் தோர்கரண்டி
உள்ளப்பா மனமுறத்தோ ரேழுபோது
உற்பனம தாய்க்கொண்டால் ராமபாணம்
எள்ளப்பா தப்பாது பீசந்தன்னில்
இடராக வந்ததொரு பாரிசந்தான்
விள்ளாம லோடிப்போம் மைந்தாநீயும்
விரைவாகப் புளியுப்பு விலக்குவாயே. *(62)*

விலக்குமே யின்னமொரு முறைதானப்பா
விருதான கழச்சிசுட்டுப் பருப்பெடுத்துத்
துலங்கவே மைப்போலே சூரணித்துச்
சூட்சமொரு கரண்டியிலே அரக்குச்சாவல்
குலுங்காமற் றலையறுத்துக் கரண்டிரத்தம்
கூட்டியே யொருபோது கொடுப்பாயானால்
மலங்காமற் பீசவலி குத்துவீதம்
வாங்கிவிடு மிந்தமுறை மகிழ்ந்துபாரே. *(63)*

வாந்திபேதிக்கு

மகிழ்ந்துபார் முன்சொன்ன ராமபாணம்
மகத்தாக யிஞ்சிச்சா றதனிற்சேர்த்து
இகழ்ந்துதான் போடாம லேழுபோது
இயல்பாகச் சேவித்தால் வாந்திபேதி
புகழ்ந்துதான் வெகுவாகக் காணுமப்பா
புத்தியதை யலையாமல் நிலைத்துக்கொண்டு
நிகழ்ந்துதான் போடாமற் செய்வீராகில்
நிச்சயமாய்ப் பாரிசநோய் தீர்ந்துபோமே. (64)

ரத்தசலப்பிரமேகம்

தீராத ரத்தசலப் பிரமேகங்கள்
தீர்ப்பதற்கு முறையொன்று சொல்லக்கேளு
ஆராலு மாதியந்த மறியவொண்ணா
தண்ணலார் நடனமிடுஞ் சுடலைதன்னிற்
பாராமற் கிடக்குகின்ற வத்திதன்னைப்
பசுவின்பால் விட்டரைத்து வில்லைசெய்து
சீராகக் காய்ந்தபின்பு முழப்புடத்தில்
திரமாக வைத்தெடுத்துச் செய்திகேளே. (65)

கேளப்பா மூன்றுதின மாறுபோது
கெடியான துட்டுக்கா சிடைதான்பாலில்
பாளப்பா செய்யாமற் கொண்டாயாகில்
பறக்குமடா ரத்தசலம் பிரமேகந்தான்
நாளப்பா வொருவாரம் இச்சாபத்யம்
நன்றாக இருந்துவிடில் வச்சிரதேகம்
வேளப்பா கும்பமுனிக் குபதேசித்த
விபரமிது நானறிந்து விதித்திட்டேனே. (66)

வங்கபற்பம்

திட்டமா யின்னமொன்று செப்பக்கேளு
திரமான வெள்வங்கக் கட்டிவாங்கி
வட்டமா யிடுகாட்டு மண்டையோடு
மகத்தாங்காட் டாமணக்கு விரையுஞ்சேர்த்து
கட்டமா யெண்ணாமற் கவசஞ்செய்து
கணபதிக்குப் பூசைபண்ணி புடத்தில்வைத்தால்
நட்டமாய்ப் போகாது இடைபடாது
நலமான வெள்வங்கப் பற்பந்தானே. (67)

பற்பத்திற் பணவிடைதான் பசுவின்வெண்ணெய்
பாக்களவிற் பொதிந்துபத்துப் போதுகொண்டால்
கெற்பத்தில் வந்தபெரும் பாடுதீரும்
கேசரிப்பால் தனிற்கொள்ளக் கிருக்குந்தீரும்
கற்பத்தில் மாதருட வனுபோகத்திற்
கர்ப்பமாய் வந்தரத்தப் பிரமேகங்கள்
சொற்பத்தில் தீர்ந்துபோ மாவின்பாலிற்
சொர்னமிது வுண்டாகும் சுளுவுகாணே. (68)

புத்துப்புண் முதலானதுக்கு

காணவே கும்பிடுசிப் பியையெடுத்துத்
காட்டெருவிற் புடம்போட்டுப் பற்பமாக்கித்
தோணவே ஆவெண்ணய் தன்னைச் சேர்த்துச்
சுருக்கங்காட் டாமணக்கின் பாலிலூட்டிப்
பூணவே புத்துப்புண் கிரந்தியாப்பு
புரையான வெகுவிஷத்துப் புண்களெல்லாம்
நாணவே ஒடுங்கை கண்டவித்தை
நாரணனார் சொன்னமுறை நாடிப்பாரே. (69)

கண்நோவு முதலானதுக்கு

நாடிப்பார் நயனத்தில் நோவுகண்டால்
நலமான யிலுமிச்சம் பழந்தானொன்று
தேடிப்பா ரிருகூறாய் நறுக்கிவைத்துச்
சிறப்பாக விதையெல்லாந் தெரிந்தெடுத்துக்
கூடிப்பார் சீனமொடு சீரகந்தான்
குன்றிபதி மூன்றிடைதான் மிளகுரெண்டு
வாடிப்பார் மைப்போலே சூரணித்து
வளமான பழத்துள்வைத்துக் கிளிதான்கட்டே. *(70)*

கட்டியே அயக்கரண்டி மண்வெட்டிதான்
கடிதான சட்டுவமிம் மூன்றிலொன்றில்
தட்டியே அடுப்பிலிட்டுத் தீயெரித்துத்
தழல்போலே காய்ந்தபின்பு யெடுத்துவைத்து
ஒட்டியே கிளியதனைக் கண்ணைச்சுத்தி
ஒத்தியே வுருட்டிவிடக் கலக்கந்தீர்ந்து
அட்டியாய் வந்தபிணி யகன்றுபோகும்
ஆச்சரியம் வித்தையிது அடவாய்ச்செய்யே. *(71)*

கால் சூலைக்கு

அடவாக வந்தவொரு கால்சூலைக்கு
ஆச்சரியம் வெடியுப்பு இந்துப்புத்தான்
திடமாக வகையொன்று களஞ்சியொன்று
செயமான இலுமிச்சம் பழந்தான்நாலு
இடமான பாத்திரத்தி லொன்றாய்ச்சேர்த்து
ஏத்தபழஞ் சேலைதனி லூட்டியப்பா
குடமான செம்பிலிட்டு வுலர்ந்தபின்பு
குறிப்பாகப் புண்ணிலிடத் தீருந்தானே. *(72)*

சூலைப்புண் துவாலையடங்க

தானேதான் பெண்களுக்குத் துவாலையப்பா
தனிலிரத்தஞ் சாணநீர் தயிர்போற் கண்டால்
தேனேபோ லிருக்கின்ற சாராயத்தில்
திடமாக ஆழாக்குத் தெரிந்துவாங்கி
வானேதா னோக்கிநிற்குந் தென்னம்பிள்ளை
மடற்குள்ளே மேலெழுந்த இளம்பூவோடு
பானேமைப் போலாட்டி மூன்றுபோது
பண்பாகக் கொண்டபின்பு அமுதுகொள்ளே. (73)

அமுதென்ன ஆவின்பாற் கொண்டுவந்து
அழகான குறுவைநெல் லரிசிபொங்கி
அமுதுண்டாற் புளியுப்பு மிரண்டுந்தள்ளி
அளவாக இப்படியே மூன்றுபோது
அமுதுண்டு மறுபத்யந் தீர்ந்துதானால்
அணைகட்டி மறுத்தாற்போ லடைத்துப்போகும்
சமுசியங்கள் வாராது நிசமதாகும்
சங்கரனார் கைமுறையாய்ச் சொன்னமட்டே. (74)

குன்மத்திற்கு

மட்டற்ற வெரிகுன்மங் கோரவாய்வு
வயிற்றுவலி தீரவென்றால் முறையைக்கேளு
திட்டமதாய்க் காந்தாரி மிளகாய்வாங்கித்
திறமாக அரைப்படிதா னெடுத்துக்கொண்டு
இட்டமுள்ள அசுவகெந்தி முன்பால் தன்னில்
இயல்பான கறியுப்பு மூனாங்காச்சல்
மட்டதுதான் தப்பாமல் அவித்தெடுத்து
வரிசையுடன் உலர்ந்தபின்பு முறையைப்பாரே. (75)

முறையாகச் சாரணைவேர் வில்வவேரும்
முக்யமுள்ள அசுவகெந்தி மூன்றுமப்பா
குறையாமல் வகையொன்றுக் கொருபலந்தான்
கொண்டுவந்து வில்லைவில்லை யாகச்செய்து
அறையாமல் முன்மருந்து கூடச்சேர்த்து
ஆவினுட மூத்திரத்தி லூறப்போட்டு
துறையாக வொருபோது கழித்தெடுத்துச்
சூரியனிற் காயவைத்து எடுத்துக்கொள்ளே. (76)

கீழ்க்காய்நெல்லித் தயிலம்

எடுத்தபின்பு வெள்ளாட்டு மூத்திரத்தில்
இப்படியே ஒருபொழுது வூரப்போட்டு
விடுத்தெடுத்து நீர்வத்தக் காயவைத்து
வீரான எருமையுட தயிரிலேதான்
கடுத்தமுடன் ஒருபொழுது வூரப்போட்டு
காய்ந்தபின்பு சூரணத்துச் சீனிகூட்டி
கொடுத்திடவே குன்மங்க ளெல்லாந்தீரும்
குளிப்பதற்குக் கீழ்க்காயின் நெல்லிவாங்கே. (77)

வாங்கியே கால்துலாஞ் சமூலத்தோடே
வளமான ஐங்குறுணி நீரிற்போட்டுத்
தாங்கியே அடுப்பேத்தி வத்தக்காய்ச்சி
தயவாக இருநாழி கியாழம்வாங்கித்
தீங்கில்லா நல்லெண்ணெய் படிதானொன்று
திறமான ஆவின்பால் படிதானொன்று
நீங்கியே போகாம லொன்றாய்ச்சேர்த்து
நிசமான கோட்டமொரு பலந்தான்போடே. (78)

வாதத்துக்கு

போட்டவுடன் மெழுகுபதம் வடித்துவாங்கி
புகழாக முழுகிவரக் குன்மவாய்வு
ஓட்டமென ஓடிவிடும் உடலில்நில்லா
துடல்வாத மென்பதுவுந் தீரக்கேளு
வாட்டமற்ற மாவிலங்கு கொன்றைவேம்பு
மகத்தான வெள்ளறுகு சங்கங்குப்பி
கூட்டமிட்ட யெருக்கன்வேர் சித்ரமூலம்
கோஷ்டமொடு திரிகடுகோ டுப்புமஞ்சே. *(79)*

அஞ்சேது இந்துப்பு கல்லுபபுத்தான்
அட்டுப்பு சவிட்டுப்பு வளையலுப்பு
தஞ்சமா யிவ்வளவுங் களஞ்சியொன்று
தனித்தனியே நிறுத்துமிரு நாழிநீரில்
மிஞ்சவே அடுப்பேத்தி யெட்டொன்றாக்கி
மேதினியில் மண்டலந்தா னுண்டதற்பின்
பஞ்சயெண்ணெய்த் தயிலமது வுடம்பிற்பூசப்
பாகத்தை நன்றாகப் பகருவேனே. *(80)*

பகரக்கேள் வேப்பெண்ணெய் புங்கினெண்ணெய்
பரிவான யெள்ளெண்ணெய் இலுப்பையெண்ணெய்
நுகரக்கேள் புன்னைக்கா யெண்ணெயோடு
நுணுக்கமுள்ள தில்லைப்பா லெருக்கலம்பால்
நகரமாய் மாவிலங்கு முருங்கைவாகை
நளினமா மிந்துப்பு வசம்பீருள்ளி
வகரமாங் காயமொடு மூலங்கூட்டி
வளமாக யெரித்தெடுத்து வுடம்பிற்றேயே. *(81)*

ஓரிதழ்த்தாமரைச் சூரணம்

தேய்த்திடவே முகவாதம் பக்கவாதம்
திமிர்வாதம் முடவாதங் கால்கைவாதம்
வாய்த்திடவே நடுநடுக்கும் வாதத்தோடு
மானிலத்தி லுண்டான வாதமெல்லாம்
நோய்த்திடவே மாட்டாது தீர்ந்துபோகும்
நொச்சியிலை சிறுபயிறு தேய்த்துவெண்ணீர்
ஊய்த்திடவே திறமாகும் மேகந்தீர
ஓரிதழ்த்தா மரையின்ச மூலம்வாங்கே. (82)

மேகாதிக்கு

வாங்கியதை நிழலுலர்த்திச் சூரணித்து
வண்மையுடன் பலம்பத்துச் சீரகந்தான்
தீங்கில்லாச் சரக்காறு பலமுங்கூட்டி
திவ்வியமாஞ் சந்தனத்திற் பலந்தான்மூன்று
தாங்கியசெஞ் சந்தனத்திற் பலமொன்றாகத்
தப்பாமற் சூரணித்து வைத்துக்கொண்டு
பாங்கியே கரும்புவெல்லம் பலந்தானைந்து
பாகுசெய்து சூரணத்தைத் தூவிடாயே. (83)

தூவியே நெய்விட்டுக் கிண்டிப்பார்த்துச்
சுருக்கான லேகியத்தை யெடுத்துக்கொண்டு
ஆவியது போகாமற் பதனஞ்செய்து
ஆறுமுக வேலவனைத் தியானஞ்செய்து
நேவித்யம் பூசைசெய்து எடுத்துக்கொண்டு
நிதமொன்றுக் கிருபொழுது நெல்லிக்காய்போல்
ஓவியமாய் மண்டலந்தா னிடைவிடாமல்
உத்தமனே அந்திசந்தி யுண்டுபாரே. (84)

திமிருக்கு

உண்டவற்குக் காற்கடுப்புக் கைக்கடுப்பு
உஷ்டினங்கள் தீர்ந்துவெகு தாதுண்டாகும்
கண்டபடி நாம்சொன்னோம் இன்னமொன்று
காற்றிமிரு கைத்திமிரு குறைநோவுக்கு
மண்டைமுதல் பாதமட்டும் வீக்கங்கண்டு
மகத்துவஞ்சேர் கைகால்கள் விரலிலேதான்
விண்டுவிழ நீர்வடிந்து காதுமூக்கு
மேலுதடுங் கீழுதடும் வீங்கினோர்க்கே. (85)

நோக்கான அளிசம்சேங் கொட்டையெட்டி
நுணுக்கமுடன் புதுச்சரக்கின் படிதானொன்று
தாக்கான கெந்தகந்தான் பலமிரண்டு
தாயான வுவருப்புப் பலந்தானொன்று
வாக்கான வெடியுப்பு கல்லுப்புத்தான்
மகத்துவஞ்சே ரிந்துப்பு வகைமூன்றுக்கு
நீக்காம லரைப்பலந்தான் நிறுத்துவாங்கி
நீள்கருஞ் சீரகமுமரைப் படித்தான்சேர. (86)

சேர்க்கக்கார் கோலரிசி படிதானொன்று
செயமான கழுதைநீர் விட்டரைத்து
வாக்காக வில்லைதட்டி யுலர்ந்தபின்பு
மகத்தான குழித்தயிலம் வடித்தெடுத்துப்
பாக்களவு கொன்றைப்பூச் சூரணத்திற்
பரிவாக மண்டலந்தான் கொள்ளும்போது
நீக்கப்பா புளியுப்புப் பத்தியந்தான்
நிர்ணயமாய்ச் செய்தவர்க்கு நிவர்த்திதானே. (87)

சயரோகத்துக்கு

தானென்று வந்தபிணி யெல்லாந்தீரச்
சதாசிவனா ரிருடிகட்கு அருளிச்செய்தார்
வானென்ற வுலகிலுள்ள மானிடர்க்கு
வழங்காமல் மகாரிஷிகள் மறைத்துப்போட்டார்
நானென்ற ஆணவத்தால் விஸ்வாமித்ரர்
ராட்சதர்க்கும் சுரர்களுக்குஞ் சொல்லிவைத்தார்
தேனென்ற கோதும்பை லேகியத்தைச்
செய்தவர்க்கு ரெகுராமா தெளிந்துசெய்யே. (88)

கோதும்பை லேகியம்

செய்யவே கோதும்பை சிறுபயறு
சிறப்பான ஏலரிசி யுளுந்தினோடு
பையவே காற்படியும் அமுதமாவும்
பரிவமுக்கி ராவுநிலப் பனைநன்னாரி
வெய்யவே கசகசா யரிசியாவும்
விருதான சீரகமும் பலந்தானொன்று
நையவே யிடித்துவச்ர காயஞ்செய்து
நறுநெய்படி சீனிகற் கண்டுசேரே. (89)

சேரப்பா கற்கண்டு வெல்லந்தானும்
சேர்சமனாய்க் குளம்புபோற் பாகுகாய்ச்சி
நேரப்பா மருந்தெல்லாந் தூவிக்கிண்டி
நின்னயமாம் லேகியம்போ லிரக்கிக்கொண்டு
காரப்பா மண்டலந்தான் காலைமாலை
காசளவு உண்டுவரத் தீரும்நோய்கேள்
வாரப்பா யிருமல்கக்கல் தொண்டைநோவு
வரச்சியஸ்தி சுரத்தினொடு சயமும்போமே (90)

போமப்பா பித்தமொடு பீனிசங்கள்
புகைச்சல்முதற் பலபிணியும் போச்சுதப்பா
ஆமப்பா வச்சிரம்போற் றேகமாகும்
அழகுண்டாம் பெலமுண்டாந் தாதுவுண்டாம்
வாமப்பா யிந்தமுறை ஆண்டுகொண்டால்
வலுவுனக்கு எதிராரும் யில்லையப்பா
தாமப்பா யிந்தமுறை செய்தபேர்க்குத்
தப்பாது கூழ்ப்பாண்டந் தடியங்காயே. (91)

கூழ்ப்பாண்ட ரசாயனம்

தடியங்கா யொன்றுக்குப் பலந்தான்நூறு
சதிராக வாங்கியதை யிருகூறாக்கிக்
குடியிருக்கும் விரைதோடுந் தள்ளிப்போட்டுக்
குணமாகச் சீவியதைப் பிழிந்தெடுத்துக்
கெடிகலசத் ததிலிட்டு அடுப்பிலேத்திக்
கிண்டிவர நீர்வற்றும் பருவந்தன்னில்
வடிவாகப் பிழிந்தநீர் விட்டுக்கிண்டி
வத்தியபின் பாற்சோற்றின் பருவமாமே. (92)

ஆமப்பா அப்போது நறுநெய்நாழி
அதில்விட்டுக் கிண்டிவரப் பொறிப்போலானால்
தாமப்பா சீனிபல மெட்டும்போட்டுச்
தயவாகக் கிண்டிவரும் பருவந்தன்னில்
வாமப்பா சந்தனமும் வாய்விளங்கம்
வங்காளப் பச்சைதிரி கடுகுஏலம்
ஏமப்பா வால்மிளகு வங்கமாஞ்சி
யிலவங்கப் பத்திரிகச் சோலந்தானே. (93)

தானென்ற அதிமதுரங் கிராம்புகோஷ்டம்
சாதிக்காய் சாதிபத்திரி தக்கோலந்தான்

நானென்ற அதிவிடையம் யானைத்திப்லி
நல்லதொரு சீரகஞ்செண் பகத்தின்மொட்டு
வானென்ற லாமிச்சு தாளிசபத்ரி
வகைமூன் று கழஞ்சிடித்து வடிதான்கொண்டு
பானென்ற முன்பருவந் தன்னிற்றூவி
பதமாக நீபருவம் பார்த்திரக்கே. (94)

இரக்கியோர் படிசிறுதேன் விட்டுக்கிண்டி
இளக்கியொரு பாத்திரத்தி லடைத்துக்கொண்டு
அரைக்குள்வைத்துக் கூழ்பாண்ட ரசாயனத்தை
ஆறிருநா ளிருபோது அருந்தினோர்க்கு
விரைக்குமே மேகவெட்டை சிரோணிதவாய்வு
வெப்புப்பீ னிசசயங்கா யாசுவாசம்
மரைக்குமத்தி சுரந்தீரும் தாதுபுஷ்டி
மானிடர்க்கு அன்னருசி வழங்குந்தானே. (95)

துருசுச்சுண்ணம்

வளங்கவே துருசுனுட வித்தைதன்னை
வளமான பாவைவிரை தன்னைவாங்கி
விளங்கவே குழித்தயிலம் வடித்தெடுத்து
வீறான துருசுகட்டி தன்னிற்பூசி
களங்கமற்ற ரவியில்வைக்க நாலாம்நாளிற்
கட்டிப்போம் பிறகுபதி மூன் றுவாரம்
முளங்கவே ரவியில்வைக்க நீறிப்போகும்
முடிவதனை யொருவர்க்கும் மொழியொண்ணாதே.
(96)

பட்டைரசாயனம்

மொழியக்கேள் துருசுசுண்ணம் வேதைக்காகும்
முக்கியமாம் வயித்தியத்தின் போக்குக்கெல்லாம்

எளிதல்ல வெகுசுருக்கு குடோரியாகும்
இதுபோலே இன்னமொரு மருந்துதானும்
தெளிவாகப் பட்டைரசா யனத்தைச்சொல்வேன்
திறமாகச் செய்மருந்து குறையாமற்றான்
வழியாகச் செய்யப்பா சங்குகருஞ்சூரை
வாகுநில வேம்புசெந் தட்டிவேரே. (97)

வேரான யமுக்கரா நாமத்தாளி
வெள்ளறுகு குளப்பாலை கண்டங்காரி
பேரான தூதுவளை சங்கங்குப்பி
பிரியமுள்ள கெருடக்கொடி குறிஞ்சாவோடு
வேரான பதிமூன்று வேப்பம்பட்டை
விளங்கவே வகையொன்று பலந்தானொன்று
சீராக இவ்வளவு மிடித்தூள்செய்து
சீலைவடி கொண்டபின்பு செய்திகேளே. (98)

செய்தியென்ன சாதிக்காபத் திரிகிராம்பு
சிறுதேக்கு சண்பகமொட் டபின்கஞ்சாவும்
எய்தியதோ ரேலமில வங்கமாஞ்சி
இயல்பான திருகடுகு திரிபலையுந்தானே
உய்திடவே கொத்தமல்லி சிறுநாகப்பூ
உளமகிழும் அதிமதுரம் வால்மிளகு
வைதிகரே காயமிலா மிச்சுவோமம்
வளமான வெள்ளுள்ளி கூகைநீரே. (99)

நீருடனே சித்தரத்தை பேரரத்தை
நிசமான சீரகமத் தித்திப்பீலி
கூருடனே குங்குமப்பூ கோரோசனையும்
குணமான கோஷ்டமொடு தாளிசபத்ரி

பேருடனே பேரீத்தம் பழத்தினோடு
பெரிதான முந்திரிகை திப்பிலிமூலம்
வீருடனே மருந்துவகை முப்பத்தாறும்
வெவ்வேறே களஞ்சிரெண்டு வகையொன்றுக்கே. (100)

வகையான சீனமென்ற பட்டைதன்னை
வாங்குவாய் பதினைந்து பலந்தானப்பா
துகையான மருந்தெல்லா மிடிதூள் செய்து
துடியாக ஐம்பதையும் ஒன்றாய்ச்சேர்த்து
தகையாமல் கரும்புவெல்லம் பலமுமஞ்சு
சட்டியிட்டு அடுப்பில்வைத்து தண்ணீர்விட்டு
பகையாமல் பாகாக்கி யிறக்கிவைத்துப்
பக்குவமாய்ப் பொடித்தூவிக் கிண்டுகிண்டே. (101)

கிண்டயிலே சீனிபலம் பதினைந்தப்பா
கெடியான தேன்நாழி நறுநெய்நாழி
கொண்டதிலே கூடவிட்டுக் கிளறிக்கொண்டு
கோவின்பால் நாலுபடி தன்னைவாங்கி
பண்டையிலே பால்காச்சுந் தாளிதன்னிற்
பால்விட்டு அடுப்பேத்தி வண்டுகட்டி
வண்டதின்மேல் முன்மருந்து வைத்துமூடி
வளமாக வெந்தபின்பு இறக்கியுண்ணே. (102)

உண்ணுவது நெல்லிக்கா யளவதாக
ஒருநாளைக் கிருபோது காலைமாலை
திண்ணுவாய் பிரமேகங் குன்மமெட்டுந்
தீராத கிரந்திகுட்ட மூலவாய்வு
புண்ணுடனே வெடிசூலை பவுந்திரங்கள்
புழுக்கடியுஞ் சொறிசிரங்கும் புரையுமாறும்

கண்ணுமணி யாகுமிந்த ரசாயனத்தைக்
 கருதியுண்ணும் புளியாகாப் பத்யந்தானே. (103)

அரையாப்பு

தானென்ற அரையாப்பு வந்துதானாற்
 சமூலமடா கவுதும்பை பிடிங்கிவந்து
நானென்ற சூட்சமடா லாடமூலி
 நாவினா லுரையாதே அரைத்துப்பூச்
கானென்ற வூமத்தங் காயைச்சுட்டுக்
 கடுக்காயுஞ் சுட்டுநீ கருதக்கேளு
மானென்ற கும்பிடுகற் சிப்பிசுட்டு
 வாழையுட பழத்தொலியைச் சுட்டிடாயே. (104)

சுட்டெடுத்த மருந்துடனே வெல்லங்கூட்டிச்
 சுருக்கான கோழிமுட்டைக் கருவாலாட்டிக்
கட்டவிழ்த்து மூன்றாம்நாட் பூசும்போது
 கரைந்துவத்து மரையாப்புச் சூலைதானும்
திட்டமகிழ் ரசவாதி வயித்தியந்தான்
 தேசத்தி லிம்மூலி செப்பமாட்டான்
மட்டலருங் குழலாளைச் சடையில்வைத்த
 மானேந்தி சொன்னவித்தை வாய்விட்டேனே. (105)

வாதராட்சதன் குளிகை

விட்டகுறை தொட்டவுடன் பலிதமாகும்
 வீண்பேச்சுக் கசடருக்குப் பலித்திடாது
திட்டமுடன் வாதராக்கன் குழிகைதன்னை
 ஜெகத்திலுள்ள பண்டிதர்க் காயாதிநாதன்
சட்டமுனிக் குரைத்தபடி நானுங்கேட்டேன்
 தப்பாது கைகண்ட வித்தையப்பா

கட்டரச செந்தூரம் காந்தசெந்தூரம்
கனமான லோகமுடன் கருதுவாயே. (106)

கருதுவாய் லோகசெந் தூரமூன்றும்
கடிதான தாம்பிர்பற்பம் நாவிலிங்கம்
பெரிதுவாச் சாரமனோ சிலையுமப்பா
பேர்பெற்ற துருசுசுண்ணம் கடுகுரோணி
விருதான சீரகமுஞ் சித்ரமூலம்
வெப்பாலை நன்னாரி பதினாலுந்தான்
அரிதான வகையொன்று கழஞ்சுமூன்று
அடவான நேர்வாளங் கொட்டையாறே. (107)

ஆறுடனே கெந்தகமுங் காயமப்பா
அடவான பொரிகாரம் நவச்சாரந்தான்
வீறுடைய வின்னாலு மருந்தையுந்தான்
வெவ்வேறே வகைக்காறு கழஞ்சுவாங்கி
பேறுடைய மருந்தொருபத் தொன்பதையும்
பிசகாமற் குழியம்மி தன்னிலிட்டுக்
கூறுடைய நொச்சியிலைச் சாற்றாலாட்டிக்
குழியம்மி தனில்வைத்துப் பின்னுங்கேளே. (108)

பின்னுமதை வெள்ளுள்ளிச் சாத்தாலாட்டிப்
பிசகாமற் குன்றிபோற் குளிகைசேர்த்து
நண்ணுகின்ற சிறுதேனிற் கொள்ளும்போது
நாடியதோர் வாதமெண் புதையுந்தீர்க்கும்
சண்ணுமடா கன்னிபதின் மூன்றுந்தீரும்
சார்வான வலியஞ்சும் சாந்தமாகும்
திண்ணுவரில் பெருவயிறு மூலவாய்வு
தீராத பாண்டுமகோ தரமுந்தானே. (109)

தானான சோகையொடு வறச்சிதீரும்
தாரணியில் வெகுநோவு உதிரவாய்வு
ஊனான சூதவலி உஷ்ணரோகம்
ஓடிவிடுஞ் சுரங்களெலா மூரைவிட்டுத்
தேனான வாதராட் சதனைநன்றாய்ச்
செப்பில்வைத்து மூடியே பதனஞ்செய்து
கோனான யீஸ்பரனைப் பூசைபண்ணிக்
குளிகைதனை யெடுத்துநீ மருந்துசெய்யே. (110)

தழுதாழியெண்ணெய்

செய்யவே தழுதாழை யெண்ணெய்தன்னைச்
செய்யகுறுந் தொட்டிவேர் பலம்பன்னாறு
துய்யதொரு தூணிசலந் தன்னிற்போட்டுச்
சுருக்காகக் காச்சியதை யெட்டொன்றாக்கி
எய்யாம லெள்ளெண்ணெய் படியிரண்டு
இயல்வாத மடக்கியிலைச் சாரெண்ணாழி
அய்யாவெள் ளாட்டின்பால் நாழிதானும்
அடவாகப் பாத்திரத்தி லிட்டுவையே. (111)

வையேநீ ஒருபொழுது களித்தெடுத்து
வரிசையுட னடுப்பேத்திக் காயும்போது
மெய்யேநீ வெள்ளாட்டின் உரிபால்தானும்
விட்டவுடன் கடைமருந்து கிராம்பு கோட்டம்
செய்யேநீ யேலமில வங்கத்தோடு
செண்பகத்தின் மொட்டுடனே சாதிக்காயும்
உய்யேநீ அதிமதுரம் விடையந்தானும்
உரைப்பான மிளகினோ டொன்பதாமே. (112)

ஆமிந்த மருந்தெல்லாம் பொடித்துப்போட்டு
அடவாகக் காய்ச்சிடுவாய் சதங்கைபோலே

வேமிந்தப் பருவத்தில் வெள்ளாட்டின்பால்
விட்டிடுவாய்ப் படியொன்று விரைவதாகத்
தாமிந்தப் படிமெழுகு பதத்திற்காய்ச்சி
தப்பாம லோர் நாள்விட் டோர்நாள்தன்னில்
ஓமிந்தப் படிமுழுகி வந்தபேர்க்கு
உடல்வாதங் கால்வாத மோடிப்போமே. (113)

ஓடிப்போம் திமிர்வாதங் கைவாதங்கள்
ஊழ்வினையால் வந்ததொரு முடக்குவாதம்
ஓடிப்போம் உலகதனில் நில்லாதப்பா
உடற்குத்துச் சந்துவலி பிடரிக்குத்து
வாடிப்போம் வீக்கம்வலி யானதோடே
வாதவகை எண்பதுக்கும் மருந்திதாகும்
கூடிப்போம் படுகாய மானதெல்லாம்
கூடுதற்கு எண்ணெயொன்று கூறுவோமே. (114)

படுகாயத்துக்கு எண்ணெய்

கூறான சித்தகத்திச் சாறுநாழி
குணமான யெள்ளெண்ணெய் படிதான்நாழி
வீறான வேம்பாடம் பலந்தானொன்று
விதமாக இவ்வளவும் ஒன்றாய்ச்சேர்த்துப்
பேறான அடுப்பேத்தி வத்தக்காய்ச்சி
பிசகாமல் மெழுகுபதந் தன்னில்வாங்கி
வாறான பழஞ்சேலை தன்னிலூட்டி
வடுவான புண்ணிலிட மாய்ந்துபோமே. (115)

மாயவே யின்னமொரு வகைதான்கேளு
மகாரிஷிகட் கீசுரனார் சொன்னவித்தை
காயகஞ் சாங்கோரை யென்று சொல்வார்
கண்டவர்கள் பேய்த்துளசி யென்றுஞ்சொல்வார்

நேயமுடன் பூசைசெய்யும் பச்சைப்பாலே
நிற்குமிது சித்திலையாய் வெளுத்திருக்கும்
வாயதுதான் பேசாமல் இலையைவாங்கி
வளமான பச்சைமஞ்சள் பிடிகள்தானே. (116)

மஞ்சளது விரலியிலே பத்துவைத்து
வடிமெழுகு போலரைத்து அயக்கரண்டி
துஞ்சவே குழப்பியதில் தேங்காயெண்ணெய்
தூவியே நீர்வத்தக் கிண்டிக்காய்ச்சி
நெஞ்சதுதா னுரைத்ததுவே படுகாயத்தில்
நெற்கனமாய்ப் பொதிந்துகட்ட வாறிப்போகும்
நஞ்சமுத மாகவுண்ட நாதன்சொன்ன
நலமான மருந்துதனை நாடிப்போரே. (117)

காயப்புண்ணுக்கு

பார்க்கவே யின்னமொரு முறைதானப்பா
பரிவான சீனியுடன் காசுக்கட்டி
சேர்க்கவே வகையொன்று கழஞ்சுரெண்டு
திறமாகக் குழியம்மி தன்னிலிட்டு
ஆர்க்கவே பொடிசெய்து படுகாயத்தில்
அடைவாகப் பொதிந்துகட்ட ஆறிப்போகும்
தீர்க்கவே யிதைவிட்டால் வேறொன்றில்லை
செப்பார்க ளிந்தமுறை செகத்துள்ளோர்க்கே. (118)

குன்மத்துக்கு உப்பு

ஜெகத்திலுள்ள குன்மமெட்டுந் தீர்ப்பதற்குத்
திரமான லவணபற்பஞ் செப்பக்கேளு
இகத்திலுள்ள கறியுப்புப் பலந்தான்வாங்கி
எருக்கலம்பால் விட்டரைத்து வில்லைசெய்து

சுகத்திலே காய்ந்தபின்பு ஓட்டில்வைத்துச்
சுழுவாக முழப்புடத்தில் வைத்தாயாகில்
மகத்தான பற்பமது வாகும்பாரு
மஞ்சாடி பனைவெல்லந் தன்னிற்கொள்ளே. (119)

மூதண்டகசாயம்

கொள்ளவே தினமூன்று குள்ளதாகக்
குடிபோகுங் குன்மமெட்டுங் குடலிலில்லை
விள்ளவே செய்யாதே யின்னமொன்று
விளம்புகிறேன் வாய்ப்புண்கள் தீருதற்கு
மெள்ளவே அறுகம்வேர் பிடிதானொன்று
விரைவாகத் தானெடுத்துச் சுத்திசெய்து
நள்ளவே சீரகந்தான் கழஞ்சுரெண்டு
நலமான மிளகுபத்துக் கூடக்கூட்டே. (120)

கூட்டியே யிருநாழி தண்ணீர்விட்டுக்
குறுக்கியே ஆழாக்காய் வத்தக்காய்ச்சி
நாட்டியே புன்னைக்கா யளவாம்வெண்ணெய்
நலமாக யிட்டிரண்டு பொழுதுகொள்ள
வீட்டிலுள்ள அழல்தானு மத்துநன்றாய்
வீறான வாய்ப்புண்கள் தீர்ந்துபோகும்
தாட்டிமையா மூதண்டக் கிசாயமப்பா
தப்பாது கைகண்ட வித்தைதானே. (121)

நீரடைப்புக்கு

வித்தையென்ன நீர்செறுப்பு நீரடைப்பு
வெகுகடின மானதுவுந் தீரவென்றால்
தத்தையுட மூக்குநிறச் சந்தனந்தான்
தனியாவின் கோரொசனை தானுங்கூட்டி

ஒத்தையிலே யொருவித்து தேத்தான்கொட்டை
உத்தமனே முலைப்பாலில் மைப்போலாட்டிக்
கத்தன்கங்கைச் சடையானைப் போற்றிசெய்து
கடிகைக்கு மேல்வயிற்றிற் கனமாய்ப்போடே. (122)

போட்டபின்பு பூங்கதலி வாழைத்தண்டு
புகழாகக் கிழங்குடனே நாறுதள்ளி
வாட்டமற வாகாகக் கொண்டுவந்து
வட்டமதாய் நறுக்கியதை யெடுத்துக்கொண்டு
தோட்டத்திற் சிறுபசலி பிடிதான்வாங்கிச்
சுகமாக யீதிரண்டுங் கலத்திலிட்டு
நாட்டமுடன் நாழிஜலங் கூடவிட்டு
நலமாக எட்டொன்றாய் வத்தக்காய்ச்சே. (123)

கஷாயம்

காய்ச்சியே கொண்டவர்க்கு நீர்ச்செறுப்பு
கடினமுள்ள நீரடைப்புத் தீர்ந்துபோகும்
ஆச்சரியம் வெகுசுருக்கு இதுதானப்பா
அடவாகச் செய்வதற்குப் பலிதமாகும்
தாச்சணியம் வாராம லின்னமொன்று
தயவாகச் சொல்லுகிறோம் சூலையரையாப்பு
மாச்சிமையாய்த் தீர்ப்பதற்குச் சித்ரமூலம்
மங்கையற்கு ஆண்வேரை வாங்குவாயே. (124)

சூலை அராயாப்புக்கு எண்ணெய்

வாங்குவது ஆணுக்குப் பெண்வேரப்பா
வரிசையுடன் நரம்புதள்ளித் தொலியெடுத்துப்
பாங்குடனே பலமொன்று நிறுத்திக்கொண்டு
பசுவினுட பால்படியி லிட்டபோது

தாங்குவது கருகாமல் வத்தக்காய்ச்சி
சதிரான வேர்த்தொலியை யெடுத்துக்கொண்டு
தீங்கான துருசுகால் களஞ்சிசேர்த்து
சிறப்பான இலுமிச்சப் பழந்தான்பத்தே. (125)

பத்தான பழச்சாத்தா லாட்டிமைந்தா
பரிவான நல்லெண்ணெய்படி யிற்பாதி
சித்தான முன்மருந்தை கலக்கிக்கொண்டு
சிறப்பான கரும்புவெல்லம் பலந்தானிட்டு
வத்தான மெழுகுபத மாகக்காய்ச்சி
வாங்கிமறு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு
சுத்தான சுக்குநெல்லி யளவதாகக்
கரண்டியெண்ணெய் ஒருபொழுது கண்டுகொள்ளே. (126)

கொள்ளப்பா மூணரைநா ளேழுபோது
கொண்டவற்கு அரையாப்புச் சூலைபதினெட்டு
விள்ளப்பா செய்யாம லோடிப்போகும்
வெகுநாளை வியாதிகட்கு மிதனைச்செய்நீ
தள்ளப்பா தள்ளிவிடு முலகுதன்னில்
தரியாது உடம்பைவிட்டுச் சாடிப்போகும்
எள்ளப்பா தப்பிலைகை கண்டவித்தை
என்னசொல்வேன் வெகுசுருக்கு வயித்தியந்தான். (127)

நாசிகாபீடம் தலைக்குத்து

நானென்ற நாசிகா பீடத்துக்குச்
சாதிலிங்கம் ரசந்தாரங் கெந்தகந்தான்
கானென்ற காந்தமுடன் வகையஞ்சுக்குங்
கழஞ்சொன்று வெவ்வேறே நிறுத்துவாங்கித்

நாற்பத்தெண் சித்தர்

தேனென்ற மைப்போலச் சூரணித்துச்
சேலையிலே தானூட்டித் திரித்துக்கொண்டு
ஊனென்ற வூமத்துக் கழஞ்சுநொச்சி
உறப்பாம்வே லிப்பருத்தி யிலையின்னாலே. (128)

இன்னாலு வகையிலையுஞ் சமபாகந்தான்
இடித்தெடுப்பா யொருபடிச்சா றியல்பதாக
முன்னாலே திரித்ததிரி சாத்திலிட்டு
முருகவே காய்ந்தபின்னவ் விதமதாக
நன்னாலு தரமிட்டுக் காய்ந்தபின்பு
நலமான திரிகொளுத்திக் குழல்வைத்தூதப்
பின்னாலே போகாமற் புகையைவாங்கிற்
பீடமது நீராக கரைந்துபோமே. (129)

கரைந்துபோம் நாசிகா பீடந்தானும்
கனமான தலைக்குத்தும் நாசிநீரும்
விரைந்துபோம் மண்டையிடி மூக்கடைப்பு
விசமான சிரசுநீர் குறுகுறுப்பு
இரைந்துவரும் செவிக்குத்துந் தீர்ந்துபோகும்
இதுபோலே சுருக்கேது மில்லையப்பா
சிரந்தனிலே நதிமதியை யணிந்தநாதன்
தெட்சணா மூர்த்திக்குச் சொன்னவாக்கே. (130)

லோகபற்பம்

வாக்காக லோகபற்பம் சொல்லக்கேளு
வாழ்குமரிக் கரையோரம் மணலுருக்கி
நோக்காக யெடுத்தஅயந் தன்னைவாங்கி
நுணுக்கமாய்த் தகடடித்து ஒருச்சாணப்பா
பார்க்கவே சமசதுர மாகவெட்டிப்
பனைவோலைக் கனமாகத் தகடொன்றுக்குத்

தூக்கடா அரைக்கழஞ்சு வீரம்பூரம்
சுருக்கான நவச்சாரங் காரந்தானே. (131)

நவலோகம்

காரமுள்ள சவுக்காரம் வெள்ளைநாவி
கனமான வெடியுப்புக் கெந்தகந்தான்
தூரமுள்ள சூதமொடு வகையொன்றுக்குத்
தூக்குவாய் அரைக்கழஞ்சு இடையதாக
சாரமுள்ள சம்பளச்சார் விட்டுஆட்டித்
தகட்டிலப்பிப் பறந்தசட்டி தன்னில்வைத்து
நேரமுள்ள ரவியில்வைத்துக் காய்ந்தபின்பு
நிசமாக இன்னமொரு சட்டிமூடே. (132)

கெந்தகசுத்தி

மூடியே சீலைமண் ணஞ்சுசெய்து
மூடுவாய் குழிவெட்டிக் கெசபுடத்தில்
வாடியே போகாது நீறிப்போகும்
வளமாக இன்னமொரு புடந்தானப்பா
நாடியதோர் கெந்தகமும் பசுவின்வெண்ணெய்
நலமான அயக்கரண்டி தன்னிலிட்டுக்
கூடியே உருக்கியதைச் சிவக்கும்போது
கோவின்பால் தனிற்சாய்த்துப் பின்னும்பாரே. (133)

பின்னுமிரு கழஞ்சுகற் பூரங்கூட்டிப்
பிரபலமாய் முன்வைத்த லோகஞ்சேர்த்துப்
பொன்னுமிச்சம் பழச்சாறு தன்னாலாட்டிப்
புதுச்சட்டி தன்னில்வில்லை தட்டிவைத்து
முன்னுரைத்த படிரவியிற் காய்ந்தபின்பு
மூடுவாய் மறுசட்டி மேலேவைத்து

நுன்னுரையாய்ச் சீலைமண் முன்போற்செய்து
நுணுக்கமாய்க் கெசபுடத்தில் வைத்திடாயே. (134)

வைத்திடவே லோகமது நீறிப்போகும்
மகத்தான லோகமது ஒன்பதுந்தான்
பொய்த்திடா திந்தமுறை நீறிப்போகும்
பூதலத்திற் கைகண்ட வித்தையாகும்
மைத்தடங்கண் மாதுமையாள் பாகனான
மானேந்தி சொன்னதிந்த வயித்தியத்தை
மெய்த்திடவே செய்யாமல் வயித்தியோர்கள்
விதம்பலவாய்ச் செய்ததினாற் சீர்கேடாச்சே. (135)

வில்வாதி லேகியம்

சீரான வில்வாதி லேகியந்தான்
சித்தரெல்லாம் பலவிதமாய்ப் பெருநூற்சொன்னார்
பாராமற் பாடினதை உமையாள்பாகன்
பார்த்துவெகு கோபமுண்டா யிருத்திவைத்தார்
பேரான லோகபற்பம் லேகியந்தான்
பிசகாம லிந்நூலிற் பேசினேனான்
நேரான லோகபற்பம் முன்னேசொன்னோம்
நிசமான வில்வாதி பின்சொல்வோமே. (136)

சொல்லவே வில்வவேர் பலமையாறு
சுகந்தமாம் வெட்டிவேர் பலந்தானாறு
நல்லமுத்தக் காசுகரு வேப்பினீக்கில்
நலமான விலாமிச்சு இம்மூன்றுந்தான்
வெல்லவே வகையொன்றுக் கோர்பலந்தான்
வெவ்வேறே நிறுத்தஞ்சு மொன்றாய்ச்சேர்த்துக்
கொல்லவே நாக்குறுணி தண்ணீர்தன்னிற்
குறுகவே தரித்திடித்து வத்தக்காய்ச்சே. (137)

காய்ச்சியே யெட்டொன்றாய் வடித்துவாங்கிக்
கசாயத்திற் றுலாமரைக்கா லிஞ்சிசீவிப்
பாச்சியே யிடித்துநல்லச் சாறெடுத்துப்
பக்குவஞ்சேர் முன்மருந்துங் கூடக்கூட்டி
மாச்சியே கரும்புவெல்லம் பலமோரெட்டும்
மகத்தான முன்னீரிற் கரைத்துநன்றாய்
ஆச்சியே வடிகொண்டு அடுப்பிலேத்தி
அதுவத்திச் சோணைவிழும் பருவம்பாரே. *(138)*

பருவத்திற் சடாமாஞ்சி செவியங்கோட்டம்
பண்பான கூகைநீர் கச்சோலந்தான்
தருகப்பா யிலவங்கம் சந்தனமும்ஏலம்
தற்கோலந் திரிகடுகு சித்திரமூலம்
குருவாகுஞ் சாதிக்காய் கிராம்புபத்ரி
குரோசானி சிறுநாகப் பூவினோடு
மருவபீன் சீரகமுந் தாளிசப்பத்ரி
வங்காளப் பச்சைகருஞ் சீரகந்தானாமே. *(139)*

ஆகுமே பேரிச்சம் பழத்தினோடு
அடவான மருந்திருபத் தோடுமூன்றும்
வாகுபெற வகையொன்றுக் கொருபலந்தான்
வாங்கியே யிடித்துவடி கட்டிக்கொண்டு
பாகுதனிற் பிசரியே நறுநெய்நாழி
பக்குவமா யரைப்படிதேன் விட்டுக்கிண்டி
நாகுபட நீர்ப்பருவம் பார்த்திறக்கி
நல்லகண பதிக்குநீ பூசிப்பாயே. *(140)*

பூசித்து வில்வாதி லேகியத்தைப்
புகழாகப் பரணிதனில் வைத்துமூடி

ஆசித்தே மீண்டலந்தா னிரண்டுபோது
அத்திக்கா யளவெடுத்து லோகபற்பம்
நேசித்துப் பணவிடைதான் கூடச்சேர்த்து
நிசமாகத் தின்றுவரில் சத்திகுன்மம்
ஏசிப்போம் எரிகுன்மம் மேகவாய்வு
எப்பிளைப்புக் கிராணிமுதற் கிரக்கம்போமே. *(141)*

போமப்பா காமாலை பாண்டுசோகை
புழுக்கடிநா வழுவழுப்பு வயிற்பொருமல்
காமப்பா கலவியினால் வந்தமேகம்
காசமரோ சிகஞ்சுவாசங் கடுப்புத்தீரும்
தாமப்பா செயும்போதே தாதுபுஷ்டி
தப்பாது மலசுத்தி பசியுண்டாக்கும்
நாமப்பா யிந்நூலில் முறையாய்ச்சொன்னோம்
நாசிரத்தம் சிராய்விழும்பீ னிசத்தைக்கேளே. *(142)*

ரத்தப்பீனிசத்துக்கு

பீனிசந்தான் தீரவென்றால் மருந்தைக்கேளு
பிசுக்கொட்டி முருங்கையிலைக் கொழுந்தினோடு
மானிலத்திற் கரியுப்பு முலைப்பால்சேர்த்து
மயினமா யிடித்துநன்றாய்க் கிளிபோற்கட்டி
வானில்முகம் பார்க்கவே கிடத்திக்கொண்டு
வரிசையாய் நாசிக்கோர் துளிதான்விட்டால்
ஏனினித்தா னிருக்கின்றோ மென்றுசொல்லி
யேகுமே பீனிசமுஞ் சிராயுந்தானே. *(143)*

இஞ்சிலேகியம்

தானேதான் கொதித்தெழுந்த பித்தத்தாலே
தலைக்கிரக்கம் காலசதி சோகைமந்தம்

ஊனேதா னனல்மீறித் தாகங்கொண்டு
உதரவலி மெய்வீக்கம் மலம்பிடித்தல்
மானேதான் வந்துதென்றால் மருந்தைக்கேளு
வளமான நாட்டிஞ்சி துலைகால்வாங்கி
கானேதான் முளைத்தெழுந்த வேளைதன்னிற்
கனமான வேரொன்று கூடச்சேரே. (144)

சேரப்பா வெள்ளுள்ளித் தொலியைப்போக்கித்
திறமாகக் காற்படிதா னரிசிகூட்டிச்
சீரப்பா யிம்முன்று மிடித்துச்சாறு
சீலைவடி கொண்டபின்பு செய்திகேளு
காரப்பா கரும்புவெல்லம் பலந்தான்பத்து
கரைத்துவடி கட்டியதை யடுப்பிலேத்திப்
பாரப்பாச் சோனைவிழும் பருவந்தன்னில்
பண்பான கடைமருந்து பரிந்துபாரே. (145)

பரிவான சீரகந்தான் பலமூன்றப்பா
பழுதில்லாத் திரிகடுகு சித்தரத்தை
அரிதான அக்கராக் காரமதிவிடையம்
அழகான சிறுதேக்கு தாளிசபத்ரி
பெரிதான சாதிக்காய் சாதிப்பத்ரி
பெருமையுள்ள கிராம்புபெருங் காயத்தோடே
உரிதான மருந்துபன்னி ரண்டுமப்பா
வொவ்வொன்றும் முக்கழஞ்சு வுறப்பாய்வாங்கே. (146)

உறையாக மருந்தெல்லா மிடிதூள்செய்து
உத்ததொரு பாகுதனில் தூவிக்கிண்டிக்
குறையாம லரைப்படிதான் சிறுதேனோடே
கூட்டுநறு நெய்யுமரைப் படியேநன்றாய்

நிறையாக இவ்வளவும் விட்டபின்பு
நீர்வத்தி மெழுகுபதம் பார்த்திறக்கி
நறையாமற் பழந்தேங்காய் கொண்டுவந்து
நலமான கணபதியைப் பூசைசெய்யே. *(147)*

விஷத்துக்குக்குடோரி

செய்ததொரு லேகியத்தை நெல்லிக்காயளவு
தினமொன்றுக் கிருபோது முண்பாயாகில்
வைதமில்லா தோடிவிடும் மண்டலத்தில்
வயித்தியற்குக் காசுபணம் வாங்கலாகும்
மெய்தியதோர் சர்ப்பவிஷந் தீண்டினோர்க்கு
விருதான மருந்தொன்று விளம்பக்கேளு
தைவேளைச் சாறிலொரு துளிதலையிற்
றான்நெல்வாற் போற்கீறிப் பிழிந்துபோடே. *(148)*

சூரணம்

போடவே விஷமிறங்கி யோடிப்போகும்
பூதலத்திற் கைகண்ட மருந்தீதப்பா
தேடவே கிடையாமற் போச்சுதானாற்
சீக்கிரத்தி லாடுதொடா மூலிதன்னை
நாடவே சமூலமாய்க் கொண்டுவந்து
நலமாக இடித்துவச்சிர காயஞ்செய்து
கூடவே வெருகடிதான் சிறுநீர்தன்னிற்
கொடுத்திவே பாம்புவிஷ மெல்லாம்போமே. *(149)*

தேள்விஷத்துக்கு

விஷமென்ற தேளதுதான் கடித்துதானால்
வேளையிலை தனைக்கசக்கி யுள்ளங்கையில்
நிசமாக விரண்டுதுளி பிழிந்துகொண்டு
நிண்ணயஞ்சேர் நாசியினா லுறிஞ்சிவாங்கப்

பிசகாமற் றேள்விஷந்தா னிறங்கிப்போகும்
பேர்பெத்த வயித்தியர்க ளிதனைவிள்ளார்
கசமான பாழ்கிணற்றிற் பூமிநோக்கிக்
கட்டாகப் படர்ந்திருக்கு மறுகுதானே. (150)

சகலவிஷத்துக்கு மூலிகை

அறுகான பிடியொன்று யெடுத்துவந்து
அழகான மிளகுமுக் கழஞ்சுகூட்டிச்
சிறுநீரில் வடிமெழுகு போலரைத்துச்
சிறப்பான கரண்டியிலே கலக்கிக்கொண்டு
குறுகவே காய்ச்சியதைக் கடிவாய்தன்னிற்
குருநந்தி சிவாயநமா வென்றுபூசத்
தறுகாம லோடிவிடும் விஷங்களெல்லாம்
தர்மவித்தை யானதிது சாத்தொண்ணாதே. (151)

எலிகடிதீர

சாத்தொண்ணா தெலிகடித்த விஷத்துக்கப்பா
சதுரமுள்ள கள்ளியிலைக் கள்ளிவேர்தான்
மாத்தொண்ணா யிலுமிச்சங் காயளவு
மாறாமல் வெவ்வெறே அரைத்துருட்டிச்
சேர்த்தொன்றா யரிசிமா வுரிதான்கூட்டிச்
சிறப்பாக அடைதட்டி எள்ளெண்ணெயில்
ஏத்தொன்றா யவித்தெடுத்து மூன்றுநாள்தான்
எலிகடித்த மனிதருக்கு மியல்பாய்ச்செய்யே. (152)

இயல்பாக விப்படியே செய்யும்போது
எலிவிஷங்கள் பதினெட்டு மிரங்கிப்போகும்
பயமில்லை தோஷமில்லை பாவமில்லை
பத்யமென்ன புகையிலையும் புளியுமாகா

நயமாக மாதரனு போகமாகா
நறுநெய்பால் தயிருப்பு நாலுங்கூட்டு
சுயமான இந்நூலைத் துஷ்டருக்குச்
சொல்லாதே தோஷம்வரும் சூட்சஞ்செய்யே. (153)

கொடுவேலித்தயிலம்

செய்யவே கொடுவேலித் தயிலங்கேளு
திறமான கொடுவலிவேர் பலந்தான்பத்து
நையவே யிடித்ததனைப் பதக்குநீரில்
நலமாக அடுப்பேத்தி யெட்டொன்றாக்கித்
துய்யநல்ல சீரகந்தான் பலமதொன்று
தூக்கியே பசுவின்பால் விட்டுஆட்டி
அய்யமேன் நவநீதம் விளாங்காய்மட்டும்
ஆனதொரு நல்லெண்ணெய் படிதான்சேரே. (154)

ஆனவுட னிதைவடித்து முழுகும்போது
ஆனந்த வாய்வுடனே அந்தரவாய்வு
தேனமருங் குழலாளின் வாதமெல்லாம்
சிரங்குசொரி தினவுமுதல் குட்டந்தீரும்
போனதொரு அரையாப்புக் கிரந்திசூலை
புண்புரைகள் பிளவைமுதற் பொடிப்புவீக்கம்
நாணவே வந்தநோ யெல்லாந்தீரும்
நல்லதொரு தயிலமிது நாடிப்பாரே. (155)

லவண செந்தூர முறை

பாரப்பா அட்டகுன்ம வாய்வுபத்தும்
பாழான கெண்டைநீ ராம்பல்வீக்கம்
ஊரப்பா கெற்பசுரோ ணிதமாம்வாய்வு
உதரத்தின் திரட்சியொடு அண்டவாய்வு

தீரப்பா லவணசெந் தூரந்தன்னாற்
நீர்ப்பதற்குஞ் சுளுவாகும் மருந்தைக்கேளு
சீரப்பா கறியுப்புத் தன்னைவாங்கித்
திறமான மணியதனைத் தெரிந்துவையே. (156)

தெரிந்தெடுத்த கறியுப்புப் பலந்தான்மூன்று
சீரான வுவருப்புக் கல்லுப்புத்தான்
பரிந்தெடுத்த வெடியுப்பு இந்துப்புச்சீனம்
பாசாண வெள்ளையொடு பொரிகாரந்தான்
உரிந்தெடுத்த அண்டோடு கும்பிடுகல்சிப்பி
உத்தமனே அயக்காந்தந் துருசுவீரம்
வரிந்தெடுத்த மிருதார சிங்கிதாரம்
மனோசிலையுஞ் சாதிலிங்கங் கெந்திதானே. (157)

கெந்தியென்ன நெல்லிக்கா கெந்திநவச்சாரம்
கெடியான சூடனொடு இருபதுந்தான்
சிந்தியே போகாமல் வகையொன்றுக்குத்
திறமாக வொருகழஞ்சு நிறுத்துவாங்கி
நந்தியுட சீர்பாதம் போற்றிசெய்து
நலமாகக் கல்வத்தி லிட்டேஆட்டிப்
புந்திமகி ழெய்திடவே பொடித்துவாங்கிப்
புறம்பாக அருகில்வைத்துப் பின்னுங்கேளே. (158)

கேளப்பா காட்டாம ணக்கின்பாலைக்
கெடியாகக் காற்படிதான் கொண்டுவந்து
பாளப்பா போகாமற் கறியுப்போடு
பறந்தசட்டி தனிலேத்திக் கலந்துநன்றாய்
நீளப்பா காட்டாம ணக்கின்பாலை
நீர்வற்ற வறுத்தபின்பு அருகில்வைத்துத்

நாற்பத்தெண் சித்தர்

தூளப்பா யிறையினள வாகததூற்றிச்
சுருக்காக வறுத்திடச்செந் தூரமாமே. (159)

செந்தூரந் தனையெடுத்துச் செப்பில்வைத்துச்
சிவந்தபுஷ்பம் நூற்றெட்டு கையில்வைத்து
நந்திகுரு நசிமவய சர்வரோகம்
நசிமசியென் றொருநூறு நாமஞ்சாத்திக்
கந்தனுக்குங் கணபதிக்கும் பூசைசெய்து
கரும்புவெல்லம் தேனில்பண விடைதானிட்டு
அந்திசந்தி யிருபோது வாரங்கொள்ள
அடங்காத ரோகமெல்லா மடங்கிப்போமே. (160)

விஷ்ணுசக்கரம்

போமிந்த மருந்துகொண்டாற் பத்தியந்தான்
புளியுப்பு புகையிலையு மாம்சமாகா
நாமிந்தப் படிசொன்னோம் நந்திதேவர்
நலமான வேதைக்கா மென்றுசொன்னார்
தாமிந்தப் படிசெய்யி லிரண்டும்வாய்க்கும்
சாத்திரத்தை யொருவருக்கும் சாற்றொண்ணாது
ஓமிந்த வுபதேச முமையாள்பாகன்
உரைத்திட்ட படியுனக்கிங் குரைசெய்தோமே. (161)

உரைசெய்த விஷ்ணுசக் கரத்தின்போக்கு
உலகத்திற் பண்டிதர்கள் கண்டோரில்லை
நரையில்லை திரையில்லை சாவுமில்லை
நாலாயி ரஞ்சில்வான் வியாதியில்லை
பரையான உமைபாதந் தன்னைப்போற்றிப்
பரமனருள் தனைப்பெற்று ஆதிநாதன்
விரைவாகச் சொன்னதிந்த விஷ்ணுசக்ரம்
விபரமாய்ச் செய்துவிடு முறையாய்த்தானே. (162)

தானென்ற சந்தனமும் இலுப்பைப்பூவும்
தயவான முந்திரிபே ரீச்சங்காயும்
தேனென்ற திரிகடுகு கெந்திலிங்கம்
சிறப்பான காந்தமாம் பொடிவசம்பு
நானென்ற ரசமும்நிரு விஷம்வெள்ளுள்ளி
நன்னாரி கொடுவேலி பதினெட்டோடு
வானென்ற நறும்பிசினும் வகையொன்றுக்கு
மருந்துமுக் கழஞ்சுகுறை யாமல்வாங்கே. (163)

குறையாதே பெருந்தும்பை வேம்புநொச்சி
குணமான முருக்குகையான் ஆடாதோடை
அறையாதே தனிச்சாறாய் வகையொன்றுக்கு
ஆழாக்கு வீதமா யெடுத்துக்கொண்டு
மறையாதே கல்வத்தி லிட்டேஆட்டி
மகத்துவமாய்க் கடலையள வாயுருட்டி
நறைமலரும் பழந்தேங்காய் கரும்புவெல்லம்
நலமான கணபதிக்குப் பூசைசெய்யே. (164)

பூசைசெய்து குளிகைதனைச் செப்பில்வைத்துப்
புகழாக விஞ்சிச்சா றதனிற்கொள்ளப்
பாசையிட்டே ஜன்னிபதி மூன்றுமோடும்
பக்ஷவாதம் திமிர்வாதம் முகவாதங்கள்
ஓசையண்ட வாதவலி குன்மவாதம்
உரைத்தவுள் ளடிவாய்வு செவியின்நோவு
வேசையர்புண் ணோடுகுதிர் வலிகுடோரம்
வெருண்டோடும் வேறுவெள் ளுள்ளிவித்தே. (165)

வெள்ளுள்ளி லேகியம்

வித்தான வெள்ளுள்ளி யரிசிதன்னை
விரைவாக விரண்டரைப்ப லந்தானப்பா

கொத்தாம்வல் லாரைசா ரணைவேரோடு
கொழுந்தான பிரண்டையிவை வகைமூன் றுக்குச்
சித்தான வகையொன் றுக் கரைப்பலந்தான்
சேர்த்துப்பின் சாதிக்காய் சாதிப்பத்ரி
முத்தான குங்குமப்பூ முத்தக்காசு
முக்கடுகு திப்பிலியின் மூலந்தானே. (166)

மூலமதி மதுரமக்றாக் காரமோமம்
முனையான சீரகமுங் கிராம்பினோடு
ஏலமொடு கரியசீ ரகமுஞ்சேர்த்து
இம்மருந்து பதினைந்தும் வகையொன் றுக்குச்
சீலமுடன் முக்கழஞ்சு வீதந்தூக்கிச்
சிறப்பாக வொருபத்தொன் பதையுங்கோவின்
பாலமுதம் விட்டரைத்துப் பலந்தான்மூன் று
பனைவெல்லம் பசுவின்பால் படியிரண்டே. (167)

ரெண்டுபடி பசுவின்பால் தனிற்கரைத்து
ரேசித்து அடுப்பேத்தி நீர்தான்வத்தக்
கிண்டையிலே ஆழாக்குச் சிறுதேன்விட்டுக்
கெடியாக நீர்வத்தும் பருவம்பார்த்துக்
கொண்டதிலே ஆழாக்கு நறுநெய்விட்டுக்
குறிப்பான மெழுகுபதம் பார்த்திறக்கி
மண்டலந்தான் பாக்களவு காலைமாலை
மகத்துவமா யுண்டுவர வாசிகேளே. (168)

வாசியாங் கிராணியதி சாரம்போகும்
வயிற்றளச்சல் களிச்சல்பிர மேகமோடும்
பேசினதோர் குடல்வாய்வு உதிரவாய்வு
பெரிதான பித்தத்தின் வாய்வுவோடும்

கூசியதோர் உடல்நடுக்கம் குன்மவாய்வு
குடிபோகும் பித்தவெறி யாப்புத்தீரும்
நாசிநுனி புருவமையம் நாடிநிற்கும்
நாதனா ருரைத்தபடி நாட்டினேனே. (169)

தாளிசபத்திரி சூரணம்

நாட்டியே சொல்லுகிறே னின்னமொன்று
நலமாகத் தாளிசபத்ரி சூரணந்தான்
தாட்டியே அப்பத்ரி பலந்தான்பத்து
தயவான திரிகடுகு திரிபலாதி
நீட்டியே கோஷ்டமோ டக்ராக்காரம்
நினையத்தித் திப்பிலியுஞ் சீரகந்தான்
கூட்டியே கொத்தமல்லி வாய்விளங்கம்
கூரான கிராம்பேலஞ் சாதிக்காயே. (170)

க்ாயோடு பத்ரியு மாஞ்சிசோம்பு
கருவான வால்மிளகு லவுங்கப்பட்டை
தாயோடு சந்தனமும் கூகைநீரும்
தான்பலமொன் றாகச்சூ ரணித்துக்கொண்டு
சேயோடு சக்கரையுஞ் சமனாய்க்கூட்டிச்
சேர்த்துவெரு கடியளவாய்க் காலைமாலை
வாயோடு மண்டலந்தான் கொண்டாயானால்
வாங்குமடா சயகாச யீளைபோமே. (171)

போமப்பா அத்திசுரம் அத்திவெட்டை
பொருந்தாத நீர்த்தாகம் புண்ணாம்நெஞ்சில்
நாமப்பா பித்தவெட்டை பித்தப்பாண்டு
நாடாது கிராணிவகை யெல்லாந்தீரும்
தூமப்பா அரோசிகங்க ளன்னதோஷம்
தளராத விம்லொடு விக்கல்கக்கல்

நாற்பத்தெண் சித்தர்

சாமப்பா கைகாலி லெரிவுகாந்தல்
சாதகமாய்ப் புளியுப்பு மகிழ்ந்துதள்ளே. (172)

கொம்பரக்குத் தைலம்

மகிழவே கொம்பரக்குத் தயிலஞ்சொல்வேன்
வளமான கொம்பரக்குப் பலந்தானெட்டு
நிகழவே தூணிநீ ரெட்டொன்றாக்கி
நிசமாகத் தாளிக்குள் வடித்துவிட்டு
தகழவே யெள்ளெண்ணெய் சேர்தானஞ்சு
தயிர்த்தண்ணீர் சேரஞ்சு பால்சேரஞ்சு
நகழவே காடியது சேர்தானஞ்சு
நலமான கடைமருந்து சொல்லக்கேளே. (173)

கேளப்பா சதகுப்பை கடுகுரோகிணி
கிளியூறல் பூஞ்சாந்து பச்சைப்பூலா
தாளப்பா செவ்வள்ளி வங்கபத்ரி
தளமான யிலவங்கம் மாஞ்சிகோஷ்டம்
வாளப்பா கஸ்தூரி மதுரங்கெந்தம்
வளமிருசீ ரகமேல மிவைகளெல்லாம்
ஆளப்பா வகையொன்றுக் கிருகழஞ்சு
ஆவின்பால் விட்டுநீ ஆட்டுவாயே. (174)

ஆட்டுவா யெள்ளெண்ணெய்க் குட்கரைத்து
அடுப்பேத்தி மெழுகுபத மானபின்பு
நாட்டுவாய் வடித்ததனை முழுகும்போது
நலமாகத் தீருகிற வியாதிகேளு
தாட்டிகமாம் பித்தவெட்டைச் சுரமும்போகும்
தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்
வாட்டியதோர் தேகசுர மிரண்டேவோடும்
வத்தியதோர் தேகமெல்லாம் ஊறும்பாரே. (175)

ஊறுமே கணைவெட்டை கணைசுரங்கள்
உத்தமனே கணைபாண்டு வெளுத்ததேகம்
தேறுமே தேகத்தில் வலிகடுப்பு
திறமான சூலையெல்லாந் தீருந்தீரும்
நாறுமே கற்றாழை நாற்றம்வீச்சம்
நலமாகும் வியாதியெல்லாம் நாடாதோடும்
சீறுமே காசமெலாந் தீர்ந்துபோகும்
திறமாக வொன்றைவிட் டொருநாளெண்ணே. *(176)*

உவருப்பு பற்பம்

எண்ணவே பத்தியந்தான் புளிகசப்பு
இதமான புகையிலைபெண் போகமாகா
நண்ணயமா மருந்தொன்று சொல்லக்கேளு
நலமான உருவப்புத் தன்னைவாங்கி
அண்ணதனை யிருசாமந் தாளிச்சாற்றில்
ஆட்டியே கதுவாலிப் புடத்திற்போட
வண்ணமுடன் வெள்ளையா மதையெடுத்து
மறுதரமு மப்படியே புடத்திற்றாக்கே. *(177)*

நீலகண்ட செந்தூரம்

தாக்கியே அஞ்சுதரம் புடத்திற்போடு
தயவான வெள்ளையதை யெடுத்துக்கொண்டு
பாக்கியஞ்சேர் வெள்ளைக்குச் சரிபாகந்தான்
பண்பான துருசுதனைக் கூடச்சேர்த்து
யோக்கியமாய்த் தாளிச்சா றதனாலாட்டி
ஓங்காரக் கணபதியைப் பூசைசெய்து
பூக்கமழுஞ் சடையண்ணல் பாகம்பெற்ற
பொற்கொடியைப் போற்றிசெய்து புடத்திற்போடே.
(178)

போட்டவுடன் ஆத்தாளைப் போற்றிசெய்து
புடமாறி யெடுத்திடச்செந் தூரமாகும்
வாட்டமற்ற நீலகண்ட செந்தூரத்தை
வலுவான பிணிகளுக்கு மருந்துகூடக்
கூட்டியே அரிசியிடை கொடுத்தாயானால்
கூத்தாடி யோடுமப்பா ரோகமெல்லாம்
நாட்டமுள்ள முப்பூவு முடித்துச்சேர்த்தால்
ராஜவயித் தியனென்பார் நல்மதாமே. (179)

முப்பு

நலமான முப்பூவைச் சித்தரெல்லாம்
ரசவாதஞ் செய்வதற்கோர் விதமதாகப்
புலமாகச் சொல்லிவிட்டார் பூமிதன்னிற்
புத்திகெட்ட மனிதரப்பா செய்துபார்த்துப்
பலமான தில்லையென்று விட்டுவிட்டார்
பரிகாசப் பேச்சாச்சிப் பாரைச்சூழ்ந்த
ஜலமான சமுத்திரத்தை யுண்டநாதன்
தட்சணா மூர்த்திசொன்ன திட்டந்தானே. (180)

திட்டமுள்ள சித்தருக்கும் முனிவருக்கும்
தேவருக்கும் ரிஷிகளுக்கும் மனுடருக்கும்
அட்டதிக்கும் போற்றுகுரு நாதனப்பா
ஆதிமுனி அகத்தீச ரைம்பதுக்குள்
வெட்டவெளி யாயுரைத்தார் முப்பூதன்னை
விபரமாய் நான்பார்த்தேன் சூட்சமாக
விட்டகுறைக் காரனென்றே யென்னைச்சொன்னார்
விருதான முப்பூவின் விபரம்பாரே. (181)

உவருப்பு சுத்தி

பார்தனிலே உவருப்பைக் கொண்டுவந்து
பாண்டத்தி லளந்திட்டு நாலுபங்கு
சீர்பெறவே சுத்தஜலந் தன்னைவிட்டுச்
சிறப்பாகக் கலக்கியதைத் தெளிவிருத்துப்
பேர்பெறவே அடுப்பேத்தி வத்தக்காச்சிப்
பிலமான உப்பெடுத்துப் பின்னுஞ்சுத்த
நீர்தனையே யிருபங்கு கூடச்சேர்த்து
நிசமாகப் பத்துமுறை காச்சிவாங்கே. (182)

வாங்கியதோ ருவருப்புச் சுண்ணந்தன்னை
வளமான பரணியிலே பதனஞ்செய்து
தீங்கில்லாக் கறியுப்புத் தன்னைவாங்கித்
திறமான மணியதனைத் தெரிந்தெடுத்துப்
பாங்காய்நீ யிரட்டிஜலந் தனிற்கரைத்துப்
பார்தெளித்துப் பத்துமுறை முன்போலாக
நீங்காமற் காச்சியதை யெடுத்துக்கொண்டு
நிண்ணயஞ்சேர் கல்லுப்பு நிலையைக்காணே. (183)

கல்லுப்பின் விபரம்

காணவே கல்லுப்பென் கடையில்விற்பார்
கடலிலே பாறைக்குள் வளர்ந்தஉப்பு
தோணவே பளிங்குக்கல் போலிருக்கும்
துவர்ப்புடனே புளிப்பிருக்கும் மருந்துக்காகா
தாணுவென்ற ஈசன்விந்து பூமிநாதம்
தவளநிறப் பருவதம்போல் வளர்ந்திருக்கும்
நீணிலத்தி லதைவெட்டித் தானெடுத்தால்
நிசமான வயிரம்போல் மின்னும்பாரே. (184)

நாற்பத்தெண் சித்தர்

மின்னியே அடுக்கடுக்கா யிருக்குமப்பா
மேதினியி லதைநீத்திச் சுண்ணாம்பாக்கிப்
பன்னிரண்டு சூரியனு முதித்தாப்போலே
பளிங்குபோல் வெளுத்திருக்குங் கற்சுண்ணாம்ப
தன்னிலே ஜலம்விட்டே உலகத்தோர்கள்
தாம்பூலந் தனிற்றேய்த்து அருந்துவார்கள்
உன்னிதஞ்சே ரடுக்குக்கல் தனையெடுத்து
உவர்மண்ணை அமுரியிலே கலக்கிடாயே. (185)

கலக்கியே தெளிவிருத்துக் கல்லைப்போட்டுக்
காய்ச்சிடவே யடுக்குக்கல் கட்டிப்போகும்
துலக்கமா யதையெடுத்துக் கல்வத்திட்டுச்
சூரணித்து அண்டநீர் தன்னால்ட்டிப்
பிலக்கவே வில்லைசெய்து காய்த்தபின்பு
பிரபலமா யுலையிலிட்டங் கூதும்போது
நலக்கவே வெளுத்துநல் சுண்ணாம்பாக்கி
நலமாகச் சுத்தஜலம் விட்டுநீத்தே. (186)

நீத்தியே சுத்தஜலந் தன்னைவார்த்து
நிண்ணயமாய் மண்டலந்தான் பதனஞ்செய்து
பார்த்திடவே தண்ணீர்க்கு மேலேதானும்
படர்ந்திருக்குங் கல்லுப்பு வெண்மையாகப்
பூத்திருக்குங் கல்லுப்பைஅறிந்தெடுத்துப்
புகழான உவருப்புங் கறியுப்புந்தான்
நேத்தியாம் வகையொன்று பலமொன்றப்பா
நிசமான பூரமொரு பலமுங்கூட்டே. (187)

கூட்டவே வகைநாலுங் கல்வத்திட்டுக்
கோழிமுட்டை வெண்கருவா லாட்டிவாங்கி

வாட்டமற ரவியுலர்த்திக் காயவைத்து
வளமான வோட்டில்வைத்து ஓடுமூடி
நாட்டமுடன் ·சீலைமண் ணஞ்சுஞ்செய்து
நலமாக முழுப்புடத்திற் றாக்கிநீத்தித்
தேட்டமுட னதையெடுத்து வைத்துக்கொண்டு
திறமாகப் பின்னுமொரு முறைதான்செய்யே. *(188)*

முப்புச்செந்தூரம்

செய்வதென்ன சவ்வீரம் புனுகுபூரம்
சேர்த்திடுவாய் வகையொன்றுக் கொருகழஞ்சு
நையவே கல்வத்தி லிட்டுக்கொண்டு
நல்லெலுமிச் சம்பழத்தின் சாற்றாலாட்டி
உய்யவே வில்லைசெய்து ரவியில்வைத்து
உலர்ந்தபின்பு முன்போலே ஓட்டில்வைத்து
வெய்யமுழப் புடத்திற்செந் தூரமாகும்
விள்ளாதே முப்பூவின் குருவிதாமே. *(189)*

முப்பூமகிமை

குருவான உவருப்புக் கணேசனாகும்
கூறரியக் கல்லுப்பு பிரமனாகும்
கருவான கறியுப்பு விஷ்ணுவாகும்
கருத்தான பூரமது ருத்ரனாகும்
மருவான புனுகுமயேஸ் பரனதாகும்
வண்மைசதா சிவமேசவ் வீரமாகும்
உருவான எலுமிச்சங் கனியேபிண்டம்
ஓகோகோ கோழிமுட்டை அண்டந்தானே. *(190)*

அண்டபிண்டம் நிறைந்தபொருள் முப்பூவப்பா
அறாப்பிணிகள் தீர்க்கவொரு குருவுமாச்சு

நாற்பத்தெண் சித்தர்

அண்டபிண்டம் நிறைந்தபொரு ளிதனைத்தொட்டு
ஆடலாம் வெகுகோடி வித்தைதன்னைக்
கண்டகண்ட விதமாக வுலகுதன்னிற்
கருவறிந்து மருந்துசெய்யத் தெரியாமற்றான்
கொண்டகடை மருந்துகளைத் தானேவேண்டிக்
கொண்டுபோய் பலமருந்துங் கொடுப்பார்தானே. *(191)*

கொடுப்பார்கள் குருவில்லா மருந்துதன்னைக்
கொடுத்தாக்காற் பிணிதீர மாட்டாதப்பா
கெடுப்பதொழி மூதோர்கள் சொன்னநூலைக்
கேளாமற் பலவிதமாய் வயித்தியர்தான்
துடுக்கான மருந்துகளைக் கொடுத்தாரானால்
தூலவுடல் தன்னைவிட்டுச் சூட்சம்போகும்
அடுப்பெரிதீ யணைத்திடலாம் வயித்தியோர்கள்
அறியாமற் கொடுத்தமருந் தாறாத்தீயே. *(192)*

ஆறாத்தீ யாகில்வெகு கோடிபாவம்
ஆதிசிவ னருளாலே தீரவேண்டும்
பேறாக வேண்டுமென்றால் வயித்தியோர்க்குப்
பின்னைநிக ரில்லையிந்நூல் பார்த்தாராகில்
கூறாக ரோமர்பதி னெட்டினோடு
கொங்கணரைஞ் நூறுமகத் தீசர்நூலும்
வேறாக வெண்ணாமல் நூல்பார்த்தேஅவ்
விதஞ்செய்ய் வியாதியில்லை விபரம்பாரே. *(193)*

தாம்பூரச் செந்தூரம்

பாரப்பா தாம்பூரச் செந்தூரந்தான்
பண்பாகச் சொல்லுகிறேன் சுமுவதாகச்
சேரப்பா செம்பினுட பொடிதானொன்று
திறமாக வெங்கலத்திற் பொடிதானொன்று

சீரப்பா ரசங்கெந்தி லிங்கந்தாரம்
சிறந்தமனோ சிலைக்காந்தம் பச்சைநாவி
நேரப்பா யீதெல்லாங் கழஞ்சுநாலு
நிறுத்தெடுத்து இஞ்சிச்சார் தன்னிலாட்டே. (194)

ஆட்டுவா யிருசாமங் கழித்தப்பாலே
அடவாக வெள்ளுள்ளிச் சாறுதன்னிற்
கூட்டுவாய் சாமமிரண் டரைத்தபின்பு
குமரிச்சா றிருசாம மரைத்தப்போது
போட்டுநீ வில்லைசெய்து ரவியில்வைத்துப்
புகழாகக் காய்ந்தபின்பு கலசத்திட்டு
நீட்டுவா யோடுகொண்டு கவிழ்த்திமூடி
நிசமாகச் சீலைமண் ணஞ்சுஞ்செய்யே. (195)

செய்யப்பா எருவடுக்கிக் கவசம்வைத்துத்
தீமூட்டிக் கடிகைதொண் ணூற் றாறதாக
மெய்யப்பா யெரித்துத்தீ யாறவிட்டு
மேல்வைத்த கவசத்தின் மூடிதள்ளிக்
கையப்பா யெடுதாம்பூ ரச்செந்தூரம்
காவிபோற் சிவந்திருக்கும் பதனம்பண்ணு
பொய்யப்பா ஆகாதெந் தெந்தநோய்க்கும்
போக்கறிந்து அனுப்பானம் புகழ்ந்துதாக்கே. (196)

நீரடைப்பு

தாக்குநீ பொரிகாரந் தனைப்பொரித்துத்
தயவாக இளநீரைக் கண்திறந்து
நோக்குநீ பணவிடைசெந் தூரம்போட்டு
நுணுக்கமாய்க் கொடுத்திடவே நீர்க்கடுப்பு

நீக்குமே நீர்ச்செறிப்பு சதையடைப்பு
நிலைபெறா திந்த்ரகண்டி யெலும்புருக்கி
தீர்க்குமே அல்லியா வரைக்கொழுந்து
சீந்தியுட னிவ்வளவுங் குடிநீர்வையே. (197)

குடிநீரிற் பணவிடைசெந் தூரத்தோடு
கூட்டமுத மாவும்வெரு கடியும்போட்டுத்
துடியாகக் குடிக்கநீ ரழிமூவெட்டும்
சுருக்குபிர மேகம்நீர்க் களிச்சலஞ்சும்
வெடியாக வுள்வெட்டை யெட்டுந்தீரும்
வெள்ளுள்ளித் தயிலபண விடைசெந்தூரம்
மடியாமற் கொடுவாத மெண்பதோடு
வலியான ஜன்னிபதி மூன்றும்போமே. (198)

வயிற்றுவலி பித்தவாய்வு

போமப்பா வயிற்றுவலி பித்தவாய்வு
போவதற்கு மருந்தொன்று புகலக்கேளு
ஓமப்பா ஓமமது கழஞ்சிரண்டு
உத்தமனே திருகுகள்ளிப் பூத்தானஞ்சு
சாமப்பா சாமமொன்று கல்வத்திட்டுச்
சாதகமா யரைத்ததனை மெழுகுபோலே
தாமப்பா உண்டைசெய்து செப்பில்வைத்துத்
தாரணியிற் சுக்கிரண்டு கழஞ்சுவாங்கே. (199)

வாங்கியே சட்டிதனி லிட்டுக்கொண்டு
வாகாக இருநாழித் தண்ணீர்விட்டுத்
தாங்கியே அடுப்பேத்தி யனலைமூட்டித்
தயவாக எட்டொன்றாய் வத்தக்காய்ச்சி
நீங்கியே போகாமல் வடித்தெடுத்து
நிண்ணயஞ்சேர் குளிகையொன்றை யுரைத்துக்கொள்ள

ஏங்கியே ஓடுமடா பித்தவாய்வு
எரிகுன்ம வயிற்றுவலி யில்லைத்தானே. (200)

வயிற்றளைச்சல் தலைவலிக்கு

தானென்ற வயிற்றளச்சல் சுரத்தினோடு
தலைவலியுங் கிருகிருப்புந் தீரவென்றால்
கோனென்ற பிரணவத்தி லுதித்தஓமம்
குண்டலியுங் கணபதியு மதுதானப்பா
ஊனென்ற உடலுயிரு மதுதானப்பா
ஓமென்ற யெழுத்திரண்டு மதுவேயாகும்
நானென்று வந்தபிணி யெல்லாந்தீர்க்கும்
நல்லதொரு ஓமமதை நாடிப்பாரே. (201)

நாடியே ஓமமது பலந்தானொன்று
நல்லதோ ரோட்டிலிட்டு வெதுப்பிவாங்கி
ஆடியே துணியிலிட்டுக் கசக்கிப் போட்டு
அப்பனே கொழித்தெடுத்துப் பின்னுமுன்போல்
கூடியே பத்துடனோர் தரம்வெதுப்பிக்
குறையாமற் கசக்கியதைக் கல்வத்திட்டு
ஓடியே போகாமற் சாமமொன்றே
உறுதியாய்த் தானரைக்கக் குளம்பதாமே. (202)

குளம்பதனைப் பீங்கானிற் பதனஞ்செய்து
குறையாம லொருவாரம் அந்திசந்தி
வளம்பெறவே சுண்டக்கா யளவுகொள்ள
வயிற்றளச்ச லத்திசுரம் மாறிப்போகும்
உளமாந்தை தலைக்கிரக்க மானதெல்லாம்
ஓகோகோ வுலகத்தில் நில்லாதப்பா
பிளவாகப் புகையிலையும் புளியுமாகாப்
பெண்ணுடனே தான்கூடி மருவொண்ணாதே. (203)

வியாதி வரலாறு

மருவியதோர் வாதபித்த சிலேற்பனங்கள்
வருவதுதா னேதானாற் பத்யபாகம்
தெரியாமற் செய்வதினால் ரோகமாகிச்
சிறுநரம்பும் பெருநரம்புஞ் சிக்கும்போது
குருநாடி தனிற்சேர்ந்து தொந்தமானால்
கோடான கோடிகன்கஞ் செய்யுமப்பா
கருவான நாடிதனை அறிவதற்குக்
காலாங்கி யகத்தீச ருரைத்திட்டாரே. (204)

அகத்தீச ருரைத்தகுரு நாடிசாத்திரம்
அணுவளவுந் தப்பாகை கண்டவித்தை
ஜெகத்திலே அறிந்தவனே சித்தனாகும்
சித்தனென்றால் பண்டிதனே அல்லாலில்லை
மகத்தான வித்தையப்பா வயித்தியந்தான்
மகரிஷிகள் செய்யுமுறை மந்த்ரதந்த்ரம்
முகத்திலே பார்த்தவுடன் தீர்ந்துபோகும்
முறையாக நாமறிந்த திந்தநூலே. (205)

இந்தநூ லிருநூற்றி யாறதாக
ஈசனுமை தன்னருளாற் பாடிவைத்தேன்
சுந்தரஞ்சேர் வயித்தியத்தைப் படித்துச் செய்தாற்
சுகிர்தமிக வுண்டாகும் இராமச்சந்த்ரா
உந்தனக்குச் சொன்னதிந்த வுலகிலுள்ளோர்
ஓர்மனதாய்ச் செய்தவர்க்குப் பலிதமாகும்
கந்தனருள் கணேசனருள் பெற்றுவாழ்வார்
கருத்தாக முற்றும்பூ ரணநூலாமே. (206)

வசிஷ்டர் வைத்திய சூஸ்திரம் 206 முற்றிற்று

......

சத்தியநாதரென்ற ஞானச்சித்த ரருளிய மெய்ஞ்ஞானம் 12

ஓங்கார வட்டசுழி முனையிலேதான்
உற்றநடம் புரிந்திலங்குஞ் சோதியாகி
பாங்கான வண்டபிண்டம் நிறைந்ததாகிப்
பகரரிய வேதமுறைப் பொருளதாகி
நீங்காத வருட்கருணைக் கடலதாகி
நின்மலமாஞ் சுகுணகுணா தீதமாகிச்
சோங்கான பேரின்பா னந்தமாகித்
துலங்குபரம் பதம்பணிந்து சாற்றுவேனே. (1)

சாற்றிடவே மூலமதில் நின்றெழுத்துத்
தயவான பீசமதோங் காரவட்டம்
ஏற்றமா யுன்றனக்குச் சொல்லுகின்றேன்
என்மகனே நினைவாக வுற்றுக்கேளு
நாற்றிசையு மறியாத மந்திரந்தான்
நவிலுகிறேன் தனித்துநின்ற தலத்திலப்பா
தோற்றமுடன் நோக்கிடவே அந்தபீசம்
தெரிந்திடுவாய் நந்தியிட மதுவாமென்றே. (2)

ஆகுமப்பா நினைவையொட்டிக் குறித்துப்பாரு
அவ்விடத்தில் நந்திகொலுத் தோணுந்தோணும்
வாகுடனே நந்தியர சிருந்தவீட்டின்
மத்தியிலே அமுதகங்கை யொழுகும்பாரு
பாகமுள்ள சோதிமய வமுதந்தன்னைப்
பார்த்தறிந்துட் கொள்வதுவே பாதைமார்க்கம்
ஏகமென்ற முச்சந்தி வீதிதன்னில்
இயல்பாமெட் டங்குலத்தி னுள்ளாய்த்தானே. (3)

எட்டங்கு லந்தனிலே அமுதந்தானும்
இன்பமென நின்றதொரு தலமதாகும்
மட்டடங்கா ஒளியுளதா மரையைப்போலாம்
மைந்தனே அதனுடைய மத்திதன்னில்
திட்டமுட னுற்றதுவே உயிரதாகும்
தேடினா லொன்றுமிலை வெளியாய்த்தோணும்
வெட்டவெளி தனிலிருக்கு மமுதந்தன்னை
மேன்மையுட னுண்டிடவே வகைசொல்வேனே. (4)

சொல்லுகிறே னுன்றனக்குச் சூட்சமாகச்
சுகமுடனே அண்ணாக்கை யுண்ணாக்கேற்றி
நல்லதொரு மூலத்தீ தனையெழுப்ப
நலமான நந்தியுறும் வழிதான்காணும்
வல்லதொரு முதுவீணாத் தண்டினுள்ளே
மகத்தான நந்தியது தானேபாயும்
சொல்லவொண்ணா தந்தமதி யமுதந்தானும்
சூட்சமுள்ள நந்தியின்றன் சொந்தமாமே. (5)

சொந்தமுள்ள தென்றுமனஞ் சந்தோஷித்துச்
சுகமுடனே தாய்பதத்தைப் பணிந்துபோற்றி
அந்திசந்தி சுழிமுனையில் நாட்டிப்பாரு
அரகரா வாயுவுடன் றேய்வுங்கூடி
வந்ததொரு வழியதனி லமர்ந்தேநின்று
மைந்தனே அமுதமது தலைகீழாகும்
பந்தமுள்ள இடந்தனிலே சிவமேமிஞ்சும்
பாலகனே பழக்கம்வைத்துப் பரிந்துதேடே. (6)

தேடாய்நீ வாசியைத்தான் வெளிவிடாமல்
தீர்க்கமுட னப்பரியை வெளிப்பீசத்துள்

ஓடாம லுள்ளிருத்தி யழுத்திப்பார்த்தால்
உத்தமனே ஞானவொளிச் சுடரேதோணும்
வாடாம லதையறிந்து வெளிவிடாதே
மகிழ்ச்சியுடன் நந்திநிலை யறிந்துநின்றால்
கூடாத வமுதத்திற் கூட்டிவைக்குங்
குறிப்பறிந்து பாரமுதஞ் சிந்துந்தானே. (7)

சிந்துகின்ற அமுதகங்கை சொரியும்போது
சிக்கெனவே நந்திபதம் பற்றிக்கொள்ளு
வந்ததொரு இச்சடமோ சூட்சப்பாவை
மகத்துவமென் றெண்ணாதே யழிந்துபோகும்
பந்தமற்ற வீடதிலே சிறந்துநின்று
பார்மகனே தேகமது பரமேயாகும்
சொந்தமுனக் கொன்றுமிலை நந்திதன்னைச்
சூக்குமமாய்க் கண்டறிந்தால் ஞானந்தானே. (8)

தானென்ற ஞானமதைக் கண்டுகொள்ளத்
தன்னுக்குட் டானறிந்து தெளியவேண்டும்
நானென்ற மாயைதனை யறுக்கவேண்டும்
நானிலத்திற் பற்றாசை யொளிக்க வேண்டும்
கோனென்ற குருபதத்தை யடுக்கவேண்டும்
குற்றமில்லாக் குறியதனை யறியவேண்டும்
தேனென்ற அமுதமது நிலைகண்டாக்கால்
சித்தியென்ற ஞானமது தெரிவார்பாரே. (9)

பாரப்பா மானிடர்கள் மாயையாலே
படுந்துயரம் மெத்தவடா அறிந்தாயில்லை
நீரப்பா நீர்க்குமிழிக் கொத்தகாயம்
நிலையறிந்து நின்றவர்க்கே வச்சிரதேகம்

நாற்பத்தெண் சித்தர்

தேரப்பா அறியார்க்கு மண்பாண்டந்தான்
செகமதிலே ஞானமது தெளியாவிட்டால்
பேரப்பா யென்னபல னடையப்போறார்
பெருநிலத்திற் பாவையைப்போ லலைவர்தாமே. (10)

தாமேதான் வெகுபேர்கள் ஞானியென்று
சகலகலை தெரிந்தவர்போற் பேசுவார்கள்
வாமேதான் ருத்திராச்ச மாலைபூண்டு
மண்ணொடுபொன் பெண்ணாசை யற்றார்போல
நேமமுடன் திரிவதனாற் பலனுண்டாமோ
நிட்களநி ராமயத்தைத் தெரிவாரானால்
நாமேதான் ஞானியென வெவருங்காண
நானிலத்திற் சொல்வாரோ நன்றாய்ப்பாரே. (11)

நன்றான காரியத்தை நாடவேண்டும்
நாடியே சித்தனென் றிருக்கவேண்டும்
ஒன்றான பொருளையறிந் துணரவேண்டும்
உற்றுநின்ற வாசிநிலை யறியவேண்டும்
குன்றாத சிவயோக மார்க்கம்வேண்டும்
குறைவுபடா நந்திநிலை குறிக்கவேண்டும்
சென்றான காரியத்தைத் தள்ளிவிட்டுச்
சிவயோக ஞானநிலை தெரிந்துகொள்ளே. (12)

ஞானச்சித்தர், மெய்ஞ்ஞானம் 12
முற்றிற்று

....

சத்தியநாதரென்ற ஞானச்சித்தர் பாடல் 35

கண்ணிகள்

ஆதி பராபரையே அம்பிகை மனோன்மணியே
சோதிச் சுடரொளியே சுத்த நிராமயமே. (1)

தாயே பகவதியே தற்பரையே அற்புதமே
நேயமுடன் ஞான நெறியையறி விப்பாயே. (2)

முடிநடுவும் மூலமுமாய் முச்சுடராய் முப்பொருளாய்
மடிவில்லா மெய்ஞ்ஞான மார்க்கத் தகோசரமாய். (3)

அஞ்ஞானக் காடுகடந் தாங்குவழி யேதொடர்ந்து
மெய்ஞ்ஞானங் காணநின்னை வேண்டி யலைகிறண்டி. (4)

நிலையில்லாப் பொய்க்கூட்டை நிச்சயங் கொண்டாசை
வலையிலகப் பட்டுழன்று வாடித் திரிகிறண்டி. (5)

தன்னையறி யாமற் றலமெட்டுங் காணாமல்
அன்னையன்னை யென்று அலறித் திரிகிறண்டி. (6)

தவநிலையிற் றேறாமற் றன்னையுண ராமற்
பவநிலையிற் புக்கியகப் பட்டுழன்று வாடுறண்டி. (7)

பொல்லாக் கொலையும் புலையவா விட்டுன்றன்
வல்லபதங் காண மயங்கித் திரிகிறண்டி. (8)

துன்பமெல்லாம் போக்கிச் சுகானந்த மானநின்றாள்
இன்ப மனுபவிக்க வேங்கித் தவிக்கிறண்டி. (9)

வஞ்சகம்பொய் சூதுகொலை மானார் மயக்கமெனும்
சஞ்சலத்தை நீங்கித் தனித்திருக்கத் தேடுறண்டி. (10)

ஆசைப் பெருக்கா ரதில்வீழா துன்பாத
பூசைப் புரியப் புலம்பித் தவிக்கிறண்டி. (11)

ஊணுறக்க மின்பதுன்பத் துற்றவினை யையொழித்துக்
காணுதற்கெட் டாப்பொருளைக் கண்டு மகிழ்ந்தனடி. (12)

பஞ்சபூ தாதிப் பகுப்புகள்பொய் யென்றுணர்ந்துன்
செஞ்சரணக் கஞ்சமதைத் தேடி யலைகிறண்டி. (13)

ஆசை யொழிந்தும் அருள்ஞானம் கண்டறிந்தும்
பேசத் தெரியாமற் பேய்போ லலைகிறண்டி. (14)

ஆங்காரம் விட்டு அருள்வெளியைக் கண்டடுத்து
நீங்காப்பே ரின்ப நிலையறியத் தேடுறண்டி. (15)

சருவம் பிரமமெனத் தான்தெரியுந் தன்மை
மருமங்கா ணாமல் மயங்கித் திரிகிறண்டி. (16)

ஐங்காயக் கோட்டை யதுமெய்யென் றுன்பாத
பங்கயம்போற் றாமற் பரதவித்து நிற்குறண்டி. (17)

பச்சைப்பாண் டத்தைப் பலநா ளிருக்குமென
நிச்சயமா யெண்ணி நிலைதவறி வாடுறண்டி. (18)

நீரிற் குமிழியைப்போல் நில்லா வுடம்பினைவி
சாரிக்கப் பொய்யென்றே தானறிந்து வாடுறண்டி. (19)

நானென்ற கெர்வம் நசித்ததனைச் சுட்டறுத்துத்
தானென்ற பிர்மந் தனையறிய வேண்டுறண்டி. (20)

யோகந் தெரிந்ததன்றன் னுண்மை யறிவதற்குப்
பாகமுண ராமற் பதறி யலைகுறண்டி. (21)

மவுனத்தை யுச்சரித்து மந்திரபீடத்தேறிக்
கெவுன மறிந்து கிலேசமதை விட்டேண்டி. (22)

கற்பஞ்சாப் பிட்டே கனத்ததவஞ் செய்ததினால்
விற்பனனென் றென்பேர் விதித்தார் பெரியோர்கள். (23)

காயசித்தி யோகசித்தி கண்டதனி லொண்டினதால்
மாயசித்தி யாலே மயங்கா திருக்கிறண்டி. (24)

ஓமென்ற அக்கரத்தி னுட்பொருளைக் கண்டுவந்தும்
தாமென்ற ஆணவத்தால் தன்னை மறந்தேண்டி. (25)

பிரணவமுந் தானறிந்து பேச்சடங்கி நின்ற
சொருபந தெரிந்தத் துலக்கத்தில் நிற்குறண்டி. (26)

நந்தி கொலுவிருப்பை நானறிந்து கண்டுகொண்ட
சந்தி தெரிந்து தவியா திருந்தனடி. (27)

அஷ்டகரு மந்தெரிந்தும் ஐவர் நிலையறிந்தும்
இஷ்ட மதிற்சற்று மில்லா திருக்குறண்டி. (28)

நானென்னு மாணவங்கள் நணுகாது நானெனலும்
தானெனலும் அற்றுத் தனியே திரிகுறண்டி. (29)

எட்டாச் சுழிமுனையி லேயிருந்து மென்மனதுக்
கெட்டாப் பொருளதனை யெட்டிப் பிடித்தேண்டி. (30)

சாகரக்கா லின்னதெனத் தானறிந்து கொண்டதற்பின்
வேகாத தலையும் விரைவி லறிந்தேண்டி. (31)

மோகாந்த காரமெனும் மோகந் தவிர்ந்ததற்பின்
ஏகாந்த மாக இருந்து மகிழ்ந்தனடி. (32)

சரியைகிரி யையோகந் தாண்டியபின் ஞான
புரிக்கோட்டைக் குள்ளே புகுந்து திரிகுறண்டி. (33)

மந்திரமுந் தந்திரமும் மாயா விசர்க்கமெலாம்
உந்திரமென் றெண்ணி யுறுதியது கொண்டேண்டி. (34)

சத்தத்தி னுள்ளே சதாசிவத்தைத் தானறிய
உத்தமியே நின்னருளென் றோர்ந்தறிந்து கொண்டேண்டி.
(35)

சத்தியநாதரென்ற ஞானச்சித்தர் பாடல் 35
முற்றிற்று

....

சுகப்பிர்மரிஷி திருவாய்மலர்ந்தருளிய ஞான சூஸ்திரம் 32

உச்சிமகா மேருமுடித் தீபமாகி
உண்ணாக்கின் மேற்புருவ நடுவதாகிக்
கச்சிபதி நின்றொழுகு மமுதமாகிக்
கரைகாணாச் சின்மயசொ ரூபியாகிப்
பச்சிமத்தின் மேலான திரைகடந்து
பகலிரவு மற்றதல வாசமாகிச்

சச்சிதா னந்தசிற் சத்தியாகித்
தன்மயமா யிலகுபரன் பதங்காப்பொன்றே. (1)

ஒன்றான தாமரைநூ லாயிரந்தான்
ஓகோகோ கூடாது வொருவராலே
நன்றான சிகாரமது பிராணவாய்வு
நலபருவ மபானத்தின் பழக்கங்கேளு
குன்றாம லதிலப்பா வைந்நூறாகக்
கூடொத்து அபானன்றான் கீழேநோக்கும்
வென்றான மும்மலத்தைத் தள்ளுந்தள்ளும்
மேவிநின்ற வகாரமதை விரைந்துபாரே. (2)

பாரப்பா நெஞ்சினுள்ளே நினைவையொட்டிப்
பனிப்புகைபோ லிணைந்தோடும் பத்திப்பாரு
நேரப்பா மேற்கொண்டே வுன்னியாடும்
நிலைப்பாக மயேசுரனில் நின்றுபாரு
சேரப்பா விதுக்குள்ளே நாலைக்கூட்டிச்
செய்தவரா ரென்றாக்காற் புசுண்டர்செய்தார்
காரப்பா நாடோறுங் காத்தாயானால்
கற்பாந்த கோடியுகங் கடிகையாமே. (3)

ஆமென்று அவர்செய்த வகையைக்கேளு
அப்பனே கும்பகந்தா னறுபானாலும்
வாமென்ற பூரகந்தான் பதினாறாகும்
வகையான ரேசகந்தான் முப்பான்ரெண்டும்
ஓமென்று அவரிருந்து பெற்றார்பேரு
உத்தமனே கற்பகமாம் விருட்சமேலே
காமென்ற காகமென வுருவைக்கொண்டு
கண்டிருந்தார் கோடியுகங் கரைகாணேனே. (4)

நாற்பத்தெண் சித்தர்

காணாத பிர்மாக்கள் கோடிகண்டார்
கரையற்ற விஷ்ணுமயந் தனைக்கண்ணுற்றார்
பூணாத சங்கரரைக் கோடிகண்டார்
போக்காக மயேசுரரைத் தாண்டிநின்றார்
தோணாத சதாசிவன்றா னொடுங்கிச்சத்தி
தொலையாத நாதவிந்து வோர்மையாகிக்
கோணாத சிவனுஞ்சிற் பரையிற்சேர்ந்து
குணங்கடந்து பூரணத்தி லடங்கினாரே. (5)

அடங்குமந்த அவ்வதனைத் தொட்டுயேறி
அகண்டத்திற் சுழுத்தியெனச் சினந்துநின்றார்
படங்கவிந்த்ர ஜாலவித்தை போற்றான்மாயி
பாரப்பா கணப்பொழுதி லங்குவந்து
நிடங்கநிச மெனவிரித்தான் கூடாரத்தை
நிமிஷத்தி லண்டமெல்லாம் நிறைந்துபோச்சு
முடங்கவிதை வேணுமென்றால் முடக்கவல்லால்
முத்திக்கு வித்தான முத்தித்தாயே. (6)

முத்தியிலே நின்றுவந்த புசுண்டமூர்த்தி
முன்போலே கற்பகமே ஆவாவென்றார்
பத்தியிலே அவள்போற்கூ டாரம்போட்டார்
பார்க்கையிலே கூட்டோடே வருஷமாச்சு
அத்தியிலே நின்றுரைத்த சித்தைப்போல
ஐயரந்தக் கூட்டுக்குள் ளமர்ந்தாரப்பா
கத்தியிலே யூடுருவும் பூவைப்போலே
கண்டத்தே நின்றுரைத்துக் கருதினாரே. (7)

கருதியதோர் புசுண்டருட பிறப்பைக்கேளு
கலந்துமது உண்டன்னங் களிக்கும்போது

பருதிமுதற் சோமனையுந் தரித்தயீசன்
பார்வதியும் சென்றங்கு பார்க்குங்காலை
பொருதியென்ற ஜீவகளை நாகந்தாகம்
போற்றழைய அன்னமங்கே நிறைந்தகெற்பம்
தருதியென விருபானோ டொன்றாம்பிள்ளை
தன்னுக்குள் ளிவரொருவர் தானாங்காணே. (8)

காணப்பா இருபதுபேர் கர்மத்தாலே
காசினியிற் கைகடந்து போனாரப்பா
பூணப்பா யிவரெடுத்தார் பிராணாயாமம்
பொற்பூவும் வாசனையும் போலேயாச்சு
ஆணப்பா பிறந்ததென்றால் எல்லாந்தானோ
அவர்போலே பேருபெற வெவராலாகும்
ஊணப்பா முந்திமுந்தி மூலயோகம்
உத்தமனே கண்டபின்பு நெஞ்சிற்பாரே. (9)

நெஞ்சிலே நின்றதுதான் மூலம்பார்த்து
நேராக வந்ததென்றார் புசுண்டமூர்த்தி
பஞ்சிலே பொறிபட்டாப் போலேயேறும்
பார்த்தேறுங் கொங்கணரே யென்றாரையா
குஞ்சிலே குயிலின்கா லொடிந்துபோனாற்
கூடாது இனத்தோடக் கொள்கைபோல
அஞ்சிலே மூலத்தே கூடாவிட்டால்
அரிதரிது பிராணனென்றா ரையர்தானே. (10)

ஐயரன்று சொன்னமொழி கேட்டுப்பொங்கி
அடிதொழுது சரணமென வீழ்ந்தேன்யானும்
ஐயரன்று சுகப்பிரம அப்பாயென்றும்
அழியாது வாழ்வாயென் றனுக்கிரகித்தார்

நாற்பத்தெண் சித்தர்

ஐயரன்று சொன்னதென்ன மூலமாதி
அதுகண்டு பிராணனைத்தா னறியவேணும்
ஐயரன்று இருக்கையுமே ருவுக்குத்தெற்கே
அவருடைய ஆட்டமெல்லாந் துருசினாட்டே. (11)

ஆட்டுவதும் அழிப்பதுவும் படைப்பதுந்தான்
அசைவற்ற சிவயோகத் தாண்மையப்பா
மூட்டுவதும் முடிப்பதும்பின் படைக்கச்செய்யும்
மூதண்ட நிமிளைபட்ட துருசுவெள்ளை
கூட்டுவதுங் குறைப்பதுவு மாகச்சேர்த்துக்
கொள்ளாத பூரணத்தே குமட்டுஞ்சேதம்
நீட்டுவதும் கலைப்பதுடன் நடக்கப்பண்ணும்
நேரான துருசினுட குளிகைதானே. (12)

குளிகையென்ற பெருமைக்கொப் புவமைகேளு
கூர்ந்துநின்ற பெரியோர்கள் மனந்தானப்பா
களிகைவென்ற துருசுக்குக் தேவியொப்பு
கணக்கடங்கா மவுனமுத்தி மூலம்பாரு
இனிமையென்று விட்டாக்கா லெடுத்துப்போடும்
இறக்கிறதும் பிறக்கிறதுங் கொண்டுமூலம்
தளிகைநன்று யென்றாக்கால் மூலம்போக்கு
தானழியாப் பதிவேண்டில் மூலம்பாரே. (13)

மூலமென்ற பொருளாலே யோகம்சித்தி
மூட்டுகிற மனத்தாலே ஞானஞ்சித்தி
கோலமென்ற லெட்சயத்தால் வாசிசித்தி
கூறாத மவுனத்தால் புலன்கள்சித்தி
ஓலமென்ற கண்டத்தால் ஆத்தாள்சித்தி
உத்துப்பா ரிதைக்கொண்டு எட்டுஞ்சித்தி

ஆலமுண்ட கண்டர்சித்தி மையம்பார்த்தால்
ஆகாகா வாதசித்தி துருசுபாரே. (14)

பாரப்பா வாதத்தில் ஞான நூலைப்
பதிப்பானே னென்றாக்காற் பலனைக்கேளு
நேரப்பா வாதஞ்சா தகமாய்ப்பண்ணி
நிலையான குளிகையிட்டு ஞானங்காண
வேரப்பா வாதமது ஞானத்துக்கும்
மேன்மையாய்ச் சித்தரெலாம் விளங்கினார்கள்
ஆரப்பா யெனைப்போலே வெளியாய்ச்சொல்வார்
ஆனதாற் சுகப்பிரம ராதி நூலே. (15)

ஆதியென்ற மூலகுரு தர்மத்தாலே
அநேகம்பேர் பிழைத்தார்கள் அவர்கட்குள்ளே
வாதியென்ற அடியார்க்கு மடியேன்யான்தான்
வகையாகச் சொல்லிவந்தேன் வாதஞானம்
ஓதியதோ ரென் நூலைப் பார்த்தோன்முத்தன்
உத்தமனே உங்கட்காஞ் சித்தர்க்காகும்
பேதியென்ற துன்மார்க்கர்க் கெய்துமானால்
பிழைக்கறியா ருலகத்திற் பிரளுவாரே. (16)

பிரளுவா ரவ்வாதம் பிறகேயெய்தும்
பேரான வாதத்திற் பெண்ணைக்கூடிற்
பிரளுவா ருலகத்தே சலனப்பட்டு
பீயுண்ண காய்போலே பேயாய்ப்போவார்
பிரளுவார் தீனியினாற் காயங்காட்டார்
பிரமைகொண்டு சிற்றின்பப் பேயுமாவார்
பிரளுவா ருலகத்தே மக்காள்நீங்கள்
பிரிவான அஷ்டாங்கம் பேணிப்பாரே. (17)

பேணியதோர் வாதத்தில் நிகளபந்தம்
பெரியதொரு கட்டான பேரைச்சொல்வேன்
ஆணியதோர் கட்டுகின்ற சாரம்ரெண்டு
அப்பனே துருசுயென்ற சுண்ணம்ரெண்டு
ஊணியதோர் வெங்காரச் சுண்ணமொன்று
உத்தமனே இந்துப்புப் பலந்தான்ரெண்டு
ஏணியதோ ரெருக்கம்பால் சேரையொன்று
இயல்புசது ரக்கள்ளி சேரையொன்றே. (18)

ஒன்றாகப் பலமொன்று புரசம்வித்து
உத்தமனே குங்கிலியம் பலந்தானொன்று
நின்றாகக் கல்வத்தி லிடித்துக்கூட்டி
நிலைபெறவே மெழுகாக வைத்துக்கொண்டு
குன்றாக ரெண்டுபல மெழுகைவாங்கிக்
கொண்டதிலே பலமாறு சூதம்வாரு
நன்றாக மேல்மூடிப் புடத்தைப்போட்டு
நாட்டிவைத்து நாற்சாமந் தீயைமூட்டே. (19)

மூட்டினதை யாரவிட்டு யெடுத்துப்பாரு
முத்துப்போல் வெளுப்போடு கறுப்பாய்நிற்கும்
ஆட்டினதைக் காரமிட்டு உருக்கிலப்பா
அடவாகக் குகைபோலே வாருவாரு
நீட்டியிந்தக் குகைக்குள்ளே ரசத்தைவாரு
நினைவாக வெதுப்பையிலே சூதங்கட்டும்
பூட்டியிந்தச் சூதந்தான் குருவுமாகும்
பொன்முதலாய் நவலோகம் பொருமிநீரே. (20)

நீராகச் சொல்லுகிறேன் வரிசைகேளு
நிறையான தங்கமது நாலுக்குள்ளே

வீராக இச்சூத மொன்றுபோட்டு
வெருவியொரு மணியாக வாங்கிக்கொண்டு
தாராக வீரமொடு துருசுவெள்ளை
தனியானுக் கொன்றப்பா மணிமேற்பூசி
சூராகச் சுண்ணமஞ்சு குகையில் வைத்துக்
குறிப்பாகச் சீலைசெய்து புடத்தைப்போடே. (21)

போட்டுடனே தங்கமது குருவேயாகும்
புகழான சரக்கெல்லாம் பிரண்டுசாகும்
நீட்டுடனே நவலோகப் பொன்னுமாகும்
நிலையான வுபசரங்கள் நீறிப்போகும்
கூட்டுடனே இக்குருவாற் சூதங்கட்டும்
கொள்கிடவே நூறுதொந்தஞ் சூதமேறும்
ஆட்டிடவே இக்குருதான் நல்லாளாக்கம்
ஆகுமென்ற மூக்கரைச்சி யாட்டுத்தானே. (22)

தானென்ற வெள்ளியப்பா நாலுக்குள்ளே
தாக்கியிந்தச் சூதமொன்று மணியாய்வாங்கு
வானென்ற வீரமொடு துருசுநீறும்
வாகாக நாலிலொன்றை மணிக்குப்பூசி
தேனென்ற அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துச்
சிறக்கவொரு புடம்போட்டு ரசிதச்சுண்ணம்
வேனென்ற வங்கமைந் நூற்றைக்கூட்டு
வெள்ளியப்பா பதினாறு விரைந்தமாத்தே. (23)

மாத்தாக வெள்ளியுமாம் நவலோகங்கள்
மாட்டுகிற முறையறிந்து மாட்டுமாட்டு
ஏத்தாக இக்குருவைச் சூதத்தோடே
என்னசொல்வேன் வெள்ளியப்பா யிருபத்தஞ்சு

கூத்தாகக் களிமண்ணிற் குருவைக்கூட்டிக்
குகைபோலே பிடித்துவைப்பாய் மூசையாக
ஆத்தாக மூசையிலே நவலோகத்தை
ஆட்டிடவே வெள்ளியுமா மறிந்துபாரே. (24)

பாரேதான் சிவயோக ஞானம்பாரு
பாலகனே சொல்லுகிறேன் உண்மைதன்னை
நேரேதான் நவ்வெழுத்தின் மேலேமைந்தா
நேர்த்தியுடன் மவ்வெழுத்தாம் சிகரந்தோணும்
தேரேதான் நவ்வெழுத்தின் மேலேசென்றால்
தெரிந்ததொரு மவ்வெழுத்தின் கீழதாகச்
சீரேதான் சிவாலயமும் நதியுமுண்டு
சிறப்புடனே அவ்விடத்தில் கண்டுதேறே. (25)

அவ்விடத்திற் சேர்ந்தந்த நதியில்மூழ்கி
அழகான சிவாலயத்தைப் பூசைபண்ணி
பவ்வியமாய்ப் பூரணத்தின் கீழதாகப்
பரிவான சிவாலயங்க ளநேகமுண்டு
மவ்வியமாம் அனாகதமாம் மயிர்ப்பாலத்தில்
மகிழ்வுடனே சிவாலயங்க ளதிகமுண்டு
நவ்வியமாய் வாசிமலர் தனையெடுத்து
நாதாந்தச் சிவாலயத்தை நன்றாய்ப்போற்றே. (26)

போற்றுதற்கு அப்பனே பலத்தைக்கேளு
புகழ்பெரிய அட்டாங்க யோகம்வேணும்
தேற்றியே அட்டாங்க சித்தியானால்
சிவஞான சிவயோகம் நினைவிற்றோன்றும்
ஏற்றமுள்ள சிவயோகம் நினைத்தபோதே
இன்பமாய்க் குருபரனும் பதிவாய்வந்தே

ஆற்றலுடன் சிவராஜ யோகங்காட்டி
அன்புடனே பூசைவகை நல்குவாரே. (27)

நல்லதொரு பரமகுரு வந்ததாலே
நலமுள்ள சரியைவழி மார்க்கந்தோணும்
மெல்லவே சரியைவழி கடந்தாயானால்
விபரமதாய்க் கிரியைவழி விரைவிற்றோன்றும்
வல்லதொரு கிரியைவழி கண்டபின்பு
மைந்தனே யோகவழி தெளிவாய்த்தோணும்
செல்லவொரு யோகவழி கடந்தாயானால்
திறமையுள ஞானவழி தெரியும்பாரே. (28)

தெரியாத ஞானவழி கண்டபின்பு
சித்தமது ஏகாந்த வழியில்நில்லு
அரிதான ஆதார மூலந்தன்னில்
அன்பான அக்கினிதன் னாவிதன்னை
விரியாமல் முக்கோணச் சுவரில்நின்று
மேலான வாசிதனை மேலேயேத்திச்
சரியான படிசொந்த மனையைக்கண்டு
சங்கையுடன் தானிருந்து தன்னைக்காணே. (29)

தன்னைத்தான் கண்டுமேல் வழியைப்பார்த்துத்
தானறிந்து அவ்வழியிற் கலந்துமேவி
இன்னதென நிராதாரஞ் சித்தமாகி
இனிமையுடன் பூரணமாய் நின்றதாகி
முன்னமே சிவனயன்மால் பூசைசெய்து
முடிவான தீவினைக ளிரண்டுமற்று
என்னவே பிரபஞ்சத் தாசையற்று
இனிமையுள்ள சோதியிலே புகுந்துபாரே. (30)

பார்த்தவுடன் மனமகிழ்வு மிகஉண்டாகும்
பகராரிய இறப்பிறப்பை மாற்றிவைக்கும்
நேர்த்தியதாய்ச் சோதியுடன் சேர்ந்துவாழ்வாய்
நேர்மையுள்ள பூரணத்தின் கிருபையாலே
சீர்த்தியுடன் மனமொத்துப் பார்க்கவேண்டும்
சிறப்பான உண்மைநிலை தெரியவேண்டும்
சேர்த்ததொரு ஞானநிலை கண்டுகொண்டால்
தேறுதலாய் சாயுச்சிய பதங்காண்பாயே. (31)

ஆயேநீ காயசித்தி செய்துநீயும்
அறிவுடனே உலகத்திற் சஞ்சரித்தால்
நேயமுடன் ஆணுவத்தை விட்டுமைந்தா
நேர்மையுடன் தானிருந்தாற் சித்தனாவாய்
காயமதை அழியாமற் செய்வதற்குக்
கருத்தான சிவயோகங் கண்டுதேறு
மாயமுள வாழ்வதனை மறந்துபோடு
மைந்தனே ஞானமதின் வழியில் நில்லே. (32)

சுகப்பிர்மரிஷி ஞான சூஸ்திரம் 32
முற்றிற்று

....

கூர்மானந்தர் திருவாய்மலர்ந்தருளிய
மவுன ஞானம் 5

சிறந்தமய மானசிவ சோதிபாதம்
சீர்பெறவே யெந்நாளும் புவியின்மீது
நிரந்தரமாய் நின்றவொரு ஆயிதன்னை
நேத்திரமும் மூக்குமத்தி நினைவாய்ப்பார்த்து
பிறந்ததொரு ஆகாசம் பூமிலோகம்
பிசகாம லடுக்கடுக்காய் வரைகள்காண

மறமலிமா முகத்தோன்றன் பாதந்தன்னை
மனதுள்வைத்து யெந்நாளும் வணங்கினேனே. (1)

வணங்கினேன் மக்களுக்குப் புத்திசொன்னேன்
மாயையொடு பொய்கோபம் மூன்றுந்தன்னி
இணங்கினேன் மனிதரொடு வாய்பேசாமல்
என்மகனே வேதாந்தத் துறையினின்று
பணிந்திட்டேன் பூரணத்தை நோக்கிக்கொண்டு
பராபரையைப் பூசித்துப் பானம்பண்ணி
குணங்கிடா ஆறுவரை யூணியேறி
குணமான ஆனந்த அறிவில்நில்லே. (2)

நில்லேநீ யிருந்தாடக் குறியைக்கேளு
நேர்மையுள்ள மூன்றெழுத்தின் குணத்தைக்கேளு
வல்லபங்கள் வேண்டாங்காண் அங்கென்றூணி
வமட்டியே வுட்கொள்ள அடங்கும்வாசி
அல்லலாய் அலையாதே சிங்கென்றேதான்
அறிந்துவிடு சிவசூட்ச மறியலாகும்
நல்லதடா மங்கென்ற வெழுத்தைநாட்ட
ஞானமுடன் யோகசித்தி நடத்தும்பாரே. (3)

நடத்துமடா மகாரத்தை விடுதலாகும்
நலமான சிகாரத்தை வாங்கலாகும்
இடமாக விங்கதுவே அடுக்கடுக்காய்
எல்லோர்க்குஞ் சொல்லிவிட்டே னிதமாய்க்கேளு
திடமான தீட்சையடா மௌனவாலை
சிறுபிள்ளை செய்தாலுஞ் சித்தியாகும்
தடமான குமரியடா ஆத்தாள்சொன்னாள்
சாபங்கள் நிவர்த்தியடா விதுகண்டோர்க்கே. (4)

கண்டவர்க்கு ஓரெழுத்து இதனுக்குள்ளே
கனமான மூன்றெழுத்து மிதனுக்குள்ளே
கண்டதொரு அஞ்செழுத்து மிதனுக்குள்ளே
காயசித்தி யோகசித்தி யிதனுக்குள்ளே
முண்டான முப்பத்தி ரண்டுதீட்சை
மோகனமுந் தம்பனமு மிதனுக்குள்ளே
பண்டைமறை சாபங்க ளிதனுக்குள்ளே
பராபரையுஞ் சிவனுமையும் பாதமுற்றே. *(15)*

கூர்மானந்தர் மவுனஞானம் *5*
முற்றிற்று

....

கூர்மானந்தர் திருவாய்மலர்ந்தருளிய ஞான சூஸ்திரம் 50

திருந்துமதி முகத்தாளென் தாயார்பாதம்
சிந்தையுற்று யானைமுகன் பாதம்போற்றி
பொருந்துகின்ற செனகாதி ரிஷிகள்பாதம்
போற்றிசெய்து காலாங்கி பாதம்போற்றி
அருந்தவஞ்செய் தெட்சணஞ்சின் மயமாந்தேவர்
அடிதொழுது சூஸ்திரமா மைம்பதுக்குள்
மருந்தினால் வாதமொடு யோகஞானம்
வகையாகச் சொல்லுகிறேன் மனதுதானே. *(1)*

மனதுசெய மானாக்கால் வருமெய்ஞ்ஞானம்
வாதமென்ன யோகமென்ன ரெண்டுமொன்று
தனதுபண்ணிக் கொள்ளவுமே சித்தர்தன்னாற்
சகலசித்தும் கைவசமாய்த் தானேயாகும்
தினையளவு கற்பமறிந்துண்ண வேணும்
தேகசித்தி யாவதற்குத் திறமையுண்டாம்

கனதையுள்ள சீடருக்கு யெய்துமிந்நூல்
　　கனமான யோகநிஷ்டை காட்டுவேனே. (2)

காட்டுகிறே னஷ்டாங்க யோகமெல்லாம்
　　கண்டித்துச் சொல்லாமற் சித்தர்சொன்னார்
தீட்டுகிறேன் பலபலவா யோகமெல்லாம்
　　செடம்நிலைக்க மாட்டாது சிதறிப்போகும்
ஊட்டுகிறேன் மவுனமென்ற யோகத்தாலே
　　உறுதிபண்ணிக் கொள்ளலாம் மூலத்தீயால்
வீட்டிலே யேத்திவைத்தாற் பிரகாசிக்கும்
　　வெளியேறி னாற்றீபம் மெலிந்துபோமே. (3)

மெலியாமற் சுழிமுனையி னூடேதாக்கு
　　மேற்குகையின் வாசல்கும் பகமேசெய்யச்
சலியாமற் சிகாரவகா ரத்திலூட்டச்
　　சந்திரமண் டலமுரசு தாரையோடும்
கலியேது கர்மவினை தானுமேது
　　கண்டமடித் துண்ணாக்கி லேற்றும்போது
வலுவான பிராணனுக்கு அசைவங்கேது
　　மாபாத கங்களெல்லாம் மாறுந்தானே. (4)

மாறாத வாழ்வல்லோ வாசியோகம்
　　மவுனசித்தி வாய்த்தாக்கால் வருமெய்ஞ்ஞானம்
கூறாத மெய்ஞ்ஞானம் வாய்த்துதானாற்
　　கோடிவிதி மாண்டாலுங் குறைவொன்றில்லை
மேரான திரிகோண மூலத்தீயை
　　மேலேற்றிச் சகஸ்திரியாள் பானமோடு
தேராத பேர்க்கானா லென்ன செய்வோஞ்
　　சிவ்யோக வாழ்க்கையல்லோ திரமென்றாரே. (5)

திரமான மேல்மூலம் பாதைமார்க்கம்
செப்பாமற் போனார்கள் சித்தரெல்லாம்
வரமான நடுமூலம் கண்டத்தூணி
வாயுதனை யாகாச வட்டஞ்சேர்த்துப்
பிரமான வாசலொன் பதையும்பூட்டிப்
பிடரிவழி கண்டிறிந்து பூரணத்திற்
பரமான போதுமுன்னைத் தூக்கிக்கொண்டு
பந்தமத்த யோகமதைப் பழக்கம்பண்ணே. (6)

பழக்கமல்லோ முந்திமுந்தி மூலாதாரம்
பழகியபின் மேன்மூலம் பார்க்கவேணும்
பிழைக்கவென்றாற் சுழிமுனையை யடுத்தேவன்னி
பிங்கலைதா னாதித்தன் காந்தியாச்சு
துழைக்கருகே யிடைகலையே சந்திரபீசம்
சூரியனு மக்கினியுஞ் சோமன்மூன்றும்
மழைக்குடைப்பின் கலைரெண்டுஞ் சுழியிற்கூடு
மத்திசத்தில் நிற்குமட் சரமுந்தானே. (7)

அட்சரத்தின் போக்கறியாத் தோஷத்தாலே
அப்பனே மவுனங்கை பலியாதையா
மிச்சமென்ற அசவைமணி கீழேநின்று
வேரறுக்க மாட்டாத வீணரெல்லாம்
அட்சரத்தால் மவுனமென்பா றறியமாட்டார்
அந்தரங்கஞ் சொல்லுகிறே னடியேனுக்குப்
பச்சணத்தைக் கொண்டுவரக் கற்பதேசம்
பாதியோ பரமானம் பாலுமாமே. (8)

பாலாகும் பழமாகும் சீனியாகும்
பனைவெல்ல மானாலும் பத்தவேணும்

மேலான பச்சரிசிப் பயறுமாகும்
மிளகுசீ ரகமாகும் வெண்ணீராகும்
மாலாக விப்படியே வாங்கியுண்டு
மாண்டிறந்து போனவர்கள் கோடாகோடி
காலான மவுனத்தைப் பெற்றபேர்கள்
கருத்தினா லறிவார்கள் கடினந்தானே. (9)

கடினமென்று தள்ளாதே மவுனயோகம்
கண்மூக்கு மத்தியிலே கருதிப்பாரு
துடிமிகுந்த சுழிமுனையி னூடுதாக்கு
சூரியனுஞ் சந்திரனு மொன்றாய்ப்போகும்
குடியிருப்புச் சக்கரத்தின் கோட்டையாச்சு
கோடிகற்ப காலயுகம் வாழ்வதாச்சு
நொடிநிமைக்கு நேரமல்லோ பிரமன்வாழ்க்கை
நுண்ணிமையாய்ப் பார்த்திருந்து நுடங்குவாயே. (10)

நுடங்கினாற் பூரணமாஞ் சுழினையுள்ளே
நுழைந்தேறி யாகாசப் பதியினின்று
துடங்கினா லிதுவல்லோ மவுனவாழ்க்கை
துருவமென்ற சூட்சமதிற் சொக்கிப்போகும்
அடங்கினாற் பின்னுமந்தப் படிசிருட்டி
ஆக்கலாங் கருமானு பவத்தைவெட்டித்
திடங்கொள்ளு மிப்படியே மவுனமாகச்
சித்தர்வந்து ரகசியங்கள் செப்புவாரே. (11)

செப்புகிறேன் ரேசகபூ ரகமாங்கும்பம்
திடப்படவே நாளொன்றுக் கிருநேரந்தான்
தப்பிதங்கள் வாராம லெழுத்தைச்சேர்த்துச்
சாதித்தால் மவுனவித்தைக் காதாரந்தான்

இப்படியே தீட்சையெனு மேணிவைத்து
ஏறினார் சித்தரெல்லா மண்டத்துள்ளே
எப்போதும் பூரணத்தி லிருந்துகொண்டு
ஏகாந்த வஸ்துவைநீ யெடுத்துமுண்ணே. (12)

உண்ணையிலே கர்மவினை யோடிப்போச்சு
உற்றதீ பாக்கினியு மற்றுப்போச்சு
பெண்ணையனு சரித்தாலும் விடையமார்க்கம்
பிறவியிலே நோக்காது பேதியாது
மண்ணிலெழு பிறப்பாகும் வண்ணானுப்பு
வானிலிருந் தக்கினியாய் வந்தவுப்பு
தண்ணியிலே பிறந்தவுப்பு தீட்சைநீரு
சமுசியங்க ளில்லாமற் றனதுமாமே. (13)

தனதாகச் சிவயோகம் பண்ணவேண்டி
தருகாமல் பானமலந் தள்ளியேகும்
மனதான பேய்க்குரங்கு ஐந்துகொம்பில்
மாளாமற் கேசரத்தில் மாட்டிக்கொண்டு
தினமூன்று ரேசகபூ ரகமேபண்ணித்
தேறிதகை யாறிக்கும் பகமேசெய்யக்
கனலேறும் படிதானே ஆயிரத்தெண்
கலைமதிபா லுண்டுமனக் கவலைதீரே. (14)

கவலையற்ற விடமல்லோ பிரமக்யானம்
கலைமதிபா லுண்டதல்லோ காயகற்பம்
கெவனமிட்டுப் பாய்வதல்லோ குளிகைமார்க்கம்
கெணபதியைக் காண்பதல்லோ தீட்சைமூலம்
சிவனுடைய வுப்பறிந்தால் வேதையோட்டம்
தேகமழி யாதிருந்தால் யோகஞானம்

புவனவிளை யாட்டல்லோ சித்தராட்டம்
பூரணத்தைக் கண்டவரைப் பூசைபண்ணே. (15)

பூசையிலே மெத்தநன்று மூலாதாரம்
பூசித்தாற் கேசரத்தி லாயிபூசை
ஆசையற்ற ஆசையல்லோ குருவின்பூசை
அறியாம லுலகத்தோ ராசைபூண்டு
காசினியிற் கோவிலென்றுந் தீர்த்தமென்றும்
கற்றவர்கள் கட்டியவக் ராரமென்றும்
பாசையினாற் பேசியபுத் தகங்களென்றும்
பலபலவாய்ப் பூசைகளைப் பண்ணுவாரே. (16)

பண்ணுவது பிரணவத்தின் மகிமையாலே
பரிதிமதி ரெண்டையுமே பாழ்போகாமல்
விண்ணிலே கட்டிவைப்பார் வாசிதன்னை
மேலேற்றிப் பூரணமாம் வெளியைக்காண்பார்
கண்ணிலே கண்டநெருப் பல்லோவீசன்
காரணத்தைப் பெற்றதல்லோ பூசைமார்க்கம்
புண்ணியமே செய்தவர்க்கு யெட்டுமெட்டும்
பொய்யான துரோகிக்குப் பொய்யாமென்னே. (17)

பொய்யாமற் சொல்லுகிறேன் பூசைமார்க்கம்
போகாமற் பதினாறிற் பொறிசெல்லாமல்
மெய்யாகப் பனிரெண்டி லிருத்தியூது
மேலாங்கே சரத்திற்கும் பகமேசெய்யத்
தொய்யாமல் நாளுக்கு நாளாயிந்தச்
சோடசத்தி னால்வன்னிச் சுடர்களிட்டு
ஐயையோ வமுதமது குமிழிபாயும்
அரகரா பிரமன்விதி யதனைத்தாண்டே. (18)

விதிதாண்ட வேணுமென்றால் மதிபாலுண்ணு
விமலனுட பாதமதை மெய்யாய்ப்பாரு
கெதிகாண வேணுமென்றா லண்டத்துள்ளே
கிட்டினாற் சாயுட்சியங் கிடைக்குமப்பா
பதிகாண வேணுமென்றால் வாலைதேவி
பராபரையைப் பூசித்துப் பண்பாய்ப்பாரு
நிதிகாண வேணுமென்றா லுவரடுக்க
நிறைவுப்பைக் கண்டெடுத்து நீட்டிப்பாரே. (19)

பாரப்பா பூமியிலே தலங்களுண்டு
பண்பான மலைச்சார்வு மெத்தநன்று
நேரப்பா காசிக்கு வடமேல்மூலை
கூசாம லாறுயோ சனைதூரத்தில்
நீரப்பா வவ்விடத்திற் பாறையுண்டு
நெடுநாளைக் குடியிருப்புத் திடலோரத்தில்
சேரப்பா வதில்விளையும் பூமிநாதம்
தேவியென்றும் யீசனென்றுஞ் செப்பலாமே. (20)

செப்புகிறேன் காசிக்குத் தெற்கதாகச்
செயநகர மென்றுசொலுந் தலந்தானுண்டு
அப்புகிறேன் அவ்விடத்திற் பூமிநாதம்
அதில்விளையு மரனுமங்கே யருகிருப்பார்
ஒப்புகிறேன் தெளிவுதிருப் பதியாமென்று
ஒருமலைதா னேழுமலை யென்றுரைப்பார்
துப்புகிறே னதின்மேற்குப் பதின்காதத்துள்
சோதிபோற் பூவழலை தோணும்பாரே. (21)

தோணுமந்தத் தேவியுட நகரமுண்டு
சொல்லுகிறேன் தினந்தோறுஞ் சோழதேசம்

வேணுமந்த ஸ்ரீரங்கம் வடமேல்மூலை
வீரான வைங்காத மேலேசென்றால்
ஆணுசில விடங்களிலே பூமிநாதம்
அவ்விடத்தி லரனிருப்பா ரதற்குத்தெற்கு
கோணமிலை பாண்டியனார் தேசந்தன்னிற்
கோனிருந்த நகரமல்லோ கூடல்தானே. (22)

கூடலுக்குக் கீழ்மூலை மறவர்நாட்டிற்
குணமான தலமொன்று விசாலமெத்த
நாடதுக்குட் பூநாதம் விளையும்பூமி
நன்றாக வீசனுமோ குடியிருப்பார்
ஆடவர்கோன் கன்னியா குமரிமேற்கு
ஐம்பதுநா ழிகைவழியிற் றலமொன்றுண்டு
தேடியதோ ரவிடத்திற் பூமிநாதம்
தேவியுடன் சிவனிருப்பார் செய்திகேளே. (23)

கேளப்பா பொதிகைமலைச் சார்புதன்னிற்
கிருபையுள்ள நாலாறு தலங்களுண்டு
நாளப்பா தேவியுப்பு மீசனுப்பு
நலமாகக் காணலாம் பயமில்லாமல்
வேளப்பா விப்படியே பூமிதோறும்
வெகுவிதமாய் நாதமது விளையும்பூமி
நீளப்பா கோடான கோடியுண்டு
நிலம்பார்த்து வுப்பெடுத்தால் நிசங்கள்தானே. (24)

தானென்ற பூமியிலே யின்னமுண்டு
தலமறிந்து சொல்லவென்றாற் சோலிமெத்த
தேனென்ற தேசத்திற் பூமிநாதம்
தெரிந்தெடுப்பார் சித்தரெலாஞ் சிவனைக்காண்பார்

கோனென்ற பூநீற்றின் பெருமைசொல்வேன்
சூர்ந்துபா ரதுநேர்மை வெள்ளையாகும்
வேனென்ற சித்திரையிற் கதிருபோல
விளையுமடா சந்திரன்றன் விந்துநீரே. (25)

நீரான தேங்காயைத் திருகினாற்போல்
நிலத்திலே பொதிந்திருக்கும் நெடுமாலென்பார்
சாரான மாதவிடாய்க் குறுதியென்பார்
சத்தியென்றும் பரமென்றுங் கூறுவார்கள்
பேரான வுவரென்றும் வண்ணானென்றும்
பிண்டமென்றுஞ் சந்திரனார் பீசமென்றும்
தூரான மூலமென்றும் புளிதானென்றும்
சுத்திசிவ சூர்மனென்றுஞ் சொல்லுவாரே. (26)

சொல்லுவார் வித்தென்றுஞ் சாரமென்றும்
சுந்தரியாள் சுட்டதென்று மனந்தானென்றும்
மல்லுவார் சாகாத கால்தானென்றும்
மழலையென்று மாயிக்கு வகுப்பார்நாமம்
நல்லுவா ரீசனுக்கு நாமரூபம்
ஞானியென்றும் அங்கியென்றும் நஞ்சாமென்றும்
வெல்லுவார் வெள்ளைக்கற் சுண்ணாம்பென்றும்
வீரமென்றும் விந்தென்றும் விளம்புவாரே. (27)

விளம்புவார் சமாதியுப்பு நிலவுப்பென்றும்
வேகாத தணவஎன்றும் வெடிதானென்றும்
களங்கமில்லா பாதரசக் கம்பியென்றும்
கதிரென்றும் கருவென்றும் காயமென்றும்
முளங்கியதோர் இருடியென்றுபூ நீரென்றும்
முத்துபோல் நிறமென்றும் மோனிமென்றும்

உளங்குளிரச் சொல்லுவா றாதியென்றும்
உண்மையென்றும் வஸ்துவென்றும் ஓதும்நூலே. (28)

ஓதுமே ஆயியுட பூமிநாதம்
உத்தநிலங் கசிந்திருக்குங் கசிவுகொண்டு
ஏதேனும் விளையாது புற்பத்தாது
இந்தநில மாயிக்கு முகந்தவீடு
ஆதரவாய்த் தேவியைவிட் டகலாமற்றான்
அடுக்கவே குடியிருப்பா ரவனுமையா
வாதநூ லாயிரத்திற் சொன்னேனிந்த
வகையெல்லாங் கண்டறிந்து வாதம்பாரே. (29)

வாதமென்றா லுப்புவகை யறியவேணும்
வாய்ப்பேச்சி னால்வருமோ ரசவாதந்தான்
வேதமென்றா லறிவுகொண்டு நிலைக்கவேணும்
வீணாகப் பேசினால் வருமோஞானம்
காதமென்றால் வழிநடந்து தொலைக்கவேணும்
கண்மூடி யிருந்துவிட்டால் நடப்பங்கேது
நாதமென்றால் வாசிகொண்டு வூதவேணும்
நாய்போலே திரிந்தாக்கால் நலமாகாதே. (30)

நலமான வாச்சியுட நாதந்தானே
நல்லதண்ணீர் பட்டாக்காற் சிவந்துபோகும்
மலையாமல் மஞ்சள்பட்டால் ரத்தமாகும்
மயக்கமில்லை தேவியுட நாதமாச்சு
குலமறியாச் சண்டாள ருலகத்துள்ளே
கோதையுட யோனியிலே வடிந்தரத்தம்
பிலமான வாதத்துக் காதியென்றும்
பேசுவார் வீணரெல்லாம் பேசுவாரே. (31)

பேசுவார் பூநீரே சாரஞ்சாரம்
பெலமான வீசனுப்பே காரங்காரம்
கூசாமல் ரெண்டுக்கு நிலமேதெய்வம்
குடியிருப்பு வோரிடத்திற் குறித்துப்பார்க்கத்
தேசமெல்லாம் போனாலுந் தெரியாதப்பா
சிவயோக வாழ்க்கைவந்தாற் சித்தியாகும்
வீசுவா ருப்பறிந்தோ மென்றுசொல்லி
மிலேச்சர்களைத் தேடாதே குருவைத்தேடே. (32)

குருமுடிக்குங் காலமல்லோ மீனமேஷம்
கொண்டாட்ட மாகவே குறித்துச்சொன்னார்
கருவெடுக்குங் காலத்தைப் பிரித்துச்சொல்லிக்
காட்டாமற் சூத்திரங்கள் காட்டிப்போட்டார்
பொருள்முடிக்கப் போறதெங்கே வுப்பில்லாமற்
பூநீற்றை மாத்திரமே பொசுக்கியென்ன
இருவகைக்கு மதிபுகுநாள் முன்னும்பின்னும்
எட்டுரெண்டா மாதமறிந் தெடுத்துக்கொள்ளே. (33.

எடுத்தாக்காற் றீட்சைக்கு ஆதியென்ன
ஏகாந்தப் பிரணவநீ ரூட்டவேணும்
குடித்தாக்காற் பூதபஞ்ச கரணமப்பா
கூட்டினாற் போதாதோ குருவுமாகும்
பிடித்தாக்கால் நில்லாத சூதராஜன்
புலிகண்ட ஆடதுபோற் பொசிங்கிப்போகும்
படித்தாக்கா லென்னவுண்டும் உட்பூராயம்
பாராமற் சுட்டதெல்லாம் பாழ்கண்டீரே. (34)

பாழாகப் போகாம லீசனுப்பைப்
பதினாறு கலைமதியிற் பாடம்பண்ணு

ஏழ்மையாய்ப் போகாமற் றேயுஉப்பை
ஈராறு சூரியனில் ரெட்டித்தேறு
கோளாகப் போகாம லிவைரெண்டுக்கும்
குற்றமில்லாச் சுத்தஜலங் குளிரத்தாக்கு
நாளாக விப்படியே மாறிமாறி
நாளொன்றுக் கிருநேரம் நயந்துசெய்யே. *(35)*

செய்வதே யிடைபாகஞ் சிதறிடாதே
தீட்சையிலே முதற்றீட்சை மறந்திடாதே
கொய்வதிலே யுப்பெடுக்கும் நாள்விடாதே
குருமுடிக்குங் காலமதைக் கோணிடாதே
பொய்வசனச் சீடர்களைச் சேர்த்திடாதே
பூவையர்க ளாசையிலே புக்கிடாதே
தொய்வதிலே மனதுதனைப் பேதியாதே
துண்டாக விருந்துநீ தொழிலைச்செய்யே. *(36)*

தொழில்செய்து முடிந்தாக்கால் வாசியோகம்
தொட்டேறிக் கற்பமறிந் தூட்டவேணும்
பழியான வுலகத்தைத் தள்ளவேணும்
பரமகுரு வேடத்தைப் பூணவேணும்
நெழிவான மனங்களிலே சேரவேணும்
நீங்காம லாயிரத்தெட் டண்டமெல்லாம்
வழிபாதை நடப்பதற்குக் குளிகைவேணும்
மைந்தனே ரசகுளிகை மார்க்கங்கேளே. *(37)*

மார்க்கமென்ன சிவசூதம் மெத்தநன்று
வாய்த்தாக்கால் வாலைரசந் தனக்குமைந்தா
தீர்க்கமென்ற வழலைகுரு கடுநீரப்பா
சேர்த்திடவே ரவிமுகத்திற் றிரண்டுபோகும்

ஆர்க்குமிந்த மணிகிடைக்க மாட்டாதையா
அருளான சிவயோகி யானாலெய்தும்
சேர்க்குமிந்தக் குளிகைக்குச் சாரணையைத்தீட்டச்
செப்புகிறேன் நினைவாகத் தெளிந்துகேளே. (38)

தெளிந்துசொல்வோம் பூமியிலே விளைந்ததாது
திரமான பாஷாணம் நாலெட்டென்பார்
அழுந்தியதோர் பாஷாணம் பரங்கிவைப்பு
அப்பனே முப்பத்தி ரண்டேயாகும்
குளிர்ந்திடுமே யுபரசநூற் றிருபதப்பா
குற்றமிலா நவரத்ன மொன்பதாகும்
நெளிந்துசொல்ல மாட்டாது விந்தநூலில்
நிசமான நவலோக மொன்பதாச்சே. (39)

ஆச்சப்பா வகாரமொடு சகாரந்தானும்
அப்பனே நாற்பத்தி அஞ்சதாகும்
பேச்சப்பா விதுவெல்லாந் துகையேதென்றாற்
பிசகாம லிருநூற்றிப் பதினஞ்சாகும்
ஊச்சப்பா வகைக்குமொரு கழஞ்சிவீதம்
ஊட்டவே ரசகுளிகை வாங்கிக்கொள்ளம்
மூச்சப்பா வோடாமற் புடத்தில்நின்றால்
மூதமென்ற குளிகையது சகடுமாச்சே. (40)

சகடமிலை திரிதரஞ்சா ரணையைத்தீர்த்தால்
தாழ்வில்லை கெவுனமென்ற குளிகையாச்சு
விகடமிலை யஞ்சாநாட் போகியென்று
மிஞ்சாம லொன்பதிற்சந் தானமென்பார்
அகடமிலை பதினொன்றுந் திரமேயானால்
அஷ்டமா சித்தியென்றே அறையலாகும்

துகடபதின் மூன்றிற்பூ ரகமேயென்றும்
சொற்பெரியா ரின்னமுண்டு சொல்லுவாரே. (41)

சொல்லுவார் பதினஞ்சு கமலியென்று
துகையெண்ண விருபதிலே சொரூபமாச்சு
மெல்லுவார் பாடியதோர் குளிகையெட்டு
மேலான சித்தர்கள்தான் செய்யும்போது
கல்லுமே சத்துகளைக் குடித்தசூதம்
கழஞ்சியல்லாற் கடுகளவு கதித்திடாது
கொல்லுமே சாரணைக்கு வெடுத்தமூலம்
கூறான இருநூற்றிப் பதினஞ்சாமே. (42)

ஆகுமே மூலிகையாற் கவசங்கட்டி
ஆயிரத்தின் புடமானா லப்பாற்றீட்சை
சேகரமாய் முப்பத்தி ரெண்டுங்கூட்டிச்
சிவனுமையைத் தியானித்துச் செபங்கள்செய்யிற்
போகுமே யண்டகோ ளகையுந்தாண்டிப்
போகாமல் வாசிதனை நிறுத்திக்கொள்ளு
சோகமே வாறாமற் கற்பசித்தி
சொற்பெரிய பூரணத்திற் சொக்கலாமே. (43)

சொக்கலாங் குளிகையுட திரத்தினாலே
சோம்பாமற் றிரும்பலாந் துவாதசாந்தம்
நிற்கலாம் பிரபஞ்ச சாகரத்தை
நீந்தலாம் நினைவோடே நிலைதப்பாமற்
பக்குவமாய்ச் சித்தர்களைக் கண்டுபோற்றி
பண்பான சித்தனென்றும் பேருவாங்கி
தக்கதோ ரஷ்டமா சித்துமாடிச்
சாகாத ரிஷியாகித் தலைவனாமே. (44)

தலைவன்மணி தனக்குச்சா ரணையைத்தீரு
சத்ததினா லக்குளிகை யிடைதான்மிஞ்சி
மலையாமற் கவனத்தி லேறும்போது
வாறியே கலைகீழாய்த் தள்ளுந்தள்ளும்
நிலையாது தாபமொடு சோபத்தாலே
நிமிடத்திற் கண்டியங்கி நினைவுபோகும்
தொலையாத லகிரியினால் மயங்கித்தள்ளும்
சூதமணி கட்டுகிற தொழில்சொல்லாரே. *(45)*

சொல்லாம லிருக்கவில்லை யாயிரத்திற்
சொல்லிவிட்டேன் ரசமணியின் றுகைதப்பாமல்
எல்லாரும் காண்பதற்குத் தேவிபூசை
யீசனுப்பு யிடைபாகம் இயம்பிவைத்தேன்
கல்லாத மூடனுக்குத் தெரியவேண்டிக்
கங்கைதனைக் காட்டினேன் கைபாகங்கள்
அல்லாமற் செயநீர்செந் தூரஞ்சுண்ணம்
அநேகவித மானதெல்லா மறைந்திட்டேனே. *(46)*

அறைந்திட்டேன் யோகமொடு ஞானமார்க்கம்
அப்பனே கற்பமுதற் சித்தியெல்லாம்
குறைந்திட்டுப் போகாம லாயிரத்திற்
கொட்டினே னதைக்குறுக்கி யைம்பதுக்குள்
நிறைந்திட்ட வங்கமெல்லாஞ் சுருக்கிப்பாடி
நின்றதனாற் சித்தர்கண்டு நிசமென்றார்கள்
பறைந்திட்டே னென்குருசின் மயமாந்தேவர்
பரிபாஷை தள்ளியிந்நூல் பாடென்றாரே. *(47)*

பாடினேன் குருவினுப தேசத்தாலே
பாங்காக விந்நூலின் பரிட்சைபோல

தேடினேன் சித்தர்களுஞ் சொன்னாரில்லை
　　சிவசிவா பலபாஷை செப்பிநூல்கள்
கூடினேன் கூர்மனென்று பேரும்பெற்றேன்
　　கோடிகற்ப காலமல்லோ குகைக்குள்வாழ்ந்தேன்
ஆடினேன் சித்துகளை அண்டந்தோறும்
　　அம்மம்மா செயநீரொன் றறையக்கேளே. (48)

அறைகிறேன் நிலவுப்பு நாலுபங்கு
　　அவ்விடைக்குச் சத்தியுப்புக் கூடக்கூட்டி
நிறைகிறேன் அயக்கரண்டிக் குள்ளேயிட்டு
　　நிலக்குமிழின் படிச்சாறு நிறையவிட்டு
பறையாமற் சிறுகொதிப்பாய்க் கொதிக்கவைத்துப்
　　பழச்சாறு விட்டாட்டி மூன்றுநேரம்
நுறையாமல் வில்லைதட்டிப் புடத்தேபோட்டு
　　நோகாமற் சிவனுமையுஞ் சுண்ணமாச்சே. (49)

ஆச்சப்பா சுண்ணாம்பைக் கொட்டிக்கொண்டு
　　அதனூடே சாத்தையுந்தான் பீங்கானுக்குள்
நீச்சப்பா நிலமாகு மந்தநீரில்
　　நிசமாக வீரமொடு பூரஞ்சேர்த்து
தோச்சப்பா சரக்குகளை ரவியில்வைத்துத்
　　தோயவே வீரமொடு பூரநீரும்
மூச்சப்பா வாசிதனைப் பழக்கம்பண்ண
　　மூன்றுதபா லிம்மருந்தை யருந்தமுற்றே. (50)

கூர்மானந்தர் ஞான சூஸ்திரம் 50
முற்றிற்று

....

நாற்பத்தெண் சித்தர்

கண்ணானந்தர் திருவாய்மலர்ந்தருளிய சிவராஜ யோகம் 14

ஆதியெனக் குபதேசக் குருவதாகி
ஆண்டருளு மணோமணியின் பாதம்போற்றி
நீதியுள்ள பலகலைக ளோதிவைத்த
நிற்குணஞ்சேர் பிருகுமகா ரிஷியைப்போற்றிக்
கோதில்லா மேலோர்கள் பாதம்போற்றிக்
குறிப்புடைய சிவயோக மார்க்கந்தன்னை
மேதினியிற் சொல்லுகிறேன் தெளிவதாக
மெய்யென்ற நிலைதெரிந்து யோகஞ்செய்யே. (1)

செய்யப்பா கரங்கொண்டு காலைக்கட்டிச்
செம்மையுடன் கண்மூடி செய்வாய் நீயும்
உய்யக்கும் பகத்தில்இம் மென்றுகும்பி
உயர்வான வாசியது மூலம்பார்க்கும்
வெய்யதொரு வைந்திடத்திற் பழக்கம்பண்ணு
விரும்பியதோர் யோகமது சித்தியாகும்
பையமதி தன்னில்அங் கென்றுகும்பி
பண்டிரவி தனில்வங்கென் றேத்திப்பாரே. (2)

பாரப்பா வைந்திடத்திற் பழக்கஞ்செய்யப்
பருதிமதி யெழுந்திருக்க மாட்டாதப்பா
நேரப்பா கீழுமில்லை மேலுமில்லை
நிச்சயமா யந்தரத்தில் கட்டும்வாசி
மாறும்போ திரேசகமாய்க் கும்பித்தாக்கால்
வல்லசத்தி தோணுமடா மகிழ்வாய்க்காணு
சேரும்போ தில்வாசி யெழும்பாமற்றான்
சிவசிவா யிருப்பிடத்திற் சேருந்தானே. (3)

தானென்ற ஓராண்டு பழக்கஞ்செய்தால்
தன்மையுடன் திங்கள்பத்திற் பாலனாவாய்
நானென்ற மூன்றாண்டு பழக்கஞ்செய்தால்
நன்மையுள வாய்விருக்கு மிடங்கள்தோற்றும்
மானென்ற அரிசிவனுங் கண்ணிற்றோற்றும்
மைந்தனே சூரியன்போற் பிரகாசிக்கும்
கோனென்ற ஆதியந்த மூலத்துள்ளே
குருபரனே வாசியடி வாரம்பாரே. (4)

பார்க்கையிலே ஆறுதலந் தோணுமப்பா
பாலகனே சத்திமுத்தி யதுதானப்பா
ஏர்க்கையுள்ள வாசியினா லெல்லாமாச்சு
இனிமையுடன் வகாரமடா சிவயோகந்தான்
சேர்கையுட னடிமுடியும் நடுவில்நின்று
சித்தியுள்ள அபானனென்ற வாயுவாச்சு
மார்க்கமுள்ள மதியாச்சு ரவியுமாச்சு
மைந்தனே யதற்கடியிற் சலமுமாச்சே. (5)

ஆச்சென்ற யோகமது சுருக்கமாக
அப்பனே சொல்லிவைத்தே னருமையாகப்
பேச்சென்ற யென்னாசான் பிருகுசொன்ன
பிர்மசிவ யோகத்தில் விரிவாய்ச் சொன்னார்
மாச்சலது மில்லாமற் பார்த்துக்கொள்ளு
மைந்தனே சிவயோகங் கண்டுதேறு
சூச்சமாய்க் கருவெல்லாங் கண்டுபாரு
சொல்லுமடா விபரமதைச் சொல்லக்கேளே. (6)

கேளப்பா யோகிக்கெள் ளெண்ணெயோடு
கெடியான கடுகாகா முழுகுதற்கு

நாற்பத்தெண் சித்தர்

நாளப்பா சவுரியுடன் பொடுத லைச்சார்
நாடுசம னிடைபசும்பால் வேம்பின்வித்து
வாளப்பா நெல்லிபருப் புங்கடுக்காய்
வால்மிளகு சீரகமுஞ் சேர்த்துக்காய்ச்சி
கோளப்பா வாராது முழுகிவந்தால்
கொதிப்பான மூலவன்னி யடங்கும்பாரே. (7)

பாரப்பா வுந்தியிலே மைந்தாகேளு
பலமான கங்கைசிவ கங்கையுண்டு
நேரப்பா அந்நிலையை அடுத்துக்கண்டு
நிராமயத்தின் கங்கைதனைச் சுகமாய்நீயும்
தேரப்பா அந்திசந்தி கொண்டாயானால்
சிவசிவா ஆதார மூலாதாரம்
சீரப்பா நிராமயத்தில் மூலந்தன்னைத்
திறமாகக் கண்டறிவாய் சொல்லினேனே (8)

சொல்லினே னாதார மூலமார்க்கம்
சுருக்கமாய் விள்ளுகிறேன் நன்றாய்க்கேளு
வல்லதொரு குருவருளால் அகாரதீட்சை
வந்தபின்பு உகாரமடா சத்திதீட்சை
நல்லதொரு மவுனமடா மகாரதீட்சை
நலமாகக் குருவறிந்து தீட்சைபெற்று
மெல்லவே யமுதகற்ப முண்டாலப்பா
மேதினியிற் காயமது சித்தியாச்சே. (9)

சித்தியென்ற சித்தியது யோகமார்க்கம்
சிவமறிந்த மூலமடா பிர்மஞானம்
மத்தியிலே ஞானகே சரியின்தீபம்
மவுனத்தி லானதுவு மூலத்திதான்

சக்தியுட தீயதுதா னுந்தியுந்தி
சரியான ஆவியப்பா பிராணாயந்தான்
முத்தியென்ற நாதமடா சிலம்பினோசை
மூலமடா ஓசையைநீ தெளிவாய்ப்பாரே. (10)

பாரேதா னாகாச வோசைமைந்தா
பத்தியுள்ள மூலமதி லாவிதன்னால்
நேரேபார் வாசியடா மேகமாச்சு
நீதியுள்ள மேகமது ரவியினாவி
வேரேயா மிரவியுடன் மேகஞ்சேர்ந்து
விந்தையுள்ள விரைச்சலுடன் சலமுமாச்சு
கூரேதான் மேகசலந் தன்னால்மைந்தா
குவலயத்தி லங்கங்கு உயிருண்டாச்சே. (11)

ஆச்சப்பா சோதிபிர காசங்கண்டு
அப்பனே கருக்களெல்லாம் சொல்லிவிட்டேன்
பேச்சப்பா ஞானிகட்குத் தெரியுமல்லால்
பின்னொருவ ருக்குமிது தெரியாதப்பா
சூச்சத்தின் வழியறிந்து செய்வாயாகிற்
சோதிபிர காசமது கைக்குள்ளாச்சு
மாச்சலிலா தேயறிந்து செய்துகொள்ளு
வகையாகப் பிறப்பிறப்பு மாறிப்போமே. (12)

போமேதான் குடுகொண்டாற் கசாயமப்பா
புகன்றிடுவெள் ளறுகின்வேர் பலமேபத்து
நாமேதா னதிமதுரங் கூகைநீரும்
நல்லமா தளம்பூவால் மிளகினோடு
நேமமுடன் பலமரைதான் கூடப்போட்டு
நிர்மலமாஞ் சலமாறு படியேவிட்டு

சாமமிரண் டடுப்பேத்தி யெரித்துமைந்தா
சரிமுக்காற் படியாக வத்திக்காச்சே. (13)

வத்தியதோர் கசாயமதிற் படிகால்வாங்கி
வளர்கொட்டைப் பாக்களவு பசுவின்வெண்ணெய்
சித்தமுடன் றானிட்டுக் கலக்கிநன்றாய்த்
திறமாக மூன்றுநாட் காலைதன்னில்
பத்தியுட னேபொசித்தால் யோகச்சூடு
பறக்குமடா யிவ்விதமுட் கொண்டாயானால்
சத்திசிவ னருளாலே ஞானம்பெற்று
சதாகோடி காலம்வரை வாழ்குவாயே. (14)

கண்ணானந்தர் சிவராஜயோகம் 14
முற்றிற்று
.....

அசுவனிதேவர் திருவாய்மலர்ந்தருளிய சிவயோக கற்பம் 16

சித்தாகிச் சித்தறியும் பொருளுமாகித்
தீபசுட ரொளிவாகி முடியுமாகி
அத்தனயன் மாலுடனே அன்னையாகி
ஆனந்த ரூபிகர மோனமாகி
நித்தியமாம் அறிவாகி அறிவிலூறும்
நினைவாகி நினைவறியுஞ் செயலுமாகிச்
சுத்திநிரா லம்பநிரா மயமதாகித்
துலங்குபரம் பொருளதனை வணக்கஞ்செய்வாம். (1)

சிவரூப சத்திதனை யாருங்காணார்
சின்மயமாம் பரம்பொருளை யறியமாட்டார்

தவமுடைய விரண்டையுந்தா னுரைக்கக்கேளு
சத்திசிவ மிரண்டும்ரவி மதியுமாச்சு
பவமில்லா ரவிமதிதான் காரசாரம்
பாருலகிற் காரமடா ரவியுமாச்சு
உவமையுற்ற மதியுமல்லோ சாரமாச்சு
உண்மையுள்ள தத்துவமு மிவைதான்பாரே. (2)

பாரப்பா ரவிமதியி னாண்மைகேளு
பாலகனே குருவினாற் செய்யுமார்க்கம்
சேரப்பா மதிதனிலே மதியாய்நின்று
தீரமுடன் நினைவினால் ரவியைக்காணார்
பேரப்பா ரவிகாணா மாந்தர்தானும்
பேருலகிற் பிறந்திறந்து மாள்வாரப்பா
வேரப்பா இடகலையை ரவியிற்சேர்க்கும்
விதமறிந்தா லமுதமதாம் விரைவிற்பாரே. (3)

விரைவுடனப் பால்பொசித்துப் பதியில்நின்றால்
வேதாந்தந் தமர்வாசற் பூட்டுத்தோணும்
நிறையுடனே கால்பிடித்து வாசிபூட்டி
நிச்சயமாய் நின்றதினாற் கால்தானோடி
குறைவில்லாத் தமர்வாசற் பூட்டில்மைந்தா
குறிப்பாக வாசிசென்று நின்றுகொண்டு
கரையில்லாத் தமர்வாசற் றிறந்தால்மைந்தா
காணலாம் பூரணத்தின் மகிமைதானே. (4)

தானென்ற பரப்பிரமக் கபாலந்தானும்
தன்மயம தானகயி லாசமாகும்
வானென்ற கயிலையெனு மேருவேறி
மைந்தனே அறிவதனா லமுதங்கொள்ளத்

தேனென்ற பூரணத்தி னமுதங்கண்டால்
திரமாகச் சதாபோதை புகழ்ந்துகாணும்
கோனென்ற அப்போதை தன்னில்நின்று
குருவருளாற் சிவயோகங் கண்டுதேறே, (5)

தேறப்பா மனம்வேறாய்ப் புத்திவேறாய்த்
தேறாம லலைந்ததினாற் சுகமுண்டாமோ
காரப்பா மனம்போன வழியேசென்றால்
கள்ளரைப்போற் பூவுலகி லலைவார்பாரு
கூரப்பா அறிவுடனே மனதையுந்தான்
குறிப்பாகக் கட்டினவன் சித்தனாகும்
வேரப்பா மனத்தாலே அறிவைக்கட்டி
விட்டவனே ஞானியென்று மேவுவாரே. (6)

வாரேயிந் நூலதுதா னார்க்குக்கிட்டும்
மகத்தான ஞானிகளுக் கெய்தும்பாரு
சேரேநீ தன்மையதிற் பொறுமையப்பா
திரமான பொறுமையதா லடக்கமாகும்
வேரேதான் ரேசகபூ ரகமிரண்டும்
விளங்கியதோர் கும்பகமுந் தன்மையாகும்
நேரேதா னறிவுகுரு விதுமூன்றாகும்
நிச்சயமா யறிவாலே யெல்லாமாச்சே. (7)

ஆச்சென்ற பொருளதனைத் தெளிவதாக
அப்பனே ரேசகபூ ரகத்தினோடு
பேச்சென்ற சிவயோக வழியைச்சொன்னேன்
பேரறிவால் யோகவழி யறியும்போது
மாச்சலென்ற வெப்பதிக மாகக்கண்டால்
வகையுடனே குமரிகற்ப முண்பதற்கு

வாச்சுதென விதையறிந்து வைத்துக்கொள்ளு
மைந்தனே சொல்லுகிறேன் புகழீதாமே. (8)

தாமதஞ்செய் யாமல்நீ துரிதமாகத்
தருணமதிற் செய்வதற்கோர் பாகங்கேளு
நாமறிந்த படியேதான் புகல்வேனப்பா
நலம்பெறவே கற்றாழைச் சோறெடுத்து
பூமலர்போற் செய்வதற்குத் தண்ணீர்விட்டுப்
புனிதமுடன் பன்னிரண்டு தரமலம்பி
சோமனைப்போற் பலம்பத்து பாண்டத்திட்டு
சுகிர்தமுள்ள வெங்காயம் பலம்பத்தாமே. (9)

பலம்பத்துச் சிறிதாகக் கொய்துபோடு
படியொருசித் தாமணக்கி னெண்ணெய்தன்னைக்
கலந்துமிக வடுப்பேத்தி யெரிக்கும்போது
கனத்ததொரு வெந்தயந்தான் விராகனொன்று
பெலமான வதிமதுரஞ் சாதிக்காயும்
பேர்பெறவே கழஞ்சியொன்று கணக்கினோடு
நலமாகப் பொடியாக்கிக் கூடச்சேர்த்து
நாடியே யெரித்துவடித் திருப்பாய்தானே. (10)

இறுத்துமொரு பீங்கானில் வைத்துக்கொண்டு
இயல்பாக ஆத்தாளைப் பூசைசெய்து
நிறுத்திதனைக் காசிடைதான் சாப்பிட்டாக்கால்
நெடுநாளாய் நிற்குகின்ற கனல்மூலங்கள்
பெருத்தவித நோய்களெல்லாந் தீர்ந்துபோகும்
பிறருக்குச் சொல்லாதே வெளிவிடாதே
திருத்தமுள்ள ஞானிகட்கு முலகோருக்கும்
திரமுடனே கொடுத்துநீ தேர்ந்துபாரே. (11)

தேர்ந்தந்தக் குணங்கண்டு கொடுப்பாயானால்
தீராத நோய்களெல்லாம் தீர்ந்துபோகும்
சேர்ந்தகனல் மீறாது நெடுநாட்கொண்ட
தீச்சூட்டை மாற்றுமிது திறமையாக
கூர்ந்திந்தப் பாகமதை யறிந்துசெய்தாற்
கொடுமையுள்ள பிணிகளெல்லாம் மாறிப்போகும்
நேர்ந்திதனை யுனக்காகச் சொன்னேனின்னம்
நேர்மையுள்ள பத்தியந்தான் மிகச்சொல்வேனே. *(12)*

சொல்லவொரு பத்தியந்தான் ஞானிக்கில்லை
சுகமான இல்லறத்தோர் தங்களுக்கு
வல்லதொரு பத்தியங்கள் மிகவுமுண்டு
மகத்தான இச்சாபத் தியமதாகா
மெல்லவே கரப்பான்பண் டங்களாகா
மீன்கறிகள் மற்றவைகள் மிகவுமாகா
நல்லதொரு தலைமுழுக்கு வெண்ணீர்கொள்ள
நலமாக வியாதியது தீர்ந்துபோமே. *(13)*

போமேபார் மூன்றாசை சொல்கிறேன்கேள்
பொருளாசை பெண்ணாசை மண்ணினாசை
வாமேதான் மூன்றாசை பிடித்தமாண்பர்
மாணிலத்தில் மெத்தவுண்டு கோடாகோடி
ஆமேதான் நெறிதவறான் கோடிக்கொன்று
அப்பனே அவர்களுக்குப் பாக்யமெய்தும்
தாமேதான் ஞானிக்குச் சொன்னேனல்லால்
தடித்தபுத்தி படைத்தோர்க்குச் சாற்றிலேனே. *(14)*

சாற்றினேன் காமுகர்க்குச் சாற்றவில்லை
தனியாத கர்மத்தால் வினைகள்தேடி

நாற்றிசையிற் றெரியாம லநேகபாவம்
நல்லதென்று செய்துண்டார் கோடாகோடி
மாற்றிடவே மருந்துகொண்டார் வகைதானுண்டா
மறுசென்ம மெடுத்திவர்கள் மாளப்போறார்
தேற்றிடவே சொன்னனப்பா வினைதேடாமற்
சீரான பரம்பொருளைத் தேடுவாயே. (15)

தேடுவாய் சிவயோக மார்க்கந்தன்னைச்
சிற்பரத்தின் சுயரூபந் தெரியவென்றால்
நாடுவாய் பிராணாயக் கருவைப்பாரு
நல்லதொரு வைந்தெழுத்தை மனதிலூணு
கூடுவாய் சித்தருடன் குறிப்பறிந்து
கூசாமல் ஞானநிலை தன்னிற்றேறு
மூடுவாய் மவுனமதாய் நின்றுபார்க்க
முத்திபெற்று நல்வழியில் வாழ்குவாயே. (16)

அசுவனிதேவர் சிவயோக கற்பம் 16
முற்றிற்று

....

பராசரிஷி திருவாய்மலர்ந்தருளிய ஞானோபதேசம் 22

உச்சியெனும் முடியாயோங் காரமாகி
உற்றவைந்து பூதமுமா யொளிவுமாகி
சச்சிதா னந்தவடி வாகிமோன
சற்குருவா லறிவிக்குந் தோற்றமாகி
பச்சிலையிற் றுயிலரியோ டயனுமாகிப்
பரமாகி யண்டரண்ட பிண்டமாகி
இச்சையற்ற பொருளாகி யெங்குமாகி
இலங்குபர வெளியொளியின் பாதங்காப்பே. (1)

நாற்பத்தெண் சித்தர்

கண்மணியா யிலங்குகின்ற ஞானமார்க்கம்
கருத்துகந்து சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
உண்மையா யடிநடுவின் முடியைப்பாரு
உந்தனக்குக் கைநெல்லிக் கனிபோற்றோணும்
பண்டைந்து வக்கரமை முகமதென்றாற்
பாலகனே யாறுமுக மெங்கேயென்று
விண்டறியக் கேட்டாக்கா லாருஞ்சொல்லார்
வேதாந்தச் சுருதிமுடி வாறுமாச்சே. (2)

ஆச்சப்பா ரேசகபூ ரகத்திருந்து
அருளான வீடமாகும் பகமேயாகும்
பேச்சப்பா புன்னுனியின் மணியதாகும்
புகலதுபின் நவமணிபோல் நாதமாகும்
நீச்சஞ்சக் கரத்துக்கா தாரமாகி
நின்றபூ ரணந்தானா றெழுத்ததாகும்
ஏச்சப்பா பேதமெல்லா மேலுக்கேயாகும்
இயல்பாமைந் தெழுத்தும்முன் றாகுந்தானே. (3)

தானான குருமணியுங் கிரீடமாகும்
தண்மலரின் வாசமுட னில்லாதாகும்
கோனாக நேசித்தா லெல்லாமாகிக்
குறிநின்ற வாறுமுகங் காணலாகும்
வேனான பூரணத்திற் கால்நிறுத்தி
வினையமுடன் மூலமென்ற நாடிதன்னை
நானான சுழினையெனும் நாடிதன்னில்
நலியாமற் பூட்டிரே சகமுஞ்செய்யே. (4)

செய்துயரும் பூரகம தாகநின்று
சேகரமாம் பூரணத்தைக் கொண்டாயானால்

வைபவமா யாறுமுகன் செயல்கடோற்றும்
வழுவன்றி யாதியந்தக் கருவறிந்து
உய்யவே மனதொன்றாய்ப் பூட்டுபூட்டு
உருதியாண் டொன்றினிலே பொறிதான்காணும்
துய்யனெனத் தன்மயமாய் நின்றபோது
தோற்றுஞ்சக் கரத்தோடக் கரமுந்தானே. (5)

கரமான தேனமுத மங்கேசிந்தும்
கண்டுண்டு நின்மனமுந் தெளிந்துகொள்ளு
பரயோகஞ் செய்வதற்கு மவுனம்வேணும்
பதறாமற் சற்குருவைக் காணவேணும்
திரமான கற்பமுடன் சமாதிவேணும்
தெளிவாக நந்தியுட பார்வைவேணும்
வரமான மெய்ஞ்ஞான மார்க்கமென்னும்
மகத்தான பூரணத்தின் சீலம்பாரே. (6)

சீலனே அண்டரண்ட பிண்டமெல்லாம்
சேகரமாம் பூரணத்தி னருளினாலே
கோலமுள்ள புற்பூடு தாபரங்கள்
குலவுமடா மதிகதிரும் சேர்க்கைபாரு
சாலமல்ல அகாரத்தில் உகாரந்தோன்றி
தன்மையுள்ள மகாரமொடு விந்துதானும்
நாலதென்ற விந்துவிலே அனந்தன்சோமன்
நாதாந்தந் திரோதாயி யென்பதென்றே. (7)

பரிபாஷை

என்றதொரு உகாரமதிற் சத்தியோடு
இயல்வியா னன்சமா னன்வீடப்பா
நின்றருளைத் தருகும்ஓம் ரூபியோடு
நேரனந்தை முதனாதை அனாதையான

நாற்பத்தெண் சித்தர்

குன்றாத சிறுதைது யிவைநாலுந்தான்
குணமான சிவகலையென் றறிந்துகொண்டு
சென்றுபதி னாறுகலைத் தீபம்பார்க்கத்
திறவுகோல் உகாரந்தான் மின்போற்சொக்கே. (8)

சொக்கியல்லோ மூலத்தில் முழங்கிநிற்கும்
துடியான அகாரமல்லோ விருதயத்துள்
அக்கினிசேர் பிரபையைப்போ லுற்றிருக்கும்
ஐயனே மகாரமது கண்டந்தன்னில்
முக்கியமாய் நின்றுகதிர் கோடிவீசும்
மூதண்ட விந்துமின் னொளிவதாகி
பக்குவமாய்க் கண்டத்தின் மேலதாகப்
பார்நான்கங் குலங்கடந்து நிற்குமென்னே. (9)

என்னவே புருவநடுச் சந்திரன்போல்
இலங்கிநின்ற சம்புபத முனக்குத்தோணும்
நன்னயமாய்த் தினந்தோறும் பழக்கஞ்செய்தால்
நாடியதோர் கற்பூரத் தேகமாச்சு
இன்னங்கே ளதன்மேல்முவ் விரலேசென்றால்
ஏகாந்த நாதகலை மணிபோல்வீசும்
உன்னியே கால்மாறி யூன்றிப்பாரு
உச்சியிலே ரவிகோடி யொளிவுண்டாச்சே. (10)

உண்டாச்சு மாத்திரைதா னரைக்கால்வைத்து
ஊணிப்பார் பிடித்தவிடம் பொய்யாய்ப்போச்சு
கண்டறிவாய் காணாத மோனவீடு
கடந்தங் குலம்நான்கு அப்பாற்செல்ல
பண்டுசுழி யாதசத்திக் கலைமின்போலப்
பளீரெனவே கதிரொளிபோற் காணுமங்கு

மண்டுமா காணிமாத் திரைதான்வைக்க
வளர்சுடரைப் போலாமுன் தேகமாமே. (11)

ஆமடா பராபரையி னடியைக்கண்டு
அப்புறம்நான் கங்குலந்தான் சென்றாயானால்
தாமடா வியாபினியின் கலைதானின்று
தபனனுட வொளிவீசு மங்கேநீயும்
வாமமரைக் காணிமாத் திரைபூசிக்க
மைந்தனே யுன்தேகஞ் சோதியாகும்
நாமமடா மவுனமதாய்த் தோத்தரிக்க
நலமான சித்திமுத்தி வருமென்றோதே. (12)

ஓதப்பா லுச்சிவெளி கடந்துசென்றால்
உற்றசமன் கலைதளர்ந்து சோதிகாணும்
நீதப்பா மாத்திரைதான் கால்மாகாணி
நேராக மனக்கண்ணாற் போற்றிப்பாரப்
போதப்பா வுன்சடலங் காந்திமீறும்
புகழாக வுன்மனையை மேவிப்பாரு
வாதப்பா வல்லவிளங் கதிரோன்கோடி
வந்துதித்தாற் போலொளியும் வீசுந்தானே. (13)

வீசுமரைக் காணிமாத் திரைதானோத
விளங்குனது சடலம்பொன் மாற்றுமீறும்
பேசுமப்பா பிடித்தயிட மொன்றுமில்லை
பேணியண்ட ரண்டமெல்லாஞ் செல்லலாகும்
கூசுமோ சகலசித்தி யுனக்கேயாச்சு
குணமாயா தாரமா றதிலேநின்றால்
ஆசுகத்தை யென்னசொல்வேன் சடலந்தானும்
ஆச்சுதடா கல்லாக வோர்ந்துபாரே. (14)

பார்த்தறிந்து வாசியுட மூலங்கண்டாற்
பண்பான சமாதிக்கு வழியுமாச்சு
சீர்த்தியன்றி யிதிலொன்று தப்பவிட்டாற்
சித்தெல்லாம் பொய்யாகப் போகும்பாரு
நேர்த்தியாய் நீயிருப்பா யவ்வாறின்றி
நிலையான மந்திரத்தை யாருங்காணார்
ஆர்த்தியா மூச்சுறீங் காரவித்து
ஆயதிரி கோணமுனை தோற்றுந்தானே. (15)

தோற்றவே மணிக்குளிகை முட்டியாடும்
துடர்ந்துமோ ராண்டினிலே சித்தியாகும்
போற்றவே சிவாயநம அவ்வும்சவ்வும்
புகழ்ந்துகூட் டிடமுத்தி வழியதாகும்
சாற்றநடு வானசுழி முனையேமுத்தி
சத்திக்குச் சவ்வுண்டு சித்தியாகி
ஏற்றமுள்ள சதாசிவந்தான் அவ்வுமுண்டு
இயல்பான வைந்தெழுத்தைத் துதிசெய்வாயே. (16)

வாயவெழுத் தைந்தாலே மூன்றைப்பாரு
வல்லவெழுத் தெட்டதுவும் வாலையாச்சு
நேயமந்த வெழுத்தாலே மனத்தைப்பாரு
நின்றகரு சுயம்புலிங்கந் தானேதோணும்
தாயகம தானவைந் தெழுத்தைப்பற்றி
தாணுவா மோரெழுத்தை யாவர்காண்பார்
நாயகத்தைக் காணரிது மூலசூட்சம்
நாடியறிந் தவன்சித்தன் முத்தனாமே. (17)

ஆமப்பா வழியறிந்து செல்லுதற்கு
ஆகாது மாந்தரால் சுழிதிறந்து

நாமப்பா மேலாறுஞ் சுடர்விட்டாப்போல்
நாடிமனம் பேயாகு முன்பின்பார்த்து
ஓமப்பா குருவறிந்து வொண்டிநில்லு
உற்றசுழி னைக்குட்கற் பூரதீபம்
தாமப்பா வாசிதொண் டேறித்தானும்
தணல் தூண்டி நிராதாரங் கடந்தப்பாலே. *(18)*

அப்பாலே சுழினைசென் றதனைப்பற்றி
அகலவிட்ட நாலதனைத் தானடைந்து
செப்பாம லிகம்விட்டு பரத்துள்ளாகத்
திடமான மனமதுமா றாட்டஞ்செய்யும்
தப்பாது நிலைக்கசிவ யோகியாகும்
தயவான வசியவென் றும் யவசியென் றும்
ஒப்பாகச் சிவாயவென மூன் றுமாறும்
உறுதியுடன் பிராணாய மென்றதாச்சே. *(19)*

ஆச்சப்பா யிருதரந்தான் திறந்தாயானால்
அமுதமது சிந்தும்பொன் னிறமாந்தேகம்
பேச்சப்பா பிராணாயம் நேமம்யேமம்
பெலத்திடவே யோகத்திற் குறிகண்ணாட்டு
வாச்சப்பா கும்மென்ற நாதத்துள்ளே
மகிழ்ந்துஓம் மம்ஆம்ஊம் மென்றேவோது
நீச்சப்பா உம் அம் மம் ஓமென்றேத்து
நிலையான அஷ்டசத்தி யெழுத்தாமீதே. *(20)*

ஈதாகு மைந்தெழுத்து மூடேமாறு
எட்டெட்டுக் கர்மமது மிதனாலாடும்
ஆதார மானதெல்லாந் தருகும்பாரு
அருளான சிவவாலை யெழுத்துங்கூட்டிக்

கோதான தன்றிநீ தாக்கினாக்கால்
குறிப்பாகக் காயசித்தி சகலசித்தி
மூதாக்கள் தெரிசனையுண் டாகுமப்பா
முனையாக ரீங்கார மதனிற்பூட்டே. (21)

பூட்டியல்லோ சிவவாலை யெழுத்தைமாறிப்
புதைத்து வைத்தார் பலநூலிற் கண்டுதேறு
நாட்டினிலே தேறவென்றா லென்னூற்பாரு
நல்லமுத மாயிரத்தெண் மலரில்நிற்கும்
தேட்டமுடன் சென்றாக்கா லொளிவுண்டாகும்
தெரிமூலம் கும்பகபூ ரகத்தினோடு
வாட்டமிலா ரேசகமுஞ் செய்யமுத்தி
வாய்க்குமடா மெய்யாமின் னூலதாமே. (22)

பராசரிஷி ஞானோபதேசம் 22
முற்றிற்று

நாற்பத்தெண் சித்தர்

ஜெயமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய
திருமந்திர ஞானம் 37

ஆதியிலே பரப்பிர்ம மொன்றதாகி
அதிலிருந்தே சகலஜெந்துக் குயிர்தானாகும்
சோதிதனைக் காண்பதென்றா லெளிதோவல்ல
சுத்தசித்தத் துடன்பார்த்தா லறியலாகும்
சேதியல்ல பலகோடிக் கொருவனுண்டு
தெளிந்துமனம் விரியாமல் நிலைநிறுத்திப்
பேதியா திருந்துசுழி முனையின்சூட்சம்
பேரறிவாற் க்ண்டறிந்தாற் சித்திதானே.

சித்திபெற வேண்டுமென்றால் விகற்பகற்பம்
சிந்தையினிற் கோபமொடு குரோதமோகம்
பத்தியதோர் கொலைகளவு மதமாங்காரம்
பாதகமா மென்றசெய லனைத்தும்போக்கி
நத்திடுவாய் நற்செய்கை யுள்ளதெல்லாம்
நானிலத்துள் பொருளெனவே கொள்ளைகொள்ளு
வெத்திபெற விற்பனர்கள் சொன்னநூலை
மேவிப்பார் மற்றதைநீ பார்த்தால்வீணே. (1)

வீணப்பா வேதமென்றும் சாஸ்திரமென்றும்
விளம்பினார் வயிர்பிழைக்க மெய்மைபோலக்
காணப்பா அவைமுற்றும் உலகத்தோர்கள்
கையாண்டு மெய்சலித்து மாண்டுபோனார்
பூணப்பா அவர்களைப்போல் நீயாகாமற்
பூரணத்தை நாடிநிற்பாய் புகலக்கேளு
தோணப்பா வொன்றறியா மடையரெல்லாம்
சோதிநிலை கண்டறிந்தோன் போலப் பேச்சே. (2)

பேச்சப்பா பேசிமாந் தரைமயக்கிப்
பேராசை கொண்டுநாய் போற்றிரிந்து
ஆச்சப்பா ஆச்சரிய மையன்கூத்தை
ஆகாகா வென்றெங்கும் பல்லைக்காட்டி
வீச்சப்பா வீச்சிதெனப் பணம்பறித்து
விருதாவாய்த் திரிவானே கள்ளஞானி
மாச்சப்பா அவர்களைநீ சேர்த்திடாதே
மகத்தான நிலையைக்கண் டப்பாநில்லே. (3)

அப்பனே ஆதிநிலை யறிவதென்றால்
அரிதரிது கண்டிடுவான் வினையன்றானும்
தப்பிதமீ தல்லபலாக் கனிபழுத்துத்
தான்கனியும் ரசம்போல மனங்கனிந்து
ஒப்புயர்வாம் பருவமதில் விதைவிதைத்து
உத்தமனே வளர்த்திடுவாய் பயிரைநன்றாய்க்
கொப்புகவ ரிலைபூபிஞ் சாகுமுன்னே
கொடுமையுள்ள வேடர்வெட் டிடுவார்பாரே. (4)

பார்த்திடுவா யவர்களுக்கு அஞ்சிடாமற்
பரமகுரு தனைமனதிற் றியானஞ்செய்து
சேர்த்திடுவாய் சேனைகளா தாரமாகச்
சேர்த்திடவே வேடரஞ்சி யோடுவார்கள்
பூர்த்தியடா நினதுசெய்கை நாட்டம்பாரு
பூண்டிடுவாய் நித்தனென்ற பூடணத்தை
நேர்த்தியடா நின்பெருமை சொல்லப்போமோ.
நினைவொன்றித் தெரிவதென்ன வென்றாற்கேளே. (5)

கேளடா தாய்தந்தை கூடும்போது
கெற்பத்தி லுருவான தெந்தவஸ்து

நாளடா நீயறிந்து தொழுதுநில்லு
நலமில்லா மூடருக்குத் தோணாதப்பா
தாளடா காணுதல்கோ டிக்கொருத்தன்
தன்மனத்தி னாலலவோ தெரியவேணும்
வேளடா வேளவனை நீக்கவேணும்
மேன்மைபெற மனம்விட்டால் மோசம்போச்சே. (6)

போச்சப்பா முந்தினதோர் குருக்களெங்கே
போராடுஞ் சாதியென்ற குலந்தானெங்கே
நீச்சப்பா நானென்ற சடலமெங்கே
நினைவான நினைவுங்கூ டழிந்ததெங்கே
பேச்சப்பா அடங்கிநின்ற விடந்தானெங்கே
பிதற்றுவார் மாயையென வறியாமற்றான்
கூச்சப்பா கூச்சலிட வுயிர்போமுந்தன்
கூட்டோடே போச்சோசொல் மூச்சுத்தானே. (7)

சொல்லப்பா அடங்குமிட மாருங்காணார்
சோதிநிலை யறிந்தவனே காண்பான்காண்பான்
நில்லப்பா அண்டத்துச் சியிலேசென்று
நித்தியா னந்தசுக வதீதந்தன்னிற்
செல்லப்பா பவவினைக ளெல்லாம்நீங்கும்
செகசோதி யுன்றனக்கே தோணும்தோணும்
அல்லப்பா வொன்றுமில்லை யறிவுதானும்
ஆதியந்த மில்லாநற் சோதிகாணே. (8)

காணவே இன்னமொரு வசியஞ்சொல்வேன்
கணபதியின் வசியமடா கண்டுதேறு
தோணவே பதினெண்க ணேசனென்று
சொன்னாலும் அதிற்சிறந்த திந்தமார்க்கம்

பூணவே நீயிதனைத் தியானம்பண்ணு
பூதலத்தி லிதைமறந்தாற் புகழுண்டாமோ
பேணவே ஓர்நினைவாய் நின்றுகொண்டு
பிசகாமல் மந்திரத்தைச் செய்யுகந்தே, (9)

ஆதி கணபதி வசியம்

உகந்தெளிய வசீகரத்தின் சூட்சங்கேளு
உத்தமனே வடதிசையை நோக்கிமைந்தா
அகந்தெளிய விபூதியுத் தளமாய்ப்பூசி
ஆனகலை யாசனமே லிருந்து கொண்டு
முகந்தெளிந்த ருத்ராட்ச மணியைவாங்கி
முத்திபெற ஆதிகண பதியைநன்றாய்ச்
செகந்தெளியச் செபிப்பதற்கு மந்திரத்தைச்
செப்புகிறேன் சிவ-ஓம்-ரீங்-அங்-கென்றோதே. (10)

ஓதவா யிரத்தொண்ணூ றுருவேசெய்தால்
உண்மையென்ற ஆதிகண பதிதான்மைந்தா
நீதிமா யுன்னிடத்தில் நின்றுகொண்டு
நீநினைத்த காரியங்கள் வசியஞ்செய்வார்
வேதமாம் புராணமொடு சாஸ்திரங்கள்
விளங்கிநின்ற மந்திரங்கள் வசியமென்று
சாதகமா யுந்தனுக்குத் தெரியச்சொன்னேன்
தன்னிலையிற் றானிருந்து செய்யலாமே. (11)

ஆரப்பா தேவரொடு முனிவர்தானும்
அடங்காத பிசாசுமுதற் சத்துருக்கள்
ஓமப்பா மிருகமுதல் அஷ்டநாகம்
ஒடுங்காத பட்சிமுதற் சகலமெல்லாம்

தாமப்பா ஆதிகண பதியின்சூட்சம்
தன்மையுடன் தியானித்துத் தானேநின்றால்
காமப்பால் கானற்பால் வசியமாகிக்
கருணையுடன் சகலமுமே வசியங்காணே. *(12)*

மகாகணபதி மோகனம்

காணவே வசீகரத்தின் மூலஞ்சொன்னேன்
கணக்கான மோகனத்தின் கருணைகேளு
பேணவே கீழ்த்திசையை நோக்கிமைந்தா
பிரணவத்தால் விபூதியையுத் தளமாய்ப்பூசித்
தோணவே வெண்புலியா சனமேற்கொண்டு
சுத்தமென்ற துளசிமணி கையில்வாங்கிப்
பூணவே செபிப்பதற்கு மந்திரத்தைப்
புகலமகா கணபதியின் சூட்சந்தானே. *(13)*

தானென்ற சூட்சமது சொல்லக்கேளு
சங்கையுடன் ஓம்-கிலி-சிங்-கென்றேதான்
வானென்ற குருபதியில் நின்றுகொண்டு
மார்க்கமா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
கோனென்ற விக்கினேச் சுரன்றான்மைந்தா
குருவான இருதயத்திற் பிரகாசிப்பான்
ஊனென்ற இருதயத்திற் பிரகாசித்தால்
உத்தமனே சர்வமோ கனமாம்பாரே. *(14)*

பாரப்பா ரிஷிமுனிவ ரருளாலேதான்
பகருகிறேன் கணபதியின் தியானத்தாலே
காரப்பா கடிவிஷங்கள் சகலநோயும்
கண்டவுடன் பறந்தோடிப் போகும்பாரு
நேரப்பா மிருகமுதற் பட்சியெல்லாம்
நின்றவுட னுந்தனையுங் கண்டால்மைந்தா

வீரப்பா வொடுங்குமோ கனமேயாகும்
வேதமஹா கணபதியின் விஞ்சையாச்சே. (15)

நடனகணபதி தம்பனம்

ஆச்சப்பா மோகனத்தின் அருமைசொன்னேன்
அரகரா தம்பனத்தின் பெருமைபாரு
காச்சப்பா மேல்திசையை நோக்கிமைந்தா
கருணையுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
பேச்சப்பா தானிருத்தி மவுனமாகப்
பெருமையாந் தெற்பையா சனமேற்கொண்டு
மூச்சப்பா யிருத்தித்தா மரைப்பூதன்னில்
முற்றுமணி யாற்செபிக்கும் முறமைகேளே. (16)

கேளப்பா நடனகண பதியின்சூட்சம்
கிருபையுடன் ஓம்-ஸ்ரீயும்-கிலி-யென்றேதான்
வாளப்பா தானிருத்தி மைந்தாகேளு
மகிமையா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
வேளப்பா நடனகண பதிதான்மைந்தா
மேன்மைபெற விதயத்தில் நடனஞ்செய்து
சூளப்பா உன்னிடத்தி லிருந்துகொண்டு
சுத்தமுடன் தம்பனத்துக் கருள்செய்வாரே. (17)

வாறான தம்பனந்தா னென்னவென்றால்
மகத்தான துஷ்டரொடு மிருகமெல்லாம்
நீறான உன்னுடைய சமுகங்கண்டால்
நேர்மைமன தொடுங்கித்தம் பனமேயாவார்
பேறான வாய்வுடனே நெருப்புத்தண்ணீர்
பிரளாமற் றம்பிக்கும் பெருமைபாரு
கூறான நடனகண பதியினாலே
கூர்மையுடன் சகலமுந்தம் பனமாம்பாரே. (18)

சத்திகணபதி உச்சாடனம்

பாரப்பா தம்பனத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவாமுச் சாடனத்தைச் சொல்லக்கேளு
நேரப்பா தென்திசையை நோக்கிமைந்தா
நேர்மையாய் விபூதியையுத் தளமாய்ப்பூசி
காரப்பா கலைமானா சனமேற்கொண்டு
கருணைபெறச் சங்குமணி கையில்வாங்கிச்
சாரப்பா சத்திகண பதியின்சூட்சம்
தன்மையுடன் ஓம்-கிலியும் சவ்வென்றெண்ணே. *(19)*

எண்ணியா யிரத்தெண்ணூ றுருவேசெய்ய
ஏகாந்தச் சத்திகண பதியினாலே
உண்ணியுச்சா டனமுந்தான் மைந்தாமைந்தா
உறுதியுடன் சித்திமய மாகும்பாரு
நண்ணியுச்சா டனமுந்தான் சித்தியானால்
நானிலத்தில் ஞானியடா சொல்லக்கேளு
நுண்ணிமையாய்க் கண்டதெல்லா முச்சாடிக்கும்
நோக்குமனக் கண்ணதினாற் றன்னைப்பாரே. *(20)*

பாரப்பா ரவிதனிலே யிருந்துகொண்டு
பத்தியுடன் சிவயோகந் துதிக்கும்போது
வீரப்பா பலவிதமாய்க் கொண்டநோய்கள்
விஷமுடனே பில்லிசூ னியங்களெல்லாம்
நேரப்பா உனைக்கண்டாற் காணாதோடும்
நீடுலகிற் சகலசித்து மாடலாகும்
தேரப்பா சத்திகண பதியினாலே
தீர்க்கமுச்சா டனமுந்தான் சித்தியாமே. *(21)*

வாலைக்கணபதி ஆகிருஷணம்

சித்தியுடன் நானுமுச் சாடனத்தைச்சொன்னேன்
தீர்க்கமுள ஆகிருஷ ணத்தைக்கேளு
முத்தியுடன் வடகிழக்கு முகமிருந்து
மோனமுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
பத்தியுடன் பட்டுவஸ் திரமேற்கொண்டு
பதிவாகப் படிகமணி கையில்வாங்கிப்
புத்தியுடன் வாலைகண பதியின்சூட்சம்
பூரணமாய் ஓம்றீயுங் கிலியென்றோதே. (22)

ஓதிடவா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
உத்தமமா கிருஷணந்தா னுறுதியாகும்
நீதிடமா கிருஷணந்தான் சித்தியானால்
நினைத்தபடி நின்றுவிளை யாடும்பாரு
சோதியென்றே நின்றுவிளை யாடுதற்குச்
சொல்லுகிறேன் வாலைகண பதியினாலே
ஆதியென்ற வினைகளெல்லா மகன்றுபோகும்
அடங்காத வினைகளெல்லா மகலும்பாரே. (23)

பாரான பார்தனிலே அஷ்டகர்மம்
பத்தியுடன் செய்துவிளை யாடும்போது
வீரான மாந்தருட கருமமெல்லாம்
விட்டகன்று போகுமடா விண்ணைநோக்கும்
நேரான நிலையுமனக் கண்ணால்நீயும்
நேர்மையுடன் குருபதியில் நின்றாயாகில்
பேரான வாலைகண பதியினாலே
பெருமையா கிருஷணத்தைப் பேணிப்பாரே. (24)

உச்சிட்டகணபதி வித்துவேசணம்

பாரடா கிருஷணத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவாம்வித் வேசணத்தைப் பகரக்கேளு
காரடா தென்மேற்கு முகமிருந்து
கருணையாய் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
சாரடா வெள்ளைவஸ் திரமேற்கொண்டு
சங்கையுள்ள பவளமணி கையில்வாங்கி
நேரடா உச்சிட்ட முன்னோன்சூட்சம்
நேர்மையுடன் சொல்லுகிறேன் நினைவாய்க்காணே. (25)

காணவே ஓம்ஸ்ரீயும் கிரியுமென்று
கருணையா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
பூணவே வித்துவே சணந்தான்மைந்தா
பூரணமாய்ப் பூதலத்திற் சித்தியானால்
தோணவே நின்றுவிளை யாடுஞ்செய்தி
சொல்லவித்து வேசணத்தைத் தியானஞ்செய்து
பேணவே பெண்களுக்குக் கடாட்சித்தாக்கால்
பெருமையுள்ள திருநீற்றாற் கெற்பமாமே. (26)

கெற்பமென்ன உற்பனந்தான் சித்தியாகும்
கிருபையா யுன்கரத்தா லேதானாலும்
உற்பனமா யுன்கரந்தொட் டீய்ந்தால்மைந்தா
ஒன்றுபத்தாய்த் தான்வளரும் உண்மைஉண்மை
விற்பனமும் விசேடமுட னிருந்துகொண்டு
வேதாந்த சற்குருவைத் தியானம்பண்ணி
அற்புதவுச் சிட்டகண பதியைப்போற்ற
அடுத்திருந்தோர் காரியமுஞ் சித்தியாமே. (27)

உக்கிர கணபதி மாரணம்

சித்தியுடன் வித்துவே சணத்தைச்சொன்னேன்
தீர்க்கமினி மாரணத்தைச் செப்பக்கேளு
பத்தியுடன் தென்கிழக்கு முகமிருந்து
பாலகனே விபூதியுத் தளமாய்ப்பூசி
வெத்தியுடன் வேங்கையா சனமேற்கொண்டு
வேகமா மெட்டிமணி கையில்வாங்கி
முத்தியுட னுக்கிரகண பதியின்சூட்சம்
மூர்க்கமாய் ஓம்றீயும் நசியென்றென்னே. (28)

என்னப்பா ஆயிரத்தெண் ணூறுருத்தான்
இணக்கமாய்ச் செய்திடவே என்னசொல்வேன்
நன்னப்பா மாரணந்தான் சித்தியானால்
நாடுமுன்னே சகலபிணி மாண்டுபோகும்
இன்னப்பா எதிர்த்தசத் துருவின்பேரை
எடுத்தெழுதித் தியானமதா யுருச்செபித்தால்
முன்னப்பா குண்ணியவன் நோயதாவான்
மூர்க்கமுடன் மாரணத்தை யோதியூதே. (29)

ஓதியதோர் நாழிகையில் மைந்தாகேளு
உதரமதி லக்கினிதா னுடனேபாய்ந்து
வீதியென்ற தெருத்தோறும் அலைவான்மட்டை
விஞ்சையென்ற மாரணத்தை நெஞ்சுள்வைத்து
நீதியுடன் விபூதியைநீ கடாட்சித்தாக்கால்
நேர்மையுடன் சகலபிணி மாண்டுபோகும்
சோதியென்ற உக்ரகண பதியின்சூட்சம்
சுத்தமுடன் மாரணத்துக் குயிருமாச்சே. (30)

மூலகணபதி பேதனம்

ஆச்சப்பா மாரணத்தைச் சொன்னேன்மைந்தா
அரகரா பேதனத்தை யருளக்கேளு
காச்சப்பா வடமேற்கு முகமாய்க்கொண்டு
கருணையுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
மூச்சப்பா தானிருத்திக் குருவைப்போற்றி
மூத்திபெற வேகிருஷ்ணா சனமேற்கொண்டு
பாச்சப்பா மூலகண பதியின்சூட்சம்
பக்தியுடம் ஓம்றீங்ஆம் மெனவேயெண்ணே. *(31)*

எண்ணடா மிளகுமணி தன்னால்மைந்தா
இன்பமா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
உண்ணடா பேதனந்தா னுறுதியாகும்
உத்தமனே அதினுடைய சித்துகேளு
கண்ணடா அறிந்துபே தனத்தையோது
கருத்துடனே சிவயோகத் திருக்கும்போது
நண்ணடா உந்தனுட சொரூபந்தானும்
நாட்டமுடன் விதவிதமாய்த் தோணும்பாரே. *(32)*

பாரப்பா பாரதனிற் பகரக்கேளு
பத்தியுடன் பேதனத்தைத் தியானம்பண்ணி
நேரப்பா நின்றபிணி யாளருக்கு
நீவிபூ தியுமெடுத்துக் கொடுத்தாயானால்
சாரப்பா சுரதோஷம் வீக்கமெல்லாம்
க்ஷணத்திலே பேதிக்கும் விருதுபோடு
தேரப்பா மூலகண பதியினாலே
தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மையாமே. *(33)*

அஷ்ட கணபதி

செம்மையதாம் அஷ்டகர்ம மெட்டுக்குந்தான்
தீர்க்கமா யஷ்டகண பதியின்சூட்சம்
இம்மையதாய்ச் சொன்னனடா நயந்துபாரு
எல்லோர்க்கு மிந்தவழி கிட்டாதப்பா
கொம்மையதா யஷ்டதிசைக் கரசாய்நின்று
கொண்டுவிளை யாடுதற்கு இதுவேசூட்சம்
தம்மையதாய்க் காணுவது சாக்ஷியாகத்
தானிருந்து அஷ்டகர்மந் தான் தானாமே. (34)

ஆமப்பா அஷ்டதிசைக் கரசாய்நின்று
அருமையுள்ள சித்துவிளை யாடப்பாரு
ஓமப்பா ஆதிகண பதிதானொன்று
உறுதியாம் மகாகண பதிதானொன்று
தாமப்பா நடனகண பதிதானொன்று
சங்கையுள்ள சத்திகண பதிதானொன்று
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுள்ள வாலகண பதிதானொன்றே. (35)

ஒன்றாமுச் சிட்டகண பதிதானொன்று
உத்தமனே உக்கிரகண பதிதானொன்று
நன்றான மூலகண பதிதானொன்று
நாட்டமுட னஷ்டகண பதிக்குமொன்றாய்க்
குன்றாத மூலமந்திர சூட்சந்தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
நின்றாடும் மூலமடா ஆதிமூலம்
நிலையறிந்து ஓம்-கிலி-அங்-உங்-கென்னே. (36)

நாற்பத்தெண் சித்தர்

என்னம்மோ சொன்னேனென் றெண்ணவேண்டாம்
இகத்துக்கும் பரத்துக்கும் இதுவேமேன்மை
முன்னமோ சிலமுனிவர் மொழிந்தமார்க்கம்
முறைகள்பல விருந்தாலு மிதனுக்கீடோ
பின்னமொன்றும் வாராது செய்துபாரு
பிராமணர்க்கும் அதிதிபர தேசிகட்கும்
அன்னமொடு அறுசுவைபா லமுதளிப்பாய்
அதனாலே அருளுண்டா மறிந்துபாரே. *(37).*

ஜெயமுனிவர் திருமந்திர ஞானம் 37
முற்றிற்று

அத்திரிமகாரிஷி திருவாய் மலர்ந்தருளிய உண்மைஞானபோதகம் 34

அரியென்ற அட்சரத்திற் காதியாகி
அண்டபிண்டத் தப்பாலும் முப்பாழாகி
அரியாகி அயனாகி அரனுமாகி
அருளாகி இருளாகி யொளிவுமாகி
அரிதாகிச் சிறிதாகிப் பெரிதுமாகி
அற்றதுவும் உற்றதுவும் பெற்றதாகி
அரியணையே வேதாங்க பீடமேவும்
அம்பரத்தின் செம்மலர்த்தா ளுமைக்காப்பாமே. *(1)*

ஆமப்பா சரியையதே உரியதென்ன
அமர்ந்தசடா தரன்றனது வரையைக்கட்டி
நாமப்பா மூலமெனும் பரையைப்போற்ற
நலமாச்சு சகலசித் தியுமுண்டாச்சு
வாமப்பா வாலைதனைக் காண்பதென்றால்
வழியறிந்தோர்க் கன்றிமற்றோர்க் கெய்திடாது
தேமப்பா யெட்டிரண்டு வயததாகித்
திகழ்கின்ற சோதியுரு வாளாள்பாரே. *(2)*

பார்க்கவென்று நெருப்பாறு கடந்துசென்றால்
பரையவளுந் தனித்திருப்பா ளொருவரின்றிச்
சேர்க்கவே யிவ்வழியைச் சித்தரெல்லாம்
தெரியவொண்ணா தேமறைத்துத் தியங்கச்செய்தார்
தீர்க்கமுட னுயிர்நீங்கும் போதிற்றானும்
சிறந்திருந்த வைம்பூதம் பிரிவதாகி
ஆர்க்கவே யினத்தோடு யினமதாக
அடையுமென்று கூறிடுவார் மடையர்தானே. (3)

தானாகப் போவதற்கு வழியொன்றில்லை
சடந்தனிலே யுறங்கும்போ தொளிந்துதோன்றும்
கோனான பிருதிவியே மலமதாச்சு
கூறுகின்ற அப்புவிலே ஜலமதாச்சு
வானான தேயுவதே விந்துமாச்சு
வகையாக வாய்வதுதான் கழியலாச்சு
தேனான வாகாயம் மூச்சுமாச்சு
தினந்தோறுங் கழிவதனா லென்னபாரே. (4)

பாரப்பா சடலமது தளர்ந்துபோச்சு
பகரரிது பரவான்மா சீவான்மாவும்
ஓரப்பா சத்திசிவ மென்பதாச்சு
உண்மையிவர்க் கொருபோதுஞ் சாவதில்லை
நேரப்பா கணமைந்தை வீடாய்க்கட்டிக்
நிலைகைலை போன்றவிந்த சடலத்துள்ளே
சீரப்பா ஜீவனுயி ரிரண்டதாச்சு
சித்தறிந்தால் நான்முகன்ற னாண்மைபோச்சே. (5)

போச்சப்பா பூதமது கழிந்தபோது
புகழான சடலமது நிலைதளர்ந்து

நீச்சப்பா ஜீவான்மா தேகமாகி
நின்றபர வான்மாவு முட்கலந்து
ஓச்சப்பா சூக்குமமாந் தேகமாகி
உற்றுகெற்பம் பூகாயாய்க் கனியதாகி
காச்சப்பா பழுத்துவிழுந் தன்மைபோலக்
கனிந்தபின் பதுபிறக்கும் பூதங்கூடே. (6)

கூடியே தரிக்ககிர கத்தின்வேளை
குறிப்பாயு ளுண்டாச்சு அந்தக்கூட்டில்
நாடியிரு வருஞ்சென்று வெவ்வேறாக
நயந்திருப்பா ரவர்களைநீ புத்தியாலே
தேடியொன்றாய்ச் சேர்த்துயிரைப் பற்றிக்கொண்டால்
சித்தறிந்தாய் சடலம்விட்டு வெளிகிளம்பி
ஓடிவேற் றொருகூட்டிற் புக்கலாகும்
உண்மையடா தேவனும்நீ யாவாய்காணே. (7)

காணவே கடிகைதனி லண்டமெல்லாம்
கண்டுசுற்றி வந்திடுவாய் வேதன்றானே
தோணவுனை யென்செய்வான் லிபியென்செய்யும்
சுத்தலிங்கத் துயிரடங்கு மென்றோரா து
நாணமில்லா தெமதூத காலபாசன்
நாடியுயிர் கவர்வனென்ப ரவ்வாறல்ல
பூணவே விண்மீன்றான் காலனாச்சு
புகழான கோட்களுந்தா னேமனென்னே. (8)

என்னப்பா ராசியல்லோ தூதனாகும்
இயலான தேகம்வா கனமுமாச்சு
நன்னயமாய்ச் செனிக்கும்போ திருந்தகோட்கள்
நடுநிலையாய்த் தரும்வயது சென்றதானால்

வின்னமதாய்த் தேகமது அழிந்துபோகும்
விஞ்சையென்ற யிருவரையு மொன்றுசேர்த்தால்
உன்னியுன்னைக் கொல்லுகின்ற வாயுதங்க
ளொன்றுமில்லை யெனநன்றா யுணர்ந்துகொள்ளே. (9)

கொள்ளப்பா பிடிப்பதற்கு எமனேது
குவலயத்தில் பிறப்பிக்கப் பிரமனுக்கு
விள்ளப்பா ஆண்மையே தண்டந்தன்னை
விற்பனமாய் கிருஷ்டிகர்த்தன் பிண்டத்திற்குள்
கள்ளப்பா ஒன்றுமிலா திருவராகிக்
கனிந்திருந்தா ரிதனையார் கோவிலென்பார்
தள்ளப்பா யிதனாலே யொன்றுமில்லை
சடலத்துட் சத்திசிவந் தனைக்கண்டோரே. (10)

கண்டவர்க்கே தவமாச்சு பிறப்பும்போச்சு
கலந்தொன்றாய்ப் பிரமத்தோ டிருக்கலாச்சு
உண்டப்பா கைலைசொர்க்க மண்டரண்டம்
உற்றுப்பார் பிரமத்துள் ளயிக்கமாச்சு
விண்டார்கள் சடலமுரு வாகும்போது
விகற்பமிரு கிரகமொன் றாகச்சேர்ந்தார்
தொண்டப்பா அதிலொருவன் சுகங்கொடுப்பான்
தூற்றியதை மற்றொருவன் கெடுப்பான்பாரே. (11)

பாரப்பா யிவ்விதமாய் நேர்ந்ததாலே
பண்பான வாயுள்நிறை யொருவனீய
வீரப்பா கொண்டொருவன் மாளச்செய்வான்
விதிதவறி மாண்டவன்முன் கிரகந்தந்த
சீரப்பா வயதுவரை சூக்குமதேகத்
திடம்பெற்றுப் பாசாசரெனத் திரிவார்மீண்டும்

நேரப்பா சடலத்துட் புகுதவென்றால்
நெட்டிதள்ளிக் குட்டிடுவான் புகுதொட்டானே. (12)

ஒட்டானே வுயிரெழுத்தைக் கண்டோனானால்
உண்மையாய் முனியுடனே தேவனாவான்
நிட்டையிலே மோகமுடன் தியானஞ்செய்தோன்
நேரிழையார் தங்களையும் பற்றிக்கொள்வான்
சட்டமுள்ள வுயிரெழுத்தின் தன்மையாலே
சகலமந்தி ரங்களுக்கு மடங்கானப்பா
திட்டமுள்ள தேவர்களும் மாந்தராவார்
செகமனிதர் தேவர்களு மாவார்செப்பே. (13)

செப்பிடுவாய் கிரகமைந்தட் சரமேயாகும்
திகழ்கின்ற நகாரமல்லோ ஆதிவாரம்
ஒப்பிடுவாய் மகாரந்தான் திங்களாகும்
உறுதியுள்ள சிகாரமடா சேயனாகும்
தப்பிதமீ தல்லவெள்ளி வகாரமாகும்
சித்தியுள்ள யகாரமது பொன்னனாகும்
துப்பற்ற விவர்கள்தா னைவராவார்
சிறந்தரிதான் சனியாகு முற்றுப்பாரே. (14)

உற்றமுக்கோ ணப்புருவச் சுழிபுதன்றான்
உகந்தவா ரமதான வெழுவருந்தான்
நற்றவஞ்சே ரக்கரத்தின் ரூபமாவார்
நாடியவோங் காரமிரண் டக்கரந்தான்
பெற்றிரண்டு பாம்பாச்சோங் காரத்தோரம்
பேணிதனு வுயிருடனே பேருமாச்சு

கற்றவர்க்கு அட்சரந்தான் றோணுமன்றிக்
கசடரிதைக் கண்டறிந்து வெல்லொண்ணாதே. (15)

வெல்லமற்றோ ரில்லையிதே தேகமாச்சு
வேண்டிலுக முடிப்பதற்கு மிவர்களாச்சு
சொல்லடா ராகுடனே கேதுதானும்
சுடரான கதிரவனும் மதியென்றோரு
நில்லடா வாரமே மூலகமாச்சு
நிலைகருவா மிரண்டுங்கீழ் மேலாயாடும்
வல்லதொரு வாரமடா தேகமாச்சு
வந்திருபாம் படிமுடியுஞ் சுற்றும்பாரே. (16)

பார்த்திடுவாய் பீஜநிலை யறிந்தோரில்லை
பண்பதனிற் சுழன்றெழுந்து வலமாய்ச்சுற்றி
நேர்த்தியா யண்டபிண்ட கபாலமுட்டி
நிமிடமதில் வெளியினிலே வந்துபோகி
சீர்த்திவலப் புறமண்டத் தேயுதைத்து
செனித்திடது பக்கமார் பதனிற்குத்தும்
பூர்த்தியிரு பாம்பிரண்டு கலையதாகும்
புகழ்பற்றி யடக்ககதிர் மதியென்றோதே. (17)

ஓதபாம் படங்குபெட்டி கபாலயாகும்
உற்றடக்க விட்டாக்கால் தேகமாறும்
நீதசர்ப்ப மிடங்கீழ்தேய் வதிற்சுழன்று
நின்றுபா தாளமெனும் வாயலாலே
சேதமுடன் சிறிதுசிறி தாய்க்குறைந்து
தீபனத்தீ யேழதுவும் பற்றிப்பின்பு
பேதமிலாப் பீஜமுடன் கனலைச்சுற்றப்
பேணியுந்தி கீழாக நதியுண்டாச்சே. (18)

உண்டாகச் சிவமாமக் கினியேகொல்லும்
உமையான வாயுவடா வேந்தித்தள்ளும்

விண்டரவி மதியதுவும் லோகந்தன்னில்
விதமாகச் சுருளதைப்போற் சுற்றும்பாரு
கண்டதப்பா கன்னிவல மார்பிற்சுற்றி
கதித்தண்ட பிண்டகபா லத்தில்முட்டிப்
பண்டுவந் திடமார்பிற் சுழன்றுநின்று
பற்றியெழுந் தேய்வைசுற்றி யகன்றுபோமே. (19)

அகன்றதடா மார்பதனிற் சுழன்றதாலே
அதுபலிபீ டமதாகிச் சிருட்டிப்பாச்சு
சுகவல்ல குட்டிவட கோலந்தன்னிற்
சென்றிருக்க விந்துபோற் சுழன்றதாலே
தகமையுள்ள சுரோணிதம்பீ டத்துள்ளாச்சு
தானதுவிட் டால்மூர்த்த ரூபமாச்சு
உகந்துசிவ கூறிற்சுக் கிலந்தான்நிற்கும்
உற்றசுரோ ணிதஞ்சுழுத்தி நிற்குந்தானே. (20)

தானெழுகாற் றாற்றேகச் சுரைதான்பூட்டி
சத்திபங்க டைந்துபொழி பூரணத்தின்
வேனென்ற தினம்பார்த்துக் கபாலந்தன்னில்
மேவியுநின் றிரங்கிவாண் புறத்தடங்கும்
கோனென்ற வளர்பிறையில் விந்ததூறிக்
கூடியே பூரணத்திற் நிறைந்துநின்று
தேனென்ற தேய்பிறையி லழிந்துபோகும்
செயலறியா விட்டாற்குத் தவமும்போச்சே. (21)

போச்சென்ற சுக்லசுரோ ணிதமுங்கூடிப்
பொருந்திநின்ற சத்திசிவ மாகுமென்பார்
ஆச்சிவிட்டுச் சிவன்றானே வெளியிற்சென்றால்
அமர்ந்திருப்ப தில்லையுயிர் விந்துக்குத்தான்

பேச்சென்ன விந்ததற்குப் பேரநேகம்
பிறங்குநா தங்கருவாஞ் சிவன்றானென்றும்
நீச்சென்ன பொருளோடு சித்தனென்றும்
நிகழ்த்துவா ராதிவஸ்து தேகமென்னே. (22)

என்னவே ஆதிவஸ்து உயிருமாச்சு
ஈதிரண்டும் நிலைப்பதற்கு மார்க்கங்கேளு
நன்னயமாய்ப் பூரணநா ளாதிவஸ்து
நாடியே பராபரையைப் பூசைசெய்து
சின்னமிலா சுக்லவர்னப் பாத்திரத்தில்
தேறியே யாதிவஸ்தை வாங்கிக்கொண்டால்
இன்னமென்ன குறையுனக்குத் தேகத்தோடு
இயல்பான யுயிர்நிலைத்துச் சத்தாம்பாரே. (23)

சத்தாச்சு சிவனையுந்தா னறியலாச்சு
சள்ளையில்லா வெளிதனிலே யொளியைப்பார்த்து
சித்தறிய வென்றாலே சல்லவப்பா
திரமாகச் சரியையிலே கூடிநின்று
வெத்தியா யிரத்தெட்டுப் பிறைபூசிக்க
வீரமுடன் தேகம்விட்டுச் சென்றுதானால்
பத்தியுடன் கிரியைசெய்யப் பிறையாற்றோணும்
புகழான கிரியையிலப் படியேசெய்யே. (24)

செய்யவது கலந்துசட லத்தின்பூசை
செப்பொட்டி ரெட்டிழு விரட்டியாக
வைபவமாய் மூலத்திற் பூசைசெய்ய
வருஞ்செனன ஞானங்கா ணாமற்போனால்
எய்தியே மறுசெனன மாவான்பாரு
இயலான அறிவோடே நான்கிரட்டி

பையவே போற்றிப்பின் ஞானங்காண்பான்
பரவெளியி னொளியறிந்து புக்குவானே. (25)

புக்குவான் சிவந்தேடிப் பூசித்தாக்கால்
புகழான ஆறுவரை யாறுந்தாண்டி
சிக்கென்றே றிடவெளியோ டொளியுமாவான்
சென்றிருந்து ஆசையுற்றாற் கீழேவீழ்வான்
பக்குவமா யாசையற்றுச் சிவத்தைச்சார்ந்தால்
பகிர்ந்துசடந் தனைத்தின்ற வுயிர்போலாகும்
திக்குவெளி சேர்ந்திருந்த வொளிதானப்பா
திகழ்ரூப மரூபமென் றெவர்காணாரே. (26)

காணார்கள் வெளியுடனே வொளிபோச்சென்பார்
கனமாகச் சுற்றியண்ட மட்டுஞ்செல்லும்
வேனான பிரமசத்திக் கிருளோமெத்த
வெளியான சிவன்சேர வொளிவுண்டாச்சு
தாணுவென்ற சிவனுக்கு முகமதைந்து
தண்விழிகள் மூன்றுடனே சுழியுமூன்று
ஆணவமாங் கதிர்மதியக் கினியுங்கண்கள்
ஆகும்பார் முகமைந்தி னிறத்தைக்கேளே. (27)

கேளப்பா பச்சைசிகப் போடுவெள்ளை
கெடியான மஞ்சளொடு கருப்புமாகும்
நாளப்பா மும்மூர்த்தி யாதியாகி
நலமாக அண்டமெங்கும் நிறைந்துநிற்பார்
ஆளப்பா முகமைந்துங் கண்மூன்றெட்டும்
அட்டாங்கம் பொருந்துகின்ற தேகமாகும்
நீளப்பா யாவர்களு மேகமாவார்
நிலையான எட்டுப்பேர் பிரிவும்பாரே. (28)

பார்த்திடுவா யயன்றானே பூமியாகும்
பண்டரிவிண் கதிருருத்தி ரன்சோமன்றான்
சேர்த்திடுவாய் சதாசிவனா மேல்மகேசன்
திடமான மகேசனுக்கு நீலமாகும்
ஆர்த்திடுவாய் வெளியுடனே யொளிபோச்சென்பார்
அருளான மகேசனல்லோ தேவனாகும்
பூர்த்தியாய்ச் சோதிதனித் தனியேநின்று
புகழான விந்துபல பேதமாச்சே. (29)

ஆச்சடா முகிலேழு வானமேழு
அதனுடனே மின்கூட வெட்டுமாச்சு
பாச்சடா அட்டபா லகருமாகும்
பகரிதற்கு மகேஸ்பரனே தேவனாகி
நீச்சடா வாய்வாகி யண்டபிண்டம்
நிறைந்துநிற்பார் சகலருமின் னவர்க்குளாவார்
பேச்சடா பேசாமற் பாதம்பற்று
பிரளாதே சாகாக்கால் வலையைக்காணே. (30)

காணவே சித்தனென்ற பேருமாச்சு
கண்டசதா சிவன்பிடித்த காலுமாகும்
பூணவே யறிந்தாலே கர்த்தாவாச்சு
புகழ்வாசி ஜீவனுந்தா னவனாலாச்சு
பேணவே சிவனெழுத்தே யதுதானப்பா
பேணியறிந் துய்திடுவா யாசானாகும்
தோணவே கண்டறிவாய் முத்தனாவாய்
சொன்னமொழி தவறாதின் னூலதாமே. (31)

ஆமப்பா பூவுதித்த மாந்தருக்கு
அரியகரு வெண்குட்டம் பெருவியாதி

தாமப்பா தீரநீர் வெட்டிமுத்துந்
தாளகங்குக் கில்கெந்த கத்தினோடு
வாமப்பா சேங்கொட்டை பலமொன்றாக
வகைக்குநிறுத் தெடுத்துப்பின் சிவனார்வேம்பு
வேமப்பா வெள்ளறுகு சங்கங்குப்பி
வேருடனே நல்லவிளாம் பட்டைதானே. (32)

பட்டையுடன் நிலவாகை வெவ்வேறெட்டுப்
பலஞ்சேரு காரெள்ளுப் படிகாலாகத்
திட்டநாற் பலந்தேங்காய் சிரட்டைகூட்டித்
தியங்காம லிடித்துப்பாண் டத்திலிட்டுச்
சட்டமுடன் குளித்தயில மிறக்கிக்கொண்டு
சாமைபொறி மாவில்வெரு கடிப்ரமாணம்
இட்டதிலே தயிலமிரு பணவிடைதான்
ஈய்ந்திடுவாய் தினமுமோர் போதென்றோதே. (33)

ஓதிடுவா யேழுநாட் கொடுக்கும்போது
உணவுடனே ரணத்தின்மேற் றயிலந்தன்னை
நீதியுட னேபூசி மூன்றாம்நாளில்
நீயிலுப்பைப் பிண்ணாக்கை யரைத்துத்தேய்த்து
சேதியென்ன வெண்ணீர்விட் டலம்பத்தானும்
தீருமடா பதினெட்டுக் குட்டமெல்லாம்
ஆதிபோற் றேகமாங் காணாக்கடியு
மகன்றுவிடு மிச்சாபத் தியந்தானன்றே. (34)

அத்திரிமகாரிஷி உண்மைஞான போதகம் 34
முற்றிற்று

....

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய மெய்ஞ்ஞான விளக்கம் 80

சிறந்தபரா பரமாகி யெங்குந்தானாய்த்
தீர்க்கமுடன் ரவிமதியுஞ் சுடர்மூன்றாகிப்
பறந்தருளு மைம்பூத மாயைதோன்றிப்
பல்லாயி ரத்தண்டம் படைத்தபோதம்
வரம்பெருகு மானந்த வுயிருமாகி
மதபேத மாகவுமே வடிவைக்காட்டிச்
சரமாகி யண்டத்தி லெழுந்துநின்ற
சச்சிதா னந்தமதைப் பணிகுவோமே. (1)

ஓமென்ற சுழினையடா வண்டவுச்சி
ஓமுடிந்த பட்டணத்துக் கப்பாற்சென்று
நாமென்ற சொல்லற்று யோகஞானம்
நட்டுகிறே னஞ்சனமுந் திலதப்போக்கும்
வாமென்ற வைத்தியமும் அஷ்டகர்மம்
வாதமென்ற வித்தையெல்லாந் தெளிவதாகக்
காமென்ற பீடமதிற் கண்டுதேறிக்
காட்டுகிறேன் மெய்ஞ்ஞானக் கருவைப்பாரே. (2)

பாரேநீ யோகமென்ற வழியைச்சொல்வேன்
பத்தடா வைம்புலனைப் பரத்தினூடே
சீரொருவர் தெரியாமல் மதங்கள்பேசித்
திருவான வுச்சியிலேசேராமற்றான்
ஆரொருவ ராதாரம் வெவ்வேறாக
அடுக்கடுக்காய்ப் பனிரெண்டு தலங்களென்றும்
வீரேதான் பேசியுமே மெலிந்துபோவார்
விடமுண்ட வண்டமதை விரும்பிக்காணே. (3)

காணப்பா தலமெல்லா மண்டவுச்சி
கடினமடா பதினெட்டாங் கோட்டிற்சென்று
பூணப்பா மனதையுந்தான் பிசகொட்டாமற்
பூட்டடா பிராணாயம் புகுந்தென்னாளும்
வீணப்பா மந்திரங்க ளேதுமில்லை
விதியில்லை மதியில்லை கெதியுமில்லை
தோணப்பா தோன்றுமடா மனதொன்றாகச்
சுத்தமுடன் நீயிருந்து தவஞ்செய்வாயே. (4)

செய்யப்பா வாசிநுனி மகனேகேளு
தீர்க்கமுடன் முன்னுரைத்த ஆயிரத்தில்
மெய்யப்பா சரக்குவகை விதமாய்நீத்து
மேன்மையுடன் கட்டினங்க ளுறுக்கினங்கள்
பொய்யப்பா சொல்லவில்லை ரெத்தினப்போக்கு
புனிதமுடன் வெளியாகச் சொல்லிப்போட்டோம்
வையப்பா விந்நூலின் மௌனமெல்லாம்
வகையாகச் சொல்லுகிறேன் வணங்கிக்கேளே. (5)

கேளப்பா கேசரமே அண்டவுச்சி
கெட்டியாய்க் கண்டவர்க்கே மௌனமாகும்
ஆளப்பா பரப்பிர்ம யோகமென்று
அடுக்கையிலே போதமுந்தா னுயரத்தூக்கும்
வாளப்பா கெவுனமணி விந்துநாதம்
வலுத்துதடா கெட்டியாய்த் திரண்டுபோகும்
நாளப்பா வண்டமெல்லாஞ் சுத்தியோடும்
நடனமிடுஞ் சிலம்பொலியுங் காணலாமே. (6)

காணலாம் பிரமத்தின் நிர்ணயந்தான்
காட்டுகிறேன் வாசிநுனி கருவாய்க்கேளு

பூணலாம் அண்டவுச்சி தன்னில்நின்று
பொறிகளையு முண்டாக்கிப் புவனந்தன்னில்
தோணலா முயிர்ப்பயிரைப் படைத்தெந்நாளும்
தொந்தமெனு மேழுவகைத் தோற்றமாகி
ஆணலாம் நாலுவகை யோனியாகி
யண்டமடா அனந்தனந்த மானவாறே. (7)

வாரான பிரமத்தின் நடுவேமைந்தா
வந்துதடா ரவிமதியுஞ் சுடர்மூன்றாகிக்
கூறாகப் பின்னியடா கீழேபாயும்
கூறுகிறேன் கண்ணினிடை யொளிவைக்கேளு
வீரான அண்டவுச்சி முனைக்கப்பாலே
வெத்தியுடன் நரம்பதுதான் விழுதுபோலே
நேரான விருகண்ணிற் பின்னலாகி
நிச்சயமா யொளிவாகி நிறைந்தார்பாரே. (8)

பாரப்பா பரப்பிர்மம் ஒளிவினாலே
பத்தியே நரம்புவழி பாயும்போது
ஆரப்பா விருகண்ணில் ஒளிவதாகி
அண்டமெல்லாம் ஏகமாய்த் தெரியலாச்சு
காரப்பா நரம்பென்ற விழுதுவட்டம்
கபாலத்தில் முக்கூறாய்ச் சுழினைபோலே
வீரப்பா காதுக்கும் நாக்குக்குந்தான்
வெத்திபெற வேயின்னம் விளம்பக்கேளே. (9)

கேளப்பா மூலமடா லிங்கந்தன்னிற்
கிருபையுடன் தண்டுக்குங் கீழ்மேலாக
நாளப்பா தமர்போலே பிடரிமார்க்கம்
நன்றாக வோடுமடா நரம்பினூடே

வாளப்பா அண்டமுட்டி யுயரமைந்தா
வலுவாக முன்சொன்ன நரம்பினூடே
தேளப்பா சேர்த்துமிகப் பின்னலாகிச்
சிறந்திடவே புருவமத்தி யாகும்பாரே. (10)

பாரடா புருவமத்தி யேதென்றாக்கால்
பரப்பிர்ம மானதொரு வண்டவுச்சி
நேரடா முன்சொன்ன நரம்புமத்தி
நிலைத்துதடா சுழினையென்று நினைவாய்ப்பாரு
வீரடா அண்ணாக்கின் நேரேமைந்தா
மேவடா மனந்தனையுஞ் செலுத்தும்போது
காரடா சுழினையிலே மனந்தான்பாய்ந்து
கலந்தைந்து பூதமுந்தா னொன்றாய்ப்போமே. (11)

போமடா முன்சொன்ன நரம்பினூடே
பூரித்து ரவிமதியுஞ் சுடர்தான்மூன்றும்
ஆமடா பின்னியுந்தான் கீழேபாயும்
அந்தரங்கந் தனைப்பார்க்க அடங்கிப்போகும்
நாமடா வெளிதிறந்து சொல்லிவிட்டோம்
நாதாந்தப் பரப்பிர்ம நாட்டந்தன்னை
ஓமடா விந்துவுந்தா னண்டவுச்சி
உறுதியுடன் சித்தமதை யூணிப்பாரே. (12)

பாரான சாகரமே அண்டவுச்சி
பதினாலு லோகமெல்லாம் பரத்தினூடே
சீராகத் தெரியுமடா மவுனமார்க்கஞ்
சித்தான சித்துவிளை யாடிநிற்கும்
வீரான மந்திரங்கள் பிறந்ததெப்போ
விஷ்ணுவென்றும் பிரமனென்றும் வந்ததெப்போ

கூரான முக்குணங்க ளுதித்ததெப்போ
கூறாத அட்சரத்தின் குறியைக்காணே. (13)

காணார்கள் பிரமந்தா னுதிக்குமுன்னே
கருணையுள்ள மந்திரங்கள் பிறந்ததுண்டோ
தோணாமல் மந்திரங்க ளனந்தங்கற்று
சுழினையென்ற மூக்குநுனி தன்னைப்பார்த்து
வீணாகத் திரிந்துமிகப் பார்த்ததாலே
வேறோடே கெட்டுழல்வான் விருதாமாடு
கோணாம லண்ணாக்கின் நேரேமைந்தா
குறிப்பறிந்து பார்த்தவர்க்கு முத்திதானே. (14)

முத்தியடா மந்திரத்தை நினைக்கும்போது
மோசமடா மனந்தானும் ரெண்டாய்ப்போகும்
சத்தியடா மனந்தானே யேகமாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
புத்தியடா பிரமத்திற் புகுந்துகொண்டாற்
பூலோக மெல்லாந்தான் பணிவாருன்னை
எத்தியே திரியாமற் பிடரிமார்க்கம்
ஏறுகின்ற வாசியுண்ணக் கர்ப்பந்தானே. (15)

தானென்ற கர்ப்பமெனும் மதுவுண்டாக்காற்
சஞ்சாரச் சமாதியென்றே யிதற்குப்பேரு
ஊனென்ற பசிதீருங் கோபம்போகும்
உதயகிரி தனிற்சென்றூ டுருவிப்பார்க்கத்
தேனென்ற திரையேழுந் தேய்ந்துபோகும்
திருவான வுச்சிநடுச் சென்றபோது
கோனென்ற கருவியெல்லா மொடுங்கிப்போகும்
கூத்துவனா ராட்டமதைப் பார்க்கலாமே. (16)

பார்க்கலா மொருகாலை யுயரத்தூக்கிப்
    பாடுவா னொருகாலைத் தாழவிட்டு
ஏர்க்கையிலே மேல்நோக்கும் காலைக்கேளு
    என்மகனே மதியென்று மதற்குப்பேரு
காக்கையிலே கீழ்நோக்குங் காலைமைந்தா
    கண்டுபா ரிரவியென்று கருதலாகும்
மார்க்கமுட னண்டவுச்சி மேலேதானும்
    மகத்தான வன்னியிருப் பிடந்தான்பாரே (17)

பாரப்பா யிதையறியாச் சித்தர்கோடி
    பார்தனிலே யறுபத்து நாலுயோகம்
ஆரப்பா யிருக்குதென்று வெவ்வேறாக
    அலைந்தலைந்து கெட்டவர்க ளனந்தங்கோடி
நேரப்பா ராஜாங்க யோகந்தன்னை
    நிலையறிந்து கண்டவனே கோடிக்கொன்று
வீரப்பா பேசாமல் மனக்கண்ணாலே
    விந்துவடா பாய்ந்ததுவும் வெளியாய்க்காணே. (18)

காணாத காட்சியெல்லாம் கண்ணிற்கண்டு
    காகவுருப் புசுண்டனென்று பேரும்பெற்றேன்
தோணாமல் நானலைந்து சிலதுகாலம்
    துருவமென்ற பிரமத்தை யடுத்துக்கேட்க
நாணாமல் அண்டவுச்சி தன்னிலேதான்
    நாடியே மனதாலே நாட்டமாகக்
கோணாமற் பாருமென்று யெனக்குசொல்லக்
    கூசாமல் மனதொன்றாய் நிறுத்தினேனே. (19)

நிருத்தியே வெகுகோடி காலமட்டும்
    நிருவிகர்ப்ப சமாதியிலே நிறைந்தென்னாளும்

பொருத்தியே லலாடக்கண் டிறந்துபார்க்கப்
பூலோக மெங்குமொன்றாய் நிறைந்தேன்மைந்தா
திருத்தியாய்ச் சின்மயத்தைக் காண்பதற்குச்
சிவசிவா வென்றுபல முறையேகூறிக்
கருத்தொன்றாய் நிருத்தியடா கபாட நீக்கிக்
காரணத்தைக் கண்டுவிளை யாடலாமே. (20)

விளையாடிப் போதமய மாகவுந்தான்
வெட்டாத சக்கரத்தின் வெளிச்சம்பார்த்து
நிலையான அண்டமதில் நெற்றிக்கண்ணை
நீயறிந்து அரவுவிடந் தன்னைப்போக்கி
அலையாம லாரொருவ ருறவுமற்று
ஆயிழையாள் போகமதை யதட்டித்தள்ளி
மலையாமற் பிரமமே துணையாயெண்ணி
மௌனமென்ற மனந்தனையு மடக்கிநில்லே. (21)

நில்லென்றால் லோகத்தின் மனிதர்தாமும்
நிஷ்டையுடன் சமாதியுமே பொருந்தாமற்றான்
வல்லவர்போல் வேதகா வியபுராணம்
மந்திரங்கள் கோடானு கோடியென்றும்
சொல்லுவார் கோவிலென்றுந் தீர்த்தமென்றும்
திருடர்கள்போ லலைந்தலைந்து திரிவான்மட்டை
வெல்வதொரு பிரமநிலை யறியாமற்றான்
வேரற்ற மரம்போலே விழுவான்பாரே. (22)

பாரப்பா மலரெடுத்து லிங்கம்வைத்துப்
பார்த்தீப லிங்கமதைப் பணியாமற்றான்
வீரப்பா மணியாட்டிப் பூசைசெய்து
வீணர்களுங் கத்தபம்போற் கதறுவார்கள்

தேரப்பா மலர்தனையே கிள்ளும்போது
செத்தசவம் போலாச்சு தெளிந்துபாரு
காரப்பா மனங்கொண்டு பரத்தினூடே
கண்டவர்கள் கயிலாசத் தேகந்தானே. (23)

தானென்ற பிரமமதை யடுத்திடாமற்
றாரணியி லனந்தமடா தெய்வமென்றும்
ஊனென்ற குருவென்றுஞ் சீடனென்றும்
உதயகிரி பாராத வுலுத்தமாடு
வேனென்ற பொய்களவு கொலைகள் செய்து
வேசையர்மே லாசையுந்தான் விருப்பமாகக்
கோனென்ற குருபாத மடுக்காமற்றான்
கூடுவான் நரகமதில் விழுவான்பாரே. (24)

பாரப்பா நாக்கையுந்தா னண்ணாக்கேத்திப்
பார்தனிலே பார்த்தவர்க்குப் பலிதமில்லை
ஆரப்பா கண்வெடிக்குந் தேகம்போகும்
அடையோக மென்பார்க ளாகாதப்பா
சாரப்பா மனந்தனையு மண்ணாக்கேத்திச்
சார்ந்துமிகப் பார்க்கையிலே வாசிதானும்
வீரப்பா மேலடங்குங் கீழ்நோக்காது
வெட்டாத சக்கரத்தை யறியலாமே. (25)

அறியலாம் மனந்தானே உயிர்தானாகும்
அண்டத்திற் சேர்ந்திடவே யாகும்முத்தி
பரியேறிச் சாரியுமே நடத்தலாகும்
பஞ்சமா பாதகங்கள் பறந்தேபோகும்
விரிவான மனந்தனையும் அணுவதாக்கி
விட்டகுறை தொட்டகுறை விதியைப்பார்த்துக்

குறியான குண்டலியா மண்டவுச்சி
கூறுகிறேன் முக்கோண நிலையதாமே. (26)

தாமென்ற வுலகத்தில் மனிதரோடே
சஞ்சாரஞ் செய்யாதே தவர்செய்யாதே
ஓமென்ற வூண்மிகுந்து வுண்டிடாதே
ஓரமாய் வழக்குகளை யுரைத்திடாதே
ஆமென்ற அட்சரத்தை மறந்திடாதே
ஆயாச மாகவுந்தான் திரிந்திடாதே
காமப்பேய் கொண்டவரோ டிணங்கிடாதே
காரணத்தைக் கண்டுவிளை யாடுவாயே. (27)

விளையாடிக் கருநெல்லி பறித்துவுண்ணு
வேகாத தலையாகும் விரும்பிப்பாரு
மலையாமல் வெண்சாரை பிடித்துவுண்ணு
மைந்தனே சாகாக்கா லிதுவேயாகும்
அலையாமற் சோதியுட பாலையுண்ணு
அக்கினியாங் கம்பமடா சுழினையாச்சு
கலைநாலு பேரதையு மெட்டிற்சேரு
கபடற்ற தேகமடா கண்டுபாரே. (28)

கண்டுகண்டு மனந்தானே யண்டஞ்செல்லக்
கலைநாலும் எட்டிலையுஞ் சேர்ந்துபோகும்
தண்டுமுண்டு செய்யாதே மனம்வேறாகத்
தற்பரத்தை யெப்போதும் அறியமாட்டாய்
தொண்டுசெய்து பெரியோரை யடுத்துமைந்தா
தொழுதுநீ யென்னூலின் பயனைக்கேளு
விண்டுமவர் சொல்லாட்டா வின்னூலிற்சொல்லும்
வெற்றிபெற மனதடக்கம் வைத்துப்பாரே. (29)

பாரப்பா விஞ்சைமந்த்ர மென்பார்வீணர்
பாயடா விஞ்சைகிரி தன்னில்மைந்தா
ஆரப்பா சென்றேறிப் பார்க்கும்போது
அதீதமுள்ள விஞ்சைமந்த்ர மனந்தங்காட்டும்
நேரப்பா சிருஷ்டிப்புச் சங்காரங்கள்
நிமிடத்திற் செய்திடுவாய் நிலையைக்கண்டால்
வீரப்பா அமுதமுந்தான் குமிழிபாயும்
வேறில்லாக் கனிகளையு முண்கலாமே. (30)

உங்கலாம் பிரமமுந்தா னடங்கும்போது
உறுதியுள்ள அண்டத்தி லுருவிப்பாயும்
திங்கலாம் அமுதமடா தேனுஞ்சீனி
தித்திப்புப் பாலுடனே திடமாம்மைந்தா
தங்கலாந் தேகமது அழியாமற்றான்
சட்டையுமே கழன்றுமிகத் தங்கம்போலே
பொங்கலாம் மெய்ஞ்ஞான தீபம்போலே
பூரித்துப் பார்த்திடவே புவனமொன்றே. (31)

ஒன்றாச்சு பிரமமே வெவ்வேறாக
உலகத்தி லனந்தமடா சூத்துமாச்சு
நன்றாச்சு தீதாச்சு நாளுமாச்சு
ஞாயிறுந் திங்களென்று பேருமாச்சு
குன்றாச்சு வூர்வனங்க ளனந்தமாச்சு
குருக்களென்றுஞ் சீடரென்றுங் குறிகளாச்சு
நன்றாச்சு நாதவிந்தும் அடங்கிநின்ற
நாதனையு மோர்மனதாய் நாட்டுவாயே. (32)

நாட்டுவார் சித்தரெல்லாம் பேதமாக
நலம்போலே சாஸ்திரங்கள் கட்டினார்கள்

பூட்டியே மனிதரெல்லாம் நூலைப்பார்த்துப்
பூரணமா யண்டமதைப் பாராமற்றான்
காட்டிலே திரிந்தலைந்த மானைப்போலே
கபடமாய் வாய்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலே யடைந்திருக்குங் குயிலைப்பாரார்
கூறாத மந்திரத்தின் குறியைப்பாரே. (33)

குறியென்ற வுலகத்திற் குருக்கள்தானும்
கோடிமறை வேதமெல்லாங் கூர்ந்துபார்த்து
அறியாமற் பிரமமதைப் பாராமற்றான்
அகந்தையாய்ப் பெரியோரை யழிம்புபேசி
விரிவான வேடமிட்டுக் காவிபூண்டு
வெறும்பிலுக்கா யலைந்திடுவார் நாயைப்போலே
பரியாச மாகவுந்தான் தெண்டுமேந்திப்
பார்தனிலே குறடிட்டு நடப்பான்பாரே. (34)

பாரப்பா சீடர்களை யழைப்பான்பாவி
பணம்பறிக்க வுபதேசம் பகர்வோமென்பான்
ஆரப்பா பிரமநிலை காட்டாமற்றான்
ஆகாசப் பொய்களையு மவன்றான்சொல்வான்
நேரப்பா சீடனுக்குப் பாவமாச்சு
நிஷ்டைசொல்லுங் குருக்களுக்குத் தோஷமாச்சு
வீரப்பா அடங்கிநின்ற விடத்தைப்பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளம்புவானே. (35)

வானென்ற அண்டத்திற் சென்றுபுக்கி
வடவரையி னுச்சிநடு தீபங்கண்டு
தேனென்ற சுத்தசிவ கெங்கைதன்னிற்
றீர்த்தங்க ளாடிவெகு நாமமிட்டு

கோனென்ற மனதனபால் மலராய்ச்சாத்திக்
கோடிமறை வேதமுந்தா னண்டங்கண்டு
தேனென்ற சித்தமது புத்தியாகத்
தெரிந்தவரே மெய்ஞ்ஞானி யாகும்பாரே. (36)

பாரண்ட மதையொன்றாய்ப் பார்க்கும்போது
பலபேத மாயையெல்லாம் பறந்தேயோடும்
சீரண்ட மகிலாண்ட பிரமாண்டங்கள்
ஜெனித்தவகை யுயிர்தோறும் நீயாய்நிற்பாய்
காரண்ட லலாடக்கண் டிறந்தபோது
கண்கொள்ளாக் காச்சியெல்லாங் கலந்தேகாட்டும்
வீரண்ட மேல்வட்டம் விரிந்தசக்ரம்
மெய்ஞ்ஞான வெளியதனிற் றொடர்ந்துகூடே. (37)

கூடுவதே குணமறிந்து மனதொன்றாகக்
கூத்தாடித் திரியாமற் கெவுனமாகப்
பாடுவதே பலநூலைப் படித்திடாமற்
பராபரத்தின் உச்சிநடு வெளியிற்சென்று
ஆடுவதே தொந்தோமென் றாட்டைப்பார்த்து
அடுக்கடுக்கா யாயிரத்தெட் டிதழுங்கண்டு
வாடுகிற பயிர்களுக்கு மழைபெய்தாப்போல்
வாடாத தீபத்தை யறிந்துபாரே. (38)

பாரென்று மெய்ஞ்ஞானம் பகர்ந்துசொன்னீர்
பராபரத்தின் நிலையினுட பாதஞ்சொன்னீர்
வீரென்ற அண்டமெல்லாம் பாழதாகி
விராட்பிர்ம மொண்டியர் யிருக்கும்போது
சீரென்ற வுயிர்களெல்லா மிருப்பதெங்கே
சித்தருடன் திரிமூர்த்தி யிருப்பதெங்கே

கூறென்ற நீர்தங்கு மிடந்தானெங்கே
குருபரனே யிந்தவகை கூறுவீரே. (39)

கூறுகின்றே னென்மகனே வாசிநாதா
குணமான யீஸ்பரனார் சபையிற்கூடி
தேறுகின்ற பிரளயமாங் காலந்தன்னிற்
சீவஜெந்து சித்தருடன் முனிவர்தாமும்
வீறுடவே யெங்கேதா னிருப்பாரென்று
விமலருந்தான் விஷ்ணுவையும் விபரங்கேட்க
காறில்லா நெடுமாலுங் கடவுளாரைக்
கண்டுமிகப் பணிந்துமினி கருதுவாரே. (40)

கருதுவான் ஆலிலைமேற் றுயில்வோன்றானும்
கனமான ஜீவஜெந்து மனந்தஞ்சித்தர்
உறுதியா யெந்தனுட கமலந்தன்னில்
ஒடுங்குவா ராதரித்து மிகவேநிற்பேன்
வருந்தியே புசுண்டருந்தான் வருவாரென்று
வல்லரிடம் மால்தானும் உரைக்கும்போது
சுருதியா யெனையழைத்துச் சிவன்றான்கேட்கச்
சூத்திரமாய் நல்வசன மொழிந்தேன்பாரே. (41)

பாரென்ற சிவனுடைய முகத்தைப்பார்த்துப்
பல்லாயி ரங்கோடி யுயிர்கட்கெல்லாம்
சீரென்ற சித்தருடன் முனிவர்தானும்
திருமாலும் ஆலிலைமேற் றுயிலும்போது
கூறென்ற வுந்தியுட கமலந்தன்னிற்
கூடியே யடைந்திருக்குங் குணமதாக
வீரென்ற ஐவரையுந் தாண்டியப்பால்
வெகுசுருக்காய் வீதிவழி வந்தேன்பாரே. (42)

நாற்பத்தெண் சித்தர்

பாரப்பா ஆகாசஞ் செல்லும்போது
பாலகனே சக்கரந்தான் சுத்தியாட
ஆரப்பா சக்கரத்தைப் பிசகொட்டாமல்
அதன்பேரி லேறியுந்தா னப்பாற்சென்றேன்
நேரப்பா நெடுந்தூர மேறும்போது
நிட்சயமாய்க் கம்பத்தின் நிலையைக்கண்டு
வீரப்பா அக்கினிபோற் படர்ந்திருக்கும்
வெளியொன்றுந் தெரியாம லிருக்குந்தானே. (43)

இருக்குமெங்கு மொன்றாயக் கினியின்கம்பம்
என்மகனே கம்பத்தின் நடுவேமைந்தா
உருக்கமுடன் பெண்ணரசி யொன்றிநிற்பாள்
ஓகோகோ அவள்முகத்தைப் பார்க்கும்போது
பெருக்கமுடன் முன்பார்த்தாற் புருடரூபம்
புத்திரனே பின்பார்த்தாற் பெண்போல்ரூபம்
வருக்கமுடன் யான்றானுங் கம்பத்தூடே
வஸ்தோடு வஸ்தாக யிருந்தேன்பாரே. (44)

பாரப்பா யிப்படியே அனந்தகாலம்
பராபரத்தி னூடேதா னிருந்துவாழ்ந்தேன்
ஆரப்பா பிரமமுந்தான் மனதிரங்கி
அண்டமதைப் படைப்பதற்கு அருளும்போது
வீரப்பா கம்பத்தி லிருந்தபெண்ணும்
விமலரென்றும் உமையென்றும் மிகவேதோன்றி
சீரப்பா சக்கரத்தி லிருந்துகொண்டு
திருமாலைத் தானழைக்கத் தீர்க்கம்பாரே. (45)

பாரப்பா திருமாலுங் கமலந்தன்னிற்
பல்லாயி ரங்கோடி யுயிர்கட்கெல்லாம்

நேரப்பா அழைத்துமுக் குணத்தைக்காட்டி
நிலையான சமுத்திரங்கள் பூமிதானும்
சேரப்பா ரவியோடு திங்கள்தானும்
சிறந்தெழுந்த மலைகறடு சீவஜெந்து
வீரப்பா கிரகநட் சேத்திரங்கள்
வெத்தியுடன் நால்வேதம் வகுத்தவாறே. (46)

வாறாகத் தேகமென்றும் பூதமென்றும்
வையகத்தில் வானமென்றும் பூமியென்றும்
கூறாக மகாமேரு கிரிகளென்றும்
கோவிலென்றுந் தீர்த்தமென்றுங் குளமுண்டாக்கி
நேறாகப் பரப்பிர்மஞ் சாட்சியாக
நிலைத்ததெங்கு முயிர்தோறும் நிறைந்தாரையா
வீறாகத் திரியாமல் மௌனம்பார்த்து
வெத்திபெற வின்னமுந்தா னுரைக்கக்கேளே. (47)

கேளப்பா யிப்படியே பிரளயந்தான்
கிருபையுடன் ஏழுலட்சங் கோடியானால்
ஆளப்பா அரியயனுஞ் சீவஜெந்தும்
அகண்டமென்ற பிரமத்தி லடங்குவார்கள்
நாளப்பா நானுமந்தப் படியேசெல்வேன்
நலமாக வின்னமுந்தான் அகண்டமானால்
வாளப்பா காகமென்ற ரூபமாகி
வடவரையிற் கூடுகட்டி யிருந்தேன்பாரே. (48)

பாரடா விப்படியே யுகங்கள்தோறும்
பார்தனில்நா னறிந்ததெத் தனையோகோடி
ஆரடா வெனைப்போலே அறிவாருண்டோ
ஆதியென்ற சித்தருக்கு மாதியானேன்

வீரடா விமலரிடஞ் செல்லும்போது
வெற்றியுட னெனையெடுத்து முத்தமிட்டார்
காரடா கயிலையின்மே லிருக்கச்சொன்னார்
காகமென்ற ரூபமா யிருந்தேன்பாரே. (49)

காகமென்ற ரூபமா யிருந்துகொண்டு
காரணங்க ளனைத்தையும்நற் கருவைப்பார்த்து
வேகமுடன் வெளியோடு நிலையைப்பார்த்து
வெகுதூரஞ் சுத்தியின்னம் விபரங்காணேன்
மோகமுடன் பறந்தமனம் அணுவதாக்கி
மூர்க்கமுடன் பரவெளியை வெளியதாக்கி
நாகரிக மாகவுந்தா னண்டமேவி
நடுவணையா முச்சிநடு மத்திதானே. (50)

மத்தியதி லானதிலே முளைத்தலிங்கம்
மகாமேரு முச்சியிலே வளர்ந்தலிங்கம்
சத்தியுட னாவிடையு மானலிங்கம்
சஞ்சாரச் சமாதியிலே நிறைந்தலிங்கம்
புத்தியாய் மனதொன்றாய் புகழ்ந்தலிங்கம்
பூருவந் தன்னிலேதான் முளைத்தலிங்கம்
எத்திசையும் புகழ்ந்திட்டவே வந்தலிங்கம்
ஏகபர மானதொரு லிங்கந்தானே. (51)

தானென்ற சிறுவீட்டுக் குள்ளேசென்று
தலைமாறிப் போரதொரு வாசியைத்தான்
கோனென்ற பிரமத்தி லடக்கமாகும்
குறித்திடுவாய் மனதடங்குங் கூர்ந்துபாரு
வானென்று பொழியுமடா பானம்பானம்
மைந்தனே உண்டிடவே பசிதான்தீரும்

தேனென்ற சட்டைகளுங் கழன்றுபோகும்
தேவனுக்குந் தேவனா யிருக்கலாமே. (52)

இருக்கலா மெந்தெந்த யுகங்களுக்கும்
யேகாந்த மானதொரு பிரமந்தன்னிற்
பெருக்கவே மனதடங்கி மௌனம்பெத்து
பேராசை யாகவுந்தான் பிரமந்தன்னிற்
குருக்களைப்போ லரசனைப்போல் வலாரியைப்போற்
குணமான மூவரைப்போற் சீவனைப்போல்
திருக்கெடுத்து வெந்தெந்த வவதாரங்கள்
செய்திடலாம் நிலையறிந்த பெரியோர்தானே. (53)

தானவனே யென்குருவே புசுண்டநாதா
தாரணியி லுயிர்களுட னண்டமெல்லாம்
தோணவே மும்மூர்த்தி தோற்றுமென்றீர்
துடியான பிரமத்தி லடங்குமென்றீர்
கோனவனே பின்னுந்தா னண்டமெல்லாம்
குறிப்புடனே படைக்கும்வகை குறிப்புச்சொன்னீர்
தானவனே மதுவுண்கச் சொன்னீரையா
தலந்தனிலே வாசியது சாற்றுவீரே. (54)

சாற்றுகிறே னென்மகனே வாசிநாதா
சத்தியமா யண்டமதிற் செல்லும்போது
போற்றுகிற வக்கினியும் பிரவேசித்துப்
புலன்களைந்துஞ் சேர்ந்ததினாற் போதமாகும்
மாற்றிலையு மதிகமடா வுன்றன்தேகம்
மைந்தனே யபுரூப மாகுமப்பா
வாற்றியே நிழல்சாயை யற்றுப்போகும்
வலுத்ததடா காயசித்தி யாச்சுபாரே. (55)

ஆச்சென்ற வருபமய மானபோது
அஷ்டமா சித்திவகை யெட்டுமாடும்
மூச்சொன்றி லடங்கிப்போம் பிரமத்தூடே
முன்னணியும் பின்னணியு மொன்றாய்ப்போகும்
காச்சென்று காச்சிவிடு மௌனங்கண்டு
கலைமாறி நின்றிடமே கனகபீடம்
நீச்சொன்று மில்லையடா வுன்னைக்கண்டால்
நிலைத்துதடா சமாதியென்ற மார்க்கந்தானே. (56)

மார்க்கமுடன் தவசுநிலை யறியாமற்றான்
மனந்தளர்ந்து திரிவார்கள் லோகத்தோர்கள்
ஏர்க்கமுடன் முப்பதுக்குள் மௌனங்கண்டு
இளவயதா யிருப்பார்கள் பெரியோர்மைந்தா
காக்கவே சற்குருவின் பாதங்கண்டு
கருணையுட னவர்பதத்தை வணங்கிப்போற்றி
தீர்க்கமுடன் பிரமத்தில் மனந்தான்செல்லச்
சீவனுக்குஞ் சீவனா யிருக்கலாமே. (57)

இருக்கலாஞ் செடிபூடு கற்பமில்லை
ஏகாந்த மானதொரு பிரமந்தன்னில்
உருக்கியே மனதடங்கிப் பார்க்கும்போது
உத்தமனே கர்ப்பத்துக் குறுதியாச்சு
மருக்கியே திரியாமல் மதம்பேசாமல்
வண்டரோ டிணங்கியடா மருவிடாமல்
குருக்கியே கோளரிடஞ் சேர்ந்திடாமற்
குருபாதங் கண்டுமிகப் பணிந்துபாரே. (58)

பாரென்று சொன்னமெய்ஞ் ஞானமூர்த்தி
பரத்தினுட வடிமுடியும் பகர்ந்துசொல்லும்

தீரென்று சொற்பனங்கள் பேதமாகத்
திடப்படவே காணுமிடந் தீர்க்கஞ்சொல்லும்
காரென்று மனம்பிறந்த இடந்தான்சொல்லும்
கதிர்மதியுஞ் சுத்திவரு மார்க்கஞ்சொல்லும்
ஊரென்றும் பிறந்தவிடந் தலந்தான்சொல்லும்
உத்தமனே யிறந்தவகை யியம்புவாயே. (59)

வாயாலே சொல்லுகிறேன் மகனேகேளு
மகத்தான பிரமத்தின் பாதந்தன்னில்
ஓயாமல் முன்சொன்ன நரம்புபின்னி
உத்தமனே ரவிமதியுஞ் சுத்தியாடும்
மாயமடா வாசியுந்தான் நடுவேநின்று
மார்க்கமுடன் சுழுத்தியுள்ளே மனந்தான்சென்றால்
காயான சுழுத்தியென் றிதற்குப்பேரு
கண்டுபார் கண்கொள்ளாப் போதந்தானே. (60)

தானென்ற பலரூப மதிகங்காணும்
தன்னுடைய தேவதைபோற் பின்னுங்காட்டும்
ஊனென்ற பெண்ணைப்போ லுன்னைக்கட்டி
யுத்தமனே சையோகஞ் செய்தாற்போலே
தேனென்று மயங்கிவைக்குஞ் சுழுத்தியாலே
தித்திப்புப் போலேயும் ருசினைகாட்டும்
கோனென்ற குருவருளைப் பணிந்துகொண்டு
குறிப்பறிந்து பூரணத்தின் நிலையைப்பாரே. (61)

நிலையாத சமுத்திரமே சுழுத்தியாச்சு
நின்றிலங்கும் வாசியைத்தான் வெளியிற்சேரு
தலையாமக் கினியைவப் படியேசேரு
சத்தியமாய் ரவிமதியைக் கூடச்சேர்த்து

மலையாம லேகபரா பரனேயென்று
மனதடங்கி யண்டவுச்சி தன்னைப்பார்க்க
அலையாது மனந்தானும் பரத்திற்சென்று
ஆகாச வீதிவெளி யாட்டும்பாரே. (62)

ஆட்டுமடா ஆசையற்று ரோசமற்று
அன்னைசுற்றந் தனைமறந்து அகண்டமேவும்
பூட்டுமடா நவத்துவா ரங்கள்தன்னைப்
பொறிகளைந்துஞ் சேருமடா புனிதமாகக்
காட்டிலென்ன நாட்டிலென்ன மௌனங்கண்டாற்
காமதேனுங் கற்பகமு முனக்கேசித்தி
வீட்டிலையுந் தீபம்வைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறி னாற்றீபம் விழலாய்ப்போமே. (63)

போகுமடா புத்திசித்த மொன்றதாக்கிப்
புசுண்டரென்று பேரெடுத்துப் புவனந்தன்னில்
ஆகுமடா வடகாளி மைந்தனென்றும்
அருமையாங் கன்னியுட புதல்வனென்றும்
நாகுமடா வைந்துபேர் தன்னிலேதான்
நாட்டமுடன் முன்பிறந்தேன் நான்றான்மைந்தா
வாகுமடா சாண்முழத்திற் காட்சிபார்க்க
வஸ்துவுந்தான் யீஸ்பரனா ரென்றார்பாரே. (64)

பாரப்பா யென்குலந்தான் சொல்லக்கேளு
பார்தனிலே பரமனுட விந்துவாலே
ஆரப்பா பிறந்துவிட்டோ மைந்துபேரும்
ஆகாச வண்டமதை யடுத்தேசென்றேன்
நேரப்பா வெகுகோடி காலம்வாழ்ந்தேன்
நிஷ்டையிலே மனந்தளரா திருந்துகொண்டேன்

வீரப்பா பேசுவர்கள் லோகத்தோர்கள்
விட்டவிடந் தொட்டவிடம் விரும்பிக்காணே. (65)

காணப்பா சாதிகுல மெங்கட்கில்லை
கருததுடனே யென்குலஞ்சுக் கிலமேயாகும்
தோணப்பா தோணாமற் சாதிபேதஞ்
சொல்லுவான் புத்திகெட்டு முருண்டுபோவான்
வீணப்பா பிர்மத்தி லாதிகாலம்
வீரமுடன் பிறந்துதடா வுயிர்களெல்லாம்
நாணப்பா அப்படியே யுதித்தேன்முன்னே
நன்றாக வுதித்தவிடம் நாடினேனே. (66)

நாடியே வுதித்தவிட மறியாத்தோடம்
நடுவாக வந்தவிட மறியாத்தோடம்
கூடியே பிறந்தவிடங் காணாத்தோடம்
குருபரனை நிந்தனைகள் செய்ததோடம்
வாடியே வஸ்தோடே சேராத்தோடம்
வம்பரோ டிணங்கியே திரிந்ததோடம்
கூடியே வுறவற்று யிருந்ததோடம்
கும்பிடுங்கற் சிப்பியையும் அறியான்பாவி. (67)

அறியாத பாவிகட்கு ஞானமேது
ஆறுமுகன் சொன்னதொரு நூலைப்பாரு
பரிபாஷை யாகவுந்தான் சொல்லவில்லை
பராக்கிரமர் தன்னுடைய நூலும்பாரு
விரிவாகச் சித்தர்சொன்ன நூல்களெல்லாம்
வீணாக மறைப்பாகச் சொன்னாரையா
குறியான அண்டமதை யொளித்தேவிட்டார்
கூறினார் வெவ்வேறாய்க் குற்றந்தானே. (68)

நாற்பத்தெண் சித்தர்

குத்தமது வையாம லண்டத்தேகிக்
கூறாத மந்திரங்கள் குறியைப்பார்த்துச்
சித்தம்வைத்து அந்திசந்தி யுச்சிக்காலம்
தேவனுக்குப் பூசைசெய்து தெளிவுபெற்றுக்
குத்தமது வையாமற் றனதன்பாலே
குருபரனை நோக்கியடா தவமேசெய்து
பத்தாசை வைத்துமிகப் பார்க்கும்போது
பராபரையுங் கைவசமா யாகுவாளே. (69)

ஆகுமே அந்திசந்தி யுச்சியென்றால்
அப்பனே ரவிமதியுஞ் சுடர்மூன்றாகும்
ஏகுவாய் மூன்றுமொன்றாய்ப் பின்னலாகி
யிருந்திடவே பிரமத்தின் நிலையதாகும்
போகுமே நீசெய்த கர்மமெல்லாம்
புவனதிரி சூலியுட கிருபையாலே
வாகுமே வழியோடே நடந்தாயானால்
வாணியுந்தான் நாவில்நடஞ் செய்வாள்பாரே. (70)

பாரப்பா வாணியுந்தா னிருந்தவீடு
பாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
ஆரடா அண்ணாக்கின் கொடியினூடே
அண்டத்தைப் பத்தியடா விழுதுபோல
நேரடா நரம்பதுதான் பொருந்திநிற்கும்
நிலையான வக்கினியின் மத்திதன்னில்
வீரடா அதுவழியே அருள்தான் பாய்ந்து
விண்ணுலகி லென்றமிழைச் சொல்லுவாளே. (71)

சொல்லுவா ளனந்தமறை வேதமெல்லாம்
சுருதியடா முடிந்தெழுந்த பிரமத்தாலே

வெல்லுவாள் தனையறிந்த பெரியோரெல்லாம்
வீராண்மை பேசார்கள் மௌனமாக
அல்லுபகு லற்றதொரு பிரமந்தன்னை
யாரறிவா ருலகத்தி லறியமாட்டார்
சொல்லடங்கு மிடந்தனையுங் கண்டுபோற்றிச்
சூத்திரமாய்க் கல்லுப்பு வாங்குவாங்கே. (72)

வாங்கியே அண்டத்தில் மூளைசேர்த்து
வளமாக வுப்பிலையும் பிசறிமைந்தா
தாங்கியே திருகுகள்ளிக் குள்ளேவைத்துத்
தமர்வாயைத் தான்மூடிச் சாபந்தீர்த்து
ஓங்கியே திங்களுந்தான் மூன்றுசென்றால்
உத்தமனே கள்ளியைத்தான் றரித்துக்கொண்டு
சாங்கமினிச் செய்யாமற் சீலைமண்ணுஞ்
சத்தியமாய்ச் செய்தபின்பு உலர்த்திப்பாரே. (73)

பாரப்பா வுலர்ந்தபின்பு யெடுத்துமைந்தா
பத்தியுடன் கெஜபுடத்திற் போட்டுப்பாரு
ஆரப்பா ஆரவைத்து யெடுக்கும்போது
அருணனிற மாயிருக்குஞ் செந்தூரந்தான்
நேரப்பா அணுப்போலே சரக்குக்கெல்லாம்
நிட்சயமாய்ப் பூசியுந்தான் புடத்திற்போடு
வீரப்பா நீறுமடா நவலோகந்தான்
வேதையென்ற வித்தையது கைக்குள்ளாச்சே (74)

ஆச்சப்பா வுடம்பிலுள்ள வியாதியெல்லாம்
அணுப்போலே வுண்டிடவே பறந்துபோகும்
வாச்சப்பா தேகசித்தி யதிகமாச்சு
வஸ்துவுடன் கூடியுந்தான் வாழலாச்சு

மூச்சப்பா தலையிண்டங் கொடியுமாவும்
முக்கியமாய் வாங்கியதைத் தயிலம்வாங்கு
ஏச்சப்பா திரியாதே சூடன்சேர்த்து
இன்பமுடன் வஸ்துவையும் பூசைசெய்யே. (75)

பூசையடா செய்தபின்பு பதனம்பண்ணு
புத்திரனே பேய்ப்பீர்க்கின் தயிலம்வாங்கு
ஆசைபுல்லா மணக்கதுவு மதுபோல்வாங்கி
அப்பனே கேசரியின் நெய்யுஞ்சேர்த்து
ஓசையுடன் தேவாங்குப் பித்துஞ்சேர்த்து
உத்தமனே தலையிண்டத் தயிலஞ்சேர்த்து
பாசையடா பேசாம லரைத்துமைந்தா
பாலகனே சவாதோடு புனுகுஞ்சேரே. (76)

சேரடா அணுப்போலே புருவத்திட்டு
தீர்க்கமுடன் நீதானுஞ் செல்லும்போது
ஆரடா வுனைத்தானும் யார்தான்காண்பார்
அண்டமெனும் பிரமத்தி னருளினாலே
நேரடா திகைப்பூடு கொண்டுவந்து
நிட்சயமாய் முன்சொன்ன தயிலம்விட்டு
வீரடா அரைத்தபின்பு புருவத்திட்டால்
வேசையர்கள் வெகுபேர்கள் மயங்குவாரே. (77)

வாரான தில்லைப்பால் கருந்துளசி
வெளவாலின் பித்துகரு மந்திப்பித்தும்
சீராக முன்சொன்ன கருவைவிட்டுத்
திடமாக வறைத்திடுவாய் சாமமொன்று
நேராக அறைத்ததையு மெடுத்துமைந்தா
நிட்சயமாய்ப் புருவத்தி லிட்டுப்பார்க்க

வீராகப் பாதாளம் பிளந்தேயோடும்
வேதாந்த விசாரணையை விரும்பிப்பாரே. (78)

பாரடா பரப்பிரமத் தூடேசென்று
பரிதிமதி யக்கினியும் மூன்றுமொன்றாய்
நேரடா ஆதியுந்தா னெதிரிதன்னை
நிட்சயமாய்ப் பார்த்திடவே நீறிப்போவான்
கூரடா கோடானு கோடி சித்து
குறித்திடவே யாடுமடா பிரமத்தாலே
வீரடா யிந்நூலைக் கொடுத்திடாதே
வெத்தியுட னெண்பதுமே விளங்கமுற்றே. (79)

ஹரிஓம்நீ சொல்லையிலே தொட்டுக்காட்டு
ஆமடா காட்டையிலே தெரியாவிட்டால்
குரியாகக் கூட்டிப்போய்க் கையைக்கொண்டு
குறிப்பாகத் தீர்த்தத்தாற் குணமாய்ச்சொல்லு
அரிஓம்தா னப்படியே தெரியாவிட்டால்
அப்பனே யினிமேற்றான் சொல்லக்கேளு
விரிவான நாணேற்றி யம்பைப்பூட்டி
விதமாக வவன்பார்க்க வெய்துகாட்டே. (80)

புசுண்டர் மெய்ஞ்ஞான விளக்கம் 80
முற்றிற்று

....

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய
ஞான காவியம் 33

கணபதியே அடியாகி யகிலமாகிக்
காரணத்தின் குருவாகிக் காட்சியாகிக்
குணபதியே கொங்கைமின்னாள் வெள்ளைஞானக்
குருநிலையா யருள்விளங்குங் கொம்பேஞானக்
கனவிலேயும் நினைவிலேயும் ஒளியாய் நின்ற
காரணத்தின் வடிவாகிக் கருத்துள்ளாகிப்
பணியரவம் பூண்டசிவ வாசிநேர்மை
பாடுகிறேன் காவியந்தா னெண்ணிப்பாரே.

நூல்

எண்ணியெண்ணிக் காவியத்தை யெடுத்துப்பாரு
எந்நேரங் காமசிந்தை யிதுவேநோக்கும்
பண்ணிபண்ணி பலகுட்டி போட்டாலென்ன
பதியானைக் குட்டியொரு குட்டியாமோ
சண்ணிசண்ணி யிந்நூலை நன்றாய்ப்பாரு
சக்கரமு மக்கரமும் சணத்திற்றோன்றும்
தண்ணிதண்ணி யென்றலைந்தாற் றாகம்போமோ
சாஸ்திரத்தி லேபுகட்டித் தள்ளியேறே. (1)

புகட்டினாள் தசதீட்சை மகிமைதன்னைப்
பூரணப்பா லெனக்களித்து அகண்டந்தோறும்
சகட்டினாள் சகலசித்து மாடச்சொன்னாள்
சந்திரபுஷ் கரணிதனில் தானஞ்சொன்னாள்
பகட்டினா ளுலகமெல்லாம் முக்கோணத்திற்
பரஞான சிவபோதம் பண்பாய்ச்சொன்னாள்

அகட்டினா ளைவர்களை யீன்றாளம்மன்
அந்தருமை சொல்லவினி யடிதான்கேளே. (2)

கேளப்பா யீசனொரு காலந்தன்னிற்
கிருபையுடன் சபைகூடி யிருக்கும்போது
வாளப்பா மாலயன்றன் முகத்தைநோக்கி
வந்தவா றெவ்வகையோ சென்றதேதோ
கோளப்பா ஜெயகால லயம்தானெங்கே
குருநமசி வாயமெங்கே நீங்களெங்கே
ஆளப்பா ஐவர்களு மொடுக்கமெங்கே
அறிந்தெனக்கு யின்னவகை யுரைசெய்வீரே. (3)

இன்னவகை யீசரவர் கேட்கும்போது
எல்லோரும் வாய்மூடி யிருந்தாரப்போ
சொன்னவகை தனையறிந்து மார்க்கண்டேயன்
சொல்லுவான் குழந்தையவன் கலகலென்ன
அன்னைதனை முகம்பார்த்து மாலைநோக்கி
அரிகரி யீசர்மொழிக் குரைநீர்சொல்வீர்
பின்னைவகை யாருரைப்பார் மாயைமூர்த்தி
பேசாம லிருந்துவிட்டா லொழிவாரெங்கே. (4)

எங்கையென்று மார்க்கண்ட னெடுத்துச்சொல்ல
என்னசொல்வா ரேகவெளிச் சிவனைநோக்கி
கங்கைதனைப் பூண்டோனே கடவுளோனே
காரணமே பூரணமே கண்ணேமின்னே
சங்கையினி யேதறிவேன் மகுடச்சோதி
சந்திரனைப் பூண்டிருந்து தவம்பெற்றோனே
மங்கையிடப் பாகம்வைத்த மகுடத்தோனே
மகாமுனிகள் ரிஷிகள்சித்தர் அறிவார்காணே. (5)

நாற்பத்தெண் சித்தர்

அறிவார்கள் ரிஷிகள்சித்தர் முனிவோரையா
அரகரா அதுக்குக்கோ ளாரென்றாக்கால்
பொறியாகப் புசுண்டமுனி சொல்வாரையா
போயழைக்கக் கோளாறு வசிஷ்டராகும்
நெறியாக இவ்வகைநா னறிவேனையா
நிலைத்தமொழி புசுண்டரல்லால் மற்றோர்சொல்லார்
புரிவாரு மிவ்வளவென் றுரைத்தார்மாயன்
பொருள்ஞானக் கடவுளப்போ மகிழ்ச்சிபூண்டார். (6)

மகிழ்ச்சியுடன் மார்க்கண்டா வாராய்கண்ணே
வரலாறு நீயெனமா யறிவாய்சொல்லாய்
சுகட்சியுடன் கருதிப்பார் யுகங்கள்தோறும்
சூட்சமிந்த மாலோன்றன் வயிற்றிற்சேர்வேன்
அகட்சியுடன் ஆலிலைமே லிருப்பாரையா
அப்போது இவரிடத்தி லெல்லாஞாயம்
இகழ்ச்சியுட னிவற்குப்பின் னெவரோகாணேன்
இவ்வார்த்தை நானறிவே னவரைக்கேளீர். (7)

கேளுமென்றான் மார்க்கண்டன் சிவனதானப்போ
கிருபையுட னிவ்வளவு மறிவாயோடா
ஆளுகின்ற யீசனுநா மறியோமிந்த
அருமைதனை நீயறிந்தா யருமைப்பிள்ளாய்
காளகண்டர் மாயோனைச் சொல்வீரென்றார்
கருவேது நீயறிந்த வாறுமேது
பாளுகின்ற முப்பாழுந் தாண்டிநின்ற
பரஞான சின்மயமின் பகர்ந்திடீரே. (8)

பரமான பரமகயி லாசவாசா
பார்த்திருப்போ மாலிலைமேற் பள்ளியாகி

தரமான புசுண்டமுனி யந்தவேளை
சக்கரத்தைப் பிரளொட்டார் தவத்தினாலே
துரமாக யெவ்வாறோ திரும்பப்போவார்
சூட்சமதை நாமறிவோம் பின்னேதோதான்
வரமான வரமளித்த ஞானவாழ்வே
வசிஷ்டர்போ யழைத்துவரத் தகுமென்றாரே. *(9)*

தகுமென்ற வார்த்தைதனை யறிந்துயீசர்
தவமான வசிஷ்டரேநீர் புசுண்டர்ஜாகை
அகமகிழ வங்கேகி யவற்குரைத்து
அவரையிங்கு சபைக்கழைத்து வருவாயென்ன
ஜெகமான ஜெகமுழுது மாண்டஜோதி
திருவடிக்கே நமஸ்கரித்துத் திரும்பினார்பின்
உகமானந் தனையறிந்தும் அரனார்சொன்ன
உளவுகண்டார் புசுண்டரெனுங் காகந்தானே. *(10)*

காகமென்ற வேஷமதாய் விருட்சமீதிற்
காத்திருந்தார் வசிஷ்டர்வரக் கண்டார்நாதன்
ஏகமதா யொட்டான வசிஷ்டரேநீர்
எங்குவந்தீர் வாருமென்று இடமுமீயத்
தாகமுடன் யீசனும்மை யழைக்கச்சொன்னார்
சங்கதியைத் தங்களிடஞ் சாற்றவந்தேன்
பாசமுடன் எட்டான விபரந்தன்னைப்
பத்துமெய்ஞ் ஞானபொரு ளருள்பெற்றாரே. *(11)*

பெற்றோரே யென்றுரைத்தீர் வசிஷ்டரேநீர்
பிறந்திறந்து எட்டாங்காற் பிறந்துவந்தீர்
சத்தான சத்துகளு மடங்குங்காலம்
சங்கரமுந் திரும்பிவிட்டாற் சமையம்வேறாம்

சித்தான பஞ்சவர்க ளொடுங்கும்போது
சேரவே ரிஷிமுனிவர் சித்தரோடு
முத்தாகப் பஞ்செழுத்தி லொடுக்கமாவார்
முத்துமணிக் கொடியீன்றாள் முளைத்திட்டீரே. (12)

முளைத்திட்டீ ரித்தோடே யெட்டுவிசைவந்தீர்
முறையிட்டீ ரிவ்வண்ணம் பெருமைபெற்றீர்
களைத்திட்டுப் போகாதீர் சொல்லக்கேளும்
கண்டமதில் விஷம்பூண்டார்க் கலுவலென்ன
கிளைத்திட்டுப் போனாக்கால் மறந்துபோவார்
கிளர்நான்கு யுகந்தோறு மிந்தச்செய்கை
பிழைத்திட்டுப் போவமென்றா லங்கேபோவோம்
பேய்பிடித்தோர் வார்த்தைசொல நீர்வந்தீரே. (13)

வந்தீரே வசிஷ்டரேநீ ரின்னங்கேளு
வளமைதான் சொல்லிவந்தேன் வேஷம்நீங்கி
இந்தமா மரக்கொப்பி லிருந்தேனிப்போ
இதுவேளை யெவ்வளவோ ஜனமோகாணும்
அந்தமோ ஆதியோ யிரண்டுங்காணா
ரவர்களெல்லாம் ரிஷியோகி சித்தரானார்
சந்தேக முமக்குரைக்கப் போகாதையா
சாமிக்கே சொல்லுமையா யிதோவந்தேனே. (14)

வந்தேனே யென்றுரைத்த வாறுகொண்டு
வசிஷ்டருமே வாயுலர்ந்து காலும்பின்னி
இந்தேனே முனிநாதா சரணங்காரும்
எழுந்துசிவன் சபைநாடி முனிவர்வந்தார்
மைந்தனையே யீன்றருளுங் கடவுள்நாதா
மாமுனிவன் வாயெடுக்கப் புசுண்டர்சொல்வார்

சிந்தனைசெய் யீஸ்பரனே வந்தேனையா
சிவசிவா யின்னதென்று செப்பிடீரே. (15)

செப்புமென்ற புசுண்டமுனி முகத்தைநோக்கிச்
சிவன்மகிழ்ந்து யேதுமொழி செப்புவார்கேள்
கொப்புமென்ற யுகமாறிப் பிறளுங்காலம்
குருநமசி வாயமெங்கே பரந்தானெங்கே
அப்புமென்ற பஞ்சகணத் தேவரெங்கே
அயன்மாலும் சிவன்மூவ ரடக்கமெங்கே
ஒப்புமிந்த யுகமாறிப் பிறந்ததெங்கே
ஓகோகோ முனிநாதா வுரைசெய்வீரே. (16)

உரையென்றீ ருன்றனுக்குப் புத்திபோச்சு
உம்மோடே சேர்ந்தவர்க்கும் மதிகள் போச்சு
பரையென்றால் பரைநாடி நிலைக்கமாட்டீர்
பரமசிவன் தானமென்றும் பேரும்பெற்றீர்
இரையென்றால் வாய்திறந்த பட்சிபோலே
எல்லோரு மப்படிக்கே இறந்திட்டார்கள்
நிரையென்ற வார்த்தைதனைச் சொன்னேனானால்
நிசங்கொள்ளா தந்தரங்கம் நிசங்கொள்ளாதே. (17)

கொள்ளாமற் போவதுண்டோ மவுனயோகி
கோடியிலே உனைப்போலே ரிஷியோகாணேன்
உள்ளாக ரிஷியொருவ ரில்லாவிட்டால்
யுகவார்த்தை யாருரைப்பார் யானுங்காணேன்
விள்ளாமற் றீராது முனிவரேகேள்
மெய்ஞ்ஞானப் பரம்புகுந்த அருள்மெய்ஞ்ஞானி
தள்ளாமற் சபையிலுள்ளோ ரெல்லோர்கேட்கச்
சாற்றிடீர் முனிநாதா சாற்றிடீரே. (18)

சாற்றுகிறே னுள்ளபடி யுகங்கள்தோறும்
தமக்குவந்து சொல்லுவதே தவமாய்ப்போச்சு
மாற்றுகிறேன் சணத்தின்முன் னுரைத்துப்போனேன்
வாதாட்ட மெனக்காச்சு இனியென் சொல்வேன்
சேற்றிலே நாட்டியதோர் கம்பம்போலத்
திரும்பினது போலாச்சு யுகங்கள்தோறும்
ஆற்றுகிறே னந்தமது ஆகும்போது
அரகரா அந்நேரம் நடக்கைகேளே. (19)

கேளப்பா நடந்தகதை சிவமேயுண்மை
கெடியாகச் சக்கரங்கள் திரும்பும்போது
பாளப்பா தசநாதம் மவுனம்பாயும்
பரமான மவுனமது பரத்திற்சாடும்
ஏளப்பா அடுக்குகளும் இடிந்துவீழும்
இருந்தசதா சிவமோடி மணியில்மீளும்
ஊளப்பா யிதுகோளு மெவருஞ்சொல்வார்
ஓகோகோ அண்டமெல்லாங் கவிழ்ந்துபோமே. (20)

கவிழ்ந்துபோ மப்போது அடியேனங்கே
கருத்துவைத்துத் தியானமொரு தியானமுண்டு
தவிழ்ந்துபோங் காலமப்போ நிறுத்துவேன்யான்
சமையமதி லக்கினிபோல் ஸ்தம்பங்காணுங்
சிவந்தவர்னம் நீலவுரு சுடர்விட்டேகும்
சிவசிவா அக்கினிபோற் கொழுந்துவீசும்
நவந்துஅதி னருகேதான் சென்றுநிற்பேன்
நகாரமுத லஞ்செழுத்து வரக்காண்பேனே. (21)

காண்பேனே நகாரமது மகாரம்புக்கும்
கருத்தான மகாரமது சிகாரம்புக்கும்

தேண்பேனே சிவாரமது வகாரம்புக்கும்
சிவசிவா வகாரமது யகாரம்புக்கும்
கோண்பேனே யகாரமது சுடரிற்புக்கும்
குருவான சுடரோடி மணியிற்புக்கும்
நாண்பான மணியோடி பரத்திற்புக்கும்
நற்பரந்தான் சிவம்புக்குஞ் சிவத்தைக்கேளே. *(22)*

கேளப்பா சிவமோடி அண்டம்பாயும்
கிருபையா யண்டமது திரும்பிப்பாயும்
கோளப்பா அண்டமது கம்பத்தூண்தான்
குருவான தசதீட்சை யொன்றுமாச்சு
மீளப்பா ஸ்தம்பமது விளங்குஞ்செய்கை
மேலுமில்லை கீழுமில்லை யானுங்காணேன்
ஆளப்பா நரைத்தமா டேறுவோனே
அண்ணளவோ யிண்ணளவோ அறிந்திலேனே. *(23)*

அறிந்திலே னென்றுரைத்த புசுண்டமூர்த்தி
அரகரா உன்போலே முனியார்காணேன்
தெரிந்திலே னென்றுரைத்தால் மனங்கேளாது
சிவனயந்து கேட்கவும்நீ யொளிக்கவேண்டாம்
பொருந்திலேன் பூருவத்தில் நடந்தசெய்கை
பூரணத்தா லுள்ளபடி புகழ்ந்து சொல்லும்
பரிந்திலேன் மிகப்பரிந்து கேட்டேனையா
பழமுனியே கிழமுனியே பயன்சொல்வீரே. *(24)*

பழமுனிவ னென்றுரைத்தீர் கடவுளாரே
பருந்தீபஸ் தம்பத்தைப் பலுக்கக்கேளும்
குழவுடனே ஸ்தம்பத்தில் யானும்போவேன்
கோகோகோ சக்கரமும் பிரண்டுபோகும்

தழும்பணியச் சாகரங்க ளெங்குந்தானாய்ச்
சத்தசா கரம்பிரண்டு யெங்கும்பாழாய்
அழகுடைய மாதொருத்தி ஸ்தம்பத்துள்ளாய்
அரகரா கண்ணாடி லீலைதானே. *(25)*

லீலைபோற் காணுமுகம் போலேகாணும்
நிலைபார்த்தால் புருடரைப்போற் றிருப்பிக்காணும்
ஆலைபோற் சுழன்றாடுங் கம்பத்துள்ளே
அரகரா சக்கரங்க ளாறுங்காணும்
வாலைபோற் காணுமையா பின்னேபார்த்தால்
மகத்தான அண்டமது கோர்வைகாணும்
சோலையா யண்டமதிற் சிவம்தான்வீசும்
சிவத்திலே அரகரா பரமுங்காணே. *(26)*

பரத்திலே மணிபிறக்கும் மணியினுள்ளே
பரம்நிற்குஞ் சுடர்வீசும் யிப்பாற்கேளு
நிரத்திலே சடமதனில் யகார்ங்காணும்
நிட்சயமாம் யாகரமதில் வகாரங்காணும்
வரத்திலே வகாரமதிற் சிகாரங்காணும்
வரும்போலே சிகாரத்தில் மகாரங்காணும்
நரத்திலே மகாரத்தில் நகர்ரங்காணும்
நன்றாமப் பூமியப்போ பிறந்ததன்றே. *(27)*

பிறந்ததையா யிவ்வளவு மெங்கேயென்றால்
பெண்ணொருத்தி தூணதிலே நின்றகோலம்
சுறந்ததையா யிவ்வளவும் அந்தமாது
சூட்சமதே அல்லாது வேறொன்றில்லை
கறந்ததையா உலகமெல்லாங் காமப்பாலைக்
காலடியிற் காக்கவைத்து சகலஜெந்தும்

இருந்ததையா யிவ்வளவுஞ் செய்தமாது
எங்கையென்றா லுன்னிடத்தி லிருந்தாள்கன்னி. *(28)*

இடப்பாக மிருந்தவளு மிவளேமூலம்
இருவருக்கும் நடுவான திவளேமூலம்
தொடக்காக நின்றவளு மிவளேமூலம்
சூட்சமெல்லாங் கற்றுணர்ந்த திவளேமூலம்
அடக்காக அடக்கத்துக் கிவளேமூலம்
ஐவருக்குங் குருமூல மாதிமூலம்
கடக்கோடிக் கொப்பதனில் நின்றமூலம்
கன்னியவள் சிறுவாலை கன்னிதானே. *(29)*

கன்னியிவ ளென்றுரைத்தார் புசுண்டமூர்த்தி
கர்த்தனப்போ மனதுசற்றே கசங்கினார்பின்
மண்ணுள்ள தேவர்களும் பிறப்பித்திந்த
மார்க்கத்தி லிருப்பதுவோ மவுனம்பெண்ணே
உன்னிதமா யுன்கருணை யெங்கேகாண்போம்
ஓகோகோ ஐவருந்தான் வணங்கினார்கள்
கொன்னியவள் வாக்குரைக்காள் சிவமேகன்னி
கொலுமுகத்தில் நால்வரும்போய் வணங்கினாரே. *(30)*

வணங்கியவர் வாய்புதைத்து நின்றார்பின்னே
மாதுகலி யாணியென வசனித்தார்கள்
வணங்கினார் தேவரொடு முனிவர்தாமும்
மற்றுமுள்ள தேவர்களும் நவபடாளும்
வணங்கினா ரஷ்டகெஜந் திகிரியெட்டும்
வாரிதியுஞ் சேடனுமா லயனும்மூவர்
வணங்கினார் மிகவணங்கித் தொழுதாரப்போ
வாலையவள் மெய்ஞ்ஞானம் அருளீவாளே. *(31)*

அருளீவாள் சுடிமணியை மாலைபூண்டாள்
அரகரா சின்மயத்தின் நீறுபூசி
பொருளீவா ளவரவர்க்கு ஏவல்சொல்லிப்
பொன்றாத பல்வுயிர்க்கைக் கிடங்கள்வேறாய்த்
தெருளீவாள் சிவயோகந் தெளிவதற்குச்
செயலுறுதி யாகவல்லோ தெரியவேண்டித்
திருளீவாள் தாயான சிறியவாலை
சிவசிவா சூட்சம்பூ ரணமுமுற்றே. *(32)*

பூருவத்தில் நடந்தகதை இதுதானென்று
புகன்றுவிட்டுப் புசுண்டருந்தான் பதிக்குச்சென்றார்
காரணத்தி லேவகுத்தே னிந்தஞானங்
கம்பமணி வாலைகொலுக் கூட்டமப்பா
நாரணத்தில் நின்றிலங்கும் மவுனவாலை
நாட்டினாள் சிவராஜ யோகங்கேளு
ஆரணத்தி பூரணத்தி யருள்மெய்ஞ்ஞானி
ஆதிசத்தி வேதமுத்தி யருள்சொல்வாளே. *(33)*

புசுண்டர் ஞான காவியம் *33*
முற்றிற்று

....

புசுண்டமகாரிஷி திருவாய் மலர்ந்தருளிய ஞானோபநிடதம் 32

ஆதியெனை யீன்றகுரு பாதங்காப்பு
அத்துவிதப் பிரணவத்தி னருளேகாப்பு
நீதியா மாரூட ஞானம்பெற்ற
நிர்மலமாஞ் சித்தருட பாதங்காப்பு

சோதியெனப் பாடிவைத்தேன் முப்பான்ரெண்டில்
துரியாதீ தப்பொருளைத் துலக்கமாகத்
தீதில்லாக் குணமுடைய பிள்ளையானாற்
சீவேச வைக்கியமது தெரியுந்தானே. (1)

தானென்ற குருவினுப தேசத்தாலே
தனுகரண வவித்தை யெல்லாந் தவறுண்டேபோம்
வானென்ற சுவானுபவ ஞானமுண்டாம்
மவுனாதி யோகத்தின் வாழ்க்கையெய்தும்
நானென்ற பிரபஞ்ச வுற்பத்திக்கு
நாதாதீ தக்யானம் நன்றாயெய்தும்
கோனென்ற கொங்கணவர் தனக்குச்சொன்ன
குறிப்பான யோகமிதைக் கூர்ந்துபாரே. (2)

பாருநீ பிரமநிலை யார்தான்சொல்வார்
பதமில்லை யாதெனினும் பவ்யமில்லை
சேருமிந்தப் பிரமாணந் தானுணர்ந்து
தெரிவிக்கப் படாதருளிற் சிவசொரூபம்
ஊருகின்ற காலத்ர யங்களாலே
உபாதிக்கப் பரதத்வ முற்பத்திக்கும்
சாருமிந்த வுபாதான காரணத்தின்
சம்பந்த மில்லாத சாட்சிதானே. (3)

சாட்சிசத்தா யதீதகுணா தீதமாகிச்
சட்சுமனத் தாலறியத் தகாதுயாதும்
சாட்சியதே யேதுசா தனமுந்தள்ளிச்
சகலவிந்த்ரி யாமியதாய்ச் சர்வபூத
சாட்சியினை யிவ்வளவவ் வளவாமென்று
தனைக்குறித்து நிர்ணயிக்கத் தகாதுயோகம்

சாட்சியதே ஞாதுர்ஞான ஞேயரூபஞ்
சத்தாதிபிர மாதிகளைத் தானேசொல்வாம். (4)

சொல்லுமெனக் கேட்டுகந்த மாணாக்காவுன்
தூலகா ரணப்பிரமந் துரியாதீதம்
அல்லுமல்ல பகலுமல்ல நிஷ்களங்கம்
ஹம்சோகம் அசபாமந் திரத்தியானம்
செல்லுமவ னேநானென் றபிமானிக்கும்
சித்தவிர்த்தி நிரோதகமாம் யோகத்தாலே
வெல்லறிஞர் பலபோக விர்த்தியோகி
விவேகதியா னாதிகளே மேலாம்பிர்மம். (5)

பிர்மசுரோத் ராதிஞானேந் திரியமைந்தும்
பேசுகர்ம வாக்காதியிந் திரியமைந்தும்
கர்மமெனுஞ் சத்தாதி விடயமைந்தும்
கரணாதி நான்குபிரா ணாதியைந்தும்
வர்மமிவை யிருபத்தி னான்குங்கூடி
வருந்தூல சரீரவிராட் டெனவேசொல்லும்
தர்மவத்தை சாக்கிரபி மானிவிஸ்வன்
தனக்குவமை யாங்கிரியா சத்திதானே. (6)

சத்தியுடன் ரசோகுணந்தான் நேத்ரத்தானம்
தனிப்போக மிதனோடே சார்ந்தவான்மா
வெற்றிபெறும் ஜீவாத்மா அகாரமாச்சு
விவகார ஜீவனிதை விராட்டென்பார்கள்
வித்தையெனு மவித்தையிலே பிரதிவிம்பம்
விசாலமிந்தத் தூலசூக்ம விருத்தியாச்சு
தத்தொமசி வாக்கியசோ தனையினாலே
தான்கடந்து சூட்சமத்திற் சார்ந்துகொள்ளே. (7)

கொள்ளடா ஞானேந்திரி யங்களைந்து
கூடினது கர்மேந்திரி யங்களைந்து
தள்ளடா பிராணாதி வாயுவைந்து
சார்வான மனம்புத்தி தானிரண்டு
விள்ளடா பதினேழு தத்துவங்கள்
விர்த்தியெனுஞ் சூட்சுமமா மிரண்யகர்ப்பத்
துள்ளவபி மானிசை தன்யனாகும்
சொற்பனா வத்தையெனச் சொல்லுநூலே. (8)

நூலான சாத்மிகமா மகங்காரத்துள்
நுழைந்தவிச்சா சத்தியல்லோ நுணுக்கமாச்சு
காலான கண்டமெனுந் தானத்துள்ளே
கலந்திருக்கும் போகமல்லோ யிச்சாபோகம்
நாலான ஆன்மாவே அந்திரான்மா
ஞாயமிந்தப் படியறிந்தா லுகாரமாச்சு
தூலமெனுஞ் சூட்சுமத்தைக் கடந்துநின்று
சொல்லுகிறேன் காரணத்தின் சுயம்புதானே. (9)

தானவ்யாக் கிருதமெனுஞ் சரீரத்துக்குத்
தானமதே இருதயமா ஞானசத்தி
வானமதே அகங்காரம் வித்தையாகில்
வருஞ்சுழுத்தி யபிமானி பிராக்யனாகும்
கோனிதற்கு ஆனந்த போகமாகுங்
கூடுகின்ற ஆன்மாவே பரமான்மாவாம்
கானிதற்கு பரமான்மா ஜீவனிந்தக்
காரணமே மகாரமெனக் கண்டுகொள்ளே. (10)

கொள்ளுமந்தப் பொருள்தானே சத்துமல்ல
கூறான வசத்துமல்ல கூர்மையல்ல

உள்ளுநிரா மயமல்ல சர்வமயமல்ல
உற்றுப்பார் மூன்றெழுத்தும் ஏகமாச்சு
தள்ளுகின்ற பொருளல்ல தள்ளாதல்ல
தானப்பிர மயிக்யஞ்சந் தானமுத்தி
விள்ளுமிந்தப் படிதானே வேதபாடம்
விசாரணையாற் சமாதிசெய்ய விட்டுப்போமே. *(11)*

விட்டுப்போம் சமுசார வியாபாரங்கள்
விடயசுக இச்சைவைத்தால் விவேகம்போச்சு
தொட்டுவிட லாகாது ஞானமார்க்கம்
துரியநிலை நன்றாகத் தோன்றுமட்டும்
எட்டுகின்ற பரியந்தம் சுருதிவாக்யத்
தெண்ணமெனுந் தியானத்தா லெய்தும்முத்தி
தட்டுகின்ற ஜீவத்வம் தனக்கில்லாமற்
சமாதியுற்றால் நாமதுவே சாக்ஷாத்காரம். *(12)*

சாக்ஷாதி பிரமத்தால் பூர்வகர்மம்
தத்வாதி வாசனைகள் தானேபோகும்
குக்ஷாதி பிராந்தியெனும் மாயாசத்தி
தொடராமற் சேர்வதுவே சொரூபஞானம்
தீட்சையினாற் பிரமாண்டம் பிண்டாண்டங்கள
சிருஷ்டிமுதல் யாவற்றுந் தெரியும்நன்றாய்
காட்சியென்ன ஏகவஸ்து வொன்றலல்லாமற்
காண்பதெல்லாம் வியர்த்தமெனக் கண்டுகொள்ளே.
(13)

கண்டுபார் மூடமெனு மஞ்ஞானிக்குக்
காணாது ஜீவான்மா பரமான்மாவும்
தொண்டுபண்ணி குருமுகத்தில் விசேடமாகச்
சுருதியெனும் வேதாந்த மப்பியாசித்து

உண்டுமனு பவஞானங் கிர்த்யாகிர்த்யம்
யோகிதனக் கேதேனுந் தேவையில்லை
விண்டுசொல்வோம் நதிகடக்க வோடமல்லால்
விஷயத்தாற் சாதனங்கள் வீணாமென்றே. (14)

வீணல்லோ சாதனப்பிர யோஜனங்கள்
மெய்ஞ்ஞான அபரோட்சம் வந்தபோது
வீணல்லோ வேதபா டத்தினிச்சை
வியோமபரி பூரணத்தில் மேவிநின்றால்
வீணல்லோ இருட்டறையிற் பொருளைக்காண
விளக்கதனை மறந்தவன்கை விடுதல்போலும்
வீணல்லோ தியானதா ரணைகளெல்லாம்
மெய்ப்பிரகா சிக்கும்வரை வேணுந்தானே. (15)

வேணுமென்றா லெள்ளுக்கு ளெண்ணெய்போலும்
வித்தினிடத் தடங்கிநின்ற விருட்சம்போலும்
காணுகின்ற பூவிலுறை வாசம்போலும்
கன்றாவின் பாலிலுள்ள நெய்யைப்போலும்
தோணுமயில் முட்டையின்மேல் வர்னம்போலும்
தூலமதிற் சூட்சமந்தான் துலங்கிநிற்கும்
ஆணுவத்தாற் சாதனத்தை மறந்தாயானால்
அபரோட்ச ஞானமுத்தி யரிதுதானே. (16)

அரிதில்லை பிரமவியா கிருதஜீவ
னயிக்யமெனுஞ் சந்த்யான மப்யாசித்துச்
சுருதிகயிற் றால்மனமாம் யானைதன்னைச்
சுருக்கிட்டுச் சிக்கெனவே துறையிற்கட்டிக்
குருவுரைத்த சிரவணத்தின் படியேநின்றால்
குதியாது பிரபஞ்ச கோட்டிற்றானும்

திரிவதில்லை திரிந்தாலும் மதமீறாது.
ஜீவவை ராக்யமெனுந் திரமிதாமே. (17)

திரமென்ன ஹம்சோகம் மந்த்ராதீதம்
திருசியசூன் யாதிகளே தியானமாகும்
சரமென்ன சாக்ரசத்தா வவித்தைசூன்யம்
சாதனையே சமாதியெனத் தானேபோகும்
வரமென்ன விபரீத விர்த்திமார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்
அரமென்ன இதையறிந்தால் யோகியாவான்
அஞ்ஞான மவரிடத்தி லணுகாதென்னே. (18)

என்னவே அஞ்ஞானி யுலகாசாரத்
திச்சையினாற் றர்மார்த்த வியாபாரங்கள்
முன்னமே செய்ததின்பின் மரணமானால்
மோட்சமதற் கனுபவத்தின் மொழிகேட்பீரால்
வின்னமதா யாங்கார பஞ்சபூத
விடயவுபா திகளாலே மேவிக்கொண்டு
தன்னிமையா யிலிங்கசரீ ரத்தோடொத்துச்
சதாகாலம் போக்குவரத் தாகுந்தானே. (19)

தானிந்தப் படியாகச் சீவரெல்லாம்
சகசபிரா ரத்வவசத் தாதினார்கள்
ஏனிந்தக் கூரபிமா னத்தினாலே
இத்யாதி குணங்களெல்லாம் வியாபிக்கும்பார்
வானிந்து போன்மெலிந்து வளர்ந்துபோகும்
வர்த்திக்கு மஞ்ஞானம் மாற்றவேண்டி
நானிந்தப் பிரமவுபா சனையைப்பற்றி
நாட்டம்வைத்தோ மவித்தையெலாம் நாசமாச்சே. (20)

ஆச்சப்பா எத்தனையோ கோடிகாலம்
அந்தந்தப் பிரளயத்துக் கதுவாய்நின்றேன்
மூச்சப்பா வோடவில்லை பிரமாதீத
முத்திபெற்றேன் பிரமாண்ட முடிவிற்சென்றேன்
கூச்சப்பா வற்றபிர்ம சாக்ஷாத்காரம்
குருபாத மாகியகோ சரமாய்நின்றேன்
பேச்சப்பா சராசரங்க ளுதிக்கும்போது
பின்னுமந்தப் புசுண்டனெனப் பேர்கொண்டேனே. (21)

பேர்கொண்டேன் சொரூபசித்தி யனேகம்பெற்றேன்
பெரியோர்கள் தங்களுக்குப் பிரீதியானேன்
மேர்கண்டே னாயிரத்தெட் டண்டங்கூட
வீதியெல்லா மோர்நொடிக்குள் விரைந்துசென்றேன்
தார்கண்டேன் பிருதிவியின் கூறுகண்டேன்
சாத்திரவே தங்கள்வெகு சாயுங்கண்டேன்
ஊர்கண்டேன் மூவர்பிறப் பேழுங்கண்டேன்
ஓகோகோ விதுவெல்லாம் யோகத்தாட்டே. (22)

யோகத்தின் சாலம்ப நிராலம்பந்தான்
உரைத்தாரே பெரியோர்க ளிரண்டாமென்று
ஆகமத்தின் படியாலே சாலம்பந்தான்
அநித்யமல்ல நித்தியமென் றறையலாகும்
சோகத்தைப் போக்கிவிடும் நிராலம்பந்தான்
சூன்யவபிப் பிராயமதே சொரூபமுத்தி
மோகசித்த விருத்திகளைச் சுத்தம்பண்ணி
மும்மூடசு பிர்ம்மயிக்ய மோட்சமென்னே. (23)

மோட்சசாம்பி ராச்சியத்தில் மனஞ்செல்லாத
மூடர்களுக் கபரோட்சம் மொழியலாகா

சூட்சமறிந் தாலவனுக் கனுசந்தானம்
சொரூபலட்ச ணந்தெரியச் சொல்லலாகும்
தாட்சியில்லை சாதனை சதுட்டியத்திற்
சட்சேந்த்ரி யாநாதா தீதமாகும்
மூச்சுலயப் படுவதல்லோ பிரமநிட்டை
மூலவிந்து களாதீத மொழியலாமே. (24)

மொழிவதிலே அகாரமெனும் பிரணவத்தின்
மோனபிரா ணாதியதே நாதமாச்சு
தெளியுமிந்த ஓங்காரத் தொனிவிடாமற்
சிற்ககனத் தேலயமாய்ச் சேர்க்கவேணும்
ஒளிதானே நிராலம்பம் நிர்விசேடம்
உத்கிருஷ்ட பரமபத வுபகாரஸ்தன்
வெளியோடே வெளிசேர்ந்தால் வஸ்துவாச்சு
விரோதசத் ராதியெலாம் விருத்தமாச்சே. (25)

விருத்தமா மனாதியெனும் பிரார்த்வகர்மம்
விஷயாதி பிரபஞ்ச வீஷ்மமெல்லாம்
ஒருத்தவனே யோகியென்பா னவனாரூடன்
உலகமெலாந் தானாவ துண்மையாகும்
நிறுத்தவென்றால் நாசிகாக் கிரகவான்மா
நிலைபுருவ மத்தியிலே நிஷ்டனாகிக்
கருத்தழிந்து நின்றவிடம் சாக்ஷாத்காரம்
கண்மூக்கு மத்தியிலே கண்டுபாரே. (26)

பார்ப்பதற்கு நீண்டதுவாய் குறுகிவட்டம்
பரிதிமதி யுதயமெனப் பளிங்காகாசம்
தாப்பதற்கு மூன்றுசுழி பின்னாய்நிற்கும்
சாக்கிரத்தி னடையாளந் தாக்கிப்பாரு

சேர்ப்பதற்குச் சுழிமுனையென் றிதற்குநாமம்
திரிகோணக் குண்டலியே சிவசொரூபம்
காப்பதற்கு நடுநாடி யூடேசென்று
கால்நிறுத்திப் பிடரிவழி கண்ணைப்பாரே. (27)

கண்ணான பிடரிமுது கோடுரந்த்ரம்
கால்கூட்டிப் பார்த்தாலே தலைமேலாகும்
விண்ணான பெருவெளிக்கு ளிணங்கிற்றானால்
விமோசனமாம் நிராலம்ப மெனத்தான்சொல்லும்
ஒண்ணான யோகமல்லோ இந்தநிஷ்டை
உபதேசம் பெற்றவர்க்கே உண்மையாகும்
அண்ணாந்து பார்த்திருந்தால் வருமோஞானம்
அசபாமந் திரத்யானம் அறைகிறேனே. (28)

அறைகிறேன் அசபையெனும் பிராணான்மாவை
அகண்டபரா பரத்தினுள்ளே ஐக்யஞ்செய்ய
குறைவில்லை ஓங்கார மூலவட்டக்
குண்டலியாய் நின்றிடத்திற் குணாதீதந்தான்
நிறைகிறேன் நாசிகா ரந்த்ரவாயு
நீக்காம லேகமாய் நிர்ணயித்துப்
பறைகிறே னட்சரசா தனமுந்தள்ளிப்
பந்தமற்ற மகாமோட்சப் பதிபெற்றேனே. (29)

பதிபுருவத் தடிமுனைக்கீ ழண்ணாக்கென்னும்
பவளநிறம் போன்றிருக்குந் திரிகோணந்தான்
துதிபெறுசிங் குவையுபஸ்த சுகந்தியாக
சுபாவசா தனையினால் மவுனமாச்சு
விதிலிகித பிராரத்வ கர்மம்போச்சு
விடயபோ கத்தினிச்சை விட்டுப்போச்சு

மதியெனுமோர் வாயுவது அமிர்தமாச்சு
வஸ்துவதே காரணமா மகிமையாச்சே. (30)

மகிமையென்று யோகசா தனையினாலே
மகாகாச நிருவிகற்ப வாழ்க்கையாச்சு
அகமகமென் றாணவத்தை நீக்கலாச்சு
அத்துவித பிரமசித்தா னந்தகாரம்
சகளாதீ தங்கடந்து களாதீதத்தில்
சாதித்தேன் தன்மயமாய்ச் சார்ந்துபோச்சு
பகலிருளில் லாதவெளிக் கப்பாலாச்சு
பந்தமற்ற மகாமோட்ச பதம்பெற்றேனே. (31)

பெற்றதனைச் சொல்லிவிட்டேன் வடநூல்பாஷை
பிரித்துமுப்பத் திரண்டினிலே பிரமஞானம்
தத்துவத்தைச் சொல்லிவைத்தேன் யோகியானால்
சாதனைசெய் வானறிவான் சைதன்யத்தில்
முத்தியடை வானதிலே நிருத்தஞ்செய்வான்
மும்முட்சுத் துவமறிந்த மூர்த்தியாவான்
நித்யமெனு முபநிடதப் பொருள்தான்சொல்லும்
நிலவரத்தால் யோகநிஷ்டை நிறைந்துமுற்றே. (32)

புசுண்டர் ஞானோபநிடதம் 32
முற்றிற்று

....

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய
ஞான சூஸ்திரம் 19

பன்னுமே உப்புக் கட்டின் பருவத்தைச் சொல்லக்கேளு
மன்னுமே சூர்ப்பா நின்ற மலமது தேங்காய் மட்டும்

தென்னுமே அமுரிதானும் சிறந்தொரு படியே வார்த்து
உன்னுமே கலக்கிக் கிண்டி உருகவே ரவியில் வையே. (1)

வைத்ததோர் குளம்புக் குள்ளே மாட்டுற மருந்து கேளு
கைத்ததோர் உப்பு ரெண்டு கடியதோர் காரம் ரெண்டு
பைத்ததோர் காரத் தின்பின் பரிவுடன் சூட னாறு
ஐத்ததோர் வகையொன் றுக்கு அரைப்பலம் பொடித்துப்
போடே. (2)

போட்டதை யொன்றாய்க் கிண்டி புகழ்பெற ரவியில்
வைத்து
மாட்டது அமுரி தானும் வளமதாய்ப் படிய தொன்று
ஈட்டது வுலர்ந்த பின்பு யீரஞ்சு தரமே வார்த்து
கூட்டது மெழுகு போலே கொடுஞ்சில்லும் ரெண்டாய்ச்
செய்யே. (3)

செய்திடுஞ் சில்லுக் கொன்று சிறந்தொரு வோட்டில்
வைத்துக்
கைத்திடுங் கட்டி யானாற் கல்லுப்புப் பதிப்பா யப்பா
வைத்திடு மேலே நீயும் மறுசில்லுப் போட்டு மூடி
தைத்திடும் சீலை சுத்தி தனிப்புடம் போட்டி டாயே. (4)

போட்டபின் உப்பை வாங்கிப் புகழ்பெற வுருக்கிப் பாரு
ஆட்டபின் தெரித்து தானால் அப்பனே நீதான் கேளு
நீட்டிபின் வில்லை ரெண்டும் நேரவே அமுரி யாலே
தாட்டிபின் வில்லை செய்து தனியுப்பு வைத்துப் போடே.
(5)

போடுநீ உப்புக் கட்டு போகாது தீய்க்கே அப்பா
நீடுநீ உறுகும் உப்பு நீட்டின தெல்லாங் கொல்லும்

நாற்பத்தெண் சித்தர்

ஆடுநீ வாத வித்தை அறுபத்து நாலுங் கட்டும்
தேடுநீ யல்ல வென்றாற் சேர்ந்துடன் தேறி யேறே. (6)

ஏறலாம் உப்பைத் தொட்டு எளிதாக யெவர்க்கு மப்பா
கூறலா மென்றாள் தாயுங் கூறாதே யென்றா ரீசன்
மாறலாம் பொன்னே யாகும் மகாசித்தி காய மாகும்
தேறலாம் போதங் கண்டு செயமாகுங் காணுங் காணே. (7)

காணிந்த உப்பு வேதைக் கடியதோர் பலமதொன்று
பூணிந்தச் சாரங் கால்தான் புகழுறு காரங் கால்தான்
தோணிந்த ரெண்டுக் கொக்கச் சுகம்படக் கெந்தி கூட்டி
ஆணிந்த மூன்றைத் தானும் அமுரியா லரைத்து வையே. (8)

வைத்திட்ட வுப்பை மூசை வைத்துநீ யுருக்கும் போது
கைத்திட்ட மரைத்த மூன்று காட்டிநீ வாங்கு வாங்கு
தைத்திட்ட காரம் போடு தன்மையா மட்டுந் தானே
ஐத்திட்ட உப்புத் தானும் அடுத்திட மயன மாமே. (9)

மயனமா முப்புத் தன்னை வளைந்திடு மால்தே விக்கு
மயனமா முப்புத் தன்னை வளைந்திடும் வீரத் துக்கு
மயனமா முப்புத் தன்னை வளைந்திடு கெவுரி மேலே
மயனமா முப்புத் தன்னை வளைந்துநீ சிலைக்குக் கட்டே. (10)

கட்டிய நாலை யுந்தான் கனலிலே வாட்டு வாட்டு
அட்டியா யுருகி யுள்ளே அப்பனே மணியாய் நிற்கும்
இட்டியே வரைந்த மற்ற யிசைந்தறு பத்துஞ் சாகும்
மட்டியே கெவுரி மாட்ட வளமிது சத்துக் காணே. (11)

காணென்ற உப்பு வென்ன கவளிக்க நாகஞ்சாகும்
காணென்ற உப்பு வென்ன கவளிக்க யீயஞ் சாகும்
காணென்ற உப்பு வென்ன கவளிக்க மைந்தா கேளு
காணென்ற உப்பு வென்ன கவளிக்கச் சுண்ணந்தானே. (12)

வேறு

தானென்ற உப்பாகுங் குருவாற் கேளு
சாற்றுகிறேன் சூதத்தைத் தலைதூக்காமற்
கானென்ற உப்புஒன்று சூதம்நாலும்
கட்டியப்பா முலைப்பாலிற் கலந்துஆட்டு
ஊனென்று வுருட்டியதை யுண்டைபண்ணி
உறவான காரத்தை மேலேபூசி
வானென்ற வுமியிலே புடத்தைப்போட்டு
வாங்கியே குகைக்குள்ளே வைத்துவூதே (13)

ஊதையிலே யிடைபோகா மணிபோகாது
ஓடொத்த தொந்திக்கி வொருநூறென்று
வேதையிலே வெகுசுருக்கு மேலாஞ்சுண்ணம்
வெண்கலமும் பித்தளையும் ரசிதமாகும்
பாதையிலே யொருகோடி வித்தையாகும்
பாரப்பா வெள்ளியிட்டால் வெள்ளியாகும்
போதையிலே பொன்னிட்டாற் பொன்னேயாகும்
பொற்கொடிக்கு யீசனிது புகன்றவாறே. (14)

உப்பையே கட்ட வென்றால் ஒன்றிலு மாகா தப்பா
உப்பையே புளியு முப்பும் உடனஞ்சு கூடிக் கொல்லும்
உப்பையே கொண்டு தானும் ஒடலா மாட லாகும்
உப்பையே மூல மூர்த்தி யுரைத்தவைந் நூறும் பாரே. (15)

பாரே நீ உப்பைக் கட்டப் பகருவேன் பாருள்
ளோர்க்காய்
நேரேநீ யிணங்கன் சுண்ணம் நேராக வெள்ளை கூட்டித்
தாரேநீ வெள்ளை வார்த்துத் தாக்கியே அரைத்துக் கட்டி
கோரேநீ யூதிப் போடு கொடுவெள்ளைச் சுண்ண மாமே.
(16)

சுண்ணத்திற் பாதி தண்ணீர் சூட்டியே சூதந் தன்னை
மண்ணுமே அரைத்துக் கொண்டு வகையான உப்புக்
குள்ளே
பண்ணிட்டுப் பிரட்டிக் காச்சி பாச்சியே குகையில்
வைத்தே
கண்ணிட்டு ஊது ஊது கண்விட்டு ஆடும் பாரு. *(17)*

வைத்துநீ யெரிக்குங் குப்பி வாய்தனைத் திறந்து பின்னை
பத்தியே சலாகை போடும் பருவமாம் பாரு பாரு
கைத்துநீ சிகப்ப தானாற் கடுந்தீயை அவித்துப் போடு
பொத்திய செந்தூ ரத்தாற் புகட்டிய முறையைக் கேளே.
(18)

கேளுநீ நவலோ கத்திற் கெடிசகஸ் திரமே போடு
வாழுநீ உபர சத்தில் மாட்டுவைந் நூற்றுக் கொன்று

தோளுநீ கல்லும் செங்கல் துடர்ந்திடப் பொன்னே யாகும்
வேளுநீ யினியென் சொல்வேன் வேதையுங் காட்டிட்
டேனே. *(19*

புசுண்டர் ஞான சூஸ்திரம் 19
முற்றிற்று

....

புசுண்டமகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய ஞானக்குறள் 16

சின்மயத்தைப் போற்றிச் சிவராஜ யோகத்தில்
நன்மை பராபரத்தை நாடு. (1)

அண்ட முடிமீதி லங்கி ரவிமதியைக்
கண்டு தரிசித்தாற் கதி. (2)

வலமிடமாய் நின்ற மதிரவியை மாறி
விலகா தடியினிற்பின் வீடு. (3)

அறுபத்து நால்யோக மவ்வளவுந் தள்ளி
யொருபொழுது முண்டுநிலை யோர். (4)

உலகமே மாயமென வுன்மனதிற் கண்டு
நலமாக நாதனடி நம்பு. (5)

சித்தர் பதினெண்மர் செயகையிற் றோன்றாத
அத்தனரு ளும்புசுண்டன் யான். (6)

சொன்னே னறிந்து சுகமா யுலகோருக்
கெந்நாளும் வாழ்கவென்றே யான். (7)

கண்ணுண் மணியாகிக் காரணமாய் நின்றான்
மண்ணு முயிர்பதியு மாறு. (8)

விண்டேனே ஞானம் வெளியாக முப்பத்தி
ரண்டி லறிவீர் நலம். (9)

நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாய் நிற்க
ஆத்துமத்தி லானந்த மாம். (10)

உலகி லறிந்தோ ரொருநாளு மாளார்
பலநினைவை விட்டுநீ பார். (11)

கண்டோருஞ் சொல்லார் கருத்தாற் பெரியோரைத்
தொண்டுசெய்து பெற்ற சுகம் (12)

ஆதியிற் சொன்னவுய ரண்டமதை யெடுத்து
மாதுசிவன் பூசைசெய்து வை. (13)

முப்பொருளைச் சுட்டு முழுதுமே நீறாக்கித்
தப்பாம லுண்டுநிலை சார். (14)

யோகமுடன் கற்ப முரைத்தேனீ ரெட்டில்
வேகமுடன் கண்டுணரு வீர். (15)

வாசிமுனை மைந்தா மருவு பிரமத்தில்
மோசம்வரா தென்குறள்முற் றும். (16)

புசுண்டர் ஞானக்குறள் *16*

முற்றிற்று

....

வகுளிநாதரென்னும்
மௌனச்சித்தர் ஞானம் 8

சொல்லவொண்ணா விராட்பிரம வஸ்துவாகி
சுத்தசின் மயமாகிச் சோதியாகி
அல்லலிலா அடியாகி நடுவுமாகி
அந்தமுமாய் அனாதியுமாய் அகிலமாகி
வெல்லுதற்கு மரிதாகி விண்ணுமாகி
விண்டுவன்னி யப்புவுமாய் விளங்குகின்ற
நல்லதொரு மவுனசித்தாய் நாடிநின்ற
நாதாந்த மனோமணியாள் பாதங்காப்பே

வணங்குதற்கு எட்டுரெண்டும் அறியவேணும்
மகத்தான வித்தையிது சிவயோகிக்காம்
இணங்குதற்குக் குருவேணும் யில்லாவிட்டால்
என்னூல்தா மின்னூலா மெட்டுக்குள்ளே
குணங்காமற் சொல்லிவைத்தேன் அகாரபீசம்
கூடிநின்ற உகாரமல்லோ சத்திபீசம்
அணங்கினுக்குத் தானுரைத்தா ரீசனன்று
ஆச்சரியம் அகாரத்தி லடங்கிப்போச்சே. (1)

அடங்கிநின்ற மகாரமல்லோ மவுனதீட்சை
ஆதாரங் கடந்துநின்ற ததுவுந்தக்கில்
சடந்தனைக்கொண் டாகாசங் கலந்துபோச்சு
தாரகப்பிர் மக்கியானம் சார்வதாச்சு
துடந்தேறிப் பார்த்தாக்கா லிதுவேமுத்தி
தூலமதைப் பார்ப்பவர்க்குச் சொரூபமில்லை
குடந்தனக்கு ளாகாசம் நிராகாசத்தைக்
கூட்டுகின்ற தன்மையல்லோ கொழுகிப்பாரே. (2)

பாரப்பா என்மகனே மகாரசூட்சம்
பலித்தாக்கால் யோகியென்றே பகரலாகும்
சேரப்பா அகாரத்தில் உகாரங்கூட்டு
சிகாரத்தில் வகாரத்தைச் சேர்த்துப்போடு
நேரப்பா அரியெழுத்துக் குயிர்தான்சீவன்
நின்றவிடம் நகாரத்தில் மூலங்காணும்
பேரப்பா உகாரமென்ற பிரணவத்தாற்
பேச்சான சீவகளை பிறக்குந்தானே. (3)

தானென்ற மூலத்தில் வாசியாட்டம்
சதாசிவனார் பீடமதிற் புக்கித்தானால்
ஊனென்ற சடம்போச்சு கற்பூரதேகம்
உந்தனுக்கு வாச்சுதடா யீசன்வாழ்க்கை
நானென்ற ஆணுவத்தை நீற்றவென்றால்
நகாரமென்ற கீழாணி வேரைத்தள்ளு
பானென்ற அகாரமுனை ஊடுதாக்கு
பனிரண்டுக் குள்ளடங்கிப் பதிவுள்ளாச்சே. (4)

உள்ளாகச் சிகாரவன்னி பத்திற்கொண்டால்
ஓடாமற் பிரணவம்வந் தொட்டிக்கொள்ளும்
தள்ளாமல் ஓரெழுத்து மகாரமப்பா
சகஸ்திரத்தெண் மலர்க்குள்ளாய்ச் சார்ந்துகொள்ளும்
விள்ளாதே மேற்கொண்டால் துவாதசாந்தம்
வெட்டவெளிக் குள்ளான ஞானமாச்சு
துள்ளாட்டம் ஏதுமில்லை புருவமையச்
சுழிக்குள்ளோ ரெழுத்தறிந்தால் துரியமாச்சே. (5)

துரியமென்ற வகாரத்தை மாறியேற்றச்
சுடரான சிகாரமதே சோதியாகும்

அரியெழுத்துக் குள்ளாக நத்தாநிற்கும்
ஐந்தெழுத்தும் ஆறெழுத்தி லடங்கிநிற்கும்
எரியெழுத்தைப் பற்றிநின்றால் ஈ-ஊ-ஏ-ஓம்
எட்டெழுத்தும் விட்டெழுத்துக் கேறாதையா
குரியிருக்கும் இடத்திலொரு வகையதாகக்
குற்றெழுத்தைப் போற்றிவிட்டாற் குருவிதாச்சே. (6)

குருவிருக்கும் இடந்தானே புருவமையம்
கூடும்வலக் கண்தானே சிவமதாச்சு
திருவிருக்கும் மவுனத்தி லிருந்தமார்க்கம்
செயல்காட்டிச் சொல்வதற்கு அறிவேஆசான்
தருவிருக்குஞ் சொற்படிநீ நடந்துகொண்டால்
தானவனே தானாகித் தனியனாவான்
வுருவெடுத்தா லாவதென்ன பலனேவிந்து
ஒன்பதுநெற் பிரமாணம் ஊடுதாக்கே. (7)

தாக்கப்பா யிடக்கண்வலக் கண்ணுஞ்சேரும்
சச்சிதா னந்தவன்னி தானேயேகும்
மூக்கிலே ஓடாது சுத்தம்பாரார்
முத்தியென்ன நெற்றிக்கண் உள்ளேநிற்கும்
நாக்கிலே பூரியரி யாததுண்டோ
நாவில்ரெண்டு மூவில்ரெண்டு ஞானயோகம்
பாக்கியங்கள் செய்வதற்கு மகாரதீட்சை
பலிக்குமடா யிருநான்கு பாடல்முற்றே. (8)

மௌனச்சித்தர் ஞானம் 8
முற்றிற்று

....

வகுளிநாதரென்னும் மௌனச்சித்தர் பாடல்

குறவஞ்சிப்பா

ஆதிபெருஞ் சோதிதனை யனுதினமும்நாடி
ஐயர்பதந் தேடிக்கொண் டருள்பெறவேபாடி
சோதியெனும் மனோன்மணியா ளருளதனைப்பெற்றுச்
சுகருடைய பாதமதை மனந்தனிலே யுற்று. (1)

ஆங்காரந் தனையடக்கி யருள்நிலையைநோக்கி
அரியபுவ னங்களெல்லாம் அறியமனதாக்கி
பாங்காகப் பெரியோர்கள் பாதமதுபணிவோம்
பத்தியொடு போகநிஷ்டை நித்தியமும்புரிவோம். (2)

பேய்க்குணத்தைச் சுட்டலவோ பிர்மநிலைகண்டோம்
பிரமபதி தான்கடந்து சுழிமுனையுட்கொண்டோம்
நாய்போலே அலையாமல் நாமிருந்தோம்தவசில்
நல்லதொரு ஆங்காரம் மடக்கிமிகப் பவுசாய். (3)

வஞ்சகமாம் வாழ்வைநம்பிச் சஞ்சலங்க ளடையோம்
மகத்தான மகரிஷிகள் பதங்காணச் சடையோம்
பஞ்சமா பாதகரை யொருநாளும்பாரோம்
பாவவினை பற்றறுத்தோர் சிநேகிதங்கள்மறவோம்.
(4)

ஆயிரம்பேர் சித்தருடன் அனுதினமும்பாடி
ஆனந்தத் திருநடன மாடுவமேகூடி
தாயியுமை மனோன்மணியாள் எனக்குசொன்னசித்தைத்
தானறிந்து நடந்துகொள்வோம்
பெரியோரையடுத்தே. (5)

நிலையைக்கண்டு கொள்வதற்கு நினைந்துருகிவாடி
நிர்மலமா மையன்பதம் தினந்தினமுந்தேடி
கலையறிந்து வாசியையுங் கட்டுடனேபிடித்தோம்
கனலெழுப்பி மூலமதைச் சுகமுடனேபடித்தோம். (6)

ஊணுறக்கம் நீக்கியல்லோ யோகநிஷ்டைபுரிந்தோம்
உற்றாரைப் பற்றறுத்து மலைகுகையி லிருந்தோம்
காணுதற்கு மெட்டாத பரவெளியைக்கண்டோம்
கற்பமது சாப்பிட்டு உடல்வளர்த்துக்கொண்டோம்
(7)

தந்தைதாயார் சுற்றமொடு தளர்ந்துவுறவாடோம்
தவநிலையைப் பெற்றுணராச் செய்கை
தனைத்தேடோம்
விந்தையுடன் ஞானமதை மேம்பாடாய்த்தெரிந்தோம்.
மேலான பரவெளியி னருளதனையறிந்தோம். (8)

நாசிநுனி வழியதனில் நாட்டமதைத்தெரிந்தோம்
நல்லதொரு மூலவட்டம் சுழியதனையறிந்தோம்
ாசியேற்ற வகையறிந்து ஆசைகளையறுப்போம்
வையகத்தின் செய்கைதன்னை
வழுவாமல்மறுப்போம். (9)

சத்திசக்ர பீடமேறிச் சுத்தவெளியைக்கண்டோம்
சகலமும்பரவெளி யென்றெண்ணி
மனமதனிற்கொண்டோம்
சித்திபெற்ற முத்தர்களை யெத்தினமுமறிவோம்
சீவகலை யின்னதென்று நாட்டமுடன்தெரிவோம்.
(10)

தொண்ணுத்தாறு தத்துவத்து ரைத்தனங்கைக்கொண்டோம்
துய்யபர வெளிதனிலே அய்யர்பதங்கண்டோம்
விண்ணுலகு இன்னதென்று அறிந்துக்கொண்டேன்யானே.
மேலான பரவெளியி னொளிவைக்கண்டுதானே. *(11)*

நானென்ற ஆணுவத்தை நயந்தறுத்துவிடுத்தேன்
நன்மைபெற்றுக் குகைதனிலே வாழ்ந்திருக்கஅடுத்தேன்
தானென்ற கெருவமதைத் தணித்துவிட்டுவந்தோம்
தவமேதான் கெதியென்று சரவழியிலுகந்தோம். *(12)*

மௌனச்சித்தர் பாடல்

முற்றிற்று

....

சூதமகாமுனி திருவாய் மலர்ந்தருளிய ஞான சூஸ்திரம் 14

உண்மையெனும் பொருளாய்க்கண் மணியதாகி
யொளிவாகி மண்ணும்விண் ணெங்குமாகி
ஒண்மையெனும் சித்தர்முத்தர்க் குரியதாகி
உற்றசுழி முனையில்முச் சுடருமாகி
வண்மையெனும் ஆதார மூலமாகி
மாசற்ற பிரணவத்தின் சொரூபமாகி
பெண்மையெனும் வடிவாகிச் சீவனாகிப்
பேரான மௌனகுரு பாதங்காப்பே. *(1)*

அரிதான மாந்தருக்கு ஞானமார்க்கம்
அறைகிறேன் நிறைநிறையா யோர்ந்துபாரு
சரியையென்ற படிகடந்தால் கிரியைசேர்க்கும்
தன்மையாய் கிரியைவிட்டால் யோகமாகும்

விரிவான யோகம்விட்டுச் சென்றால்ஞானம்
வினையமுடன் கண்டறிந்தால் முத்தியாகும்
தெரிவாய்நீ மெய்ஞ்ஞான போதந்தன்னைச்
செப்புகிறேன் புலனதனைப் பரத்திற்சேரே. (2)

சேரப்பா கருவான முடியின்மீது
சென்றேவெண் டாமரையின் பீடங்கண்டு
காரப்பா மனம்வேறு வழிசெல்லாமல்
கனகமய மானபூ ரணத்தைநாடி
ஆரப்பா காண்போர்க்கு மவுனமாச்சு
அடுத்திடவே யோகமது போதமாச்சு
நேரப்பா தலமெங்கும் வாசிசெல்லும்
நிலையான கீதவொலி கேட்குந்தானே. (3)

தானான வுருவல்லோ சத்தியாச்சு
தனியான வம்பலந்தான் சொரூபமாச்சு
வேனான உருவருவு மற்றதாயி
விளங்குகின்ற முச்சுடரின் ரூபமாகி
வானான பரையுடனே சதாசிவன்றான்
வானவெளி தனில்வாய்வு வன்னிதோன்றி
தேனான அதிலிருந்து மனந்தான்தோன்றிச்
சித்தான அண்டபிண்ட மறிவாம்பாரே. (4)

அறிவல்லோ மெய்ஞ்ஞானக் கருவதாகும்
அஞ்ஞானம் தவிர்க்கவென்றா லறிவுவேணும்
அறிவாலே சுழிமுனையைக் காணவேணும்
அன்னையென்ற வாலைபதம் பணியவேணும்
அறிவாலே குருபதத்தைப் போற்றவேணும்
அண்டமுடி மீதிற்சென் றேறவேணும்

அறிவாலே சோதிதனை யறியவேணும்
அதன்பின்பு முத்தியென்ற பேச்சுண்டாச்சே. (5)

உண்டான பூமிநான் முகனுமாச்சு
உற்றபுனல் விட்டுணுவென் றுறுதியாச்சு
பண்டான அக்கினிசங் காரனாச்சு
பலமுடைய வாயுவல்லோ மயேசனாச்சு
கண்டான வெளிசதா சிவனுமாச்சு
கருவான பூதமல்லோ வுருவதாச்சு
தொண்டான தொழில்புரிந்தால் பெரியோர்தானும்
சூட்சமதைச் சொல்லுதற்கு அஞ்சுவாரே. (6)

அஞ்சுவா ரிதையறியா வீணர்தானும்
அநேகசித் தறிவனென வெளிகிளம்பி
பஞ்சுபொதி யானதொந்தி வயின்பிழைக்கப்
பாசாங்கு மேசெய்து மயங்கச்செய்வான்
கெஞ்சுவான் பல்லெல்லாம் வெளியேதோணக்
கெம்பீர மானசொல்லை நம்பிடாமல்
பிஞ்சுகா யாகிபழங் கனிரசம்போல்
பேதமுள்ள மனந்தனையு முருகச்செய்யே. (7)

செய்தபின்பு தனியாய்ப்பூ ரணத்தைப்பாரு
சேட்டைசெய்யுந் தத்துவங்க ளொடுக்கம்பாரு
உய்யவே மனந்தன்னை யறிவிற்சேரு
உற்றுநின்ற வொளிகாணத் திடந்தான்வேணும்
வையமிசை பிங்கலைதா னிரவியாகும்
மகத்தான யிடகலையும் மதிதானாகும்
துய்யஓங் காரமதன் மத்திநிற்கும்
சுத்தகலை யிரண்டொன்றாய்ச் சேரும்போதே. (8)

போதப்பா விட்டகுறை விந்தினாலே
புகழுடைய ஞானம்வந் தெய்தும்பாரு
நீதப்பா மதியமுத மதனையுண்ணு
நேரான வழியைவிட்டால் வருத்தங்காணும்
ஓதப்பா விண்ணமுதம் விந்தாற்சிந்தும்
உற்றவிடங் கண்டாலே கிட்டுமப்பா
சேதமதாய்ப் பொங்கவிட்டா லொன்றுமில்லை
திடமாகக் கண்டுண்டு தெளிந்துபாரே. (9)

பாரப்பா மனந்தானே அறிவிற்கூடப்
பஞ்சபூ தந்தானுஞ் செளிக்கும்பாரு
சீரப்பா பொய்யைவிட்டு மெய்யைப்பற்றச்
செங்கதிரோன் மதிகோடி யொளியுமாகும்
நேரப்பா சொல்நிலையும் நினைப்புமற்று
நிலையான வமுதமது மதியில்வீழும்
சேரப்பா மாளாத வழியிற்சேர்க்கும்
தியங்காதே பூரணத்தைக் கண்டுசெல்லே. (10)

செல்லப்பா வுரைக்கவொணணாச் சொரூபமாகி
சுத்தமொடு மவுனமா யரூபமாகி
சொல்லப்பா பகலிரவு மற்றதாகி
துரியாதீ தத்தினிலே நடனமாகி
வல்லதொரு பரையுடனே பரனுமாகி
மகத்தான நிற்குணமாய் நின்றசத்தி
நில்லப்பா சதாசிவன்றா னுலகமாச்சு
நேரான கருக்குருவைப் பொருதிப்பாரே. (11)

பொருதியதோர் மேகநாதக் குளிகைதன்னைப்
புகழ்ச்சியுட னேயிரைப்பேன் பெரியோர்முன்பு

கருதியதோர் வெண்காரம் சாதிலிங்கம்
கனமான திவதைவேர் வசம்புசுக்கு
நிருதியதோர் இந்துப்பு வாய்விளங்கம்
நேரான ஓமமொடு பெருங்காயந்தான்
விருதியதோர் காட்டாம ணக்கன்வேரும்
வினையமுடன் றானெடுப்பாய் பலமொன்றாமே. *(12)*

பலமொன்றாய்ப் பார்த்தெடுத்துக் கல்வத்திட்டுப்
பண்பான மைபோல அரைத்தெடுத்துப்
பெலமான சரக்கிடைநேர் வாளந்தூக்கிப்
பிரியமுடன் சம்பளத்தின் சாற்றினாலே
கலனேக விடாமலேநன் றாகவாட்டிக்
கண்ணிலிடும் மைபோல வானபின்பு
நலமாக வழித்தெடுத்துக் குன்றியைப்போல்
நயனமென வுருட்டியொரு குழலில்வையே. *(13)*

குழலில்வைத் தாதிபரை தியானஞ்செய்து
குறிப்பறிந்து குளிகையொன் றிரண்டளிக்க
விழலான குன்மமொடு குளிர்சுரங்கள்
விதிவயிற்றி லேநிற்குந் திரைகள்வாதம்
உழலான பித்தநீர் சோகைப்பாண்டு
உற்றவித க்ஷயரோகம் வயின்வலித்தல்
தழலான அசீரணம்பல் கனத்தநோயைத்
தப்பாமல் நீக்கிவிடுந் தனித்துப்பாரே. *(14)*

சூதமுனிவர் ஞான சூஸ்திரம் *14*
முற்றிற்று

....

உ

குமரன் துணை

வால்மீகர் திருவாய் மலர்ந்தருளிய

சிவயோக ஞானம் 10

திரிமூர்த்தி தேவர் முதல் மன்தரோடு
சிவயோகம் பெற்றிருந்த மார்க்கந்தன்னைப்
பிரியமுட னெனைத்தொழுது கேட்டாய்பிள்ளாய்
பிங்கலையும் இடகலையும் மாறும்போது
அறிவுடனே சுழிமுனையில் மனத்தைவைத்து
அசையாம லொருநினைவாய்த் தாக்கும்போது
குறியான சிவயோகஞ் சித்தியாச்சு
கோடிசென்மஞ் சித்தனைப்போ லாளலாமே. 1

கோடியென்றால் லொருகோடி காலமல்ல
கோடா கோடியடா கொலுவிற்றானே
ஆடிநிற்குஞ் சிவசத்தி ரெண்டுபேரும்
அன்புடனே உனைத்தூக்கி மடியில்வைப்பார்
சாடிவிழுங் குரங்கதுபோற் சாடிடாமற்
றாயான மதியிரவி நடுவில்நில்லு
பாடிவிட்டேன் சிவயோக மார்க்கந்தன்னைப்
பார்த்தறிந்து அக்கியான பகையைவெல்லே. 2

பகையான கருவியெல்லா மடங்கிப்போகப்
பகருகிறே னுபாயமொன்று லகுவாய்ச் சொல்வேன்
திகையாதே பலநூலின் மயக்கங்காண்டு
சித்தின்ப மோகத்தில் மயங்கிடாதே
தகையேது மில்லாத உபாயம்சொல்வேன்
தாரணியி லிந்தமுறை சூஷாசூஷம்
வகையான சுழிமுனையில் வாசிபூட்டி
வையகத்தி லுலகத்தோ டொத்துவாழே. 3

உலகத்தோ டொத்திருப்பார் யோகம்பெற்றோர்
உத்தமனே புளித்தோடு பழம்போலப்பா
கலகமென்று நூல்பார்த்துக் கலங்க வேண்டாம்
காசியென்றுந் தலமென்றும் அலைய வேண்டாம்
சிலபலநூல் பலபலவா யோகஞ்சொல்லும்
சீயென்றும் வாவென்றும் செபிக்கச்சொல்லும்
பலபலவாய் நினைவானால் யோகம்போச்சு
பஞ்சிட்டுப் பாரம்வைத்து பதியிற்செல்லே. 4

பதியான வான்பூமி யிரண்டுமொன்று
பரலோகஞ் சிவயோகமென் றுபேரு
நிதியான வாய்வுவன்னி அப்புமூன்றும்
நிலையான அயன்மாலு மரனுமாகும்
மதியான புத்தியினா லறிந்துகொண்டு
மகத்தான மாயையது யேகமாகும்
கெதியான வுன்னுள்ள வானமாகுங்
கிருபையுள்ள திருமூச்சு வாயுவாமே. 5

ஆமப்பா வன்னியது நயனமாகும்
அப்புனே வமுதமது நாவதாகும்
ஓமப்பா நாசியது வாயுமாகும்
உத்தமனே யிருகாது வானமாகும்
தாமப்பா முன்னூறில் மார்க்கஞ்சொன்னேன்
தாரணியி லின்னதென்று விரித்துச்சொன்னேன்
வாமப்பா அஷரங்க ளொன்றுமில்லை
மகத்தான வாசியுட வகையைக்கேளே. 6

வகையான வாசியது மனமுங்கண்ணும்
மயங்காதே சிவாயமென்று புலம்பிடாதே
பகையாதே அஷரங்க ளைம்பத்தொன்றும்
பரிபாஷையா லுரைத்த நாமபேதம்
திகையாதே நாமமட் சரங்களொன்றும்
செபியாதே அறிவுகெட்ட மனுடரைப்போல்
நகையாதே மானிடரைப் பலசாதியென்றும்
நம்பாதே நல்வெளியிற் காலைக்காரே. 7

காரென்று முன்னோர்கள் சொன்னதாலே
கலங்காமல் நூல்வழியே காக்கும்போது
ஊரென்ற பதிசென்றேன் வைகுண்டங்கண்டேன்
ஒளிநாத பரவெளியிற் றொளியுங்கண்டேன்
சீரென்ற சிவஞான யோகம்பெற்றேன்
செனியாமற் பேரின்ப வீடுபெற்றேன்
தூரென்ற மூடுகண்டேன் நுனியுங்கண்டேன்
சூஷாதி சூஷத்தைத் துலக்கினேனே. 8

துலக்காத காரணத்தைத் துலக்கிச்சொன்னேன்
தூங்காமற் றூங்குகின்ற யிடமுஞ்சொன்னேன்
கலக்காதே காரணத்தை வெளிவிடாதே
காலடியை மறவாதே கண்தூங்காதே
நிலைக்காது உலகத்தோர் சொல்லும்பேச்சு
நில்லாது நிசமென்று நம்பிடாதே
வலக்காரஞ் சொல்லாதே வீண்பேசாதே
வையகத்தில் பலவேஷங் கொண்டிடாதே. 9

கொண்டதொரு கூத்தெல்லாம் நாதன்கூத்து
குவயலத்தி லிவன்கூத்து ஒன்றுமில்லை
விண்டுரைத்தேன் சிவயோக மார்க்கமெல்லாம்
விரிவான சாஸ்திரத்தைக் குறுக்கிச்சொன்னேன்
கண்டுரைத்தார் சித்தர்பதி னெட்டுபேரும்
காசினியிற் பரிபாஷை யாகச்சொன்னார்
பண்டுபரம் விளம்பினதை யறியச்சொன்னேன்
பரமாக சிவயோகம் பத்துமுற்றே. 10

வால்மீகர் சிவயோக ஞானம் – 10

முற்றிற்று.

உ

குமரன் துணை

வால்மீகர் திருவாய் மலர்ந்தருளிய

ஞானநாடி சாஸ்திரம் 11

நீடிய வாத நாடி நீர்ச்சுழல் வண்டு போலே
ஓடியே சுழலு மாகி லூண்பிலாச் சுளையே தொங்கி
நாடியே குளித்து நிற்கும் நாளிலே உடம்பு வந்தும்
சூடிய ஈச னானை தொல்முனி வகுத்தவாறே. 1

உன்னிய வாத நாடி யூசிபோ லிருக்குமாகிற்
கன்னியை யறியச் சொன்னோங் கத்தரிக் காயைத் தொங்கித்
தன்னிலே வயிற்றையூதும் சபிப்பது யில்லை மந்தம்
வன்னியைப் புனைந்தோ னாணை வருஷமோ டெட்டதாமே. 2

கண்டது வாதநாடிக் கட்டெறும் பென்ன ஊர்ந்தால்
உண்டது தொங்கி நின்ற வுபகறி சொல்லக்கேளு
முண்டது விலாவில் நிற்கும் முருங்கைக்கா யிலையே தொங்கி
லொண்டடி கழியும் வீங்கு மொன்பது வருஷந்தானே. 3

பஞ்சிட்ட கோலைப் போலே பறையடி வாதநாடி
மிஞ்சிட்டு ஓடுமாகில் விளைந்திடும் பிணியைக் கேளீர்
அஞ்சிடும் பாவைக் காயா லடிக்குடல் தன்னில்த் தொங்கில்
வஞ்சிடும் வறச்சி தோன்றும் வருஷமோ ரெட்ட தாமே. 4

நாட்டிய வாத நாடி நடுங்கியே குளிரு மாகில்
ஒட்டிய தேங்காய்க் கீற்று உட்குடல் தன்னில் நிற்கும்
வாட்டிய வுடம்பு வத்தும் வயிறது ஊதிக் காட்டுந்
தீட்டிய மாவி னாணை சென்றது வருஷ மேழே. 5

சத்திய வாத நாடி சக்கரம் போலே சுத்தில்
முத்திய வாழைத் தோலு முதுகீரைத் தண்டுந்தோறும்
சுத்திய குடலிற் பத்திச் சுருக்கென வலியுந் தோன்றும்
பத்திசேர் குழலி னாளே பயனிது வருஷம் பத்தே. 6

சுருக்கென வாத நாடி சுழல்நீரைப் போலே சுத்தி
விருக்கிய கையுங் காலு மெலும்பா வத்தி நிற்கும்
மருக்கியே வயிறு லூதும் மனமரு குருத்துக் கொள்ளுந்
தருக்கிய கோழியாடு தங்கிய வருஷம் பத்தே. 7

மீறிய வாத நாடி மீனது போலே யேறிற்
கூறிய அவரை யீற்கிற் கொடியமீன் புடலின் காயும்
ஏறியே வலது பக்கம் யெலும்பினி லொட்டிநிற்கும்
மாறியே உதிரம் வீழும் வருடமெட் டரையே யாகும். 8

நண்ணிய வாத நாடி நாரைபோல் நடக்கு மாகில்
உண்ணிய சத்திப் புண்டா முடம்பெல்லாம் ஊதி வாங்கும்
கண்ணிலே குந்த முண்டாங் காந்திடும் வயிறு வீங்கும்
பண்ணிமாங் கிசமே தொங்கிற் பனிரண்டு வருஷந்தானே. 9

பலவுரு வாத நாடி பாம்புபோற் சுத்து மாகில்
நலமுறு முன்னே சொன்ன நற்கதி தன்னை நீக்கி
இலமுறு மத்த மத்த யெக்கறி யுள்ளதெல்லாம்
சலமுறும் வயித்திற் றொங்கிச் சந்திக்கும் வருஷ மொன்றே. 10

பலகறி பொசிப்பிற் தொங்கிற் பத்தியே வுடலில்நின்று
இலைகறி தன்னை யெல்லா மிரிசிக ளறியச் சொன்னோம்
கலகறி வருஷம் பத்துக் கண்டுகண் டுள்ள தெல்லாம்
வலுவறி புத்தில் மேவும் வால்மீக ருரைத்த வாறே. 11

வால்மீகர் ஞான நாடி சாஸ்திரம் – 11

முற்றிற்று.

உ

குமரன் துணை

வால்மீகர் திருவாய் மலர்ந்தருளிய

சுத்த ஞானம் 16

இருளொளியாய் நின்ற சிவன்பா தம்போற்றி
யெழுத்தினுட விபரத்தை விரித்துச் சொல்வேன்
அருவுருவாய் நின்றதுவே யெழுத்ததாகும்
ஆதியந்த மண்டபிண்ட மதுவேயாகும்
திருவுருவாய் ரவிமதியாய் நின்றரூபம்
சிவசத்தி திருமாலின் ரூபமாகும்
வருமுருவே சிவசத்தி வடிவதாகும்
வந்ததிலும் போனதிலும் மனத்தைவையே. 1

வந்ததுவும் போனதுவும் வாசியாகும்
வானில்வரும் ரவி மதியும் வாசியாகும்
சிந்தை தெளிந் திருப்பவனே சித்தன்சித்தன்
செகமெல்லாஞ் சிவமென்று அறிந்தோன்சித்தன்
நந்தியென்ற வாகனமே தூலதேகம்
நான்முகனே கண்மூக்குச் செவிநாக்காகும்
தந்திமுகன் சிவசத்தி திருமூச்சாகுந்
தந்தைதாய் ரவிமதியென் றறிந்துகொள்ளே. 2

அறிந்து கொள்ளும் பூரகமே சரியைமார்க்கம்
அடங்குகின்ற கும்பகமே கிரியைமார்க்கம்
பிரிந்துவரும் ரேசகமே யோகமார்க்கம்
பிசகாமல் நின்றதுவே ஞானமார்க்கம்
அறிந்துஉடற் புகுதுகின்ற பிராணவாய்வு
மகத்தான சிவசத்தி யடங்கும்வீடு
சிறந்துமனம் தெளிவாகிச் சேர்ந்தோன்சித்தன்
சிவசிவா அவனவனென் றுரைக்கலாமே. 3

ஆமப்பா வுலகத்திற் பெருநூல்பார்த்தோன்
அவரவர்கள் நடந்ததையெலாஞ் சரியையென்பார்
ஓமப்பா கல்லுசெம்புத் தெய்வமென்று
உருகுவார் பூசிப்பார் கிரியையென்பார்
வாமப்பா யோகமென்று காய்கனியைத்தின்று
வாய்பேசா வூமையைப்போற் றிரிகுவார்கள்
காமப்பா ஞானமென்று மானம் விட்டுக்
காக்கைப் பித்தன் மிருகம்போற் சுற்றுவாரே. 4

சுற்றுவார் பெருநூலை பார்த்துப்பார்த்துத்
தூசிப்பா ருலகத்திற் சிறிதுபேரைத்
தெற்றுவார் வயிற்பிழைக்க அநேகவேசம்
தேசத்தி லணிந்துகொண்டு திரிகுவார்கள்
பற்றுவார் குருக்களென்பார் சீஷனென்பார்
பையவேதீட்சை வைப்பா ரடுமையென்பார்
கற்றுவார் திருமூர்த்தி நாமமென்று
காரணத்தை யறியாத கசடர்தானே. 5

தானென்ற வுலகத்திற் சிறிதுபேர்கள்
சடைபுலித்தோல் காவிவஸ்திரந் தாம்பூரம் பூண்டு
ஊனென்ற வுடம்பெல்லாம் சாம்பல்பூசி
உலகத்தில் யோகியென்பார் ஞானியென்பார்
தேனென்ற சிவபூசை தீட்சையென்பார்
திருமாலைக் கண்ணெதிரே கண்டேனென்பார்
கானென்ற காட்டுக்குள் தேவர்கோடி
காரணத்தை யறியாமற் கதறுவாரே. 6

கதறுகின்ற பேர்களய்யா கோடாகோடி
காரணத்தை யறிந்தவர்கள் கொஞ்சங்கொஞ்சம்
பதறுகின்ற பேர்களெல்லாம் பரமார்த்தத்தைப்
பக்தியினாற் பார்த்தவர்கள் சுருக்கமப்பா
உதறுகின்ற பேர்களையா வுலகத்துள்ளே
உதித்தகலை தன்னிடத்தி லறியமாட்டார்
சிதறுகின்ற பேர்களைப்போற் சிதறிடாமற்
சிவசத்தி வரும்பாதை தன்னில்நில்லே.

நில்லென்று பெரியோர்கள் பாசையாலே
நீழுலகந் தன்னுக்குள் நாலுவேதம்
வல்லமையாஞ் சாத்திரங்க ளிருமூன்றாக
வயிற்பிழைக்க புராணங்கள் பதினெட்டாகக்
கல்லுதனைக் கரைப்பதுபோல் வேதாகமங்கள்
கட்டினா ரவரவர்கள் பாசையாலே
தொல்லுலகில் நால்சாதி யநேகஞ்சாதி
தொகுத்தார்கள் ளவரவர்கள் பிழைக்கத்தானே. 8

தானென்ற வுலகத்திற் கதையில் லாட்டால்
தன்பெருமை யாலழிந்து சணத்திற் வீழ்வா
ஊனென்ற வுடலெடுத்தா லெல்லாம் வேணும்
உலகத்தி லவரவர்கள் பாசைவேணும்
மானென்ற சிவகாமி சிவனுங்கூடி
மாமுனிவர் முகம்பார்த்து மறைநூல்சொன்னார்
தேனென்ற சிவகாமி யருளினாலே
திட்டினார் வெகுகோடி தேசபாசை. 9

தேசத்திற் பாசைதனை யறிந்திடாமற்
றெளிவாக வுலகத்தாற் பாசைபார்த்தோர்
ஆசிப்பா ருலகத்திற் கண்டதெல்லா
மாச்சரியந் தனைக்கண்டு அறிந்துபோனார்
வாசிதனை யறியாத சண்டிமாண்பர்
வார்த்தையினால் மருட்டிவைப்பார் மற்றபேரை
நாசிவழி நடுவில்வருஞ் சிவத்தைக்கண்டோர்
நான்முகனுந் திருமாலுஞ் சிவனுந்தானே. 10

சிவசிவா பதினெண்பேர் பாடற்கெல்லாந்
திறவுகோல் வால்மீகர் பதினாறாகும்
சிவம்பெற்ற சித்தரெல்லா மின்னூல் பார்த்துச்
சிவனோடே கோள்ச்சொன்னார் சிரித்தார்நாதன்
அவமாகிப் போகாமற் சிவனுத்தார
மருளதினா லறிந்துசொன்னே னுலகர்க்காக
நவமான நவக்கிரகந் தன்னுக்குள்ளே
நாக்குவாய் செவிமூக்கு வதனுட்பாரே. 11

நாக்குவாய்ச் செவிமூக்கு மத்திக்கப்பால்
நடுவீடு குய்யமுத லுச்சிதொட்டுத்
தாக்குவாய் அங்கென்று அதிலேயூணித்
தாயாரைப் பூசித்து வேதமோது
வாக்குவா யசையாமல் மவுனங்கொண்டு
வாசிவரு மிடத்தில்மனம் வைத்துக்காரு
நீக்குவாய் வாசிநடு மனந்தான்புக்கில்
நினைவுஅதி லடங்கி விடும் வரிசைகாணே. 12

காணரிது யெவராலு மூலசூட்சம்
காண்பவனே சிவசித்த னவனேயாகும்
பூணரிது யுலகத்தி லின்னூற்கிட்டில்
பூலோக சித்தனென் றுரைக்கலாகும்
நாணரிது சிவசத்தி திருமூச்சாகும்
நாடாதே மூடருக்கு யின்னூல்தன்னைத்
தோணரிது வெளிமயக்குச் சும்மாஆமோ
சொல்லரிது சூட்சத்தை சொன்னேன்பாரே. 13

சூட்சுமின்னஞ் சொல்லுகிறேன் வாசிகாணச்
சூட்சாதி சூட்சத்தைத் துறக்கப்போமோ
சாட்சியில்லை துணையில்லை கேள்வியில்லை
சந்தேக மொன்றுமில்லை வெளியைக்காண
காச்சியென்ற கெற்பத்தி லவதரிக்குமாப்போற்
காரணத்தைக் கண்ணாலே கண்டிருக்க
ஆச்சுதிது வுமையாளை யிப்படியேகண்டேன்
ஆனந்தத் திருக்கூத்தி னடியைக்காரே. 14

காப்பதற்கு பத்தியத்தைச் சொல்லக்கேளு
காய்கனி பஞ்சபட்ச பரமானங்கள்
ஏப்பமுட னுண்டுகொண்டு சிவத்தைக்காரு
யென்மக்காள் சித்தருடன் குருநூல்பாரு
ஆர்ப்பனத்துக் கழிவில்லா திருக்கவேணும்
அவரவர்கள் நித்தியகர்மம் நடத்தவேணும்
தீர்க்கமுடன் நின்றவனே வாசிசித்தி
சிறப்பாகப் பதினாறும் பலிக்குந்தானே. 15

தானவனா யிருக்கவென்றால் வாசிவேணும்
    தன்னுக்குள் தானின்ற யிடமும்வேணும்
வானவனாய் நின்றவர்க்கு யெல்லாஞ்சித்தி
    வானுக்குள் மனமிருக்க மதிபோறகாணும்
தேனவனாஞ் சித்தருக்குத் தெவிட்டாமூலி
    சிறப்பாக உடலுக்கு பதியேயாகுங்
கோனவனா யிருக்கவென்று குறுக்கிச் சொன்னேன்
    குவலயத்திற் பதினாறுங் குருத்தான் முற்றே. 16

வால்மீகர் சுத்த ஞானம் – 16

முற்றிற்று.

இவர்கள் தமிழில்
கவி புனைந்தனரா ?

இவர்களுக்குத் தமிழ் தெரியுமா ?

இனிமையான இத்தமிழ்ப்
பாடல்களின் கவி நயமும்
அழகும், சுவையும், கருத்துச்
செறிவும் படிக்கப் படிக்க இன்பம்
ஊட்டுபவை !